ஓவியர் பாலு சகோதரர்களின்

கலைக்கூட

தலைமுறை தலைமுறையாய் இருந்துவரும் தமிழ் நாட்டுப் பண்பு
தாம்பூலம் அளிப்பது .... தாம்பூலத்திற்கு இன்றியமையாதது
அசோகா.





முப்பெரும் தலைவர்களின் ஆசியாலே எங்கள் கலை
என்றென்றும் மிளிர...

முத்தமிழ் முழங்கும் நம் நாட்டிலே
மூவேந்தர்கள் காத்த கலையை கண்ணும்
ஒளியும் போல காத்திட தங்கள்
ஆதரவை அளிப்பீர்!

பாலு சகோதரர்கள்,
ஓவியர்கள்.

Wrapper Printed at Sri Bharathi Press, Choolai Madras-7

குறள் ஓவியம்



படையல்

உலகத்தில் எண்ணற்ற ஓவியக்காரர்களும் காவியக்காரர்களும் இருந்தும், மறைந்தும், நிறைந்தும் இருக்கும் இந்நாளில் வள்ளுவப் பெருமானை வணங்கித் துவக்கும் காரணம் விளக்குகின்றோம்.

ஓவியமும் காவியமும் ஒரு நாட்டுக்கு மட்டும் உரியனவல்ல, பஞ்சபூதங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ அங்கெல்லாம் பரவி இருக்கின்றன.

அப்பேர்ப்பட்ட கலைகளில் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய தனித்தமிழ் திருக்குறள் காவியம் ஒன்றுதான் பல மொழிகளில் பதிப்பிக்கப்பட்டு உலக மக்கள் உள்ளங்களில் ஊடுருவி நிற்கிறது ; நிற்பதற்குக் காரணம் வள்ளுவப்பெருமான் திருக்குறளை வரைந்திருக்கும் முறைதான்.

மதபேதம், இனபேதம், இறைவன் பேதம் இல்லாமல் எல்லோருக்கும் **திருக்குறள்** பொதுவாக இருப்பதும், பல நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்து, இன்றுவரையில் மக்களை நல்ல பழக்க வழக்கங்களும், பண்புகளும், ஒழுக்கமும், கெடாமலும், மாறுபடாமலும் இருக்க உலக மக்கள் எல்லோராலும் பின்பற்றப்படுவதாலுந்தான்.

மூலத் தமிழ் மொழியில் முளைத்தெழுந்த வள்ளுவர் காவியம் பூமண்டலம் பூராவும் கொடியாகப் படர்ந்து, புகழ்மலர் பூத்து, மணம்வீசி, மக்கள் மன மகிழ்ச்சிப் பெறுவதுபோல் தமிழமைப்பின் ஓவியப் பண்களும் வள்ளுவப் பெருமான் அருளால் உலகம் முழுவதும், புகழ் ஓங்கி நிற்கவேண்டுமென்ற ஓரே ஆசைதான் எங்களுக்கு.

காவியம் என்பது ஒரு அழகான எழுத்தல்ல! ஒரு வார்த்தையல்ல !! ஒரு வரியுமல்ல !!! பொருள் உள்ள வாக்கியங்களில் அமைந்துள்ளது. அதைப் போல் ஓவியமும் கண்ணைக் கவரும் முறையில் வண்ணந்தீட்டி அழகாக அமைப்பதல்ல, அர்த்தம் நிறைந்த அழகான சித்திரங்களாக அமைக்கவேண்டும்.

அந்த அபிப்பிராயத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டும் விருப்பத்தால்தான் "திருக்குறள்," "இராமாயணம்," பழமையான சரித்திர சம்பவங்கள், சமீபகால நிகழ்ச்சிகள், தியாகிகளின் சரிதைகள், மகான்களின் மகிமைகள் முதலிய "காவியங்களை" "ஓவியங்களாக" தீட்டி கலைக்கண் காட்சியாக அமைத்துள்ளோம்.

மக்களின் அன்பும் ஆதரவும் அடைய வேண்டுமென்று முக்கிய நோக்கத்தோடு இப் பணியை செய்ய முன்வந்திருக்கிறோம்.

எங்கள் முயற்சியும், ஆர்வமும் முன்னேற வேண்டுமென்று "காவியம்" "ஓவியம்," இரண்டுக்கும் காரண தெய்வமாக இருக்கும் எல்லாம் வல்ல இறைவி கலைவாணி தேவியைப் பணிவோடு வணங்குகின்றோம்.

பாலு சகோதரர்கள்

K. KAMARAJ
Chief Minister of Madras.

March 2, 1955.

Messrs. Balu Brothers have exhibited their paintings in the Rajaji Hall and in The Gandhiji Art Gallery of the Congress Exhibition at Teynampet recently. I have been very much impressed by their work.

I wish them all success.

K. Kamaraj

தமிழ் நாட்டின் தனிப்பெருந்தலைவர், மக்கள் மதிப்பிற்குரிய, முதன் மந்திரி

திரு. K. காமராஜ்

வாழ்த்துப் பா

நீலவான் முட்டுகின்ற இமயந் தன்னை
நெடுமுடியாத் தரித்திலகும் அன்னை நீண்ட
நாடெலாம் முனிவரரைக் கவிஞர் தம்மைக்
காவலரை வீரர்களைத் தந்த தேவி
காலிரண்டும் தளைப்பட்டு வாழ்ந்த வாழ்வைக்
கலைத்தகற்றும் ஞானமுனி காந்தி வாழ்க்கை
பாலுசகோ தரர்எழிலார் படமாக் காட்டிப்
பண்பெற்ற கலைக்கோயில் கட்டி னரே.

உலகமெலாம் போற்றுகின்ற காந்தி யெம்மான்
உயிர்வாழ்ந்த காலத்து நிகழ்ச்சி யெல்லாம்
பலவண்ண ஓவியத்தால் கலையின் செம்மைப்
பாங்குறவே தீட்டிவைத்தார் ; பார்த்தோர் யாரும்
அலைகுலவு கடல்போல உணர்ச்சி யாலே
அடைந்தபல நிலைகண்டார் வியந்தார் அம்மா
கலை நிலவு மெழிலெல்லாம் நடனமாடும்
கவின்காட்சி கண்டின்பக் கடலில் ஆழ்ந்தேன்.

கஸ்தூரி பாய்கண்ணீர்த் துளியைத் தேக்கக்
காந்திவெருட் டாநின்ற காட்சி கண்டு
வித்தாரம் பெறக்கருத்தில் உணர்ச்சி விஞ்ச
வியந்தங்கே சிலநேரம் நின்று விட்டேன்

செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களால்
அளிக்கப்பெற்றது

செத்தாலும் சாவாமல் வாழும் அண்ணல்
திருவுடலம் பாரதத்தாய் தாங்க வீழும்
சத்தான ஓவியத்தைக் கண்ட போது
சலசலத்தேன் துயரத்தால் விம்மி னேனே.

திருக்குறட்பாப் பொருளைவண்ண ஓவி யத்தில்
திருத்தமுறக் காட்டுகின்ற காட்சி கண்டேன்
அருத்தநயக் காப்பியங்கள் தம்மிற் காணும்
அருங்காட்சி சித்திரத்திற் காட்டக் கண்டேன்
மருக்குலவும் மங்கையரும் வீரர் தாமும்
மணமலியும் காதல்புரி காட்சி உண்டு
உருக்குடலப் பெருவீரன் கட்டப் பொம்மன்
உயர்திறலைக் காட்டுபடம் கண்டு வந்தேன்.

பாரதநாட் டின்பெருமை தமிழ்நன் ஞட்டின்
பண்புலகை வாழ்விக்க வந்த சான்ழேர்
வீரர்இவர் தம்வாழ்வுப் பகுதி எல்லாம்
வியக்கும்வணம் ஓவியத்தி லமைத்துக் காட்டும்
சீருடைய பாலுசகோ தரர்கள் வேற்கைச்
செவ்வேளின் திருவருளால் மேலும் மேலும்
ஏருலவும் ஓவியங்கள் படைத்துச் செல்வம்
இலகுபுகழ் பெற்றுப்பல் லாண்டு வாழ்க!

சொல்லின் செல்வர், பெரும்பேராசிரியர்

ரா. பி. சேதுப்பிள்ளை

அருமை சான்ற தலைவர் அவர்களே! பெருமக்களே! பெரியோர்களே!

இந்த மண்டபத்தில் ஆயிரக் கணக்காக மக்கள்கூடி இருப்பதைப் பார்க்கும்போது நம்முடைய தமிழ்நாட்டுக் கலைகளுக்கு ஒரு நல்லகாலம் பிறந்து விட்டது என்று சொல்லத் தோன்றுகிறது. சித்திரக் கலை—ஓவியக்கலை—நம் நாட்டில் ஓங்கவேண்டும் என்று விரும்பாதார் யார்? முன்னாளிலே ஓவியக்கலை சிறந்திருந்தது என்பதில் யாதும் ஐயம் இல்லை. இலக்கண நூலாசிரியர்கள் கூறுகின்றார்கள்: மாடம் என்று இருந்தால் அதற்குச் சித்திரம் வேண்டும்: மாநகர் என்று இருந்தால் அதற்குக் கோபுரம் வேண்டும் என்று. 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்' இன்றியமையாதன என்பது தமிழ் நாட்டாருடைய கொள்கை. மாடம் என்பதை வீடு என்று கொண்டாலும் சரி: அல்லது கோவில் என்று கொண்டாலும் சரி! மாடங்களிலே நல்ல சித்திரங்கள் திகழ வேண்டும்; மாநகரங்களிலே அழகிய கோபுரங்கள் விளங்கவேண்டும் என்று ஆசைப்பட்டனர் தமிழ் மக்கள்.

ஒரு திருநாள் என்றால், அதைப் பத்து நாட்கள் கொண்டாடுவதுதான் தமிழ் மக்களுடைய மரபு. இந்தச் சித்திரத் திருநாளைப் பத்து நாள் நடத்தாமல் அதற்கு முன்னமே முடிப்பதாக எண்ணியிருந்தார்கள். ஆனால், தமிழ் மக்களுடைய மரபு, பத்து நாள் நடத்தியே தீரவேண்டும் என்று வற்புறுத்தி விட்டது. முப்பதினாயிரம் பேர் இந்தக் கலைக்காட்சியைக் கண்டு மகிழ்ந்தார்கள் என்றால், சித்திரக்கலை சிறக்

ஓவியமும்

கின்ற காலம் அண்மையிலே வந்துவிட்டது என்பதற்கு வேறு சான்றும் வேண்டுமோ ?

காந்தியடிகளுடைய ஓவியம் பார்க்குமிடமெங்கும் நம் கண்ணைக் கவர்ந்தன. காந்தி மகானை நாம் போற்றுகின்றோம். அவருடைய திருவுருவத்தைக் கண்டு வழிபடுகின்றோம். அவரைப் பாரத நாட்டின் தந்தை என்று வாயார வாழ்த்தாதார் இந்த நாட்டில் யாரும் இல்லை. இன்னொரு வகையான சித்திரங்களும் பாலு சகோதரர்களால் இந்த மண்டபத்திலே காட்டப்பட்டன. நம்முடைய பழமையான இலக்கியங்களிலிருந்து—புறநானூறு முதலிய பழந் தமிழ் இலக்கியங்களிலிருந்து—தமிழ்ப் பண்பாட்டைக் காட்டக்கூடிய பல ஓவியங்கள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. திருக்குறளின் அருமையான கருத்தோவியங்களைக் கண்டோம் ; திருவாசகத்தின் அருளோவியங்களைக் கண்டோம் ; கம்பராமாயணத்தின் கவிதைக் காட்சிகளைக் கண்டோம் ; இவற்றைப் பார்த்தபொழுது சித்திரக்கலையின் வாயிலாகச் சிறந்த காவியங்களை இந்த நாட்டில் எல்லோர்க்கும் உணர்த்தலாமே என்று நான் எண்ணினேன் ; ஆசைப்பட்டேன். காவியங்களில் உள்ள சொல்லோவியங்களையெல்லாம் பாலுசகோதரர்கள் எடுத்து இப்படிக் கண் காட்சிகளாகக் காட்டுவார்களேயானால், நாம் நூல்களைக் கற்றுத் தெரிந்து கொள்வதைவிட நன்றாகக் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளலாமே என்ற ஆசைஎன்னுடைய மனத்திலே எழுந்தது.

இக்கலைக் காட்சியிலே திருக்குறளைக் காட்டுகின்றார்கள். அதைப் பார்த்தவர்களிற் பலர் இங்கே இருக்கக்கூடும். ஒரு அருமையான திருக்குறள். அரசியலார் என்றும் தம்முடைய கருத்திலே கொள்ள வேண்டிய திருக்குறள். எப்படி இருந்தால் **அரசு நிலைக்கும், எப்படி இருந்தால் அரசு**



நிலைக்காது என்று திருவள்ளுவர் அறுதி யிட்டுக் கூறுகின்ற ஒரு குறளைச் சித்திர மாகக் காட்டியிருக்கின்றார்கள் பாலு சகோ தரர்கள்.

"அல்லற்பட்(டு) ஆற்றாது
அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை."

என்ற கருத்தடங்கிய சித்திரத்தை இந்தப் பத்து நாளில் பாராதவர்கள் இருக்கமாட் டார்கள் என்று எண்ணுகின்றேன். இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டு எத்தனை காவியங்கள் நம்முடைய நாட் டிலே தோன்றி இருக்கின்றன?

சிலப்பதிகாரத்தைப் பார்ப்போம். மதுரைமா நகரத்திலே அழுத கண்ணோடு அலறிக்கொண்டு போகின்றாள் கண்ணகி. அவளைக் கண்டபொழுது மதுரை மக்கள் திடுக்கிட்டார்கள் :

"அல்லலுற்று ஆற்றாது
அழுவாளைக் கண்டு ஏங்கி
மல்லல் மதுரையார் எல்லாரும்"

மயங்கினார்கள் என்பது சிலப்பதிகாரம். திருக்குறளைப் பின்பற்றி இளங்கோவடிகள் சொல்கின்றார் என்பது அவர் வாக்காலேயே நன்றாகத் தெரிகின்றது. இவ்வாறு சென்ற கண்ணகி மன்னன் முன்னே நிற்கின்ற கோலம் ஒரு சொல்லோவியமாகச் சிலப்பதி காரத்திலே எழுதிக் காட்டப்படுகின்றது. புழுதி படிந்த மேனி, விரித்த கூந்தல், கண்ணீர் வடிக்கின்ற கண்கள், கையிலே ஒற்றைச் சிலம்பு—இந்தக் கோலத்திலே நிற்கின்றாள் கண்ணகி.

"மெய்யிற் பொடியும்
விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும்
கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்
காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோன்றான் உயிர்"

என்று கண்ணகியின் தோற்றத்தையும், அத்தோற்றத்தால் திடுக்கிட்ட மன்னவ னுடைய மனப் பான்மையையும் சிலப்பதி காரம் எழுதிக்காட்டுகின்றது.

மதுரைமா நகரம் அழிந்தது கண்ணகி யின் கண்ணீரால்! அவ்வாறே இலங்கைமா நகரம் அழிந்தது சீதையின் கண்ணீரால்! சீதையின் கண்ணீர் இலங்கையில் விழுந் தது.

"மங்கை அழலும் வானாட்டு
மயில்கள் அழுதார் மழவிடையோன்
பங்கில் உறையும் குயில் அழுதாள்
பதும மலர்மேல் மாதழுதாள்
கங்கை அழுதாள் கலைமங்கை அழுதாள்
கமலத் தடங் கண்ணன்
தங்கை அழுதாள் இரங்காத
அரக்கிமாரும் தளர்ந்து அழுதார்.'

இரக்கம் ஒன்று இல்லாத அரக்கிமாரும் தளர்ந்து அழுதுவிட்டார்கள் சீதையின் சோகத்தைக் கண்டபொழுது!

துரியோதனன் சபையில் நின்று பாஞ் சாலி கண்ணீர் வடிக்கின்றாள். உடுத்த துகில் பறிபோகின்ற நிலையிலே கண்ணீர் உகுக்கின்றாள். அதனால் விளைந்தது பாரதப் போர். அதனால் அழிந்தது துரியோதன னுடைய ஆட்சி! எனவே,

"அல்லற்பட்(டு) ஆற்றாது
அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்று திருவள்ளுவனார் சொல்லிய உண் மையைப் பல காவியங்கள் நமக்குக் கதை மூலமாகக் காட்டிச் செல்கின்றன. அந்தக்

காவியங்களை ஓவியங்களாகத் தீட்டி மகிழ வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

இன்னும் ஒரு சான்று தருகின்றேன். அதிகமாக விரிவுரை நிகழ்த்தும் கருத்துடையேன் அல்லேன். இரண்டொரு குறிப்புக்களைச் சொன்னால் அவற்றைப் பெருக்கிக்கொள்கின்ற ஆற்றல் பாலு சகோதரர்களுக்கு உண்டு என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

திருக்குறளிலிருந்து மற்றொரு அழகான அகப்பொருள் சித்திரத்தைக் காட்டியிருக்கின்றார்கள். அது இளைஞர்களுக்கெல்லாம் நல்ல விருந்து! அதைப் பலமுறை நின்று பார்த்திருப்பார்கள் ; சென்று பார்த்திருப்பார்கள் என்று நம்புகின்றேன். அதைப் பார்ப்பதில் குற்றம் ஒன்றும் இல்லை. திருவள்ளுவரே சொன்னால் அதில் குற்றம் என்ன இருக்கப் போகின்றது?

" கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல "

என்பது குறள். இதன் கருத்தை அனுபவத்தால் அறிந்தவர் பலர்—இளைஞர்கள்—இங்கே இருக்கக்கூடும். ஆனால், திருவள்ளுவனார் கூறும்பொழுது அது இலக்கிய மணத்தோடு வருகின்றது. இந்தக் கருத்தை எடுத்துக் கொண்டார் கம்பர். கம்பருடைய காவியத்தில் ஒரு புதுமையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வான்மிக ராமாயணத்தை அப்படியே நமக்கு மொழிபெயர்த்து அவர் தந்துவிட்டார் என்று எண்ணிவிடலாகாது. நம்முடைய தமிழ் நாட்டுப் பண்பாட்டுக்கு ஏற்ப, இராமாயணக் கதையைத் திருத்தியும் புதுக்கியும் தந்த பெருமை கம்பருக்குரியது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை. சீதையின் திருமணத்தை எடுத்துக்கொள்வோம். மிதிலைமாநகரில் வில்லை ஒடிப்பதற்கு முன்னே இராமன் சீதையைக் களவு முறையிலே கண்டு காதல் கொண்டு விட்டான் என்பது கம்பருடைய கதைப் போக்கு. மிதிலை வீதியிலே வருகின்றான் இராமன். பக்கத்திலே இலக்குவன். இன்னொரு பக்கத்திலே முனிவர்—விசுவாமித்திர முனிவர். அந்த வீதியிலேதான் சீதையின் கன்னிமாடமும் இருக்கின்றது. கன்னிமாடத்தின் மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றை நுகர்ந்துகொண்டு சீதை நிற்கின்றாள். தற்செயலாக இராமன் மட்டும் அந்தக் கன்னி மாடத்தின் மேடையைப் பார்க்கின்றான். அங்கு நின்ற சீதையும் இராமனைப் பார்க்கின்றாள். இருவர் கண்ணோக்கும் இசைந்து காதல் பிறக்கின்றது.

" எண்ணரும் நலத்தினாள்
இனைய நின்றுழி
கண்ணொடு கண்ணினை
கவ்வி ஒன்றையொன்(று)
உண்ணவும் நிலைபெறாது
உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள் "

என்ற கம்பர் பாட்டு திருக்குறளை அடியொற்றிச் செல்கின்றது. இந்தச் சித்திரத்தை அடுத்த கலை விழா நடக்கின்ற போது நம் கண்ணெதிரே காட்டுவார்கள் பாலு சகோதரர்கள் என்று நான் நம்புகிறேன். காதற் குறளை முதலிலே காட்டுங்கள். அடுத்த ஓவியமாகக் கம்பரில் வருகின்ற சீதையின் காதலைக் காட்டுங்கள் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இன்னும், இராமாயணக் கதையைக் கம்பர் நடத்திச் செல்கின்ற முறையிலே நமக்குக் காட்டுவது ஒரு சிறந்த விருந்தென்று நான் எண்ணுகின்றேன்.

அன்பர்களே! கம்பராமாயணத்தில் சீதையின் மேனி தொட்டு இராவணன் தூக்கிச்

செல்லவில்லை. ஒரு மங்கையின் மேனியை அயலான் ஒருவன் தீண்டி எடுத்துச் செல்வது தமிழ் நாட்டுக் கற்பிற்கு மாசாகும் என்று கருதிய கம்பர், சீதையைப் பர்ணசாலையோடு இராவணன் பெயர்த்தெடுத்து இலங்கைக்குக் கொண்டு சென்றான் என்று கதையையே மாற்றிவிட்டார். சீதையின் மேனியை அரக்கன் தொடவில்லை. அவள் இருந்த பர்ணசாலையை அகழ்ந்தெடுத்து அசோகவனத்தில் வைத்தான். இந்தச் சித்திரம் காட்டப்படவேண்டும். இப்பொழுது நாம் பார்க்கின்ற இராமாயணச் சித்திரங்களில் சீதை ஒரு மரத்தடியில் பாதி உடையோடு வாடி வருந்துகின்ற நிலை காட்டப்பட்டிருக்கின்றது. அது போதாது. அசோக வனத்தில் ஒரு பர்ணசாலை இருக்க வேண்டும். அந்தப் பர்ணசாலையின் உள்ளே பாவையாகிய சீதை தவமங்கையாக அமர்ந்திருக்கவேண்டும். இதுதான் கம்பர் காட்டுகின்ற ஓவியம்.

அனுமான் சொல்லுகின்றான், தான் கண்ட சீதையின் கோலத்தை. அசோக வனத்தில்—காலையும் மாலையும் இல்லாத அழகிய அசோகவனத்தில் இலக்குவன் அருமையாகச் செய்து அமைத்த பர்ணசாலையில் சீதை இருக்கின்றாள். அரக்கர் பூமியில் அவள் அடி வைக்கவில்லை என்ற கருத்தை எவ்வளவு அழகாகக் கூறுகின்றான் என்று பாருங்கள்.

" வேலையுள் இலங்கை என்னும்
 விரிநகர் ஒருசார் விண்தோய்
காலையும் மாலைதானும் இல்லதோர்
 கனகக் கற்பச்
சோலை யங்கதனில் உம்பி
 புல்லினால் தொடுத்த தூய
சாலையுள் இருந்தாள் ஐய
 தவம் செய்த தவமாம் தையல் "

என்பது அனுமன் எழுதிக் காட்டும் சொல் ஓவியம். இந்தச் சித்திரம் நம்முடைய பாலு சகோதரர்களால் தீட்டப்பட வேண்டும்.

பட்டாபிஷேகத்தை இனிப் பாருங்கள். பட்டாபிஷேகப் படம் எல்லோருடைய வீட்டிலும் இருக்கும்: நல்லார் எல்லோருடைய வீட்டிலும் இருக்கும் என்று நம்புகிறேன். அது வீட்டுக்கே ஓர் அணிகலன் என்பது என்னுடைய கருத்து. வான்மிக ராமாயணத்திலுள்ள சித்திரத்தைக் கம்பர் தருகின்ற சித்திரத்தோடு நீங்கள் சீர் தூக்கிப் பார்க்க வேண்டும். அரியாசனத்தை அநுமன் தாங்குகின்றான். சிறிய திருவடி ஆதலால் இராமருடைய திருவடியைத் தாங்கி நிற்கின்ற பேறு அவனுக்குக் கிடைத்திருக்கின்றது.

" அரியணை அநுமன் தாங்க
 அங்கதன் உடைவாள் ஏந்த
பரதன் வெண்குடை கவிக்க
 இருவரும் கவரி வீச
விரைசெறி குழலி ஓங்க
 வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
 வசிட்டனே புனைந்தான் மௌலி "

என்று கம்பர் கூறுகின்றார். இப் பாட்டிலுள்ள அங்கதனையாவது, அவனுடைய உடைவாளையாவது இப்பொழுது உள்ள பட்டாபிஷேகப் படத்திலே காணமுடியாது. ஏனென்றால், வான்மிகருடைய சித்திரத்தை தழுவி எழுதப்பட்ட படங்களே இப்பொழுது நமக்குக் கிடைக்கின்றன. கம்பருடைய பாட்டில் அங்கு இல்லாத இரண்டு காட்சிகள் உண்டு. அங்கதனுடைய காட்சி ஒன்று.

இந்த அங்கதன் யார் அவன் வாலியின் மைந்தன். 'அவன் தம்பி அங்கதன்' என்ற வாசகம் வழங்குகின்றதே! எத்தனை பழமொழிகள், எத்தனை வாசகங்கள் இராம கதையை அடிப்படையாகக் கொண்டு நம்முடைய நாட்டிலே வழங்குகின்றன? 'அவன் தம்பி

அங்கதன்' என்பதை ஆராய்ந்து பார்த்திர்களா? எவன் தம்பி அங்கதன்? அங்கதனுக்கு ஒரு அண்ணன் இருந்ததாகக் கதை இல்லையே! வாலிக்கு ஒரே மைந்தன் தான் உண்டு என்று வடமொழி ராமாயணம் கூறுகின்றது; கம்ப ராமாயணமும் அப்படித் தான் கூறுகின்றது. அவ்வாருயின் 'அவன் தம்பி அங்கதன்' என்ற பழமொழி எப்படி வந்தது என்று தெரிய வேண்டும் அன்ருே? இதற்கு மறுமொழி சொல்வதற்கு இந்த மன்றம் ஏற்றதன்று. மேலே செல்வோம்.

அங்கதன் உடைவாளை ஏந்தி நிற்கின்ருன். என்ன கருத்து? வாலி இறக்குந் தருவாயில் தன்னுடைய மைந்தனுகிய அங்கதனை அழைத்து இராமனிடம் அடைக்கலப் பொருளாகக் கொடுத்தான். இது வான்மிகத்தில் இல்லாத ஒரு சித்திரம்! வான்மிக ராமாயணத்தில் அங்கதனை அடைக்கலமாகக் கொடுத்த செய்தி இல்லை! சரணுகதியின் பெருமையைக் காட்டுவதற்காக—அடைக்கலம் புகுந்தோரை என்றும் ஆண்டவன் ஆதரிப்பான் என்ற உண்மையைக் காட்டுவதற்காக—கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற கருத்தைக் கதை வாயிலாக உணர்த்துவதற்காக—அங்கதனையும் ஒரு அடைக்கலப் பொருளாகக் காட்டுகின்ருர் கம்பர். வாலி இறக்குந் தருவாயில் இருக்கின்ருன்; குருதி வெள்ளத்திலே கிடக்கின்ருன். இன்னும் சிறிது நேரத்தில் உயிர் பிரியப்போகின்றது. அந்த நேரத்தில் தன்னுடைய அருமை மைந்தனுகிய அங்கதனை அழைத்து, இராமன் முன்னே நிறுத்தி, "ஐயனே! இவன் என்னுடைய மைந்தன்; அருமையாக நான் வளர்த்த பிள்ளை. இவனை உன்னிடம் அடைக்கலமாகத் தருகின்றேன்" என்று அப்பெருமானிடம் ஒப்புவித்தான். அடைக்கலமாக அங்கதனை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக இராமன் தன்னுடைய உடைவாளை எடுத்தான். அதை நீட்டி, 'அங்கதா! இதை வாங்கு' என்ருன். இருவர் கையும் அந்த உடைவாளைப் பற்றிய நிலையில், 'தனக்குவமை இல்லாத தலைவனிடம் இவனை அடைக்கலமாகக் கொடுத்து விட்டேன். இனி, எனக்கு மனக் கவலை யில்லை!' என்று இம்மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணுலகத்திற்கும் மேலாய வீட்டுலகம் புக்கான் வாலி என்று கம்பர் கூறுகின்ருர். அன்று முதல் இராமனுடைய உடைவாள் அங்கதன் கையில் இருந்தது.

அடைக்கலப் பொருளாகிய அங்கதன் இராமனுக்குச் சிறந்த சேவை செய்தான். இலங்கைப் போரில் ஒருநாள் பிரமாஸ்திரத்தை விட்டு விட்டான்—மேகநாதன்—இந்திரசித்தன். அது எல்லோரையும் அடித்துவிட்டது: அங்கதனையும் அடித்து விட்டது; இராமன் ஒருவன் நீங்கலாக, மற்றவர்களையெல்லாம் பிடித்து அடித்துத் தள்ளிவிட்டது அந்தப் பிரமாஸ்திரம்! ஒவ்வொருவராக வந்து பார்க்கின்ருன் இராமன். ஓரிடத்தில் அங்கதன் கிடக்கின்ருன். அடலேறுபோல் போர் செய்த நிலையிலே அங்கதன் அடிபட்டுக் கிடக்கின்ருன். பார்த்தான் இராமன். கண்ணீர் பொங்கிற்று. அழுகின்ருன். 'அங்கதா! நீ அடைக்கலப் பொருளல்லவா? உன்னுடைய தந்தை இறக்கும் தருவாயில் உன்னை என் கையில் பிடித்துக் கொடுத்தானே! நான் அடைக்கலப் பொருள் காத்தவாறு அழகிது!' என்று அழுகின்ருன். 'அடைக்கலப் பொருளைக் காப்பதற்குத் தம் உயிரைக் கொடுக்கவேண்டும் என்று என் முன்னோர்கள் கற்பித்திருக்கின்ருர்கள். என் குல முதல்வர்கள் அந்த முறையைக் கையாண்டிருக்கின்ருர்கள். நானே, அடைக்கலத்தைப் பறிகொடுத்த பாவியானேன்' என்று வருந்துகின்ருன். 'படைக் கலங்களைச் சுமக்கின்ற பதகனேன், அடைக்கலப் பொருள் காத்தவாறு

அழகிது!' என்று அங்கலாய்க்கின்ருன்.

இந்த அடைக்கலப் பொருள் மீண்டும் பட்டாபிஷேகச் சித்திரத்திலே காட்டப் படுகின்றது. இராமனுக்கருகே—அரியாசனத்திற் கருகே—உடைவாளை ஏந்திக் கொண்டு அங்கதன் நிற்கின்ற காட்சியின் கருத்தென்ன? அடைக்கலம் என்று ஆண்டவனுல் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொருள் ஒருநாளும் கைவிடப்பட மாட்டாது என்ற உண்மையை அது காட்டுகின்றது. இராமாயணம் சரணுகதி சாஸ்திரம் என்று பெரியவர்களால் போற்றப் படும். சரணுகதி என்ருலும் அடைக்கலம் என்ருலும் பொருள் ஒன்றே. எவர் சரணுகதி அடைகின்ருரோ அவரை, ஆண்டவன் எப்பொழுதும் கண்ணிணைக் காக்கின்ற இமைபோல் காப்பான் என்பது இராமாயணத்தின் அடிப்படையான கருத்து. அதை அங்கதன் வாயிலாகவும் நமக்குக் காட்டுகின்ற சிறப்பைத் தமிழகம் மறந்துவிடலாகாது.

இன்னும் ஒரு கருத்து பட்டாபிஷேக கம்பர் பாட்டிலே காணப்படுகின்றது,

" வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி "

என்பது நம்முடைய தமிழ்க் கவிஞர் காட்டும் சித்திரம். தமிழ் நாடு வேளாண்மையில் சிறந்த நாடு. வேளாளர் சார்பாகத் தன்னை ஆதரித்த சடையப்ப வள்ளலின் முன்னேர்—எவர் இராமன் காலத்தில் இருந்தாரோ அவர்—மகுடத்தை எடுத்து வசிஷ்டன் கையில் கொடுக்க, அந்த முனிவர் அதை இராமருடைய சென்னியிலே சூட்டினுர். வேளாண்மைக்கு இப்படி ஏற்றம் தருகின்ருர் கம்பர்!

சடையப்ப வள்ளல் கம்பரை ஆதரித்த பெருமகன். செய்ந் நன்றி மறத்தலாகாது என்பது இந்நாட்டில் ஒரு சிறந்த கொள்கை அல்லவா?

" எந்நன்றி கொன்ருர்க்கும்
உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு "

என்ற கருத்தை மனத்திலே கொண்டு சடையப்ப வள்ளலைப் போற்ற விரும்பினுர் கம்பர். ஆனுல், சடையப்ப வள்ளலைக் கொண்டுபோய்—தன்னை ஆதரித்த வள்ளலைக் கொண்டுபோய் — பட்டாபிஷேகத்தில் வைத்து விட்டால், இராமன் இருந்த காலம் சடையப்ப வள்ளல் இருந்த காலம்தான் என்று ஏற்பட்டுவிடுமே என்று எண்ணி, சடையப்ப வள்ளலுடைய முன்னேர்களில் எவர் அந்தக் காலத்திலிருந்தவரோ அவர் முடி எடுத்துக் கொடுக்க, வசிஷ்டர் அதை இராமன் சென்னியில் சூட்டினுர் என்று பாடுகின்ற அழகு எத்துணைச் சிறந்தது என்பதை நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம். இதனுல் ஒரு உண்மையும் தெரிகின்றது; வள்ளல்களின் மரபு ஒரு நாளும் அழிய மாட்டாது; வாழையடி வாழையென வந்துகொண்டே இருக்கும். வெண்ணெயூர் வள்ளலின் குடும்பம் இராமன் காலத்திலும் இருந்தது; கம்பர் காலத்திலும் இருந்தது! இன்றும் ஆராய்ந்து பார்த்தால், இப்பொழுதும் அது எங்கேனும் இருக்கும்! இப்படிப்பட்ட அழகான கருத்துக்களெல்லாம் நம்முடைய காவியங்களிலே இருக்கின்றன; காவியங்களிலே சொல்லோவியங்களாக இருக்கின்றன. அந்தச் சொல்லோவியங்களைக் கண்ணுக்கினிய வண்ணலோவியங்களாக ஆக்கித் தருவது பாலு சகோதரர்களைப் போன்ற ஓவியர்களின் கடமை என்று நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். அன்பர்களே!

இத்தனை ஆயிரக் கணக்கான மக்களை இன்னும் நான் இங்கே—என்னுடைய பேச்சால்—

மறித்து வைத்துக்கொண்டு இருத்தல் முறையன்று. உங்களுடைய பொறுமைக்கு எல்லை காண்பது நன்றன்று. இந்தக் கலா மண்டபத்திலே நல்ல ஓவியங்களைக் கண்டு களித்தோம். அவற்றைக் கலை விருந்தாக அளித்த பாலு சகோதரர்களுக்கு நமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றோம். அவர்களுடைய கலை வளர்க என்று வாழ்த்துகின்றோம். நம்முடைய காவியங்களில் அமைந்த நல்ல ஓவியங்களை அவர்கள் தீட்டித் தருவார்களானால், தமிழ் நாட்டாருடைய நன்றி அவர்கட்கு என்றும் உரியதாகும் என்று சொல்லி முடிக்கின்றேன்.

—*21·11·'54* ஞாயிற்றுக்கிழமையன்று ராஜாஜி ஹாலில், பாலு சகோதரர்கள் நடத்திய கலைக்கண்காட்சியில் ஆற்றிய சொற்பொழிவு.



'உழவனே நாட்டின் உயிர்நாடி, அவனது ஊக்கமே அரசனது ஆக்கம்; அவன் கையால் நட்ட நாற்றுமுடி தழைத்தால் மன்னன் மணிமுடி தழைக்கும்' என்று புலவர்கள் பாடினார்கள். அரசனது செங்கோலை நடத்தும் 'கோல்' என்றார் கம்பர். 'உலகம் என்னும் தேருக்கு உழவனே அச்சாணி' என்றார் வள்ளுவர்.........

இத்தகைய சிறந்த தொழிலைச் செய்யும் உழவன் பெருமையெல்லாம் அவன் உழைப்பின் பெருமையே ஆகும். உழவன் எந்நாளும் உழைப்பாளன். நெற்றி வேர்வை நிலத்தில் விழ வஞ்சமின்றி பாடுபடுவன். விளைநிலத்தை உழுது பண்படுத்தி பருவத்தே பயிர் செய்து, கண்ணுங்கருத்துமாய்க் களைப்பறித்து, நீர்ப்பாய்ச்சி, பயன் விளைக்கும் உழவன்.

கண்ணினைக் காக்கும் இமைபோல பயிரினைக் காத்துப் பயன் விளைப்பவன் உழவன்.

—பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை.

கலை தரும் வாழ்வு

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். எம்.ஏ.

மனித மனம் புதுமைகள் பல நிறைந்தது. ஒரே தொழிலைக் கடமை என்று நினைத்துச் செய்கையில் அதனிடம் வெறுப்புக் காட்டுகிறது மனம். ஆனால் அதே தொழிலை விளையாட்டாகக் கட்டுப்பாடு அற்றுச் செய்யும்பொழுது அதனிடத்து இன்பம் காண்கிறது. இரண்டாவது வகையில் இயற்றப்படுவதே 'கலை' எனப்படுகிறது. பகலவன் உதயஞ் செய்யும் பொழுது எண்ணற்ற நிற வேறுபாடுகளை உலகிலும் வானிலும் தோற்றுவிக்கிறான். அதனைக் காண்பவர் மனத்தில் மகிழ்ச்சி தோன்றுகிறது. இயற்கை அன்னை தீட்டும் இவ்வண்ண ஓவியத்தைக் கலை என்று யாரும் கூறுவதில்லை. ஆனால் இதே காட்சியை ஓர் ஓவியனும் கவிஞனும் காண்கின்றனர். பகலவன் உதயம் அனைவருக்கும் ஒன்றாகவே இருப்பினும் அதனைக் காண்பவர் மனநிலைக்கு ஏற்ப அக்காட்சி மாறுபடுகிறது. காண்பவர் அதனைத் தம் உணர்ச்சியுடன் கலந்தே காண்கின்றனர். ஓவியனும் கவிஞனும் இக் காட்சியில் ஈடுபடுகின்றனர்; அனுபவிக்கின்றனர்; தம்மை மறந்த நிலையில் சில நேரம் கழிக்கின்றனர். பின்னர் மீட்டும் இவ்வுலகுக்கு வருகின்றனர். அதுவரை அனுபவித்த இன்பத்தைக் கற்பனையுடன் கலந்து காண்கின்றனர். இதனையடுத்துத் தன் கைத்திறமையால் ஓவியனும் சொல் திறமையால் கவிஞனும் இக்காட்சியை முறையே ஓவியமாகவும், கவிதையாகவும் வடிக்கின்றனர். இவை இரண்டுமே கலை எனப்படும். இக் கலையில் காட்சிதரும் பகலவன் உதயம் இயற்கை தீட்டிய உதயத்தினும் மாறுபட்டது. என்ன மாறுபாடு என்கிறீர்களா? இயற்கையின் ஓவியத்துடன் கலைஞனின் கற்பனையும் கலையில் காட்சி தருகிறது. அந்த உதயத்தை நாம் கண்ட முறையில் கலைஞன் காண்பதில்லை. அவன் எவ்வாறு கண்டானோ அவ்வாறுதான் கலையில் உதயம் காட்சியளிக்கிறது. வேறு வகையாகக் கூறினால் நாம் கண்டும் காணாதவற்றையும், காண முடியாதவற்றையும் கலைஞன் காண்கிறான்; தன் புறக்கண்ணால் மட்டும் காணாமல் அகக் கண்ணாலும் அவன் காண்கிறான். அதனையே கலையில் வடிக்கிறான். ஆதலால் தான் அது 'கலை' என்ற பெயர் பெறுகிறது.

சிற்பம், ஓவியம், இசை, கவிதை என்பவற்றை 'நுண்கலைகள்' (Fine Arts) என்று கூறுகிறோம். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு 'இடைநிலைப் பொருள்' (Medium) மூலம் ஆக்கப்படுகின்றன. கலைஞனுடைய சுதந்திரம், பயன் கருதிச் செய்யப்படும் இயல்பு என்ற இக்காரணங்களால் இவை ஒன்றைவிட ஒன்று சிறந்து விளங்குகின்றன. இக் கலைகள் அனைத்தும் பல்வேறு இடைநிலைப் பொருள்கள் மூலம் ஒரே

பயனே விளக்கின்றன என்று இந் நாட்டவர் கருதினர். ஒரு கலையை அனுப வித்தும் பெறும் பயனை மற்றொரு கலை யிலும் பெறும் பயனுடன் ஒப்பு நோக்கிக் கூறுவது அன்று இந்த முடிபு. ஓவியக் கலை திரைச்சீலை, வண்ணம், தூரிகை முத லியவற்றின் உதவியால் தீட்டப்படுகிறது. இசை, கண்டத்தாலும் இசைக் கருவிகளா லும் ஆக்கப்படுகிறது. ஓவியத்திற்கு வடிவு உண்டு; இசைக்கு வடிவு இல்லை. இத்துணை வேறுபாடுகளுடன் காணப்படி னும் இக்கலைகள் தலைசிறந்து நிற்கையில் ஏறத்தாழ ஒன்றுடன் ஒன்று இணைந்து விடுகின்றன. ஒரு கலையை மற்றொரு கலை யில் பெயர்க்க முடியாத 'தனித்தன்மை' (individuality) ஒவ்வொரு கலைக்கும் இருப்பினும் சிறந்து விளங்கும் நிலையில் நுண்கலைகள் ஒன்றுக்கொன்று இணைந்து விடுகின்றன. சிற்பம் வல்லவர்கள் ஒவ் வொரு சிலையையும் செதுக்கும்பொழுது 'தியான ஸ்லோகம்' என்ற ஒரு பாடலை ஓயாது பாடுவதைக் காணலாம். சிற்பத் தின் கையும் காலும் எவ்வாறு அமைய வேண்டும் என்றுமட்டும் கூறுவதன்று 'தியான ஸ்லோகம்.' அந்தச் சிற்பம் தோற்றுவிக்க வேண்டிய உணர்ச்சியைக் கவிதை மூலம் தருவதே தியான ஸ்லோகத் தின் உட்பொருளாகும். காற்றுக இயங்கும் இசைக் கலையில் உள்ள இராகங்கட்கெல் லாம் 'ராக தேவதைகள்' என்று ஓவியந் தீட்டி மகிழ்ந்த நாடாகும் இது.

எல்லாக் கலைகளும் அவற்றை அனுப விப்பவர்களின் மன ஓட்டத்தைக் கட்டுப் படுத்தி ஒன்றவைக்கும் (To effect harmony) பயனையே தருகின்றன. 'ரூஸ்' என்பவர் தீட்டிய 'செம்மறியாடு களின்' ஓவியத்தைக் கண்ட 'காத்தே' (Gothe) என்ற கவிஞர் "இவ்வாடுகளின் ஓவியத்தைக் காணும் பொழுதெல்லாம் நானும் ஓர் ஆடாகவே மாறிவிடுகிறேன். இத னைத் தீட்டிய ரூஸ் என்ற கலைஞனும் முதலில் தான் ஆடாக மாறிப் பின்னரே இதனைத் தீட்டி இருத்தல் கூடும்" என்றாராம். கலையின் தத்துவத்தைச் சுருக்கித் தந்து விட்டார் காத்தே! எப்பொழுது ஒரு கலை தன்னை அனுபவிப்பவன் மனத்தை அப்பால் போகவொட்டாமல் தடைசெய் கிறதோ அப்பொழுதுதான் அது முழு வெற்றி பெறுகிறது.

ஓவியம் சிறந்த ஒரு கலை. ஓவியன் தான் முதலில் 'தன்னை' இழத்தல்வேண்டும். பிறகு எந்த உருவைத் தீட்டவேண்டும் என்று கருதுகிறானோ அந்தப் பொருளாக மாறவேண்டும். அதன் பின்னர் ஓவியமா கத் தீட்டினால் அந்த ஓவியம் முழுக் கலைத் தன்மையை அடைகிறது. இவ்வாறு தீட் டப் பெற்ற ஓவியம் காண்பார் மனத்தைக் கட்டுப்படுத்திவிடும். ஏன்? ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் தரும். அவ்வாறு யின் இச் சிறந்த கலையைத் தவறான வழி யில் பயன்படுத்தக் கூடாது என்பதும் தெற்றென விளங்கும். இன்றுவரை நம் நாட்டில் இத் தெய்வீகக் கலையை கடவுள் சம்பந்தமாகவே பயன்படுத்தினர். கலையை அனுபவிப்பவர் தாழ்ந்த மனப்பான்மைக்கு இழுத்துச் செல்லப்படாமல் உயர்த்தப் படல் வேண்டும். மனித வடிவம் தீட்டுவ தில் அதிக கவனம் செலுத்தப்படல் வேண் டும். அழகை அடிப்படையிற்கொண்டு அதனை வெளிப்படுத்துவதே இதன் நோக்கமாகலின் கலையில் வெளிப்படும் அழகு மனத்தைத் தூய்மை செய்வதாக வும், உயர்த்துவதாகவும் இருத்தல் வேண் டும். கண்ணாகிய பொறிமூலமும் ஒளியா கிய புலன் மூலமுமே ஓவியக்கலை அனுப விக்கப்பட்டாலும் இப்பொறி புலன்களைக் கடந்துதான் கலை காட்சி அளிக்கிறது. எனவே கேவலம் பொறியுணர்ச்சிக்கு இரைபோடுவதாக இக்கலை அமைந்துவிடக் கூடாது.

அவ்வாறானால் ஓவியக் கலைக்கு எந்தப் பொருள்

சிறந்தது என்ற வினாத் தோன்றும். எந்தப் பொருளும் ஓவியத்திற்குச் சிறந்ததுதான். அனைத்திலும் ஆழத்தில் மறைந்துகிடக்கும் அழகை வெளிப்படுத்துவதே ஓவியக் கலையின் நோக்கமும் குறிக்கோளும் ஆம். 'நாத் தளர்ந்து, பல் விழுந்து, தலை நடுக்குறும்' மூதாளரை நேரே காணும்பொழுது அங்கே அழகு ஒன்றும் இருப்பதாகவே நாம் நினைப்பதில்லை. அக்காட்சியை வெறுக்கவும் செய்கிறோம். ஆனால் இத்தகைய கிழப் பருவத்தை ஓவியத்தில் வடித்துக் கொடுக்கும்பொழுது அனைவரும் பெரும்மகிழ்ச்சியுடன் நின்று பார்க்கிறோம். இதுவே கலை மனித இனத்திற்குச் செய்யும் பெருந் தொண்டாகும்.

இலக்கியத்தில் காணப்பெறும் மக்களும் காட்சிகளும் நிகழ்ச்சிகளும் பிற்காலத்தில் வாழ்பவர்கட்கு மிகவும் தேவைப்படும். அந்த மக்களை நேரே காணும் வாய்ப்பை இழந்த பிற்காலத்தாருக்காகவே கவிஞன் கவிதை மூலம் அவர்களை வடித்துத் தருகிறான். ஆனால் அக்கவிதைகளை படித்து உணர்ந்து அனுபவிக்க அனைவராலும் இயலாதன்றோ? நடராஜப் பெருமானின் தாண்டவத்தை ஓர் அன்பர் கண்டார். பெருமானுடைய குஞ்சிதபாதமும் அஞ்ச வேண்டாம் என்று காட்டும் எடுத்த திருக்கரமும் அன்பரை ஏதோ கேட்பது போல் இருந்தது. அன்பரும் ஒரு கலைஞர். எனவே பெருமானின் கையின் குறிப்பு யாது என்று நினைந்து பார்த்தார். விடை தெரிந்துவிட்டது; இதோ கூறுகிறார். அன்பரைப் பார்த்துப் பெருமான் "என்று வந்தாய்?" என்று கேட்பதுபோல் இருக்கிறதாம். நம்மைப் போன்றவர்கட்குப் பெருமானின் கையைப் பார்க்கும்பொழுது ஒன்றும் தெரியவில்லை. சிலருக்குக் கையில் போட்டிருக்கும் வைர வளையல் மட்டும் தான் காட்சியளிக்கிறது. இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் ஓவியம் உதவிக்கு வருகிறது. நடராசப் பெருமானைக் கவிதையில் படிக்கும்பொழுது மனத்தில் அவ்வடிவம் தங்க வில்லை. அதில் இருக்கும் அழகும் தெரியவில்லை. ஆனால் ஓவியன் துணைக்கு வரும்பொழுது நல்ல விளக்கம் கிடைக்கிறது. 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்!" என்று இராமனைப் புகழ்கிறான் கவிஞன். என்றாலும் ஓவியத்தின் மூலம் இராமனைக் காணும்பொழுது தான், 'கை கமலம், வாய் கமலம்' ஆகிய அவ்வள்ளலின் அழகில் ஈடுபட முடிகிறது. நம் நாட்டு இலக்கிய வளத்தையும் கலை வளத்தையும் பிற நாட்டவரும் அனுபவிக்க வேண்டுமாயின் ஒரே ஒரு வழிதான் உண்டு. நம் இலக்கியங்களை மொழி வேற்றுமை காரணமாகப் பிறர் அனுபவிக்க முடியாது. உலகில் தலைசிறந்த காப்பியங்களில் ஒன்றான கம்பனுடைய இராமாயணத்தில் இராமனைக் 'கை கமலம், வாய் கமலம்' என்றும் கூறிய அழகைப் பிறமொழிப் பேசுபவரும் கண்டு அனுபவிக்க வழி யாது? கம்பன் கவிதையில் வடித்த இராமனை (ஓவியத்தில்) வடித்துவிட்டால் அனைவரும் அனுபவிக்க முடியுமன்றோ? பல கவிஞர்களும் இராமனை வருணித்துள்ளார்களெனினும் கம்பனுடைய கவித்திறமையால் இராமன் முழு அழகைப் பெற்றதுபோல் ஓவியன் திறமையால் இராமனும் நம் மனத்தில் நிலைபெறும் அழகிய வடிவைப் பெறுதல் கூடும். தன் மகன் போரில் புறமுதுகு காட்டி மாய்ந்தான் என்று கேள்வியுற்ற கிழத்தாய் ஒருத்தி அது உண்மையா என்று பார்க்கப் போர்க்களம் புகுந்தாள். போகும்பொழுதே அது உண்மையானால் 'அக் கோழையைப் பாலூட்டி வளர்த்த என் மார்பை அறுத்து எறிகிறேன்' என்று கூறிக்கொண்டே செல்கிறாள். பழைய புறநானூற்றுப் பாடல்; தற்காலத் தமிழருக்குக்கூடப் பொருள் விளங்காத நடை. ஆனால் ஒவ்வொரு தாயும் அறிய வேண்டிய

கருத்து. என்ன செய்வது? கவிதையை உரைநடையில் கூறிப் பிறருக்கு விளக்கம் செய்யலாம் எனில் அதன் சுவை போய்விடும். வேறு வழி யாது? ஒரே வழி தான் உண்டு. பாலு சோதரர்களைக் கேளுங்கள்! அவ்வழியை அவர்கள் கண்டு ஓவியமாகத் தீட்டியுள்ளார்கள். எத்தகைய கல்வியறிவு இல்லாதவரும் பிறமொழி பேசுபவரும்கூடக் கண்டமாத்திரத்தில் பழந்தமிழ் நாட்டுத் தாய்மாரின், கிழவிகளின், வீரத்தை அறியவும், அதனால் தம்முடைய வாழ்விலும் ஒரு குறிக்கோளைப் பெறவும், வாழ்வைச் செம்மைப்படுத்தவும் இதோ கலை, ஆம், ஓவியக்கலை உதவிவிட்டது.

கலை தரும் வாழ்வு இதுவே!

* * *

நிலைபேறு இல்லாத உலகில் நிலைபெற்று வாழ்வது கலை ஒன்றுதான். அதனாலேயே தமிழர் அழியாத கலையை என்றுமே உள்ள இறைவனுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தார்கள். இத்தகைய உயர்ந்த தெய்வீகக் கலைகளுள் ஒன்று ஓவியம். மனித மனத்தின் கற்பனை ஒன்றினால் மட்டுமே காணக்கூடிய தனிச் சிறப்புகளுடன் வாழ்வது ஓவியக் கலை. காவியக் கலைஞனும் இதே 'ஆக்கலை' (creation) செய்கிறான். என்றாலும் கவிதைக் கலையை அனைவரும் அனுபவித்து மகிழ்தல் என்பது இயலாத காரியம். கவிதைக் கலையை அனுபவிப்பதற்கு 'மொழியறிவு' முதலிய தேவைப்படும். ஒரு சிலரே அனுபவிக்கக்கூடிய கவிதைக் கலையைப் பலரும் அனுபவிக்கக்கூடிய ஓவியக் கலையாக மாற்றித்தரும் பெருமை, தமிழ் நாட்டில் இன்றுள்ளவர்களில், 'பாலு சோதரர்'கட்கே உண்டு.

'திருக்குறள்' போன்ற ஒழுக்க நூல்களும் தம்முடைய கடுமையை விட்டுப் பலரும் அனுபவிக்கத்தக்க ஓவியங்களாக மாறின இவர்கள் கையில். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டு வாழ்ந்த தமிழன் வாழ்வில் ஓரிரு பொன் ஏடுகள் 'புறநானூறு' போன்ற நூல்களில் இடம் பெற்றுள்ளன. ஆனால் அப்பாடல்களின் நடை வேறுபாடு காரணமாக அனைவரும் அனுபவிக்க இயலாமல் போய்விட்டது. அத்தகைய பொன் ஏடுகளை அனைவரும் அனுபவிக்கும் வகையில் ஓவியங்களாக மாற்றித்தந்த 'சோதரர்'க்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்?

'அல்லையாண்டு அமைந்தமேனி' என்று தொடங்கும் கம்பநாடன் பாடலின் உட்பொருளாய் விளங்கும் முகபாவங்கள் நம் சோதரர்களின் ஓவியத்தில் தெற்றென விளங்கக் கண்டவர் யாரே பின்னர் மறக்கமுடியும்?

கலைஞர்கட்கு கைம்மாறு செய்தல் இயலாது. அவர்களும் கைம்மாறு ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை. கலையைப் பிறர் கண்டு தம்மை மறந்த நிலையில் அனுபவித்து 'ஆஹா' என்று கூறுவதே கலைஞர்கட்குக் கைம்மாறு.

கலைக்கெல்லாம் மூலமான ஆடவல்ல பெருமான் இவர்கட்கு அனைத்து நலங்களும் தந்தருள அவனை வழுத்துகிறேன்.

அ. ச. ஞானசம்பந்தன்

ஜீவ கலையும் உயிரோவியமும்

"முத்தமிழ்" ஆசிரியர்: **பண்டித வி. நடேசன்...**

காலம் அழியும்; கலை அழியாது. கலை அறுபத்து நான்கு என்ப. ஓவியக்கலை தலையாயது. பழைமையும் புதுமையும் புகலிடம் ஓவியமே; முற்காலத்தையும் தற்காலத்தையும் பிணிப்பது ஓவியமே; நாகரிகத்தின் சிகரம் நுண்கலையே. ஒன்பான் சுவையைக் கவிஞன் தான் உணர்ந்து கவியை இயற்றுகின்றான்; ஆனால் ஓவியர் தாம் வரையும் சித்திரத்தால் பிறர்க்கு உணர்த்தி, தம்மை மறந்து மௌனியாக்குகின்றனர். சும்மா இருத்தலைச் சுலபமாக்குகின்றனர். ஆதிரை பிச்சையிட்ட காதையில், ஆசிரியர், மணிமேகலையைப் 'புனையா ஓவியம் போல' எனக்கூறியுள்ளதை ஆயுங்கால் ஓவியப்புலமை புலனாம்.

ஊமை கண்ட கனவினையும் ஓவியம் பிறர்க்குக் காட்டும்; பக்தன் பார்த்த பரமனையும் ஓவியம் உணர்விக்கும்; காதலனைக் கனவில் கண்டாள் உஷா. நனவில் அரற்றினாள். சித்ரலேகா பல்லுருவங்களையும் அநிருத்தன் வடிவத்தையும் சொல்லக் கேட்டு நல் ஓவியங்களாகத் தீட்டிக் காண்பித்தாள். உஷா கனவிற்கண்ட அநிருத்தனைக் கண்டெடுத்தாள். இது பாரதத்திற் காணும் ஓவியக்கலை. இராமாயணத்தில் தசரத சக்கரவர்த்தியின் கொலு மண்டபத்தில் (சித்திரகூடம்) பல ஓவியம் வரையப் பட்டிருந்ததாகக் காண்கிறோம். அரசன் கற்க வேண்டிய கலை நான்கு; அவற்றுள் ஒன்று ஓவியம். அரசனது அவைக்களத்தே முகிழ்த்தது ஓவியக்கலை; மதகுருக்குலத்து மலர்ந்தது ஓவியம் எனல் உண்மை.

யாண்டும் முதற் கல்வி போர்க்கலையாகவே திகழ்ந்தது. போரில் மாண்ட வீரர்களைப் படத்தெழுதி வைத்தலும் வீரச்செயலைக் குறிக்க சித்திரங்களைத் தீட்டி சேமித்தலும் சிறு வழக்காயிருந்தன. இஃது அரசற்கே உரிய பெரும்பழக்கமாம். ஆதி மனிதன் கண்ட வளைகோடும் நேர்கோடும் இன்று பல மாறுதலுடன் ஓவியக்கலையாகப் பரிணமிக்கிறது. களிமண் பாத்திர மேல் தீட்டிய வர்ணக்கோலே இன்று மதிப்பிற்குரிய ஓவியக் கோலாயுள்ளது. தேவைக்குரிய கலன்களின் மேற்கண்ட அழகிய நேர்கோடும் வளைகோடும் பின்னர் மலராகவும் இலையாகவும் புள்ளாகவும் விலங்காகவும் மாறின.

மனித வாழ்வில் மதிப்புக்குரியன உண்மை, பேரழகு நன்மைகளாம். உண்மை யாவிற்கும் மூலம்; அழகுணர்ச்சி நற்கலையின் பண்பு; அறநெறிக்கண் ஒழுக நன்மை அடிப்படை. ஒன்றைப்போல் மற்றொன்றைச் செய்தல், இயற்கையை வசப்படுத்தல், அழகுக்கடிமையாதல் ஆகிய முக்குணங்களும் பேரவாக்களும் மண்ணில் சொல்லோவியங்களும் நல்லோவியங்களும் அமையக் காரணமாம். பாவலன் எழிசைகளின்

மடக்கால் பண்ணையும், கவிஞன் நேர் அசை நிரையசைகளின் யாப்பால் கவிகளையும், ஓவியன் நேர் வளை கோடுகளின் வரைவால் காவியங்களையும் ஓவியங்களாகத் தீட்டுகின்றான். நல்லோவியர் நல்ல ரசக் குடியரன்றோ? சீதோஷ்ண நிலைக்கேற்ப எவ்வாறு மொழி பேசப்படுகிறதோ அவ்வாறே மக்களின் மனநிலைக்கேற்ப இடந்தோறும் காலந்தோறும் ஓவியக்கலை மாறும்.

பண்டையில் மதம் பரப்பவும் போர்க்கலை போதிக்கவும் எழுந்த ஓவியங்களைக் கண்டவர் நரமாமிச பட்சினிகளும் காட்டுமிராண்டிகளுமாவர். எல்லாக் காட்டுவாசிகளிடையே சமூக வளர்ச்சிக்கும் மத பக்திக்கும் உபயோகிக்கப்பட்டது ஓவியக்கலையே. நாடகக்கலையிலும் ஓவியக்கலையிலும் ஒரு நாட்டின் பண்பாட்டினையும் மக்களின் நம்பிக்கையினையும் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இக்கலையால் முதியோர்க்குக் கல்வியறிவு வளர்ந்தது; மக்களது மனநிலை பண்படுத்தப்பட்டது; மாற்றியுமமைக்கப் பட்டது.

கவிஞன் பாட்டை யாத்தலில் குறிகோளுண்டு. பதவுரைக்கும் பொழிப்புரைக்கும் கருத்துரைக்கும் இலக்கண விசேஷத்திற்கும் செய்யுளைச் செய்கின்றான் அல்லன் ஆசிரியன்; பாட்டைப் படிக்கின்றவரைத் தன் வசப்படுத்தவே தன் கொள்கையை வெளியிடுகின்றான்; பொருள் தெரிந்து பாட்டை அனுபவிப்பவர் ஆசிரியனிடம் அடைக்கலம் புகுகின்றனர். அது போலவே ஓவியக் கலைஞனும் தன் சிறப்ப ஓவியங்களால் தற்கால உலகயியலையும் மாற்ற வரைகின்றான்; இயற்கையை அப்படியே பார்த்தெழுதுதலை தூவெனத் தள்ளி, தன் கற்பனைக்கேற்ப இயற்கையை இழுத்து நல்லிலக்கணமமைந்த வடிவங்களாகத் தன் ஓவியத்தில் தீட்டுகின்றான். நல்லோவியர் நற்சிருஷ்டி எனல் மிகையன்று.

தெருக்கூத்திற்கும் கதக்களிக்கும் கண்ட ஓவிய முகமூடிக்கலை நாளாக ஆக ஒருவரது தினசரி வாழ்க்கைக் குறிப்புக்களையும் கருத்துக்களையும் சம்பவங்களையும் செய்திகளையும் சேமிக்கும் கலையாக மாறியது. எழுத்தறிவில்லா மக்களுக்கு அரசன் தாணையையும் குருமார் போதனையையும் விளம்பரங்களையும் எச்சரிக்கைகளையும் பாபத்தின் பலனையும் தண்டனையையும் தெரிவிக்கவே ஓவியம் ஜனித்தது. இன்றும் 'எஸ்கிமோ' ஜாதியினரிடமும் 'சைபீரிய'க் காட்டு வாசிகளிடமும் ஓவியம் தினசரி வாழ்க்கையில் எழுத்தறிவுபோல் பயனளிக்கிறது. குகை மக்கள் தம் அருகுள்ள மாக்களையும் போர்க்குறிப்பையும் வீரச்செயல்களையும் வரைந்து வைக்கின்றனர். செய்திகளை எலும்புகளில் பொறித்தனுப்புகின்றனர். 'அலாஸ்கா' ஜாதியினர் தம் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் கவனிப்புகளையும் 'நோட்டீஸ் போர்ட்டுகளில்' ஓவிய மூலமாகப் பிரசுரிக்கின்றனர். அவர் தம் மொழி 'எழுதாக் கிளவி' போலும்.

மக்களது மனவாக்கு உணர்ச்சிகளைத் தன் காவியத்தில் கலைஞன் வரிவடிவ எழுத்தால் எழுதுகின்றான்; அவ்வடிவம் அறியும் ஆற்றலுள்ளவனுக்கே அது புலனாகின்றது; படித்து அனுபவிக்கின்றான். ஆனால் ஓவியன் தரும் வடிவமோ வரிவடிவாலும் பல வண்ணத்தாலும் தீட்டப்படுகின்றது; அது யாவர்க்கும்—கல்லார்க்கும் கற்றவர்க்கும் சிறியார்க்கும் பெரியார்க்கும் நல்லார்க்கும் பொல்லார்க்கும் அறிவையும் ஆநந்தத்தையும் ஆற்றலையும் தருகிறது.

ஜீவகலை நீண்ட ஆயுள் பெற்றது; மிக மெதுவாகப் பழயனவற்றைக் கழித்துப் புதியன புகுத்த வல்லது ஓவியக் கலையே. மனத்திற் படாதவற்றையும் இயற்கை கற்பிக்க முடியாதவற்றையும் செய்யக் கூடியதே கலை; உண்மையான ஜீவகலை

இயற்கைக்குத் துணைபுரிந்து அணிபெறச் செய்வது ; இறைவனது சித்திரக்கலையைக் காண்பிப்பது இயற்கை (Nature is the art of god.) மனிதனே கடவுள்து மிக உன்னதமான கைத்திறன் (A man is the noblest work of god.) ஜீவ வாழ்க்கைக்கு உறுதுணையாவதே ஜீவகலையும் உயிரோவியமும் (living art) என்ப. ஜீவகலையுள்ள பாவைகளும் படங்களும் ஓவியங்களும் அழிதலே இல்லை. தொல்லுலகளில் காட்டுவாசிகள் கண்ட உயிரோவியங்கள் பறவைகளும் மிருகங்களும் ஆகும். அவைகளை மக்கள் வரைந்ததற்குக் காரணம் அவைகளின் வெளித் தோற்றமும் உடலழகுமேயாம்.

சித்திரக் கலையை வளர்க்கும் சக்தி இயற்கையினதே. இயற்கையைப் பெரும் வளர்ச்சிக்குச் செலுத்துவது ஓவியமே. வளர்ச்சிக்கே கலை முக்கியம். ஓவியத்திற்கும் காவியத்திற்கும் சங்கீதத்திற்கும் இயற்கையழகே தலைசிறந்த வழியாம் (Painting, poetry and music, Nature is ever the first means of inspiration). பேரழகுள்ள சூரியோதயமும், கடுமையான சூறுவளியும், குயிலின் பாட்டும் கோடை காலத்திற் காணும் நிலத்தின் தூரக் காட்சியும் ஓவியனையும் கவிஞனையும் பாணனையும் பரவசமடையச் செய்கின்றன ; எனவே, இயற்கை மனிதன் மூலம் கலையைப் பரிணமிக்க செய்கின்றது.

அழகைக் கண்டு ரசிக்க ஓவியம் அவசியம் ; மக்கள் அழகைக் காணவும் ரசிக்கவும் செய்யவே பொருட்காட்சி சாலையும், சித்திர மண்டபமும், ஓவியச்சாலையும் சித்திர கூடமும் அரசு அமைக்கவேண்டும்; இஃது ஓர் அரிய பண்டைப் பணியாகும். முற்காலத்தில் அரசர்கள் ஆதரித்த கலையும் ஆகும். அரியன தோற்றுவித்து அழகுணர்ச்சியைத் தூண்டிவிடுதலே கலை எனப்படும். பழையதோர் கதை பற்றிய தொடர்நிலை செய்யுளை (Epic poem) ஆலயங்களின் பிரகாரங்களிலும் விகாரங்களிலும் சுவர்களிலும் மதிற்புறங்களிலும் ஓவியங்களாகத் தீட்டினர்நம் பெரியோர் ; இதுவே காவிய ஓவியம் என்பது.

"கூட்டினன் மணிபல தெளித்துக்
கொண்டவன்
தீட்டினன் கிழிமிசைத் திலகவாள்
நுதல்—ஜீவக.

"ஓவுறழ் நெடுஞ்சுவர்"—பதிற்றுப்பத்து ; கண்கவர் ஓவியம் ;—மணிமேகலை ; ஓவியத் துறை கைபோய ஒருவனை - நைடதம்; ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன் - பரி ; செல்வப் பொற்கிடுகு சூழ்ந்த சித்திரகூடம் - ஜீவக ; உள்ளத்தெழுதி பார்க்கும் உயிரோவியமே—மீனாட்சி. பி. த. என்பன தமிழிலக்கியத் தொடர்கள்.

விலை மதிக்க முடியாத ஓவியம் வரைபவன் ஆயிரத்துக்குள் ஒருவனே ; அவன் அரசனால் ஆதரிப்பவனாகத்தான் இருக்க முடியும் ; அவன் பணத்திற்காகப் படத்தை எழுத தெரியாதவன் ; ஆனால் கலைக்கே தன் உள்ளத்தை விற்றவன். காலங்கடந்த ஓவியத்தால் புகழுடம்பு பெறுவோன் அவனே எனலாம். கடையில் விற்க ஓவியம் தீட்ட வல்லவனல்லன். **இவ்வினத்தைச் சார்ந்தவரே சென்னையும் பிறவும் புகழும் பாலு சகோதரர்கள்.** விலைக்குரிய கலையை (Industrial and Commercial art) நாற்காலி, மேஜை, முக்காலி, விசுப்பலகை, வாயற்படி முதலியவற்றிற்காணலாம். இது கலையன்று. அரண்மனையிலுள்ள அரியாசனத்திலும் அம்ஸ விளக்குகளிலும் கோயில் தீபங்களிலும் கலையைக் காணலாம். இவை அரனது சன்மானமும் பரிசிலும் பெற்றவை: அஜாந்தா, எல்லூரா குகைகளிற் காணும் காவியஓவியங்களாகிய புத்தர் ஜாதகக் கதைச்சித்திரங்கள் கலை நிரம்பியன ; மதுரையில் சோமசுந்தரேஸ்வரர் மீனாட்சியம்பாள் கோயிலிற்காணும் திருவிளையாடற் புராணச் சித்திரங்களிற் கலைமலிந்த

காவியஓவியம் உண்டு. இவை பிரார்த்தனை படங்கள்...(Pictorial prayers) என்ப.

(Symbolism is a universal method of religious expression and most of the decoration in connection with Shrines and Altars has this significance.) குறிகோள் உடைய படிமங்களையும் முத்திரைகளையும் வழிபாடு செய்வதின் நோக்கம் இறைவனது தத்துவத்தை உணரமுடியாதார்க்கும் அறிவு தந்து அழகுணர்ச்சியும் ஆநந்தமும் அடையச் செய்வதேயாகும். இஃது உலகில் யாண்டும் காணும் பெருவழக்கு.

பழங்காலத்தில் வியாபாரத்திற்காக ஓவியம் (Trade art) தீட்டிச் சந்தைக்கு அனுப்புதல் அடிமைகளின் தொழில் என்றும் கலைக்காகவே தீட்டும் கலை (Liberal art) மலிந்த அரிய ஓவியங்களை வரைதல் சுதந்திரமுள்ள பெருங்குடி ஓவியர் தொழில் என்றும் சரித்திரம் கூறுகின்றது. ஓவியமான (இனிமை) பேச்சைவிட உயிரோவியம் இன்றைய தேவை. பாலு சகோதரர்களைக் கொண்டே நாட்டில் ஆங்காங்கு ஓவியசாலைகளையும் (Art gallery) சித்திரக் கூடங்களையும் அரசு அமைக்க வேண்டும்; அவைகளால் மக்கள் மனத்திற் புத்துணர்ச்சி புலனும். அறியாமை அகலும். இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

நவரசம் உணர்விப்பது காவியம்; ஒன்பான் சுவைகளையும் கண்மூலம் உள்ளத்தே ஊட்டி, உணர்வு மயங்க வைப்பது ஓவியம். எகிப்தியருடைய ஓவியக் கலையை இந்திய ஓவியக்கலையுடன் சேர்த்து எழுதிய சித்திரங்களே நம்மிடை இன்று உலாவுகின்றன; பெருங்கண்களை உருவங்களில் எழுதும் பழக்கம் எகிப்தியருடையது; இந்தியக்கலை நுண்மை மிக்கது; அளவுடையது; அலாதியானது; ஆண்டவனைப் போன்று அனுதியானது; இன்று இந்தியக் கலைகளில் மிகச் சிறந்த ஓவியக்கலையைப் புதுப்பிக்க எழுந்த 'பெருஞ்சித்திரனுர்' களாம் பேராசிரியர்களாகிய ஸ்ரீ பாலுவையும் ஸ்ரீ சீனுவையும் போற்றுகின்றேன்; பெறலரும் பாரத ரத்தினங்களாகிய இச்சகோதரர்களால் நம் தமிழன்னை—எல்லார்க்கும் மூத்த நம் அன்னை முடி புனைந்து செங்கோலோச்சி அரியாசனத்தில் மறுபடியும் அமர்வாள் என நம்புகின்றேன்.

ஏழைகள் திருட்டுத் தொழில்தான் செய்கிருர்கள்; அந்தப் பொருள்கள் அப்போது அவர்களுக்குத் தேவையானவை என்று சொல்வதற்கில்லை. ஆனுல் அவர்கள் பிறந்த நாளிலிருந்து ஒவ்வொரு விஷயத்திற்கும் வீட்டில் "இல்லை மணி" அடித்துக்கொண்டே இருக்கிறது. அதனுல் அவர்கள் தம்மை அறியாமலே திருட்டுக் கையர்களாகிருர்கள். ஆனுல் இதைவிடக் கொடுமையான வேருெரு திருட்டுத் தொழில் உலகில் இருக்கிறது. தம்மைக் காட்டிலும் அதிகமாக உழைப்பவர்களைப் பாதி வயிறு பட்டினி போட்டு, தாம் மட்டும் கேளிக்கைகள் புரிபவர் யாவரும் பக்காத் திருடர்களே.

—காண்டேகர்

தனக்கு புரியாத மொழியில் ஒருவன் சங்கீதத்தை ரசிப்பது, தன் மனைவியிடம் பேச, வக்கீல் வைத்துப் பேசுவது போலாகும்.

—கவி தாகூர்

தொழிலாளர் பிரச்னையைத் திருப்திகரமாகத் தீர்த்தாலொழிய உண்மையான சமாதானம் ஏற்படாது.

—ராஜாஜி

ஆடும் பெருமான்

செந்தமிழ்ச் செல்வர் கி. வ. ஜகந்நாதன்

அந்த யோகி ஆடாமல் அசையாமல் ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் சிலையுருவமாகத் தோன்றுகிறது. அப்படிச் சமாதியிலே லயித்துவிட்டான். மூச்சுக்கூட மெல்லியதாக இழைகிறது. அவன் உடம்பின் இயக்கமே நின்றுவிட்டது போலத் தோன்றுகிறது. உண்மை அதுதானா? இல்லை, இல்லை.

ஓடி ஆடி உழைக்கும் மனிதனுடைய இயக்கத்தை நாம் கண்ணால் பார்க்கிறோம். இதோ யோக நிலையில் அமர்ந்திருக்கும் யோகியின் இயக்கம் நம் கண்ணில்தோன்றுவதில்லை. ஆனால் அவன் உடம்புக்குள் எத்தனை

வேலை நடந்து கொண்டிருக்கின்றன, தெரியுமா? ரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது; கனல் இருந்து எரிந்து கொண்டிருக்கிறது; நரம்புத்துடிப்பும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மூலமான சக்திக்கிருக்கம் இருதயம். அது அடித்துக்கொண்டிருக்கிறது; இடைவிடாமல் தாளம் போடுவது போல அடித்துக்கொண்டிருக்கிறது; ஒரே சீராக அடித்துக்கொண்டிருக்கிறது. இந்த இருதயத் துடிப்பு நின்றால்தான் உடம்பில் இயக்கம் இல்லாமல் நின்றுவிடும்; உடம்பு உயிரை இழந்து பிணமாகிவிடும்; ஊரும் பேருமாகிய விலாசம் இன்றி, புதைக்கவோ சுட்டு எரிக்கவோ வேண்டிய நாற்றப் பிண்டம் ஆகிவிடும்.

இருதயத்துடிப்பு ஒரே சீராக ஒலிக்கிறது அதைக்குழாய் வைத்துக் கவனிக்கிறார் மேல்நாட்டு வைத்திய முறையை அறிந்தவர். கைநாடியைப் பிடித்துப் பார்த்து அறிகிறார் நாட்டு வைத்தியர். ஒரு சீராக ஒலிக்கும் ஒலியைத்தான் லயம் என்றும் தாளமென்றும் சொல்கிறோம்.

கலைஞன் ஒருவன் இந்தத் தாளத்தைச் சற்றே எண்ணிப் பார்த்தான். வெறும் தாளம் மாத்திரம் யாராவது போடுவார்களா? இருதயத் துடிப்பாகிய தாளத்திலே ஒரு சைதன்யம் இயங்குகிறது; ஒரு சக்தி துள்ளுகிறது. அதுதான் உயிர்க்கூட்டங்களின் உள்ளே இருந்து ஆட்டுவிக்கிறது. இப்படியெல்லாம் அந்த கலைஞன் நினைத்துப் பார்த்தான். அவன் வெறும் கலைஞன் மாத்திரம் அல்ல; மனித சக்தியை வைத்து விளையாடும் பெரிய சக்தியாகிய ஒன்றைக் கடவுள் என்ற பெயரால் வாழ்த்தி வணங்கி அமைதிபெற்று வாழும் பக்தன்.

இருதயத் துடிப்புக்கு ஏற்றவண்ணம், அதற்குப் புறம்பே உடம்பில் இயக்கம் நடைபெறுகிறது. ஆனால் அந்தத் துடிப்பாகிய தாளத்துக்கு ஏற்ப அந்த இருதயத்துக் குள்ளேயே ஒரு நடனம் நிகழ்வதை அவன் கண்டான். இருதயத்தினூடே ஒரு நுட்பமான இடைவெளி—தகராகாசம்— இருக்கிறது. அந்த வானிலே இறைவன் நடனமாடுகிறான். அவன் நடனத்துக்குத் தாளம் போடுகிறது இருதயம். அறிவு உணர்ந்தாலும் உணர்ந்து கொள்ளாவிட்டாலும் இந்தத் திருக்கூத்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தத் திருக்கூத்தின் அமைப்புக்கு ஏற்றபடி இருதயம் துடிக்கிறது; தாளம் பிடிக்கிறது. இருதயத் துடிப்புக்கு ஏற்ப—வெறும்தசை மொட்டாகத் தோற்றும் இருதயத் துடிப்பு மட்டும் அல்ல, உணர்ச்சி மணம் வீசும் மலராகிய இருதயத் துடிப்புக் கூடத்தான்—மனிதன் தோன்றுகிறான்; வளர்கிறான்; மறைகிறான். அவனைப் படைத்துக் காத்துச் சங்கரிக்கும் தொழில்களே இந்த மூலத்துடிப்பைச் சார்ந்து நிகழ்கின்றன. அதுவோ இறைவன் திருக்கூத்தைச் சார்ந்து அமைகிறது. ஆகவே சிருஷ்டி முதலிய தொழில்கள் யாவும் இறைவனுடைய தகராகாசத் திருக்கூத்தினால் விளைகின்றன என்று சொல்வதில் தவறு இல்லை.

நடராசன் ஐந்தொழிற் கூத்தை நடத்துகிறான்; இருதயத்தினூடே நுண்ணியதினும் நுண்ணியனாகத் திருக்கூத்து நடத்துகிறான். இது பிண்டத்தில் நடப்பது.

இனி அண்டத்துக்கு வருவோம். மலையைப் பாருங்கள். அது சலனமின்றி இருக்கிறது. அதற்கு அசலம் என்ற ஒரு பெயரே உண்டு அல்லவா? ஆனால், விஞ்ஞானிகளைக் கேட்டுப் பாருங்கள். மலையென்பது-உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களுமே-அணுக்களின் கூட்டம். அணு என்பது எப்போதும் சுழன்று கொண்டே இருக்கிறது. மலையின் ஒவ்வோர் அணுவும் சுழலும்போது அது சலனமற்றது என்று எப்படிச் சொல்லமுடியும்?

அது கிடக்கட்டும். மாட மாளிகைகளும், வீதிகளும், ஊர்களும், நாடுகளும், கண்டங்களுமாக இருக்கிற உலகத்தை நாம் பார்க்கிறோம். இவை யாவும் அசையாப் பொருள்கள் என்ற பட்டியலில் வருகின்றன. இவை தனித் தனியே அசைவதில்லை. பூமியும் அசைவதாகத் தோற்றுவதில்லை. ஆனால் உண்மை என்ன? பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு அதே சமயத்தில் சூரியனையும் சுற்றி வந்து கொண்டிருக்கிறது. வானத்தில் மெல்லப் போய்க் கொண்டிருப்பதாகச் சூரியனைப் பார்க்கிறோமே; அது போகவில்லையாம். நின்ற இடத்தில் இருந்தபடியே வெகு வேகமாகச் சுழன்று கொண்டே இருக்கிறதாம்.

சர்க்கஸில் ஒருவிதமான வேடிக்கையைப் பார்க்கலாம். ஒருவன் பல தட்டுக்களைக் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு தட்டையும் சுழற்றி ஒரு கோலில் ஏந்திக் கொள்வான். இப்படிக் கைகளிலும் வாயிலும் நெற்றியிலும் பல கோல்களின்மேல் பல தட்டுக்கள் சுழன்று கொண்டே இருக்கும். அவன் சுழற்றி விட்டதைப் பார்க்காமல் அவனையும் கவனிக்காமல் தட்டுக்களைப்பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அப்படித்தான் சூரியனும் சந்திரனும் பூமியும் நட்சத்திரங்கள் எல்லாமும் சுழன்று கொண்டே இருக்கின்றன. இவ்வளவையும் ஆட்டிவைக்கிற சர்க்கஸ்காரன் யார்?

பிண்டத்தில் நிகழும் இயக்கங்களுக்கு மூலமான தகராகாசக் கூத்தை நிகழ்த்தும் நடனப்பிரான் எவனோ, அவனே தான் அண்டத்தில் நிகழும் இந்தப் பெருங்கூத்தையும் நடத்துகிறான். தான் அசைந்து இவற்றைச் சுழலப் பண்ணுகிறான். அவனுடைய இந்தப் பரமாகாசக் கூத்தை நம்மால் அறியமுடிவதில்லை. நுட்பத்திலும் நுட்பமாய் உயிர்கள் புகுந்த கோயில்களுக்குள் இருந்து ஆடும் நடனப்பிரான் விழவிலும் விபுவாய் மிகமிகப் பெரிய அண்டங்களை யெல்லாம் ஆட்டுவித்து ஆடும் நடராசனாகவும் இருக்கிறான். நமக்கு ஒன்று சிறியதாகவும் மற்றொன்று பெரியதாகவும் தோற்றும். கடியாரத்துக்குக் கொடுக்கும் சாவி ஒன்றுதான். அதுவே மயிரிழை போல் உள்ள சிறு சக்கரத்தையும் ஆட்டி வைக்கிறது; பெரிய சக்கரத்தைச் சுழற்றி நீளமான முட்களைக் கடிகாரத்தின் முக முழுவதும் சுற்றிச் சுற்றிவந்து காலத்தைத் துடைக்கச் செய்கிறது. அப்படியே அண்டக் கூத்தையும் பிண்டக் கூத்தையும் ஆடுகிறவன் ஒருவன்தான்.

இந்த அற்புதக் கூத்தனை ஓவியத்திலும் காவியத்திலும், கோயிலிலும் வீட்டிலும், சிற்பத்திலும் சிலையிலும் வைத்துப் பாடியும் ஆடியும் தொழுதும் கும்பிடுகிறோம் நாம். இதைக் காட்டிலும் தத்துவச் செறிவுள்ள கலை வேறு என்ன இருக்கிறது?

பிண்டத்தின் உள் இலயம்
பேசும் திருக்கூத்தும்
அண்டத்தை ஆட்டும்
அருள் நடமும்—கண்டிலர்க்குக்
காட்டும் குறியாக்
கரம்வீசி ஆடுவான்
ஆட்டுவிக்கும் எங்கள் அரன்.

உருவராகியும் அருவினராகியும் உருஅருவினராகியும் ஒருவரே
யுளார் கடவுள் கண்டறிமினோ உலகுளீர்—உணர்வின்றி
இருவராமென்றும் மூவரேயாமென்றும் இயலும் ஐவர்களென்றும்
எருவராயுரைத்து உழல்வது என்உடற்கு உயிரிரண்டு மூன்று எனலாமே.

—ஜோதி இராமலிங்க சுவாமிகள்.

உள்ளினேன் என்றேன்மற்று என்மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.
பாலு சகோதரர்கள்


அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.
BALU
BROS



குறள் ஓவியங்கள்.

டாக்டர். மு. வரதராசன், எம்.ஏ.எம்.ஓ.எல்.பிஎச்.டி.

கலைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று உறவு உடையவை. எல்லாம் உள்ளத்து உணர்ச்சி பெறும் அழகான வடிவங்கள் எனலாம். புலன்களும் புலன்கள் உணரும் முறைகளும் வெவ்வேறாக இருப்பதால், கலைகள் வெவ்வேறு வடிவங்கள் கொள்கின்றன. செவிக்குப் புலனாகும் கலைகள் இசையும் கவிதையும். கண்ணுக்குப் புலனாகும் கலைகள் ஓவியமும் சிற்பமும். உள்ளத்து உணர்ச்சி ஒவ்வொரு கலையிலும் ஒவ்வொரு வகை அழகாகப் புலப்படும். ஒருவகைக் கலை வடிவை மற்றொரு வகைக் கலைவடிவோடு ஒப்பிடும்போது தனி நயம் தோன்றும்; இரண்டையும் ஒருங்கே நுகரும்போது நயம் மேலும் சிறக்கும். மயிலின் அழகிய உருவத்தைமட்டும் காண்பது ஓர் இன்பம்; அந்த அழகிய உருவத்திலேயே மென்மையான அசைவையும் (நடனத்தையும்) சேர்த்துக் காண்பது அதனினும் சிறந்த இன்பம். அதுபோலவே, சிறந்த பாட்டில் உள்ள கற்பனையை ஓர் ஓவியத்தில் அமைத்துக் காணும்போது, கலையின்பம் மேலும் மிகுகின்றது.

திருவள்ளுவரின் குறள்மணிகள் பல அழகிய சொல்லோவியங்களாக உள்ளன. அவற்றின் அரிய கருத்துக்களையே வண்ண ஓவியங்களாகவும் கீற்றோவியங்களாகவும் அழகிய வடிவம் தந்து காணும்போது நயம் பலமடங்கு ஆகின்றது. சொல்

லோவியமாக உள்ள குறள்மணிகள் சிந்தைக்கும் செவிக்கும் மட்டும் இனியனவாக உள்ளன ; அவற்றை வண்ண ஓவியங்களாக்கிக் காணும்போது கண்ணுக்கும் இனிய கலைவிருந்துகளாகச் சிறப்புறுகின்றன.

தேனின் சுவையை நா மட்டும் நுகரும்; ஆனால் செவியும் நுகர்வதாக அமைந்தால் எப்படி இருக்கும் ? குழலின் இசையைச் செவிமட்டும் நுகரும்; ஆனால் கண்ணும் பருகுவதாக அமைந்தால் எவ்வாறு இருக்கும் ! அத்தகைய பெறற்கரிய மிகு நயத்தையே இந்தக் குறளோவியங்களில் பெற்று மகிழ்கிறோம்.

உலகத்தில் காணும் இடங்கள் எல்லாம் கற்கள் உண்டு. ஆனால் பொதியமும் வேங்கடமும் இமயமும் போன்ற ஒரு சில மட்டுமே உயரிய மலைகளாக ஓங்கி நிற்கின்றன. உலகில் பிறந்து மடியும் மக்கள் கணக்கற்றவர் ; அவர்களுள் திருவள்ளுவர் போன்ற பெருமக்கள் ஒரு சிலர் ஓங்கல்களாக உயர்ந்து நிற்கின்றனர். அத்தகைய பெருமக்களின் சிந்தனை, சொல், செயல் எல்லாம் உலகம் போற்றிப் புகழும் நந்தா விளக்குகள் ஆகும். அந்த விளக்குகளுள் குன்றாச் சிறப்புடையது திருக்குறள். அது தமிழ் விளக்காக அமைந்தது தமிழருடைய நற்பேறு ஆகும். அந்தத் தமிழ் விளக்கு வீசும் சுடரொளியின் சில கதிர்கள் இங்கு வண்ண ஓவியங்களாகக் கண்ணுக்கும் கருத்திற்கும் இன்பம் தரும் கற்பனைவிருந்துகளாக உள்ளன.

* * * *

உள்ளினேன் என்றேன் ; மற்று என் மறந்தீர் என்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

1. திருவள்ளுவரின் கற்பனையில் அமைந்த காதலனும் காதலியும், கல்வியும் அறிவும் நிரம்பியவர்கள். அவர்களின் பரந்த கல்வியும் நுண்ணிய அறிவும் அவர்கள் பேசும் பேச்சிலும் புலனாகின்றன. ஒவ்வொரு சொல்லையும் நுட்பமாகப் பொருளுணர்ந்து பேசும் திறன் பெற்றவர்கள் அந்தக் காதலர்கள்.

எங்கோ வெளியே போயிருந்த காதலன் காதலியைக் காணவேண்டும் என்ற ஆர்வத்துடன் திரும்பி வந்தான். அவளைக் கண்டதும், "யான் உன்னையே நினைந்திருந்தேன்" என்றான். "உள்ளினேன்" என்ற சொல்லுக்கு, "நினைந்திருந்தேன், நினைந்தேன்" என்பது பொருள். அவன் இந்தச் சொல்லின் பொருளை நன்றாக அறிந்தவனே. ஆயினும், உணர்ச்சி வயமாக இருந்த காரணத்தால், அதன் நுட்பமான பொருளை எண்ணிப் பாராமலே, "உள்ளினேன்', என்று சொன்னான். சொல்லியவாறே அவளைத் தழுவக் கை நீட்டினான்.

அவள் அந்தச் சொல்லை அவ்வாறு மேற்போக்கான பொருளில் கொள்ளவில்லை. அவளுடைய உள்ளத்தில் இதுவரையில் இருந்துவந்த வருத்தம் ஒன்று இப்போது மேலெழுந்தது. காதலன் பிரிந்திருந்த நாட்களில் தன்னை அவன் மறந்து கவலையில்லாமல் இருந்தான் என்று அவள் குறைபட்டாள். அதை இப்போது சுட்டிக்கூற முனைந்தாள்.

ஒரு பொருளை மறந்திருந்த பிறகு மீண்டும் அதைப் பற்றிய எண்ணம் வந்தால்தான் 'நினைத்தல்' என்று சொல்லப்படும். மறத்தல் இல்லையானால் நினைத்தல் இல்லை. 'உள்ளினேன்' என்ற சொல்லைக் கேட்ட அவள், சொல்லின் நுட்பப் பொருளை உணர்ந்து இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டாள்.

"ஓ ! என்னை நினைந்தீரா ? அப்படியானால் எவ்வளவோ நாட்களாக மறந்திருந்தீர் என்பது தெரிந்து விட்டது. உம்முடைய வாழ்க்கைத் துணைவியாகிய என்னை எப்படி மறக்கலாம் ? ஏன் மறந்தீர்" என்று ஊடல்கொண்டு, தழுவ நீட்டிய அவனுடைய கைகளுக்கு எட்டாமல் விலகினாள்.

* * * *

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

2. குடியாட்சி முறைக்கே மிகப் பொருந்தும் உண்மைகள் பழங் காலத்திலேயே திருவள்ளுவர்க்கு விளங்கிவிட்டன. அவர் வாழ்ந்த காலம் முடியாட்சி இருந்த காலம். அந்தக் காலத்தில் அரசனுக்குப் பெருமதிப்பு இருந்துவந்தது. அவனுடைய படைச் செல்வம் அழியாத பெருமை உடையதாகப் போற்றப்பட்டு வந்தது. ஆனால் குடியாட்சிக் காலத்தில் ஆளும் தலைவனைவிட, அவனுடைய படையைவிட ஆற்றல் மிகுந்தது ஒன்று உண்டு ; அதுதான் குடிமக்களின் உணர்ச்சி. மக்களின் உணர்ச்சி திரண்டு எழுந்தால், எப்படிப்பட்ட அரசும் கவிழ்ந்துவிடும் என்பது இன்று உலகம் காணும் உண்மை. இந்த உண்மையை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் உணர்ந்து விளக்கியுள்ளார்.

ஒரு பக்கம், ஆளும் தலைவனுடைய யானைப் படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை என்பனவும் அவனுடைய செல்வாக்கும் ; மற்றொரு பக்கம், குடிமக்களின் உணர்ச்சி. இந்தப் பெரும் படை ஆற்றலோடு அடக்கி ஆள முயலலாம்; ஆனால் குடிமக்கள் கலங்கிக் கண்ணீர் விடுவார்களானால், இந்தக் கண்ணீர்ப் படைக்கு முன் அரச செல்வம் நிற்காது ; இருக்குமிடம் தெரியாமல் அழிந்துபோகும்: தேய்ந்து போகும். கண்ணீர்ப் படை அரசாங்கத்தை எதிர்க்குமா, தாக்குமா என்று ஐயுறலாம்.

கண்ணீர்ப் படை அசைந்தால் போதும்; அரசாங்கத்தைத் தேய்த்துவிடும். குடிமக்களின் கண்ணீர் எதிர்க்கும் படை அன்று, தாக்கும் படை அன்று, பகையைப் பொருட்படுத்தாமல் எளிதில் அழிக்கும் படை, தேய்க்கும் படை என்கிருர்.

* * * *

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான

3. உயிர் வாழ்க்கைக்குக் காற்று வேண்டும், ஒளி வேண்டும், நீர் வேண்டும், உணவு வேண்டும். உயிர் வாழ்க்கைக்காக உலகத்தைப் படைத்தவன், அதற்கு வேண்டிய காற்றையும் ஒளியையும் நீரையும் உணவையும் நிரம்பப் படைத்திருக்கின்ருன். படைப்பில் குறை ஒன்றும் இல்லை. காற்றும் ஒளியும் நீரும் மக்களின் கைக்கு எட்டாதனவாக இருந்து எல்லோருக்கும் பொதுவாகக் கிடைக்கின்றன.

உணவுப்பொருள் மட்டும் மக்களின் கையில் அகப்படுவதால், சேர்த்துவைக்கும் வழக்கம் எப்படியோ புகுந்தது. சேர்த்து வைக்கும் திறமையோ தந்திரமோ உடையவர்கள் உணவுப் பொருளைச் சேர்த்துவைத்து உண்ணும் வழக்கம் ஏற்பட்டது. மற்றவர்கள் அந்தத் திறமையோ தந்திரமோ இல்லாத காரணத்தால், சேர்த்துவைத்தவர்களிடம் கெஞ்சிக் கேட்டு வாழும் வ்ழக்கமும் ஏற்பட்டது. அதனுல் பறவைகளிடமும் விலங்குகளிடமும் இல்லாத கொடிய பழக்கம் மக்களிடம் காணப்படுவதாயிற்று. அந்தக் கொடிய பழக்கம்தான் இரத்தல்—பிச்சை எடுத்தல்—என்பது.

இரத்தலைப் பற்றி நெஞ்சுருகி எண்ணியவர் திருவள்ளுவர். அறிவு குறைந்த பறவைகளும் விலங்குகளும் செய்யாத இழிவான செயலை மக்கள் செய்ய வேண்டுமா என்று எண்ணினுர். இப்படி இரந்து உயிர் வாழவேண்டுமா என்று எண்ணினுர். உழைத்து வயிறு வளர்ப்பதற்காகப் பயன்படுத்தவேண்டிய கைகளையே பிச்சை கேட்டு நீட்டுவதற்குப் பயன்படுத்த வேண்டுமா என்று உருகினுர். உழைத்து உயிர் வாழாமல் இரந்து உயிர் வாழும்படியாக உலகத்தை இறைவன் படைக்கவில்லை என்று தெளிந்தார். அவ்வாறு இரந்தும் உயிர்வாழும்படியாக உலகத்தைப் படைத்திருந்தால், அவன் இரப்பவர்போலவே அலைந்து கெடுவாஞக என்ருர்.

* * * *

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்.

4. உடல் வலிமை, அதை ஒட்டிய படை வலிமை, மூளை வலிமை, அதை ஒட்டிய பண வலிமை எல்லாவற்றிற்கும் சாயுங்காலம் வந்துவிட்டது. எல்லோரும் வாழவேண்டும் என்னும் ஒப்புரவும், அதற்காக எல்லோரும் உழைக்கவேண்டும் என்னும் உழைப்புக் கொள்கையுமே இந் நூற்ருண்டில் எங்கும்

போற்றப்படுவன. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தலை வற்புறுத்தி, வீணில் உண்டு களித்திருத்தலை நிந்தனை செய்த பாரதியார் இந்நூற்றாண்டின் வளர்ச்சியையே விளக்கி யுள்ளார். அதனால்தான் அவர் கலைமகளையும் 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்று போற்றியுள்ளார்.

உலகம் பெற்றுள்ள இவ்வளவு முன்னேற்ற வளர்ச்சியையும் காலம் கடந்து நோக்கி அன்றே உணர்ந்தார் திருவள்ளுவர். உழவரே உரிமையுடன் வாழ்கின்ற பெருமக்கள்; மற்றவர்கள் உரிமையற்ற தொழில் செய்து வயிறு வளர்ப்பவர்கள் என்கிறார்.

மனிதன் நாகரிகப் படியில் கால் வைக்குமுன்பு உடல்வலிமையையே பெரிதாக நம்பிவந்தான்; உடல்வலிமை உடையவனே ஒரு கூட்டத்தின் தலைவனாகக் கருதப்பட்டு வந்தான். அவன் இட்டதே சட்டமாக, அவன் ஆணையே ஆட்சியாக, அவன் கையில் எடுத்த கோலே நீதிமன்றமாக இருந்துவந்த காலம் அது. நாகரிகப் படியில் கால்வைத்த பிறகும் சில நூற்றாண்டுகள் இந்த நிலைமை நீடித்தது. ஒருவன் தோள்வலி போலவே, பலருடைய தோள்வலியும் சேர்ந்து திரண்டது படைவலிமை எனப்படும். அதுவும் இந்தப் படியைச் சேர்ந்ததே ஆகும்.

அதற்கு அடுத்தாற்போல ஏற்பட்டது மூளையின் செல்வாக்கு. மூளை வலிமை உடையவர் தம் பேச்சாலும் தந்திரச் செயல்களாலும் மற்றவர்களை வசப்படுத்தி ஆள முடியும், ஆளும் அரசர்களையும் ஆட்டி வைக்க முடியும் என்ற நிலைமை இது. இந்த நிலைமையும் பல நூற்றாண்டுகள் நீட்டித்தது. இதைப் பற்றி எழுந்த நூல்களே சாணக்கியர், கௌடில்யர் முதலியவர்களின் நூல்கள். இந்த மூளை வலிமையைக் கொண்டு பொருள் சேர்க்கும் முறையும், செல்வராக விளங்கும் முறையும் ஏற்பட்டன. பாங்கிமுதலிய நிதி நிலையங்களால் ஏற்பட்டுள்ள பணத்தின் செல்வாக்கும் இதை அடிப்படையாகக் கொண்டதே.

தமிழ்ச்செல்வம். கி.ஆ.பெ.விசுவநாதம்.

" வேலோடு நின்றா னிடுவென்றது போலும்
கோலோடு நின்றா னிரவு "

என்பது திருக்குறளில் ஒரு குறள்.

செங்கோன்மை என்ற தலைப்பில் 10 குறள்களைக் கூறிய வள்ளுவர் பின்னும் கூறவந்த கொடுங்கோன்மை என்ற தலைப்பில் இக்குறள் இரண்டாவதாக வந்துள்ளது.

இதில் கோன்மை என்பது கோலின் தன்மை என்றாகி அரசனது முறை செய்யுந் தொழிலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

கோடாத கோலைச் "செங்கோல்" என்றும் கொடுங்கோலைக் "கொடுங்கோல்" என்றும் குறிப்பிட்டு மன்னனது நன்முறையையும், வன்முறையையும் விளக்குவது ஒரு தமிழ் மரபு.

மன்னன் கைப்பிடிக்கும் செங்கோலானது வணிகன் கைப்பிடிக்கும் துலாக்கோல் போல எப்பக்கமும் சாயாது நடுநிலை நிற்கவேண்டும் என்பது குறள்நெறி.

தனக்குச் சேரவேண்டிய வரி அல்லாத பிறபொருள்களை மன்னன் மக்களிடத்தில் விரும்பிப் பெறுவது கொடுங்கோன்மையாகும் என்பது இக்குறளின் பொருள்.

மன்னன் மக்களிடம் கொடுங்கோன்மையாற் பெற்ற செல்வம் எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும் அது இரந்து பெற்ற இழிந்த செல்வமேயாம் என்பது வள்ளுவரது முடிவு.

இரந்து பெறுகின்ற இழிகுணம் படைத்த ஒருவனை "கொடுங்கோலன்" எனக் கூறினாலும் அவனை மன்னனாக ஒப்புக்கொண்டதாக ஆகும். ஆதலின் "கொடுங்கோலன்" எனக் கூறாமல் வெறுங்கோலன் எனக் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

உறுப்புகள் குறைந்த குருடும், நொண்டியும் ஊன்று கோலொடு நின்று புரியும் இரத்தல் தொழிலை வெறுங்கோலொடு நிற்கும் மன்னன் விரும்பிச் செய்வது வெறுப்புக்கு உரியது என இக்குறள் கூறாமற் கூறுகிறது.

கோலொடு நின்ற மன்னவன், மக்களிடம் பெறும் பொருளை "இரவு!" என்று வள்ளுவர் சொல்லாற் கூறினும் கருத்தால் அதனைக் "களவு" என்று காட்டுவது கருதி மகிழ வேண்டிய ஒன்று.

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு.

கோல்கொண்டு நின்ற இத்தகைய மன்னர்களின் கொடுஞ் செயலுக்கு அடர்ந்த காடுகளில் வேல் கொண்டு நின்று இடுவென்று கூறி வழிப்பறி செய்யும் கள்வரது கொடுஞ் செயலை இக்குறளில் உவமையாகக் காட்டியிருப்பது வேந்தரது உள்ளத்தையே வேல் கொண்டு தாக்குவதாக இருக்கிறது.

"வேலொடு நின்றான்" என்ற சொற்களிலிருந்து அவன் அன்பு, அறம் முதலியவேறு எதனொடும் நிற்க வில்லையென்பதையும், "கோலொடு நின்றான்" என் பதிலிருந்து அவன் அறிஞர், அமைச்சர் முதலிய வேறு எவரோடும் நிற்கவில்லையென்பதையும் கண்டு மகிழுங்கள்.

"கொடாவிடில் துன்புறுத்துவோம்" என்பதில் மட்டுமல்ல; "கொடுப்பதால் நன்மை ஏதும் கிடைக்காது" என்பதிலும் கோலொடு நிற்பானும், வேலொடு நிற்பானும், செயலொடு ஒத்து நிற்பது சிந்தித்து உணரத்தக்கது.

வேலொடு நின்றவன் முன்னும், கோலொடு நின்றவன் முன்னும் செல்வமொடு நிற்பதைக் காட்டிலும் வறுமையொடு நிற்பது நல்லது என்பது இக்குறளின் திரண்ட கருத்து.

வேலொடு நிற்பவன் வாழும் காடும், கோலொடு நிற்பவன் வாழும் நாடும் பொருளொடு நிற்பவன் வாழத் தகுதியற்றவை என்பது இக்குறளின் முடிவு.

வேலொடு நிற்பவன் கொடுமை ஒருபொழுது மட்டுமே துன்பந் தரும். கோலொடு நிற்பவன் கொடுமையோ எப்பொழுதும் துன்பந் தரும். ஆதலின் கோலின் கொடுமைக்கு வேலின் வெம்மை ஏற்ற உவமையாக இல்லையே என்று வள்ளுவர் உள்ளம் பெரிதும் வருந்தியிருக்கிறது.

இந்த உவமை பொருந்தாமையானும், இதனினும் சிறந்த உவமை இல்லாமையானுமே வள்ளுவர் இக்குறளில் "என்றதுபோலும்!" என ஐயப்பாட்டுடன் கூறியுள்ளார். இன்றேல் "என்றதுபோல" எனக் கூறியிருக்க வேண்டும்.

உயிர்க்கு உடலாகவும், உடலுக்கு உயிராகவும், புவி மன்னர்களைக் கூறுவது கவி மன்னர்களது வழக்கு. ஆதலின் உடலை வருத்தும் வேலும், உயிரை வருத்தும் கோலும் இக்குறளில் காணப்படுகிறதுபோலும்!

ஈகைத் தொழிலுக்குரிய அரசன் இரத்தல் தொழிலில் புகுந்து மக்களிடம் விரும்பிக் கேட்டுப் பெறும் பொருளே **வழிப்பறிக் கொள்ளை** என்றாகுமானால், கொடாவிடில் துன்புறுத்துவேன் என அச்சுறுத்திப் பெறும் பொருளை எதனோடு ஒப்பிடுவது? என்பதை சிந்திக்கச் செய்கிறது இக்குறள்.

முறை செய்யும் மன்னவன், கொலைசெய்யும் வேடனின் குணத்தைப் பெறுவானானால், அவன் கொடியோரைத் தண்டித்து, நல்லோரைக் காக்கும் நற்பணியைச் செய்ய விரும்பமாட்டான் என்ற சிறந்த கருத்து இக்குறளில் புதைபொருளாகப் புதைந்து கிடக்கிறது.

கோலைப் பிடிக்கவேண்டிய மன்னன் தனது பண்பை இழந்துவிட்டு வேலைப் பிடிக்க வேண்டிய வேடனின் பண்பைப் பெற்றிருந்தாலும், அவனது வேலைப் பிடித்து நில்லாமையால், அவன் மன்னனுமல்லன், மறவனுமல்லன் மனிதனுமல்லன் என்ற வள்ளுவர் கருத்து நம்மை மகிழ வைக்கிறது.

கோலொடு நிற்கும் மன்னர்கள் இன்று இல்லை. எனினும் கொடுமையொடு நிற்கும் அமைச்சர்கள், அதிகாரிகள் பலர் இன்று உள்ளனர். அவர்

கள் கோலொடும், வேலொடும் கொடுமையொடும் நில்லாமல் குறளொடு நிற்க வேண்டும் என்பது நமது எண்ணம்.

குறள் தமிழகத்தின் கருவூலம். அது தமிழனின் சொந்தச் சொத்து. ஆகவே திருக்குறளை தமிழ் மக்கள் அனைவரும், உரிமையொடு எடுத்து, அறிவொடு படித்து, சிந்தனையொடு உணர்ந்து செயலொடுநடந்து, பண்பொடு வாழவேண்டும் என்பது நமது ஆசை.

மகா வித்வான் ச. தண்டபாணி தேசிகர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு ?

1. சூரியன் கிழக்கே பளபள என்று உதிக்கிறான். அவன் கதிர்கள் ஓய்ந்த உள்ளத்திற்கு உழைப்பு உணர்ச்சியை ஊட்டுகின்றன. நேற்று இரவு உண்டு, களித்து ஓய்வுகொண்ட மக்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடுகிறார்கள் உழைக்க.

இந்த நேரத்தில் சாலையோரத்தில் ஒரு மரத்தடியில் இரண்டு உருவங்கள் துவண்டு கிடக்கின்றன. அவற்றின்மேல் சாலைப் புழுதி ஒரு நூல் கனம் படிந்திருக்கிறது. ஒரு நூலாவது முழு நூலில்லாத ஆடை பல தோரணங்களாக அவ்வுருவங்களின் மானத்தைக் காப்பாற்றிக் கொடுக்கும் பெரிய உதவியைச் செய்கின்றது. வயிறு முதுகோடு ஒட்டி இளைந்த மூச்சால் உப்பி, வடிந்து, இவ்வுருவங்களுக்கு உயிர் உண்டு என்பதைக் காட்டிக்கொண்டிருக்கின்றது.

எல்லாரையும் எழுப்பிய சூரியன் இவர்களையும் எழுப்பிவிட்டான். எழுந்து புறப்பட முயன்றார்கள். எல்லோருக்கும் ஏதோ வேலையுண்டு. போக்கிடம் உண்டு. இவர்கள் எங்கே போவது ?

இவர்கள் முகம் ஒரே கவலைக்கடல். எங்கும் பள்ளமும், வடுக்களும். வறுமையின் வாழ்வு இவர்கள் தலைமுதல் கால்வரை காட்சி யளிக்கிறது.

நேற்று இரவு உலகெல்லாம் இருண்டிருந்ததே ! இப்போது ஒளியாக இல்லையா ? நேற்றெல்லாம் மழையும் மின்னலும் அச்சுறுத்தினவே, இன்றெல்லாம் ஒளியும் உற்சாகமுமாக உலகம் களிக்கவில்லையா ? அதுபோல நமது வாழ்விலும் ஒரு மாற்றம் இருக்கும் என்ற நம்பிக்கை இவர்கள் உள்ளத்தில் உண்டாகிற்று. அப்போது வாடிய முகத்தில் ஓர் ஒளி. உடனே காலைப் பசி அடிவயிற்றைக் கிள்ளுகிறது. அதற்கு இதுவரை ஒரு வழியுமில்லை. அதனால் நம்பிக்கை மறைகிறது. அப்போது பழைய வாட்டம். இப்படி மனப்போராட்டம் முகத் திரையில் நிழற் படமாக ஓடிக்கொண்டிருக்கிறது. அதனால் அச்சமும், நம்பிக்கையுங்கலந்த உரை தவழ்கிறது அவர்கள் வாயில் : இவர்கள் மன நிலையைத் தீட்டித் தந்தார் திருவள்ளுவர் அதனை ஓவியமாக உருத்தந்தார் ஓவியர். எல்லாங் கூடிக் காட்டுங் கருத்து நேற்று நம்மைக் கொலைசெய்து கொண்டிருந்த வறுமை இன்றைக்கும் வந்துவிடுமோ என்பதுதான்.

* * * *

வாழ்க்கையின் முப்பேரிலக்குகளான அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையுங் குறித்து ஆக்கப்பட்ட 1330 குறுஞ்சொற்றொடர்களைக் கொண்ட **திருவள்ளுவர் திருக்குறள்** உலக இலக்கியங்களிலேயே பொறுக்கியெடுத்த மணிகளில் ஒன்றாகும். திருவள்ளுவ முனிவரை மயிலாப்பூரைச் சேர்ந்த யாரோ ஒருவர் என்று கூறுதல் தகாது; அவர் புகழ் அவர் பிறந்த நாட்டைக் கடந்து தொலைவிலுள்ள வெளி நாடுகளில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே பரவி விட்டது.

—பேராசிரியர் வின்டர்னிட்ஸ்

கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.

2. பெரும்போர் நடக்கிறது. ஒரு வீரன் யானையோடு சண்டையிடச் சென்றான். கையிலே ஒரு வேல் இருந்தது. அதனையும் ஒரு யானைமேல் எறிந்துவிட்டான். அந்தச் சமயம் பார்த்து ஒரு யானை இவன்மேல் எதிர்த்து வருகிறது. கையில் ஆயுதம் இல்லையே என்ற கவலை அவனுக்கு. சுற்று முற்றும் பார்த்தான், தன்னுடம்பையும் பார்த்தான். இவன் மார்பிலே ஒரு வேல் தைத்திருந்தது. அதைக் கண்டதும் அவனுக்கு ஒரே ஆனந்தம். வெடுக்கென்று பிடுங்கினான். இந்த வீரன் காட்சியை வள்ளுவர் சித்தரிக்கிறார். வெற்றிக்கருவி ஆயுதம் அல்ல. உள்ளத் துணிவும், சமயோசித புத்தியுந்தான் என்பது வள்ளுவர் உள்ளக் கிடக்கை. இது தமிழன் வீரம்.

கிரேக்கர்களிடம் ஹோமர் திகழ்ந்ததுபோலத் தமிழர்களிடம் திருவள்ளுவர் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாததோர் உண்மையாகும்; திருக்குறள் ஒரு கல்விக் களஞ்சியம், பாவலர்க்குறுதுணை, ஒப்புயர்வற்ற சொற்றிறம் நிறைந்த ஒழுக்க நூல். திராவிடர் (தமிழர்)களின் மனப்போக்கு உயிரொழுக்கத்தையே நாடி நின்றது என்பது (அதனால்) தெள்ளென விளங்கும்.

—சார்லஸ் ஈ. கவர்

நூற்சிறப்பில் குறள் மற்றெல்லாத் தமிழ் நூல்களையுந் தாழ்த்தித் தான் உயர்ந்து நிற்கிறது; ஒரு நாட்டு மக்களின் உள்ளத்தினுள்ளே உயிரிலே இடங்கொண்டுள்ளனவும், என்றென்றும் மாயாது திகழ்வனவுமாகிய ஒரு சில பெருநூல்களில் அதுவும் ஒன்று.

—ரெவரெண்டு
ஜி. யு. போப்,
எம். ஏ., டி. டி.



உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்.

3. என் கணவர் வீரங் குன்றாத தமிழ் மரபில் வந்தவர் அல்லவா? என்னை மணந்து சில மாதங்களே யானாலும் அவர் சிந்தனை முழுதும் வெற்றியில்தான். எந்த ஆடவராவது இந்த இன்பநலங் கொழிக்கும் இளம் பருவத்தில் காதலியைப் பிரிய ஒப்புவார்களா? அவருக்குப் பாருங்கள்! வெற்றியிலுள்ள விருப்பமும், ஊக்கமும் இன்பத்தில் இல்லை.

அத்தகைய கணவரை மணந்துகொண்டதில் எனக்கும் ஒரு பெருமைதான். ஆனாலும்......பிரிவுத் துன்பம் பெரிது. கணந்தோறும் என்னுயிர் இந்த உடலில் தங்க மறுத்துக்கொண்டே யிருக்கிறது. அதனையும் கொஞ்சம் பொறு கொஞ்சம் பொறு என்று வேண்டிக் கொண்டே யிருக்கிறேன். ஏன் தெரியுமா?

போன காரியம் முடிந்தால் அவரால் விரும்பப் பெறுகிறவள் நான்தானே. நிச்சயமாக வந்துவிடுவார். அதற்காகவே உயிரைத் தாங்கி யிருக்கின்றேன்.

இந்த மனநிலையை பிரிந்த பெண் தன்மையிலிருந்து பேசுகிறார் வள்ளுவர். அதனைப் படியெடுக்கிறது இந்த ஓவியம்.

* * *

தலையணியாகிய **திருக்குறளை** *ஓதியுணர்ந்தாலல்லது தமிழறிந்தவன் என்று எவனும் கூறிக்கொள்ள முடியாது என்பதில் ஐயமின்று.*

—பிரெடெரிக் பின்காட்

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்"

1. எழில் ததும்பும் பூஞ்சோலை. இயற்கை பூரித்து நிற்கும் காட்சிச் சாலை. கவலையற்ற உள்ளம் களிதுளும்ப வருகின்றான் ஓர் இளைஞன். நல்ல உடற்கட்டும் அறிவும் திருவும் உடையனாய்க் காட்சிக்கும் இனியனாக விளங்கும் அவன், திடீரென்று திகைத்து நிற்கின்றான்.

அவன் கண்ணெதிரே ஒரு கன்னி. பருவ மங்கை, எழிற்கொடி. அவளைக் கண்டதனாலேயே அவன் திகைத்து நின்றான். அவனது உள்ளம், அவளை வட்டமிட்டது, கண்கள் நிலை பெயரவில்லை, சிந்தனை கற்பனை உலகில் சுழன்றது. அந்தக் காட்சி இன்பம் அதுவரை அவன் கண்டறியாதது. ஆம், அவன் அப்பொழுதுதான் ஒரு ஆண் இயல்பாகக் கொள்ளும் காம உணர்வு கொண்டான். வாழ்க்கையில் ஒரு தலைவனாகி விட்டான். அந்நிலையில் அவனது உள்ளம் என்னென்ன எண்ணுமோ, அவற்றையே, வள்ளுவர், "தகையணங் குறுத்தல்" என்னும் அதிகாரத்தில் விளக்கியுள்ளார். 'களவு' இங்கேதான் தொடங்குகின்றது. அந்த நங்கையின் நல்லழகு நம்பியை வருத்துகின்றது. அழகிலே ஆசை, அதை அடைய வேண்டும் என்ற வேட்கையாகி, எய்துவோமா என்ற ஐயம் அரும்பி வேதனை விளைகிறது.

அவளது அழகு, அவளை அவள் பெண் தெய்வமோ, மயிலோ, மாதுதானோ என்று மயங்கச் செய்கின்றது. அவளது பார்வை, வருத்துவதற்கென்றே வந்த ஒரு தெய்வம் வேற்படையும் கைக்கொண்

டதுபோல் தோன்றுகிறது. அவளது கண்கள் கொல் லுந்தன்மை கொண்ட கூற்ருே, கண் தானே, பெண் மானின் மருளும் விழியோ என்றும் ஐயம் எழுகின்றது.

அவளது ஒப்பற்ற அழகும், ஒளிவிடும் கண்களும், அவனது ஏக்கத்தை வளர்த்து உயிரையே கொள்ளை கொண்டன. அங்நிலையில், அவன் அவளது உடல் வனப்பு முழுவதையும் பருகலானுன். அவளே நாணத் தால் தன் தலை தாழ்த்தினும், தம் தலை தாழ்த்தாது, இளமையின் வளமையோடு புடைத்து நின்ற மார் பகத்தைக் காண்கின்ருன். அவற்றின்மீது ஆடை அணி செய்கிறது. அவற்றின் பருமையையும் பொலி வையும் அந்த மேலாடை மறைப்பினும், அவற்றின் 'கவர்ச்சி' குன்றவில்லை. அவனது 'உள்ளம்' அதனு லும் வாடுகின்றது. அங்நிலையில்தான், அவன் **நல்ல வேளை! இவளது இளமுலைகள் மீது துகிலிட்டு மறைத்தனள், கொல்லும் இயல்புள்ள மதயானையின் முகத்தின் மேலிட்ட அழகிய சீலைபோல, என்றெண்ணு கின்ருன்.**

மத யானை அதன் கண்ணை மறைக்கும் முகபடாம் இடப்படாதபோது, பிறருக்கு விளைவிக்கக்கூடிய கொடுமை பன்மடங்காதல் போன்றே, இவளது மார்பகம் மறைக்கப்படாதிருந்திருப்பின், அவற்றின் காட்சியே தன்னைக் கொல்லாமல் கொன்றிருக்கும் என்பதே அவன் நினைப்பு.

ஆம், அவளது உடல் வனப்பில் அவன் தோய்ந்து விட்டான். முதலில் அங்கு நடமாடிய இளைஞனை அவன் இப்போது இல்லை. அணங்கின் அழகில் ஈடு பட்டதாலாகிய வருத்தம் (ஏக்கத்துன்பம்) அவனை ஆட்கொண்டுவிட்டது. இனி அவன் அந்தக் காதல் உலகினில் களவைக் கற்று, கற்பைக் கடைப்பிடித்தா லன்றி மீட்சியும் உண்டோ!

" அறத்தாறு இதுஎன
வேண்டா சிவிகை
பொறுத்தானேடு
ஊர்ந்தான் இடை. "

2. திருவள்ளுவர் அறத்தினையும், அதனைச் செய்வ தன்பயனையும் 'அறன் வலியுறுத்தல்' என்னும் அதிகா ரத்தில் விளக்குகின்ருர்.

உயிர்கட்கு அறத்தினும் ஆக்கந் தருவது வேருென்றுமில்லை. எனவே ஒவ்வொருவரும், அற மாகிய கடமையை அது செய்தற்குரிய ஒவ்வொரு அமையத்திலும் ஒழியாது ஆற்றவேண்டும். மனத்துக் கண் குற்றமற்றுச் செய்வதே அறமாம். பிறவகைப் பட்ட சொல்லும் செயலும் அறமாகா. பொருமை, பேராசை, கோபம், கொடுஞ்சொல் இவை விலக்கப் பட்டு நிகழ்வதே நல்லறம். அதனைப் பின்னர் செய்து கொள்ளலாம் என்று கருதாது நாளும் செய்யவேண் டும். அறவே மற்றவை எல்லாம் அழியுங்காலத்தும், தானழியாது நின்று துணைசெய்வதாம். அறநெறி நிற் றலே உண்மையான இன்பம். அவரவர் ஆற்றும் அறமே அவரது வாழ்நாள் விரைந்து கழியும் வழியை அடைக்கும் கல். எனவே ஒருவன் எஞ்ஞான்றும் செய்யத்தக்கது நல்வினையே—ஒதுக்க வேண்டுவது தீவினை.

இவ்வாறு விளக்கந் தரும் வள்ளுவர், மேலும், அறம் இத்தகையது என்று தெளிவுபடுத்தவே, மேற் காணும் குறளை இயற்றியுள்ளார்.

ஓர் அழகான பல்லக்கு. ஒருவன் அமர்ந்திருக்கப் பலர் தூக்கிச் செல்கின்றனர். அமர்ந்திருப்பவனைக் காண்போர், 'புண்ணியவான் போகிருர்' என்று போற்றி நினைக்கின்றனர். சுமந்து நடப்பவரைக் கவனிப்பார் இல்லை. கவனிப்பினும், "என்ன பாபம் செய்தனரோ! வினை யாரை விட்டது" என்று கரு தியபடி அவர்களைக் குற்றவாளிகளாகவும், பாபிகளா கவுமே எண்ணி நடக்கின்றனர். பொதுமக்கள் எண் ணும் இதே கருத்தையே வள்ளுவரும் உட்கொண்டு, அறத்தின் பயன் இன்னது என்று சுட்ட, இக்குறளைப் பாடியதாகவே பலரும் கருதிவிட்டனர். அறிஞனின் எண்ணத்தை அறியாது, பாமரனின் கருத்தையே கொண்டுவிட்டனர், உரையாசிரியர் பலரும்.

அறத்தினது பயன் இதுவென்று நூல் (ஆகம) அளவையால் உணர்த்தவேண்டா; பல்லக்கைச் சுமப்பவனேடு அமர்ந்து செல்வானிடைக் காட்சி அளவை தன்னுனே உணரப்படும்—என்பதே பழைய உரையாசிரியர்களின் பொதுக் கருத்து. அறத்தினைச் செய்வதனுலாகிய பயன் இது என்று விளக்கவேண் டியதில்லை. இந்தக் காட்சியே, முன்னர் அறம் செய் தவன் நன்மை எய்துவதையும், தீமை செய்தவன் துன்புறுதலையும் உணர்த்துவதாம் என்பதே விளக்கம்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" எனவும், "வானறி தோற்றம் எவன் செய்யும், தன் நெஞ்சம் தானறி குற்றப்படின்" எனவும், "புறம்குன்றி கண்டனைய ரேனும் அகம்குன்றி மூக்கின்

கரியார் உடைத்து'' எனவும் உரைத்து, அறம் அவரவர் நெஞ்சத்திலே நிலைப்பதன்றி, புறத்தோற்றத்திலே காண்பதன்று எனவும், அறமுடையாரை அவரது செயலாலேயே அறியலாம். எனவும் விளக்கிய வள்ளுவர், ''பல்லக்கிலே ஊர்பவன் அறம்செய்தவன், சுமப்பவன் தீவினை செய்தவன், அதுவும் முற்பிறப்பில் என்று கொள்வாரா? என்று எண்ண வேண்டும். அறத்தின் பயனாக, உயர்வு தாழ்வும், மேன்மையும் இழிவும், பேதமும் பிளவும் நிலவும் என்பது வலியுறுமானால், பிறப்பொடு இணைக்கப்படும் 'சாதி' வேற்றுமையும் உண்மையாகி, வள்ளுவர் கருத்துக்கே முரணும். அதன் வழி, உழைக்க பலர், உவக்க சிலர், என்பதும் ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் ஏற்பாடும், முன்வினையாகிய அறத்தின் பயனே என்றும் கொள்ள நேரிடும்.

சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வை, பாப புண்ணியத்தின் பயன் என்றும், அறத்தின் விளைவு என்றும் கற்பித்துக்கொண்டு உண்மை அறம், பொது நெறி தலை எடுக்காது செய்யப்பட்டு வந்ததைக் கண்டார் வள்ளுவர். உரிமை, ஒப்பு, அன்பு ஆகியவற்றிற்கு இடமளிக்காத 'சாதி தருமம்' நுழைவதைக் கண்டு—அதன் அடிப்படையை மறுக்க, முனைந்தார். அதன் பயனே மேற்காணும் குறள்.

''பல்லக்குத் தூக்குபவனுக்கும், அமர்ந்திருப்பவனுக்கும் இடையே (வெளிப்படையாகத் தெரியும் வேற்றுமையைக் கண்டே) அறத்தினது பயன் இது என்று கொள்ளவேண்டாம்''—என்பதே சிறந்த பொருளாம். புறத் தோற்றத்தால் அறத்தின் பயன் விளங்காது என்பதும், உயர்வு தாழ்வு நிலைகளான அநீதியை—அறத்தின் பயன் என்று தவறாக மதிக்காதே என்பதும் கருத்தாம்.

உலகியல் வாழ்வில், தூக்குபவரும் தூக்கப்படுப்வருமாக உள்ள மக்களிடையே, (பாடுபடுபவரும், பலன் நுகர்பவருமாக உள்ளவர்களிடையே) அவரவர் பெற்றுள்ள நிலையனைத்தும், அறத்தினது பயனே என்று கூறவேண்டாம். அந்நிலைகளில் அவர்கள் உழல்வதே, அறநெறி என்றும் உரைக்க வேண்டாம். அவ்வித வேற்றுமைகள் நிலவுவதேகூட அறமாகாது. அறம் பொது. அனைவர்க்கும் நல்வாழ்வளிக்கும் ஆற்றலுடையது. அவரவரும் தத்தம் நெஞ்சில் கொள்ள வேண்டுவது. வாழ்க்கை வேற்றுமைகளுக்கு 'அறம்' காரணமாகாது. அறத்தின் பயன் என்று கூறி வேற்றுமைகளையும் அநீதியையும் மேற்கொள்ள வேண்டாம்—என்பதே வள்ளுவரின் அறிவுரையாகும்.

* * *

பாரத பூமியின் அறநெறியை விளக்கும் நூல்களுள் சிறந்தது திருக்குறளே.

—ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள்

''யான் நோக்குங் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்''

3. உள்ளத்தைப் பறிகொடுத்த நிலையில், தான் கண்டு விழைந்த மங்கையின் அழகையே பருகி நின்ற இளைஞன், சிறிது தெளிவு பெறுகின்றான். அவளது உள்ளத்தில் தனக்கு இடமுண்டா என்று அறிய முனைகிறான். உள்ளத்தின் குறிப்பு முகத்தில், சிறப்பாகக் கண்ணில் தோன்றுமன்றோ! எனவே கண்களை நோக்குகின்றான்.

அவளது மையுண்ட கண்களுக்கு இரண்டுவித பார்வைகள் உள்ளன. அவள் அவனிடத்தில் அன்பு கொள்ளாது இயல்பாகப் பார்க்கின்றாள். அது அவள் ஆசை கொள்ளவில்லையோ என்ற ஐயத்தால் அவனது துன்பத்தை அதிகப்படுத்துகின்றது. காம நோய் வளர்கின்றது. மறுபடியும் (ஆசை தூண்ட)



ஆர்வத்தோடு, அவனை நோக்குகின்றாள். அது ஆசை நிறைவேறும் என்ற நம்பிக்கையை அளிப்பதால், (காமம் பெருகினும்) நோய் குறைகின்றது. அப்பார்வையே—அவனது ஏக்கமாகிய நோய்க்கு மருந்தாகிறது. நோக்கும் எதிர்நோக்கும் வளர்கின்றது. குறிப்பறிதலில் தலைவன் வெற்றி கண்டுவிட்டான். தலைவியோ, அவன் கொண்ட காதலை உணர்ந்தே, அவன்மீது காதல் கொண்டவள். எனவே—அவள் அவனைப் பார்த்து, அவன் அழகை

வாரி விழுங்குகின்றாள். அதனைத் தலைவன் உணர்கின்றான். தன்னைக் கண்டு தலைவன் மகிழ்வது தலைவிக்கும், தன்னைக் கண்டு தலைவி களிப்பது தலைவனுக்கும் இன்பமாகிவிட்டது. என்றாலும் தலைவி நாணத்தால் தலைவன் தன்னைப் பார்க்கும்போது தலை குனிகிறாள். வேறு திசையில் பார்வையைச் செலுத்துகின்றாள். தலைவன் தனது பார்வையைத் திருப்பி இருப்பான் என்று தோன்றியதும் மெதுவாக அவனை நோக்கி மகிழ்கின்றாள். இதனால் அவளது விருப்பத்தைத் தெளிகின்றான் தலைவன். தலைவன், தலைவியின் குறிப்பறிந்த திறத்தையே இக்குறள்—தலைவனது கூற்றாக (கருத்தாக) விளக்குகின்றது.

நான் அவளை நோக்கும்போது, (நான் பார்ப்பதைக் கண்டு கொண்டு) என்னைப்பாரது குனிந்து நிலத்தை நோக்குவாள்: அதைக்கண்டு (அவளது குறிப்பறியும் வேட்கையால்) நான் வேறு பக்கம் பார்க்கும்போது அவள் என்னைப் பார்த்து மெதுவாகப் புன்முறுவலும் கொள்ளுவாள்.

அவன் கொண்ட புன்முறுவலை மறுபடியும் அவளைக் காணும் விழைவால் திரும்பும் தலைவன் கண்டு கொள்கிறான். புது உறுதி பிறக்கின்றது. உள்ளம் உவகையில் ஆழ்கிறது. காதல் பயிர் செழிக்கின்றது.

கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின்
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல.

4. தலைவனிடத்தில் காதல் கொண்ட தலைவி அவனை நேராகப் பார்ப்பதில்லை. ஆனால் ஒரு கண்ணால், கடை நோக்காகப் பார்த்து மகிழ்வாள். அந்நிலையில் ஆசை கொள்ளாதவள் போலப் பேசுதலும், உண்மையான கோபமின்றி இகழ்ந்துரைத்தலும் வெறுத்தவர் போலப் பார்த்தலும் கூடத் தலைவிக்கு இயல்பாம். ஆனால் தலைவன் இவற்றால் ஐயறுவதைக் கண்டு, தலைவி மனம் நெகிழ்ந்து (இரங்கி) தனக்குள்ளே சிரிப்பள். அந்தச் சிரிப்பைத் தலைவன் காண நேர்ந்து விடிலோ—அது நன்மைக் குறிப்பாம்.

இருவரும் உள்ளத்தால் ஒருவரேயாகி விட்டனர். ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு உரைக்க இனித் தயக்கமில்லை. காதல் நிலை பெற்றுவிட்டது. இனி, ஒருவரை ஒருவர் கருத்தறிவதற்காக ஆராய்ந்து நோக்கிக் கொண்டிருந்த பார்வைகட்கு வேலை இல்லை, அயலார் கண்டவுடனேயே ஐயுறுதற்கு இடமின்றி, இருவரும் கொண்ட காதல் புலப்படாமல், ஒருவரை ஒருவர் பொதுவாகப் பார்த்தலும் இனி இயல்வதாகும்.

அந்தப் பொது நோக்கு இயல்வதாகிவிட்டபோது, அவர்கள் பிறருக்குப் புலனாகும்படிப் பேசுகின்ற பேச்சால் ஒருவித பயனுமில்லையாம். ஒருவரை ஒருவர் வெறுப்பதுபோல் சொற்களை வழங்கிக் கொண்டே, ஒருவரை ஒருவர் தமது கண்களாலேயே களிக்கச் செய்யலாமல்லவா!

மற்றும்—கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒத்தல்—மனம் பொருந்தி, இருவரும் தம் நிலை மறந்து இன்ப உணர்வு கொள்வதாகும். அந் நிலையில் பேச்சு தோன்றாது, தோன்றினும் பொருள் பயவாது பொருள் பயப்பினும், காதல் வெள்ளத்தில் கரைந்துவிடும் எனவேதான், குறிப்பறிதலின் விளைவாகத் தோன்றும் காதல் கருத்தொருமித்த நிலையை வள்ளுவர் இவ்வாறு விளக்கியுள்ளார்.

காதலர் இருவர் கருத்தொருமித்து, அவர்களது கண்களும், ஒத்துநோக்குவனவாயின், ஒருவர் பார்வையில் மற்றொருவர் பார்வை பதிந்து நிலைத்து விட்டால் அதன் பின்னர் அவர்கள் பேசும் வாய்ச் சொற்கள் பொருள் உடையனவாகா. அவர்களது பேச்சு அவர்தம் காதல் கருத்தை வளர்ப்பதற்கன்றி, தடுப்பதற்குத் துணை செய்யாது என்பதும், சொல்லினால் உணர்த்தப்படும் பொருளைவிட ஆழ்ந்த நிலையான பொருள், அவர்களது ஒத்த பார்வையால் உணர்த்தப்பட்டு விட்டது என்பது கருத்தாம்.

கண்ணொடு கண்ணிணை நோக்கு ஒத்தலால் காதல் வென்றது. வாழ்க அக்காதல்!

* * * *

எனக்குத் தெரிந்தவரை திருக்குறளை நிகர்த்த அரிய பெரிய நீதி நூல் வேறெந்த தேசத்திலும், வேறெந்த மொழியிலும் இது காறும் தோன்றவில்லை என்பது உண்மையேயாகும்.

—அறிஞர் அல்ஹாஜ்பா. தாவுத்ஷா சாஹிப், பி.ஏ.

5. காதலர் கடிமணம் கொண்டு கற்பு நெறியிலே நின்று இன்ப வெள்ளத்தில் திளைக்குங் காலத்தில், 'பிரிவுத்' துன்பம் நேர்கின்றது. தலைவன் பொருள் காரணமாகவோ, தூதுமேற் கொண்டோ, இசையாத தலைவியையும் இசைவித்துப் பிரிகின்றான். தலைவி துயர்கொண்டு, உணவும் உறக்கமுங்கூடக் கொள்ளாது, பித்தேறிய மனத்தினளாய்த், தலைவனைப் பற்றியே எண்ணிக் கொண்டுள்ளார். உள்ளத்தின் எண்ணம் உரையாகவும் வெளிப்படுகின்றது.

அதனால் விளையும் அயர்ச்சியினால் ஒரே வழி சிறிது கண்ணயர்கின்றாள், உறக்கம். கண்ணின் இமையை மூடினும் உள்ளத்தின் நினைவுக்கதவை மூடக்கூடவில்லை. நினைவு கனவாகிறது. கனவுகள்—ஒன்றன்பின் ஒன்றாய், ஓடும் படக்காட்சிபோல், அவள் விரும்பிய வாறெல்லாம் காட்சி தந்து இன்பம் செய்கின்றன. அவளுடைய குறையெல்லாம், காதலனைக் காண வேண்டும், கூடிமகிழ வேண்டும் என்பதுதானே! காதலன் வருகின்றான், இன்பம் தருகின்றான் கனவில். அவள் அக்கனவை வாழ்த்தாது இருப்பளோ?

தலைவி தான் கண்ட கனவுக் காட்சிகளைத் தோழியினிடத்திலே கூறி ஆறுதல் கொள்கின்றாள். எண்ணந்தான் கனவாயிற்று. கண்ட கனவு என்ற பெயரால் இப்பொழுது அவளது ஆசை எண்ணங்களே வெளியிடப்படுவதை நாம் காணலாம்.

சிறிதே கண் மூடினாள் தலைவி. அவ்வளவுதான். காதலன் அனுப்பிய தூதுரையோடு வந்தது ஒரு கனவு. அதற்கு என்ன விருந்து செய்வேன் என்று கவல்கின்றாள். அடுத்து கணவன் வருவானன்றோ! அதுகாறும் அவள் கண்கள் தூங்கினாலன்றோ அவரைக் கனவில் காண முடியும் என்றெண்ணுகிறது அவள் நெஞ்சம். அப்படி அவரைக் காணும்போதுதான், அவள் பிரிவாற்றி உயிர் வைத்திருக்கும் தன்மையை அவருக்கு உணர்த்துவாளாம். அப்பொழுது தெரிந்து கொள்வாராம், நனவில் (உண்மையாக) வந்து அன்பு செய்யாத காதலரைக் கனவிலாவது காண்பதால் தான் அவளுயிர் இன்னும் இருக்கிறது என்ற உண்மையை. அக்கனவுக் காட்சி அவளது உள்ளத்தையும் குளிரச் செய்கின்றது. அதனால்தான் அவள் பிரிவுத் துன்பத்தை ஆற்றி இருக்கிறாள். நனவில் வந்து அருளாதாரைக் கன வேனும் கூட்டிவைக்கிறதன்றோ!

ஆம், காதலர் யாண்டுளாரோ! எவ்வளவு தொலைவில் என்ன நிலையில் இருக்கின்றாரோ! என்று வருவாரோ! என்று ஏதும் அறியாத கவல்கின்ற தலைவிக்கு, அந்தக் கனவு செய்யும் கைம்மாறு கருதாத உதவிக்கும் அளவுண்டோ! காதலரைத் தேடிக் கண்டுபிடித்தல்லவா அழைத்துவருகின்றது கனவு. அதை—தலைவி உவந்து கூறுவதே இக்குறளாகும்.

''நனவிலே (உண்மையாக) வந்து அன்பு செய்யாத, (துயர் போக்காத) தலைவரை, அவர் சென்றவிடம் நாடிக் கொண்டுவந்து, கனவு என்னொடும் சேர்த்தலான், அக்கனவின்போது எனக்கு (நான் ஏங்கிக் கிடந்த) இன்பம் கிட்டுவதாயிற்று'' என்று தலைவி மகிழ்ந்து கூறுகின்றாள்.

நனவில் இன்பம் கிட்டாதபோது, கனவினால் அடையும் இன்பத்திற்காக, அக்கனவிற்கே அவள் நன்றிசெலுத்த வேண்டியவளாகி விட்டாள். வாழ்க அக்கனவு!

* * *

முட்டையும் காதலும்

திருக்குறளார். வீ. முனுசாமி, M.P.

"முட்டையும் காதலும்" — இத்தலைப்பில் காட்டப்படும் கருத்துக்கள் மிகவும் சிந்தனைக்கு உரியவைகளாக கருதப்படல் வேண்டும் என்பதனை ஆரம்பத்திலேயே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த குறட்பாக்களின் அழகினை கூர்ந்து கவனிக்கும்பொழுது சிற்சில இடங்களில் வள்ளுவனார் ஒன்றோடொன்று பொருந்தக் காட்டும் புலமை வியப்பினும் வியப்புடையதாக அமைந்து கிடக்கின்றது. அத்தகையதொரு பொருத்தத்தினை இக்கட்டுரையில் காணமுடியும் என்று நம்புகிறேன்.

முட்டைகளில் இருவகையுண்டு. பறவைகளைப் பெற்றுத் தருகின்ற முட்டைகள்—நிலத்தில் ஊர்வன முதலியவற்றைப் பெற்றுத்தருகின்ற முட்டைகள்—இங்கு நாம் குறிப்பது முதல்வகையான முட்டைகளைப் பற்றியதே யாகும்.

காதல் உலகம் மிகப் பெரியது. இது அனுபவ உண்மை. உலகம் போற்றும் உத்தமர்களை பெற்றுத் தருகின்ற இல்லற வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைந்தது காதல் வாழ்க்கைதான் என்பது புதிதானதொரு செய்தியல்ல. இந்த இல்லறம் நடத்தப்படுகின்ற நாயகன் நாயகி ஆகிய இருவர்களின் நல்வாழ்வில் தான் அமைந்து வளர்ந்து சிறப்பாக இருப்பது இப்படிப்பட்ட இல்லறம் ஆகும். இல்லறத்தின் இரு கண்களான நாயகன் நாயகி இருவர்களின் கருத்தொருமித்த வாழ்க்கை வழியில் காணப்படுகின்ற குறிப்பொன்றினை மட்டும் கவனிப்போம்.

காமத்துப்பால் என்ற பகுதி வள்ளுவர் வகுத்த மூன்று பகுதிகளில் மூன்றாவதாகும்- காதலர் வாழ்கை—இல்லற வாழ்க்கை—என்பதாக இரண்டு பகுதிகளை வைத்துக் கொண்டு ஆசிரியர் காமத்துப் பாலினை செய்திருக்கின்றார். நாயகனுக்கும் நாயகிக்கும் ஒருமித்த உள்ளப்பாங்கு பொதிந்து கிடக்கும் காதல் கட்டுப்பாட்டினை விளக்கவந்த ஆசிரியர் உடம்பும் உயிரும் போல வாழ்கின்றார்கள் என்பதாக குறிப்பிடுகின்றார். இந்த இடத்தில் விளக்கம் செய்துகொள்ள வேண்டிய உண்மை ஒன்று உண்டு.

உடம்பும் உயிரும்தான் வாழ்பவனாக ஆக்குகின்றது. நாயகனும் நாயகியுமாக இல்வாழ்க்கை உயிர் பெற்று நடக்கின்றது. உடம்பின்றேல் உயிரில்லை உயிரின்றேல் உடம்பில்லை. நாயகியின்றேல் நாயகனில்லை நாயகனின்றேல் நாயகியில்லை. இருவரின்றேல் இல்லறமில்லை.

உடம்பினையும் உயிரினையும் வைத்துக்கொண்டு, நாயகன்-நாயகி வாழ்வினை விளக்கவந்த ஆசிரியர் அதி நுட்பமாக உண்மையொன்றினை தெரிய வைக்கின்றார். உடம்பினை நாயகியாகவும், உயிரினை நாயகனாகவும், அமைத்துக் காட்டுகின்றார்.

"உடம்பும் உயிரும்போல நாயகியும் நானும் நட்பு கொண்டு வாழ்கின்றோம்."——என்பதாக அந்த நாயகன் வாயினால் வள்ளுவனார் சொல்லிக் காட்டுகின்றார்.

> "உடம்போடு உயிரிடை அன்ன மற்றுஅன்ன
> மடந்தையொடு எம்மிடை நட்பு."

மேலே கண்ட குறட்பா நாயகனால் கூறப்படுவதாகும். நாயகியினை உடம்பாகவும் நாயகனை உயிராகவும் பேசப்படுகின்ற காரணம் என்ன ! காதலர்களாக ஆவதற்கு முன்னால் தனித்த ஆணாகவும், தனித்த பெண்ணாகவும், அவர்கள் வாழ்ந்து வந்தனர். இருவரும் தனிப்பட்ட முறையில் உடம்பும் உயிரும் கொண்டவர்களாகத்தான் வாழ்ந்தனர் என்பது வெளிப்படை. என்றாலும் நாயகன் நாயகியர்களாக அவ்விருவரும் இணைக்கப்பட்ட பின்னர் இல்லறத்தில் வாழுங்கால் எம்முறையில் வாழக் கடமைப்பட்டவர்கள் என்பதுதான் அறிந்துகொள்ள வேண்டிய அருமையான கருத்தாகும்.

நாயகியான வுடனேயே அப்பெண்மணி தனது இன்னுயிரை நாயகனிடத்தில் ஒப்படைத்து விடுகின்றாள் என்பது பொருள் அதாவது நாயகனுடைய உயிரை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நாயகியி

னுடையது என்பதாயிற்று. நாயகன் என்ன செய்தான் என்றால் தனது உடம்பினை நாயகியிடத்தில் ஒப்படைத்து விடுகின்றான். எனவே நாயகனுடைய உடம்பினை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நாயகியுடையது என்பதாயிற்று, ஆதலால் நாயகி உயிரற்ற உடம்பானாள் நாயகன் உடம்பற்ற உயிரானான். இவ்விரண்டும் உயிரும் உடம்புமான—நாயகியும் நாயகனுமான—இல்லறம் அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாகும். எனவேதான் உடம்போடு உயிரிடையன்ன—என்ற தொடரில் மேலே காட்டப்பட்ட குறட்பாவினை ஆரம்பித்தார் ஆசிரியர்.

இல்லற இன்பத்தில் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினை வைத்துக்கொண்டு இன்ப வாழ்க்கையின் சாயலினை பிரிதோரிடத்தில் ஆசிரியர் வள்ளுவனார் எங்ஙனம், விளக்குகின்றார் என்பதனையும் காணுதல் வேண்டும்.

இணைந்து நின்ற இரு காதலர்களின் பிறப்பு, வளர்ப்பு, இடம், இவைகளைச் சிந்தித்துப் பார்க்கின்ற பொழுது யாதொரு சம்மந்தமும் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். இல்லறமோ அரிய இணைப்பினை உண்டாக்கித் தந்துவிட்டது. உலக வாழ்க்கையினை விட்டு பிரிகின்றபோது நாயகன் நாயகியினையோ அல்லது நாயகி நாயகனையோ விட்டுச் சென்று விடுகின்றனர் அவர்கள் இணைப்பு அவிழ்க்கப்பட்டது சிந்தனைக்கு உரிய இடம்.

உயிரினையும் உடம்பினையும் வைத்துக் கொண்டு மிக அழுத்தமானதொரு காதல் கட்டுப்பாட்டினை பேசிவைத்த ஆசிரியர் இணைப்பு அறுந்து ஓடிவிடுகின்ற தன்மையுடையதுதான் உயிருக்கும் உடம்புக்குமுள்ள தொடர்பு என்பதனை சுட்டிக் காட்டுகின்றார். உடம்பும் உயிரும் அருமையான முறையில் நட்பு கொண்டு வாழ்ந்தாலும் பிரிகின்ற பொழுது சம்மந்தம் அற்றவைகளாகி விடுகின்றன. காதல் கருத்தில் மேன்மையான முறையில் பேசப்பட்ட உயிருடம்பினை வைத்துக்கொண்டே நிலைபெற்ற வாழ்வு என்பதற்கும் விளக்கம் காட்டுகின்றார்.

முட்டையினுள்ளிருக்கும் பறவைக் குஞ்சுக்கும், அந்த முட்டைக்கும் எவ்வளவு அழுத்தமான பிரிக்க முடியாத தொடர்பு உண்டு என்பதனை நாம் விளக்கிக் கூறத் தேவையில்லை. அவ்வளவு நெருக்கமான தொடர்பு கொண்ட முட்டையும் அதனுள்ளிருக்கும் குஞ்சும் வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு விடுகின்றன. பறக்கும் பக்குவம் காணப்பட்டதுமே முட்டையை நீக்கி வெளிக் கிளம்பி விடுகிறது அந்தப் பறவை. இதனை,

> "குடம்பை தனித்து ஒழிய புள் பறந்தற்றே
> உடம்போடு உயிரிடை நட்பு."

முற்றிலுமே வெவ்வேறுபட்ட கருத்தினை வைத்துக் கொண்டு நாம் குறித்துக் காட்டிய இரு குறட்பாக்களும் அமைந்திருக்கின்றன என்றாலும் உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பினை குறிப்பாகக் காட்டி மிக மிக நெருக்கமாக கருதப்படுகின்றவைகளும், பற்றற்றத் தன்மையில் பிரிந்து போதலும் இயல்பேயாகும் என்பதென்றும் சிந்திக்கப்பட வேண்டியதாயிற்று. சிந்தனைச்சிற்பி திருவள்ளுவர் வாழ்க!

பிறமொழியில் குறள்

இலத்தீன் : *1730-ல் ரெவரெண்டு ஸி. ஜே. பெஸ்கி (வீர மாமுனிவர்) என்பவர் இலத்தீனில் மொழி பெயர்த்தார்.*

பிரெஞ்சு : *1867-ல் எம், லெமரேஸ் மொழிபெயர்த்தார்.*

தெலுங்கு : *1887-ல் கனுப்பர்த்தி வேங்கடராம ஸ்ரீ வைத்யநாதர் எழுதியது.*

சமஸ்கிருதம் : *1922-ல் நீதி குசுமமாலா-(திருக்குறள் அறத்துப்பால்) ஸ்ரீ அப்பா தீட்சிதர் அவர்களால் மொழி பெயர்க்கப்பெற்றது. திரு. கே. வி. சுப்ரமணிய சாஸ்திரியார் பதிப்பு.*

ஹிந்தி : *திருக்குறள் - க்ஷேமானந்த ராஹத் என்பாரின் ஹிந்தி மொழி பெயர்ப்பு. வேதசத் சாஹித்ய மண்டல், ஆஜ்மீர் பதிப்பு. 1924-ம் வருடம்-*

மலையாளம் : *1915-ம் வருடத்தில் திவான்பகதூர் கோவிந்த பிள்ளை, உயர்தர நீதிபதி, திருவனந்தபுரம், என்பவரால் மொழிபெயர்க்கப்பெற்றது.*

ஜெர்மன் : *1803-ல் திரு. A. F. காமெரெஸ் என்பவர் குறளை அப்படியே ஜெர்மன் எழுத்தில் எழுதி அந்த பாஷையிலும் மொழிபெயர்த்தார்.*

ஆங்கிலம் : *திரு. C. E. கவர் என்பவரும், W. H. ட்ரு என்பவரும் ஆங்கிலத்தில் தனித்தனியே மொழிபெயர்த்தனர்.*

திரு. G. U. போப் என்பவர் குறளை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவில் செய்துள்ளார்.

திரு. வா. வே. சு. ஐயர் அவர்கள் "திருவள்ளுவர் திருக்குறள்" என மேற்படி பாஷையில் மொழிபெயர்த்தார்.

ஒரு நாளிரவில்

புலவர். குழந்தை

ஒருநாள் இரவு பத்துமணி யிருக்கும். ஒரு மருத நிலத்தூர். ஒரு செல்வ மனை. அம்மனையாட்டி ஓர் இளம் பருவ மங்கை; மயில்போன்ற சாயல்! மதி போன்ற முகம்! மலர்போன்ற இதழ்! உயிரோவியம் போன்ற ஒயிலுருவம்! ஏனோ ஒருவகையாக, மனக் கவலையுடன், தனியாகப் பஞ்சணையில் படுத்திருந்தாள். கதவு திறந்தபடியே இருந்தது. மின்விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவள் ஏனோ படுக்கை கொள்ளாமல் அங்குமிங்கும் புரண்டு படுத்தவண்ணம் இருந்தாள். அவள் கண்ணும் காதும் கதவண்டை சென்று யாரோ ஒருவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. அவள் ஏனோ இருந்திருந்தாற்போல் சடக்கென்று முகந் தெரியாமல் போர்த்துப் படுத்தாள். அவ்வளவுதான்! அவள் கணவன் அங்கு வந்தான். அவள் அசைவற்றுத் தூங்குகிறவள்போல் படுத்திருந்தாள்.

காதலன் கட்டிலினருகே சென்றான். சற்றுத் தயங்கினாற்போல் நின்றான். பின், 'ஏன் பேசவில்லை! இதற்குள்ளாகவா தூக்கம்! எழுந்திரு, மணியென்ன பத்துத்தானே ஆகிறது!' என்று முகமூடியை எடுத்தான். 'இஃக்' என்று மறுபடியும் இழுத்துப் போர்த்துக்கொண்டாள். 'ஒந்திப்படு' என்று கட்டிலில் உட்கார்ந்தான். ஆனால், அவள் பொசும் பொசென்று பெருமூச்சு விட்டாள். 'ஏன்! உடம்புக்கென்ன!' என்று தலையைத் தொட்டான். 'போதும்' என்று மறுபக்கம் திரும்பிப் படுத்தாள்.

'யாரென்ன சொன்னார்! உள்ளதைச் சொல்' என்று நெற்றியை நீவினான். 'ஒன்றுமில்லை. என்னைத் தொடாதீர்' என்று சடக்கென எழுந்து, கட்டிலின் ஒரு பக்கமாக உட்கார்ந்தாள். 'ஏன்! காரணம்!' என்றான் காதலன்.

'காரணம்! எதற்காக அவ்வளவு ஆடம்பரமாகத் தெருவில் செல்லவேண்டும்! நான் மாடியிலிருந்து பார்த்தேன். அம்மாடி! எல்லாப் பெண்களும் கண் கொட்டாமல் தங்களையே பார்த்தனர். இதற்குத்தான் திருவிழா நடத்துகிறார்களாக்கும்! சீர்திருத்தக்காரர்கள் சொல்வதில் தப்பென்ன இருக்கிறது! திருவிழாவாம் திருவிழா! அப்பருவ மங்கையர் பார்த்துக்கழித்த மிச்சிலாகிய (எச்சில்) உம்மை நான் தொடமாட்டேன்' என்று ஓர் ஓரமாகத் தள்ளி உட்கார்ந்தாள்.

'அட பாவமே! நான் தெருவில் சென்றேன். அவர்கள் பார்த்தனர். அதற்கு நானென்ன செய்யட்டும்! அது என் குற்றமல்லவே! நீ சென்றாலும் பார்க்கிறவர் பார்க்காமலா இருப்பர்! பார்ப்பதுங் குற்றமா!' என்றான். அவள் ஒன்றும் பேசாமல் அப்படியே ஓவியம் போல் உட்கார்ந்திருந்தாள்.. வாய்பேசாப் போட்டியின் வெற்றிப் பரிசாக அவள் கண்கள் அவளுக்கு முத்துமாலை யணிந்தன.

அது முன் பனிக்காலம். இரவு பத்துமணி வரையிலும் பனியில் நனைந்ததால் அவன் தும்மினான். ஊடல் நீங்கி, 'நீடு வாழ்க' எனத் தன்னை வாழ்த்துவேன் என்று எண்ணித் தும்மினான் எனக் கொண்டு அவள் மேலும் புலந்தாள். (ஊடல், புலவி-மன வேறுபாடு). அப்புலவிப் போரில் புறங்காட்டிய தலைவன், செய்வதறியாது செயலற்றிருந்தான்.

அவன் திருவிழாக் காட்சி கண்டுகளித்து வந்தானல்லவா? விழாவுக்குச் சென்றோர் வெறுமனேயா வருவர்! அவன் மார்பில் விளங்கிய வேங்கை மலர் மாலை அவள் கண்ணிற் பட்டது. உடனே அவள் கண்கள் சிவந்தன. முகமும் உடன் சிவந்தது. 'எதற்காக இன்று புதிதாக இக்கோட்டுப் பூவைச் சூடினீர்? நும் காதலி ஒருத்திக்கு இப்புதுப் பூவணியைக் காட்டுவதற்காகச் சூடினீர் என்பது எனக்குத் தெரியும்!' என்று வெறுப்புடன் வெகுண்டு கூறினாள்.

'இல்லை கண்ணே! உனக்குக் காட்டுவதற்காகத்தான் வாங்கிச் சூடினேன். நீ பார்த்து 'மகிழ்வது தானே எனது பாக்கியம்! உன்னைவிடக் காதலுடையார் யார் எனக்கு?' என்று தேற்றுவோன், காத

லுடையார் யாரினும் நாம் மிக்க காதலையுடையோம் என்பான்—'நாம் யாரினும் காதலம்'—என்றான். அவ்வளவுதான்! 'என் காதலியர் பலரினும் நான் உன்னிடத்து மிக்க காதலையுடையேன்' என்று அவன் சொன்னதாகக் கொண்டு, 'யாரினும் யாரினும்' என்று சீறி விழுந்தாள். 'என் காதற் களஞ்சியமே! கற்பின் துணையே! நீ தப்பாக எண்ணிவிட்டாய். நான் அவ்வாறு சொல்லவில்லை. உலகத்திலுள்ள காதலர் எல்லாரிலும் நாம் மிக்க காதலையுடையோம் என்றேன். உனக்கது அப்படிப் பொருள் பட்டது. அவ்வெண்ணத்தை மாற்றிக்கொள்' என்று அவன் நெடுங் கருங்குழலை நீவினான்.

அது அவள் சினத்தீக்கு மண்ணெண்ணெய் போலானது. மதிமுகம் என்பதைவிட்டு இனி 'எரிமுகம்' என்னும்படி அவள் முகம் விளங்கிற்று. கண்ணும் எரியை உவமையாக்கிக் கொண்டது. அவ்வெரி விழி கண்ட அவன், 'என் அன்பே! என்னிடம் கொண்ட ஐயத்தை விடு, உறுதியாகச் சொல்கிறேன். இப்பிறப்பில் நாம் ஒருபோதும் பிரியோம்' என்றான். 'அப்புறம், மறுமையில் பிரிந்துவிடுவீர். நான் உயிரோடிருக்கு மட்டுந்தான் நாம் காதலர். நான் இறந்தபின் என்னை நும் காதலி என்று சொல்லுதலை நீர் விரும்பவில்லைப்போலும்! இதுதானா ஆடவர் கொள்ளும் உண்மைக் காதலென்பது? நான் இதுநாள் வரை அறியாதுபோனேன். நல்ல காதல்' என்று கண் கலங்கிக் கண்ணீர் உதிர்த்தாள். அவன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, 'என் இன்ப வாழ்வே! என்ன நான் எது சொன்னாலும் தப்பாகப் பொருள் கொள்கிறாயே! இப்பிறப்பில் நாம் பிரியோம் என்றால் மறுமையில் பிரிவோம் என்பது பொருளா? இனி எப்போதும் பிரியோம் என்னும் கருத்துடன் கூறினேன். பொய்யன்று, மெய்' எனப் பல கூறி ஊடல் தீர்ப்பான், தன் கூற்றுக்குத் துணையாக.

'சென்ற மாதம் உன்னைப் பிரிந்து சென்னை சென்று, சட்டமன்றக் கூட்டத்தில் கல்லூரிகளிலும் தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் கற்பிக்க வேண்டும். தமிழையே ஆட்சி மொழி ஆக்க வேண்டும் என்னும் தீர்மானங்கள் பற்றிப் பேசிக்கொண்டிருந்த போது கூட உன்னை அடிக்கடி நினைத்தேன்' என்றான். 'அப்படியா! அப்போ அன்று பிரிந்து செல்லும் போது, 'உன்னை மறவேன் மறவேன்' என்றதெல்லாம் என்னை ஏமாற்றுவதற்காகத்தானா? மறந்திருந்தால்தானே நினைக்க வேண்டும்?' மறவாமல் இருந்தால் நினைக்க வேண்டிய வேலையில்லையே? என்று ஊடலானாள்.

ஒருமணி நேரம் அமைதியாகக் கழிந்தது. இன்ன செய்வதென்று தோன்றாத நிலையில் இருந்த தலைவன் தும்மினான். 'நீடு வாழ்க' எனத் தலைவி வாழ்த்தினாள். அவ்வாறு வாழ்த்தினவள், அதே வாயால்,

'நும்மை நினைத்து வருந்துகின்ற நும் காதலியர் பலருள் எவள் நினைத்ததால் தும்மினீர்?' என்று தேம்பித் தேம்பி அழுதாள் 'என் ஆருயிரே! உன்னைவிட எனக்கு யார் காதலியர்? என் உயிர்நாடியே! ஏன் இப்படித் தப்பாக எண்ணுகிறாய்? இவ்வெண்ணம் உனக்கு உண்டாகலாமா! பனியில் நெடுநேரம் இருந்ததால் தும்மல் வருகிறது. நீ வேறு வகையாக எண்ணாதே' என்று பல சொல்லி ஊடல் தணிக்கும் போது மறுபடியும் தும்மல் வந்தது.

தும்மினால், நும் காதலியருள் யார் நினைத்தால் தும்மினீர் என்று மறுபடியும் ஊடுவாளென்று அஞ்சி, அவன் தும்மலை அடக்கிக் கொண்டான். அதுகண்ட அவள், 'நும் காதலியர் நும்மை நினைப்பதை என்னிடம் மறைக்கின்றீர். ஒருவர் நினையாமல் சும்மா தும்மல் வருமா?' என்று மறுபடியும் அவ்வாறே தேம்பித் தேம்பி அழுதாள்.

'ஒருவர் நினைத்தால்தான் தும்மல் வருமா? இது பெண்டிராகிய உங்கள் வழக்கம். பனியில் நனைந்தால் சளிப் பிடிக்கும்போல் இருக்கிறது. அதனால், அடிக்கடி தும்மல் வருகிறது. போன வாரம் சளிப்பிடித்து நீ அடிக்கடி தும்மிக் கொண்டே இருந்தாயே பிறர் நினைத்தா தும்மினாய்? உன்னை யார் நினைத்தனர்? உனக்குள்ளதுதானே பிறர்க்கும்? மணி ஒன்றரைக்குமேல் ஆகிறது. இல்லாத ஒன்றை உண்டு என்னும் இத்தப் பெண்ணத்தை விட்டு விடு' என்று அவள் கூந்தலை நீவினான்; நெற்றியைத் துடைத்தான்; கன்னத்தைத் தடவினான்; கண்களை உறுத்தினான்; தோள்களைப் பிடித்தான்; முதுகை மெல்லச் சொறிந்தான்; கால்களைப் பிடித்தான்; அவ்வளவிலும் அவள் ஊடல் தணியவில்லை. முடிவில் அவள் மலர் போன்ற காலின்கட் பணிந்தான். நடந்ததென்ன?

'நான் சொன்னது சரியாகப் போயிற்றா? நும் காதலியர் ஊடியபோது நீர் இப்படித்தானே பணிந்து அவர்கள் ஊடலைத் தணித்திருப்பீர்? பணிந்து பணிந்து பழக்கம்! இது ஒரு நாளில் இயல்வதா?' என்று சினந்தாள். என் செய்வான் பாவம்! தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு பணிந்தான். அப்பணிவு அவள் புலத்திற்குக் காரணமாயிற்று. இனிச் செய்வதென்ன இருக்கிறது? அவன் சொல்லும் செயலும் பயன்படாமையால் பேசாமல் அவளைப் பார்த்தபடியே இருந்தான். வேறு என்ன செய்வான் பாவம்! பணிந்தும் பார்த்தாகிவிட்டது,

'என் உறுப்புக்களை எல்லாம் எதற்காக இப்படி உற்று நோக்குகிறீர்? என் உருப்புக்கள் எவள் உறுப்புக்கள்போல் இருக்கின்றன என்று ஒப்பிட்டுப் பார்க்கின்றீரா? என் கண் எவள் கண்போல் இருக்கிறது? என் இதழ் எவள் இதழ்போல் இருக்கிறது? நன்றாகப் பாரும்' என்று வெகுண்டாள்.

அதற்குமேல் அவன் செய்வதற்கு என்ன இருக்கிறது? சும்மா இருப்பதும் குற்றமானால் ஒருவன் குற்றமற்றவனாய் நடந்துகொள்வதெப்படி? எவ்வாறு அவன் ஊடலைத் தீர்ப்பதென்பது அவனுக்குப் புலப்படவில்லை. அதன்பின் அவன் என்ன செய்திருப்பான் சொல்லுங்கள் பார்க்கலாம்?

பெண்ணின் பெருமையைப் பார்த்தீர்களா? நம் காதலர்க்கு அவ்வாறு கழிந்தது அவ்விரவு. இவர்க்கு மட்டுமா? இன்னும் உலகில் எத்தனை காதலர்களுக்கு அவ்விரவு அவ்வாறு கழிந்ததோ யார் கண்டார்?

இதைப் படித்ததும் **திருக்குறள் 132-வது புலவி நுணுக்கம்** என்னும் அதிகாரத்தைப் படியுங்கள். அப்புறம் வேண்டுமானால் இக்கட்டுரையை மறுபடி ஒருமுறை படித்துப் பாருங்கள். மறுபடி ஒருமுறை புலவி நுணுக்கம் என்னும் அதிகாரத்திலுள்ள பத்துக் குறளையும் படித்தே தீருவீர்கள். அதன் பின் திருக்குறளின் பெருமையையும், பழங்காலத் தமிழ் மக்களின் காதல் வாழ்க்கையையும் எண்ணிப்பாருங்கள். வேண்டுமானால் இக்காலத் தமிழர் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பாருங்கள். வாழ்க நம் காதலர்!

காதல் வாழ்வு

(பின் பக்க அட்டை 'குறளோவிய' படத்திற்கு விளக்கம்)

நா. பாண்டுரங்கன், எம். ஏ.

பசி உடலைவளரச்செய்கிறது. காதல் உயிரை மலரச் செய்கிறது. செடிதான் மலரைத் தருகிறது என்றாலும் மனிதன் செடியை விட்டுவிட்டு மலரைத்தான் மதிக்கிறான். அசையும் செடியிலே அலர்ந்த மலர்!—கவிஞன் அதைக் கண்டு பாடுகிறான்; காதலன் தன் கையிலே அதைக் கொண்டு தன் கருத்தைக் கவர்ந்தவளுக்குப் பரிசாக அளிக்க ஓடுகிறான்; பூஜை செய்யும் பக்தனோ அது பெறாவிட்டால் வாடுகிறான். செடியிலே கூத்தாடும் மலர் துடியிடையாளின் உள்ளத்தைக் கவர்கிறது. அவளோ அந்த மலரையே கவர்ந்து தன் கூந்தலில் அணிந்து அகமும் முகமும் மலர்கிறாள். பல ஏன்? மனிதன் செடியை விட்டு விட்டு மலரைத்தான் மதிக்கிறான். அதுபோன்றே மனிதன் பசியை விட்டுவிட்டுக் காதலையே போற்றுகிறான்.

காதல்!...தலைமுறை தலைமுறையாகக் கவிஞர்கள் காதலைப் போற்றிப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள். ஓவியர்கள் தங்கள் கலையில் காதலுக்கு ஒப்பற்ற இடம் அளித்து உலகைக் களிக்கச்செய்து உள்ளம் களிக்கிறார்கள். காதல் இல்லாத காவியமென்றாலோ, அது ஆறில்லாத ஊர்தான்—நீரில்லாத நீண்ட ஆறுதான்! காதலின் வல்லமை பெரிது. காதல், அண்ணாந்து பார்க்கவேண்டிய மாளிகையைச் சில வேளைகளில் குனிந்து நுழையவேண்டிய குடிசையின் முன் அடி பணியச் செய்கிறது. நாடு, மொழி, இனம் இந்த எல்லைகளைக்கூட கடந்துவிடுகிறது—காதல்! அது மட்டுமா மண்டை உடையும் தெருச்சண்டையிலிருந்து, மண்டலங்கள் மோதிக்கொள்ளும் பெரும்போர் வரை, எதையும் ஆக்கும் அழிக்கும் ஆற்றல் காதலுக்கு இருக்கிறது. எலியென்று இகழப்படும் கோழை கூட கட்டழகியின் கடைவிழியில் தன்னை ஏற்கும் காதலைக் கண்டால், புலியாகி விடுகிறான். புலியென்று புகழப்படும் வீரன் பெண்ணின்முன், எலியாகிவிடு

48-அ

கிருனே எதனுல்! காதலால்தான்! சித்தர்களேக்கூட காதல், பித்தர்களாக்கிச்சிரிக்கும்! காதலால் முட்டாள் மூதறிஞனுவான். சில வேளைகளில் மூதறிஞன்கூட முட்டாளாவதுண்டு! மாதவியின் காதல்தானே சிலப்பதிகாரத்தை மலரச் செய்திருக்கிறது? தித்திக்கும் அகநானூறும் தேனூறும் நற்றிணையும் நல்ல குறுந்தொகையும் கற்றோர் ஏத்தும் கலித்தொகையும் காதல் அளித்த பரிசுகள் அன்றோ? அத்தகைய மாண்புள்ள காதல், மனித வாழ்வில்-தமிழர் வாழ்வில்-கட்டுப்பட்டு, வளர்ந்து, மலர்ந்து, மணம் வீசிய பாங்கை, வள்ளுவர் வகுத்திருக்கிருர். அது இது:

தகையணங் குறுத்தல்

ஏதோ வேலே யேற்று, வேற்றூர் சென்ற தலைவன், எழிலே உருவான ஒரு சோலையின் உள்ளே புகுந்தான். எதிர்பாராதது நிகழ்ந்தது. அதோ அவன் எதிரே காண்பது யாரை? யார் அது? நின்ருன் அவன். சிலையாயிற்று அவன் உடல். அலையாயிற்று அவன் உள்ளம். எதிரே நிற்பது யார்? தண்ணீருக்கு மேலே பறந்தவாறே மீனைக் குறிபார்த்துக்கொண்டிருக்கும் போது மீன்கொத்திப் பறவை சிறகடித்துக்கொள்ளுவதைப்போல் அவன் எண்ணங்கள் அடித்துக்கொண்டன. அவன் எதிரே நிற்பது யார்? எண்ணம் துடிக்கிறது. எதிரே நிற்பது தீண்டி வருத்தக்கூடிய தெய்வமோ? இல்லை, தோகைவிரித்தாடும் மோகன மயிலோ? அதுவும் இல்லையென்ருல் கனமான குழையணிந்த மனிதப் பெண்தானே? யாரென்று அறிய முடியாது என் நெஞ்சம் மயங்குகிறதே! இவ்வாறு எண்ணிய அவன் உள்ளம் உண்மையில் மயங்கித்தான் போனது. அருகே சென்று தான் அவளை உற்றுப் பார்த்து உண்மை தெளியலாமோ? தான் அவள் அருகே செல்வதைப்போலவே உணர்ந்தான். அருகே சென்று அவளைக் கரம்பற்றித் தன் எதிரே அமர்த்தித் தானும் அமர்ந்து ஒவ்வொரு அங்கமாக அவளை உற்றுப் பார்த்து, உயர உள்ள கிளையில் உட்கார்ந்திருந்த மயிலையும் பார்த்தான். **மரத்திலிருப்பது மயிலா? தன் கரத்திலிருப்பது மயிலா? என்று தெளிய முடியாது** மயங்கினன்! அடடே...இதென்ன? நின்ற படியே, கண்கள் விழித்தபடியே கனவா? அவன் நினைவுலகிற்கு வந்தான். எதிரே அவள் நின்றுகொண்டே இருந்தாள். அவன் நெஞ்சம் அவள் எழிலால் தாக்கப்பட்டுத் தளர்ந்தது. எமன் என்று உலகிலே கூறுகிருர்கள். அவனை நான் முன்பு அறியேன். இப்போது நான் அறிகிறேன். பெண் தன்மையுடன் போர்செய்யும் பெரிய கண்களை உடைய உருவமே எமன்! என் எதிரே நிற்பது எமனே? இவளுக்கு இருப்பன கண்கள். எப்படிப்பட்ட கண்கள்? கண்டவரின் உயிரை உண்ணக்கூடிய கண்கள். எமனே? கண்ணே? பெண்மானே? இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்றன் தன்மையும் உடையதாக இருக்கின்றதே! இவளுடைய புருவங்கள் வளைந்தலவா இருக்கின்றன. அப்படி யில்லாது, நேராக இருந்து மறைக்குமானுல், இவளுடைய கண்கள் நான் நடுங்கும்படியான துன்பத்தைச் செய்ய மாட்டா! ஆமாம், இப்போதுதான் புரிகிறது. மத யானைக்கு முகத்தில் முகபடாம் அணிவிக்கிருர்களே எதற்கு?— அதன் அழிக்கும் ஆற்றலை அடக்குவதற்கு! பெண்ணின் மார்பின்மீது நல்லவேளை - ஆடை இருக்கிறது. இல்லையென்ருல், முகபடாம் இல்லாத யானைதான்!... எண்ணிக்கொண்டே இருந்தது அவன் மனம். மீண்டும் அவளைப் பார்க்கிருன். அவன் விழிகளாகிய வண்ணுத்திப்பூச்சிகள் சிறகடித்துப் பறந்துசென்று அவள் முக மலரில் படிகின்றன; எழில்தேனைக் குடிக்கின்றன. மயங்குகிறது அவன் நெஞ்சம்.

குறிப்பறிதல்

தன் எதிரே நின்றுகொண்டே இருக்கும் அழகியைத் தன் விழிகளால் படித்துக்கொண்டே இருந்தான் தலைவன். ஆம். குடித்துக்கொண்டே இருந்தான். அவன் உள்ளம் அவள்பால் படிந்துவிட்டது. ஆனுல் அவள் உள்ளம் அவனை விரும்புகிறதா? இதை அறியத் தலைவன் துடித்தான். அடடே...அவள் பார்வையிலிருந்தே இதை அறிந்துகொள்ளுகிருன் அவன். ''நான் அவளை நோக்கும்போது அவள் நிலத்தை நோக்குகிருள். நான் அவளை நோக்காதபோது அவள் என்னை நோக்கி மெல்லப் புன்னகை புரிவாள். இது போதாதா அவள் என்னிடம் அன்புகொண்டவள் என்பதை விளக்க? இப்படிச் சொன்னுன் தலைவன். தன் மனத்துக்கு! ஆனுல் மனம் அவனை விடவில்லை. கேட்டது. ''அவள் உன்னை விரும்புகிருள் என்று சொல்லுகிருயே, அப்படியானுல் தன் வாய்திறந்து அவள் அதைச் சொல்வதுதானே? ஏன் சொல்லவில்லை?'' இப்படிக் கேட்ட மனத்திற்கு அவன் அளித்த விடை இது. கண்களோடு கண்கள் நோக்கால் ஒத்திருக்கும் போது வாய்ச் சொற்களால் என்ன பயன்? இவ்வாறு குறிப்பறிந்தான் தலைவன். அவன் அறிந்த குறிப்பு உண்மைதானு?

புணர்ச்சி மகிழ்தல்

ஆம். தலைவியின் பார்வையிலிருந்து தலைவன் அறிந்த குறிப்பு உண்மைதான். இருவர் உள்ளங்களும் ஒன்று கலந்து ஒன்ருயின. கொம்பைத் தழுவிய கொடி, பின்னப்பட்ட சடை இவைபோல் ஆயினர் அவர்கள் இருவரும். காதல் தரும் இன்பக் கடலில் தலைவன் நீந்தினன். அதுவரையில் அறியாத இன்பத்தை அப்போதுதான் உணர்ந்த அவன் சொல்லுவதைக் கேட்டால் உள்ளத்திலே மகிழ்ச்சி வெள்ளம் பாயும். வானுலக இன்பம் இனிமை உடையது என்கிருர்களே தாம், விரும்பும் காதலியரின் மெல்லிய தோள்களில் துயிலும் துயில்போல் இனிமை

உடையதோ அது ! இந்தப் பெண் ஒரு விந்தையான நெருப்பைப் பெற்றிருக்கிறாள். அதைவிட்டுப் பிரிந்தால் அது சுட்டு எரிக்கிறது ; கிட்டே நெருங்கினால் குளிர்ச்சியைச் சொரிகிறது.'' பெற்ற இன்பத்தை இவ்வாறெல்லாம் சொன்னான் தலைவன். பிறகோ...!

நலம் புனைந்துரைத்தல்

பிறகோ...! பெற்ற இன்பம் பேரழகியால் அன்றோ! தலைவன் தன்னை இன்ப உலகிற்கு இழுத்துச்சென்ற தலைவியைப் பார்த்தான். அவள் கட்டழகு அவனைக் கவிஞனாக்கிற்று. அவன் பேச்சில் கவிதை சொட்டிற்று. நிலவையே பார்த்துப் பேசலுற்றான் தலைவன். நிலவே ! இந்தப் பெண்ணின் முகத்தைப்போல் ஒளி வீச உன்னால் முடியுமானால், நீயும் இவள்போல் என் காதலுக்கு உரிமை பெறுவாய் !.........நிலவே ! என் தலைவி முகத்தில் களங்கமில்லை. ஆனால் உன் முகத்திலோ களங்கம் ! ......இப்படியெல்லாம் சொல்லும் தலைவனின் அன்பு எப்படிப்பட்டது ? கணப்பொழுதில் மறையும் மின்னலா ? நிலைத்துநிற்கும் நிலவா ?

காதற் சிறப்புரைத்தல்

தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பு மின்னலா, நிலவா ? குறையாத நிறை நிலா அது. அவன் பேச்சே இதற்குச் சான்று. கேளீர் அவன் மொழிகளை. '' இம் மெல்லியலாளின் பற்களில் ஊறிய நீர், பாலுடன் தேனைக் கலந்தாற் போன்றதே !......இவள் கூடும்போது உயிர்க்கு வாழ்வு இவள் ; பிரியும் போது உயிர்க்குச் சாவு இவள் !......இவ்வாறெல்லாம் கூறிய தலைவன் மீண்டும் தலைவியைச் சந்திப்பதாகக் கூறிவிட்டுப் பிரிந்து சென்றான். பின்னர், தலைவியை அவள் தோழி கண்டாள். உண்மை யறிந்தாள். வாழ்த்தி நகைத்தாள். தலைவன் குறிப்பிட்டவாறு சில நாட்கள் தவறாமல் தலைவியைச் சந்தித்தான். பிறகோர் முறை அவன் சொன்னவாறு வரவில்லை. அப்போது தோழி அங்கு வந்தாள். தலைவனின் சிறப்பைப் பேசத் தொடங்கினாள். '' என் காதலர் என் கண்ணுள்ளிருந்து போகமாட்டார் ; கண்ணை மூடி இமைத்தாலும் அதனால் வருந்த மாட்டார். அவர் அவ்வளவு நுட்பமானவர் ! ......என் காதலர் என் நெஞ்சில் இருக்கிறார். ஆகையால் சூடான பொருளைச் சாப்பிட்டால் அவர் வெப்பமடைவாரே என்று எண்ணிச் சூடான பொருளை உண்ண நான் அஞ்சுகிறேன் !...... என் காதலர் எப்போதும் என் உள்ளத்தில் மகிழ்ந்து வாழ்கிறாரே, இதை ஏன் ஊரார் அறியவில்லை !''—இவள் நிலை இப்படி இருந்தது. தலைவன் நிலையோ......!

நாணுத் துறவுரைத்தல்

தலைவன் நிலையோ தலைவியைச் சந்திக்க முடியாதுபோன நிலையால் கணமும் அவன் உள்ளத்தில் கனலையே சேர்த்தது. தலைவனுக்குத் தட்டமுடியாத வேலைகள் வந்துவிட்டன. அவற்றை விலக்கிவிட்டு அவன் செல்ல முடியவில்லை. ......தலைவன் தலைவியின் பிரிவால் உள்ளம் எரிந்து சொல்லுகிறான். யாரிடம் ? தன்னிடம் தூதாக வந்த தோழியிடம் சொல்லுகிறான். '' காதலியின் பிரிவால் உண்டான துன்பத்தைப் பொறுக்காத என் உடம்பும் உயிரும் நாணத்தை நீக்கிவிட்டன ; நீக்கிவிட்டு மடலூரத் துணிந்தன. தோழி ! என் கண்களைப் பார். பிரிவின், காரணமாகத் தூங்கவே இல்லை. மடலூர்தலைப்பற்றி நள்ளிரவிலும் உறுதியாக நினைக்கிறேன்.'' தலைவனின் இந்நிலையை அறிந்து தலைவியைச் சந்தித்துச் செய்தியைச் சொன்னாள்.

அலர் அறிவுறுத்தல்

......தலைவனும் தலைவியும் கொண்ட காதல் ஊருக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. இதுபற்றி அலர்—பரிகாசச்சொல்,பழிச்சொல்—ஊரில் எழுந்தது. அலர் எழுந்ததைக் கண்டு தோழி தலைவனிடம் கூறினாள். அலர் கண்டு தலைவன் உள்ளம் தளர்வான் என்று தோழி நினைத்திருந்தாள்.

உண்மையில் ஊரில் எழுந்த அலர் நன்மையில்தான் முடிந்தது. தலைவன் தலைவி இவர்களின் பெற்றோர்கள் இவர்களிடையே மலர்ந்திருந்த காதலை அறிந்தனர் ; இந்தக் காதல் வாள்கொண்டு வெட்டமுடியாதது என்று புரிந்துகொண்டனர் ; பூரிப்படைந்தனர். நன்னாள் தேடினர். காதலர் இருவர்க்கும் கன்னித் தமிழ்த் திருமணம் சிறப்புற நடந்தது. காதற் சோலையில் அவர்கள் தென்றலாகத் திரிந்தார்கள். நாட்கள் பல பிரிந்தன. ஒருநாள் தவிர்க்க முடியாத வேலையேற்று வேற்றூர் செல்லவேண்டிய கடமை எழுந்தது தலைவனுக்கு. ஆமாம், தலைவியைப் பிரியவேண்டிய நிலை திருமணத்துக்குப் பிறகு அப்போதுதான் முதன் முதல் எழுந்தது. அவன் உள்ளம் அதை எண்ணியதும் நெகிழ்ந்தது.

பிரிவாற்றாமை

பிரிவு என்றாலே துன்பம்தான்—கண்ணீர்தான் ! கடல் என்பது என்ன ? பிரிந்த இரு கரைகள் சொரிந்த கண்ணீர் பெருகி ஒன்றாகி நிற்கும் நீர்ப் பெருக்குதான் கடல் !......தன் பிரிவை எவ்வாறு தலைவியிடம் தெரிவிப்பது ? தயங்கியது அவன் உள்ளம். மயங்கியது அவன் அறிவு. எப்படியோ தட்டுத் தடுமாறி '' விரைவில் வேலையை முடித்துக் கொண்டு திரும்பி விடுகிறேன் '' என்று தன் பிரிவைக் குறிப்பிட்டான் தலைவன்—தலைவியிடம் ! ''தலைவரே! பிரிந்து செல்லாத நிலைமையாக இருந்தால் எனக்குச் சொல்லுங்கள். பிரிந்து சென்று பிறகு விரைந்து வருவதைப் பற்றியானால் அது வரையில் உயிர்வாழக் கூடியவருக்குச் சொல்லுங்கள் !'' என்று கூறிவிட்டுத் தலைவி போய்விட்டாள். இப்படியெல்

லாம் தலைவி சொன்னாளே தவிர இறுதியில் தலைவன் பிரிவை ஏற்கவே நேர்ந்தது ! அதனால்......

படர்மெலிந்திரங்கல்

தலைவி தலைவனின் பிரிவால் துன்ப நினைவுகளில் சிக்கித் தவிக்கத் தொடங்கினாள். ஆறுதல் கூறவே தோழி இருக்கிறாள். ஆனால் தலைவியின் துன்பத்தைப் பாருங்கள். அவள் கூறுவதைக் கேளுங்கள். " இறைக்க இறைக்க ஊற்றுநீர் பெருகுவதுபோல மறைக்க மறைக்க என் காதல் துன்பம் பெருகுகிறதே ! காதல் நோயாகிய கடல் இருக்கிறது. அது வருத்தும்போது அதன் துன்பமோ கடலைவிடப் பெரிதாக இருக்கிறதே !......" தலைவியின் துன்பம் பெருகக் கண்டாள் தோழி. ஆறுதல் சொன்னாள். அழாதே என்றாள். ஆனால் தலைவியோ......!

கண்விதுப்பழிதல்

தலைவியோ நீள் விழிகளிலிருந்து நீர் சொரிய நின்றாள். அதற்குக் கண்களையே குறை கூறுகிறாள். " தீராத இந்தக் காதல் நோய் கண்கள் எனக்கு இருந்ததால்தான் உண்டானது.......என் கண்கள் காதலர் வராமல் போனால் தூங்குவதில்லை. வந்து விட்டால் எங்கே பிரிந்து விடுவாரோ என்று தூங்குவதில்லை. இதனால் எவ்வளவு துன்பம் !" தலைவனின் பிரிவை ஆற்ற முடியாத தலைவியின் உடல் நிறம் மாறியது.

பசப்புறுவரல்

பிரிவுத் துயரால் தலைவியின் உடல் நிறம் மாறுவது தான் பசலை படர்தல் என்று பெயர் பெறும். பசலை படர்ந்த நிலையைத் தலைவி தானே காண்கிறாள்—கண்டு தனக்குள்ளேயே பேசிக் கொள்ளுகிறாள். " ஊரார் நான் பிரிவால் வருந்திப் பசலை யடைந்தேன் என்றுதான் பழி சொல்லுகின்றனர். ஆனால் என்னைக் காதலர் விட்டுப் பிரிந்துவிட்டாரே என்று இரங்கிச் சொல்லுவர் எவருமே இல்லை." தலைவியின் துன்பம் படர்ந்தது.

தனிப்படர்மிகுதி

படர்ந்த துன்பம் தலைவியிடம் மிகுந்தது. தோழி, தலைவர் விரைவில் வருவார் என்று ஆறுதல் கூறுகிறாள். தலைவி தலைவனை எண்ணுகிறாள். சொல்லுகிறாள், " தன்னை விரும்புகிறவர்க்குக் காதலர் அளிக்கும் அன்பு எதைப் போன்றது தெரியுமா ? உயிர் வாழ்கிறவர்களுக்கு மேகம் மழை பெய்து காப்பாற்றுவதைப் போன்றது...அன்பு இல்லாதவவரிடம் உன் மிகுந்த துன்பத்தைச் சொல்லுகிறாய். அதைவிடக் கடலைத் தூர்ப்பது எளிது. அதைச் செய் !......" தலைவி தலைவனை நினைந்து புலம்பவே தொடங்கிவிட்டாள்.

நினைந்தவர் புலம்பல்

நிலவே ! "பிரியாமலிருந்து கடைசியில் பிரிந்து சென்ற காதலரை என் கண்ணால் தேடிக் காண வேண்டும். எப்படித் தெரியுமா ? என் கண்கள் நிலவே உன்மீது படிந்துள்ளன. வேற்றூரில் இருக்கும் காதலரின் கண்களும் இப்போது உன்மீது படிந்திருக்குமல்லவா ? எங்கள் இருவர் கண்களும் உன்னால் ஒன்று சேர்கின்றன. ஆதலால் நீ மறைந்து விடாதே நிலவே ! நீ மறைந்து விடாதே !......" இப்படிப் புலம்பும் தலைவி உறங்கினால் வரும் கனவு எப்படி இருக்கும் தெரியுமா ?

கனவுநிலை உரைத்தல்

தோழியிடம் கனவு நிலை உரைக்கிறாள் தலைவி. " நனவில் வந்து அன்பு செய்யாத காதலரைக் கனவில் காண்கிறேன். நான் தூங்கும்போது தலைவர் கனவில் வந்து என் தோள்மேல் இருக்கிறார். விழித்தெழும் போது உடனே எழுந்து என் நெஞ்சில் போய் இருக்கிறார் !...தலைவிக்கு எப்போதும் தலைவனின் நினைவு தான். மாலைநேரம் வந்துவிட்டால் அவள் படும்பாடு சொல்லி முடியாது.

பொழுது கண்டு இரங்கல்

மாலை நேரம் என்றால் என்ன ? மாலைதான் காதலர்களின் காலை ! கதிரவன்கூட மேற்கு வானத்தில் தன் அந்தப்புரத்துக்குள் நுழைகிறான். அதனால் தான் அவன் முகம் சிவக்கிறது நாணத்தால் ! மாலை என்றால் மகிழ்ச்சி வேளைதான். மாலையோடு தலைவி பேசுகிறாள் : " பொழுதே! நீ மாலைக்காலம் அல்ல, காதலரோடு கூடியிருந்து பிறகு பிரிந்து வாழும் மகளிரின் உயிரை உண்ணும் முடிவுக்காலம் நீ !......காதலர் இல்லாத இப்போது, கொலை செய்யும் இடத்தில் பகைவர் வருவதுபோல் மாலைப்பொழுது என் உயிரைக் கொள்ள வருகிறது !......நான் காலைப் பொழுதுக்குச் செய்த நன்மை என்ன ? என்னைத் துன்புறுத்துகிற மாலைப்பொழுதுக்குச் செய்த பகையான தீமை என்ன ?..." இப்படி யெல்லாம் வருந்தினாள் தலைவி. வருத்தம் அவள் உடலுறுப்புக்களின் எழிலை யெல்லாம் கவரத் தொடங்கியது.

உறுப்பு நலன் அழிதல்

பிரிவுத் தீ தலைவியின் உறுப்புக்களின் எழிலைக் கருக்கியது. தலைவியே கூறுகிறாள் இதுபற்றி. " முன்பெல்லாம் நறுமலர்கள் என் கண்களைக் கண்டு நாணமடையும். இப்போது தலைவன் பிரிவால் அழுது அழுது சோர்ந்துவிட்ட என் கண்கள் அந்த நறுமலர்களைக் கண்டு நாணிவிட்டன !"......என்னைப் பிரிந்த தலைவரின் பிரிவால் வளையல்கள் கழன்று, பழைய அழகும் கெட்டு வாடிவிட்ட என்

தோள்கள் தலைவன் எனக்குச் செய்த கொடுமையைப் பிறர் அறியச் சொல்லுகின்றனவே !......''

இப்படி இருக்கிறாள் தலைவி. தலைவனோ தான் சென்ற வேலை முடிந்ததால் விரைவாகத் திரும்பி வந்து கொண்டிருக்கிறான். வரும்போது அவன் தலைவி '' நான் தழுவும்போது அவள் நன்மையைக் கருதித் கைகளைச் சிறிது தளர்த்தினேன். அவ்வளவு சிறிய பிரிவையும் பொறுக்காமல் அவள் நெற்றி துன்பத்தால் பசலை நிறம் அடைந்ததே !......எங்கள் தழுவுதலுக்கு இடையே குளிர்ந்த காற்று நுழைய, காதலியின் மழைக் கண்கள் துன்பத்தால் பசலை நிறம் அடைந்தன !......'' இவ்வளவு மெல்லிய தன்மை உடையவளை விரைவில் சென்று அடைய வேண்டும் என்று தலைவனே அவளைக் காண விரைந்து வந்தான். தலைவனைக் கண்டதும் தலைவிக்குக் கோபம் வந்துவிட்டது. இவ்வளவு நாள் பிரிந்து இருந்ததை எண்ணிச் சினம் கொண்டாள். அவள் சினத்தைப் போக்க வேண்டித் தலைவன் முயன்றான்.

புலவி நுணுக்கம்

தலைவன் பார்த்தான். பிரிந்திருந்தபோது அவளை நினைக்கவில்லை என்று கருதித்தான் தலைவி இவ்வாறு ஊடல் கொள்ளுகிறாள் என்று கருதி, தலைவன் பேசத் தொடங்கினான்.

'' கண்ணே ! உன்னை நான் நினைத்தேன் '' என்று தலைவன் சொன்னான். உடனே தலைவி, '' அப்படியென்றால், நினைத்தேன் என்றால், நினைப்புக்கு முன் மறப்பு உண்டல்லவா. ஏன் என்னை மறந்திருந்தீர் ?'' என்று கேட்டு ஊடல் கொண்டாள். அப்போது, பேசாமல் இருந்த தலைவியைப் பேச வைப்பதற்காகத் தலைவன் பொய்த் தும்மல் தும்மினான். உடனே கேட்டாள் '' தலைவரே ! எவள் நினைத்ததால் நீர் தும்மினீர் ?'' என்று கேட்டு தலைவி ! அழத் தொடங்கினாள்.......இறுதியில் தலைவியின் ஊடல் தீர்ந்தது. கூடல் நிகழ்ந்தது !......அப்போதுதான் தலைவியின் ஊடலின் பயன் தெரிந்தது.

ஊடலுவகை

ஊடலின் பயனை உணர்ந்து தலைவன் தன்னுள் எண்ணிக் கொள்ளுகிறான். '' உண்பதைவிட முன் உண்ட உணவு செரிப்பது இன்பமானது ; அதுபோல் காதலில் கூடுவதைவிட ஊடுதல் இன்பமானது !...... ஊடலில் தோற்றவரே வெற்றி பெற்றவர் ஆவர் ; அந்த உண்மையை ஊடல் முடிந்தபின் கூடி மகிழும் நிலையில் காணலாம் !...காதலுக்கு இன்பம் தருதல் ஊடல் ; ஊடல் முடிந்த பிறகு கூடினால், அந்த ஊடலுக்கு அது இன்பம் !''

திருக்குறளின் பெருமை

திருக்குறளின் பெருமையை, புகழை எமது ஒரு வாயால் உரைக்கவும் எளிய கையால் எழுதவும் இயலா. ஏற்ற சொற்களும் எளிதில் அமையா. திருக்குறளில் செறிந்து, நிறைந்து, பொருந்தியுள்ள சொல் வளம், பொருள் வளம், செப்பு முறை, வைப்பு முறை தொகுத்தும் வகுத்தும், தொடர்பு படுத்தியும் அமைத்துள்ள அமைப்பு, உடன்பாட்டிலும் எதிர்மறையிலும், இன்மொழியிலும் வன்மொழியிலும், வழிமொழிந்தும் வலியுறுத்தியும், இடித்துக் காட்டியும், எடுத்துக்காட்டியும், கூறும் கூற்றுகள் முதலானவற்றின் பண்புகளைப் பல முறையும் படித்து, உள்ளத்தால் உணர்ந்து, உணர்ச்சியால் அறிந்து, அறிவால் மதித்து, மதிப்பின் பெருமையால் மகிழ்ந்து, மகிழ்வால் அகம் நெகிழ்ந்து, ஆர்வமலர்ந்து, அன்பு கனிந்து விளைந்த விளைவாம். இன்பத்தை இனிது நுகரும் போதுதான் திருக்குறளின் தனிப்பெருமை தெளிவாக விளங்குமேயல்லாது மொழிவதாலும் எழுதுவதாலும் அதன் பெருமை முழுதும் உரைக்கவோ, வரைந்தறிவிக்கவோ இயலாதென்பது எளியேன் கண்ட தெளிவாகும்.

திருக்குறள் உயிர்களின் உணவு ; உள்ளத்தின் உணர்வு ; உணர்ச்சியின் ஊற்று ; அறிவின் கருவூலம் (களஞ்சியம்) ; அன்பின் அமளி ; அருளின் தெளிவு ; அகத்தின் விளக்கு ; அறத்தின் பிறப்பிடம் ; ஆற்றலின் தோற்றம் ; இன்பத்தின் இருக்கை ; ஊக்கத்தின் சேர்க்கை ; செந்நெறி செறிவிடம் ; ஒழுக்கம் உறைவிடம் ; வாழ்க்கையின் விளக்கு ; உண்மையின் உறையுள் ; பண்பின் பயிலிடம் ; உலகின் ஒரு நெறி ; மக்களின் ஆக்கம் ; மானிடர் வாழ்வு ; மானத்தின் வரம்பு ; பிறர்நலப் பிறப்பிடம் ; தன்னலம் தகர்விடம் ; துறவின் நிறைவு ; பொருளின் புதையல் ; பொறையின் பொற்பு ; வீரத்தின் நேர்மை ; மறத்தின் மாண்பு ; நாட்டின் நாட்டம் ; காதலின் கனிவு ; ஈகையின் இன்பம் ; கடமையின் காட்சி ; முயற்சியின் முகப்பு ; ஊழின் பகைவாள் ; கூற்றுக்கு மாற்றான் ; தமிழின் அமிழ்தம் ; தென்மொழிச் செல்வம் ; திராவிடர் தேட்டம் ; தமிழர்கள் சட்டம் ; சிறப்பின் சிகரம் ; கலைகளின் நிலைக்களன் ; சாகக்கல்வியின் அடிப்படை ; மரணமிலாப் பெருவாழ்வின் வழி. இன்னும் எங்கெந்த வகையில் உயர்த்திச் சொன்னாலும் எல்லாம் பொருந்தும்,

—**ஆசிரியர் இறையனார்**

திருவள்ளுவ மாலை

சீத்தலைச் சாத்தனார்

மும்மலையு முந்நாடு முந்நதியு முப்பதியு
மும்முரசு முத்தமிழு முக்கொடியு—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றே
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றாமாண்ட பாடலினான்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

மோசிகீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானா வறமுதலா வந்நான்கு—மேனோருக்
கூழி னுரைத்தாற்கு மொண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

குலபதி நாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிரு டள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரு மொக்குமெனக்
கொள்ளத் தகுங் குணத்தைக் கொண்டு,

கோவூர் கிழார்

அறமுத னான்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

அரிசில் கிழார்

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

நல்கூர் வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா
னுத்தர மாமதுரைக் கச்சென்ப—விப்பக்கம்
மாதானு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றென்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா லவரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

ஆலங்குடி வங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் றீஞ்சுவையு மொவ்வாதாற்—றெள்ளமுத
முண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

நல்வழி

தேவர்குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்.

முகையலூர்ச் சிறு கருந்தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தெள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனார்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வா
ரெப்பா வலரினு மில்.

தொடித்தலை விழுத்தண்டினர்

அறநான் கறிபொரு ளேழொன் று காமத்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

மாமூலனர்

அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானேர் பேதை யவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

கவிசாகரப் பெருந்தேவனர்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புநதை
மாவிற் கருமுனியா யானைக்—கமரரும்ப
றேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா.

தேனீக் குடிக்கீரனர்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலிற்
றெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

இலக்கணக் கொத்து

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந் **திருவள்ளுவர்** கோவையார்
மூன்றினும் முழங்கும்,

மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர் கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்ப—னிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண் மாலைக்கும் பெயர்.

"வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு."

—அறிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

சமயப் போலி, சமயக் கொடுமை, பொய் யொழுக்கம் ஆகியவை நூல் முழுவதிலும் கண்டிக்கப்பட்டுள்ளன.

—அறிஞர் ரெவரெண்டு E. J. ராபின்சன்.

தமிழ் நூல்களில் மிகவும் சிறந்த நூலாக எல்லோராலும் மதிக்கப்படும் திருக்குறள் அமைப்பிலும், யாப்பிலும், வடமொழித் தொடர்பு சிறிதுமில்லாமல் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது.

—அறிஞர் ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல்.

திருக்குறளுக்குச் சமமாகிய நூல், மக்களாய்ப் பிறந்தோர், பேசும் வேறு எம்மொழியிலும் காண முடியாது.

—அறிஞர் ரெவரெண்டு பெர்சிவல்

திருவள்ளுவரைப் போற்றாத மக்களில்லை, மதத்தினரில்லை, மொழியினரில்லை என்றே திட்டமாகக் கூறலாம். கடவுள் என்ற ஒருவர் எவ்வாறு எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடின்றி உரியவராகின்றாரோ, அவ்வாறே திருவள்ளுவரும் எல்லா மக்கட்கும் எத்தகைய வேறுபாடுமின்றி உரியராகும் பெற்றியுடையார்.

—திரு கா. நமச்சிவாய முதலியார்.

வள்ளுவர் இல்லறம் துறவறம் இரண்டையும் சிறப்பாகக் கூறியுள்ளார். துறவு என்பது பற்றற்றிருத்தல். புத்தரும், சமணரும் நாடு நகரையும், மனைவி மக்களையும், துறத்தலே துறவு எனக்கொண்டிருந்தது. வள்ளுவனுர்க்கோ, மனத்துறவுதான் உண்மைத் துறவு ஆகும்.

—மறைமலை அடிகள்

தமிழின் பெருமை

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து
சங்கத்
திருப்பிலே யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த
பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே
நடந் தோரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.

—வில்லி பாரதம்

* * * *

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே

தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழ
ணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்
கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பது
போல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்
துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல
வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்து துமே.

சதுமறையா ரியம்வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யனாதியென மொழிகுவதும் வியப்பாமே.

—மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை

குறல் தூய செந்தமிழா னியன்றதொரு நூல். ஆசிரியர் அந்நூலில் எடுத்தாண்டுள்ள 12,000 சொற்களில் 50கூட வட சொற்கள் தேறவில்லை. இத்தகைய ஒரு பெரியாரையும், ஒப்பரிய நூலையும், பயந்த ஒரு நாடு இகழ்ந்தொதுக்கக் கூடிய இழிதன்மை வாய்ந்த ஒரு நாடக இருத்தல் முடியாது என்பதை நினைக்க, அந்நினைவு ஆறுதலை யளிக்கின்றது. எனவே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் பாடுபடுவோர்க்குத் திருக்குறள் பேருதவி நல்குவதாகும்.

—டாக்டர் ஜெ. லாசரஸ்

யான் தமிழ் பயிலத் தொடங்கியதற்குக் காரணம் திருக்குறள் மூலத்தையே நேராகப் படித்தல் வேண்டுமென்று என் உள்ளத்தில் எழுந்த அவாவேயாகும். தமிழ்மொயிழில் புலமை பெறுவதற்குரிய ஓய்வு எனக்கு ஆண்டவன் அருளினானில்லை. அது குறித்து எனக்குள்ள வருத்தம் அளவற்றது.

—காந்தி அடிகள்

திருக்குறள் என்னும் சீரிய நூல் சமயம், காலம், சாதி, இடம் முதலிய வரையறையின்றி, எச்சமயக் தார்க்கும், எக்காலத்திற்கும், எச்சாதியினர்க்கும், எந்நாட்டினர்க்கும் பொதுவாய் உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனி நூலாகத் திகழுகின்றது.

—பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளை.

எல்லா நாட்டினர், எல்லா மதத்தினர், எல்லா கொள்கையினர்க்கும் இன்றியமையா வாழ்க்கை ஒழுக்கங்களைத் தெளிவாக எடுத்துக் கூறும் பெருமை வாய்ந்தது.

—அறிஞர் உ. வெ. சாமிநாத ஐயர்.

For

ABSOLUTE SECURITY

IDEAL SERVICE

GENEROUS TREATMENT

ALL INDIA GENERAL INSURANCE COMPANY., LTD.

Head Office : BOMBAY.

A BONUS PAYING CONCERN

ASSETS : EXCEED Rs. ONE CRORE

Transacts :

LIFE - FIRE - MARINE - MOTOR ETC.

Substantial Reduction in Premium Rates :
All Schemes of Insurance to Suit present day Needs
such as Estate Duty Policy Etc. are available :

Divisional Office for South India :

" ALL INDIA GENERAL BUILDING "
COIMBATORE.

P. V. K. SHANMUGAM, B. A.,
Divisional Manager.

Madras Branch : **29, Linghi Chetty Street, Madras-1**

Other Branches & Organising Offices in South India :

Adoni, Bangalore, Cochin, Madurai, Mangalore, Palai, Rajahmundry, Salem, Tanjore, Tuticorin, Vellore etc.

புத்தாண்டிற்கு நாங்கள் தரும்
பேசும் பொற்சித்திரங்கள்.........
வெற்றிப்பாதையில்.........
கஸ்தூரி பிலிம்ஸ்
மேனகா
விரைவில் வருவன.............
பத்மினி பிக்சர்ஸ்
முதல் தேதி
மதருஸ் பிக்சர்ஸ்
செந்தாமரை
பிரின்ஸிபிள் பிக்சர்ஸ்
வெறும் பேச்சல்ல
டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸ்
கோமதியின் காதலன்
உமா பிக்சர்ஸ்.
புரொடக்ஷன்... நிர், 5.
மதருஸ் பிக்சர்ஸ்
......சென்னை. 14......
BALU BROS

1955 அகில இந்தியா காங்கிரஸ் பொருட்காட்சியில், கண்டுகளிக்கக்கூடியது **காந்திஜி கண்காட்சி** ஒன்றே என்று இரண்டு லக்ஷம் மக்களுக்குமேல் பார்த்துப் பாராட்டினரல்லவா. அக்கண்காட்சியிலுள்ள காந்தி அடிகளின் வாழ்க்கைச் சித்திரங்களில் ஒரு சில.........

கஸ்தூரி பாய் அம்மையாரை மலஜலம் பாத்திரம் சுத்தஞ்செய்யச் சொல்லல்



"மகாத்மா" சுத்தஞ்செய்யும் ஒரு தோட்டி

அவரவர்கள் தேவையையும், அவசியத்தையும் அவரவர்களே செய்துகொள்ள வேண்டுமென்பது "மகாத்மா" கொள்கை. அவர் இல்லத்தில் அவரவர்கள் மலசலம் கழிக்கும் இடத்தையும், பாத்திரத்தையும், அவரவர்களே சுத்தஞ் செய்யவேண்டுமென்பது, அவர்கள் பழக்கம்.

ஒரு சமயம் "காந்தி மகான்" வீட்டுக்கு விருந்தாளியாக வந்த ஒருவர் இந்த பழக்கம் அறியாதவர். அதனுல் விருந்தாளி மலசலங்கழித்த பாத்திரத்தை, சுத்தஞ்செய்யும்படி தன் மனைவி கஸ்தூரி பாய் அம்மையாரை காந்தி மகான் கேட்டுக்கொண்டார். அம்மையார் கொஞ்சம் தயங்கினுர்கள். பொறுமையே கடலாகிய "காந்தி மகான்", கொஞ்சங்கோபத்தோடு "வெளி போ" என்று சொல்லிவிட்டார்.

"தாங்களே கதி என்று என் ஊரை விட்டு, உறவினரை விட்டு தங்களோடு வந்த நான், இந்த இரவில் எங்கே போவேன்!" என்று கண்கலங்க, அம்மையார் இரஞ்சி கேட்ட வார்த்தை மகாத்மாவின் இதயத்தை மாற்றியது.

"நாம் வசிக்கும் இடத்தை நாமே சுத்தஞ்செய்து கொள்வதில் இழிவு ஒன்றுமில்லை" என்பது "மகாத்மா" கொள்கை.

கல்கத்தாவில் நடந்த ஒரு காங்கிரஸ் மகாநாட்டில் நிர்வாகஸ்தர்கள் கவனக் குறைவால் ஜனங்கள் நடமாடும் இடங்களில் அங்கும், இங்கும் நிறைந்திருந்த குப்பைக் கூளங்களை "காந்தி மகான்" தோட்டியைப் போல் தானே கூட்டி சுத்தஞ்செய்து, நிர்வாகிகளுக்கும் சுகாதார சிப்பந்திகளுக்கும் புத்தி புகட்டினுர்.

இவ்விதமே தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் சேரிகளையும் "காந்தி மகான்" தானே கூட்டி சுத்தஞ் செய்து, அவர்களுக்கும் புத்தியை உண்டாக்கினுர்.

"செய்! என்று சொல்வதைவிட" தானே செய்து காட்டினுல் கட்டாயம் பிறரும் பின்பற்றுவார்கள் என்ற உண்மையை உணர்த்தினுர் "மகாத்மா."



பெரும் வியாதிஸ்தனுக்கு சிகிச்சை

பெரும் வியாதியால் பீடிக்கப்பட்டு அழுகிய புண்ணோடு அல்லலுறும் அனாதி ஒருவனை, "அண்ணல் காந்தி", தானே தூக்கி, தன் கையாலேயே, நாற்றம் எழும் புண்களை கழுவி சுத்தஞ்செய்து, ஏற்றதொரு மருந்து வைத்துக் கட்டி ஏழை அவனை ஆதரித்தார்.

பூவின் மணமும், புண்ணின் நாற்றமும் ஒன்று என்று எண்ணும் தன்மை வாய்ந்தவர் "அண்ணல் காந்தி."

தாழ்த்தப்பட்டவர் மாலை போடுதல்

மாலை அணிந்துகொள்ள விரும்பாத "மகாத்மா காந்தி அடிகள்" தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஒதுக்கித் தள்ளப்பட்டவர்களை தன் இனமென்று பக்கத்தில் இழுத்து வைத்து, அவர்களால் அளிக்கப்படும் மாலைகளை, அவர்கள் கரத்தாலேயே போடும்படி சொல்லி அணிந்துகொண்டார் "அண்ணல் காந்தி."

ஒரு சமயம் தன் ஆசிரமத்தில் இருக்கும் சில தாழ்த்தப்பட்டவர்களுக்கு நாவிதன் க்ஷவரஞ்செய்ய மறுத்ததை முன்னிட்டு, "மகாத்மா" தானும் க்ஷவரஞ்செய்துகொள்ளாமல் தாடி, மீசை வளர்க்க ஆரம்பித்து விட்டார்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு க்ஷவரஞ்செய்யப்பட்ட பிறகே, தானும் செய்துகொண்டார்.

“ காந்தியை ” சுடும் படலம்

மாலைப் பொழுதில் இறைவன் வழிபாட்டுக்கு “அண்ணல் காந்தி” அவசரமாகச் செல்லும் வழியில் அரவம் போல் மறைவிலிருந்து முன்னுல் தோன்றி துப்பாக்கியால் சுட்டான் “கோட்ஸே” என்னும் கொடியவன் ஒருவன். இதற்கு முன்னுல் எட்டுத் தடவைகள் “காந்தியை” கொல்ல கயவர்கள் முயற்சித்தார்கள். “தன்னை கொல்பவனை தண்டிக்கக் கூடாதென்று பல தடவை “காந்தி மகான்” வேண்டிக்கொண்டிருக்கிருர்.

“கோட்ஸே” துப்பாக்கி குண்டுக்கு, “காந்தி மகான்” இலக்காகும்போது கூட தன்னை சுட்டவனை தண்டிக்க வேண்டாமென்று சொல்ல இபலாமல், வேண்டாமென்று ஜாடை செய்து, “ராம்!” “ராம்!!” “ராம் !!!” என்ற தியானத்தோடு உயிர் நீத்தார்.

—டி. எம். யூ. பதி



திடம் படைத்த கல்நெஞ்சம் திடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம் படைத்த மாபாவி வஞ்சனையால்
காந்திமகான் மடியச் சுட்டான் ;
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்திடாதால்,
இடம் படைத்த உலகாளும் இறையே ! நீ
எங்கொழிந்தாய் இந்நாள் ஐயா !

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

கண்ணீரைத் துடைத்துக்
கடமையைச் செய்வோம்.

1955 அகில இந்திய காங்கிரஸ் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த ஸர்வோதயா கண்காட்சியிலுள்ள பாபு மண்டபத்தில் காந்தி அடிகளின் வாழ்க்கை முழுதும் பாலு சகோதரர்களால் தீட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. ஆசிய ஜோதி நேருவும், மற்றும் தேபர் முதலிய வடநாட்டுத் தலைவர்களும் இவ்வரிய சாதனை தமிழ் நாட்டிற்கே பெருமை தரும் என்றும் பாலு சகோதரர்களைப் பாராட்டினார்கள்.



காந்தியார் பாரிஸ்டர் படிப்பிற்காக இங்கிலாந்து செல்லுமுன், தன் அருமைத் தாயாரிடம் "மது, மாமிசம், மங்கை" மூன்றையும் தீண்டுவதில்லையென சத்தியம் செய்து, அதன்படியே நடந்து, இங்கிலாந்திலிருந்து இந்தியா திரும்பினார்.

ஒரு சமயம் பிரிடோரியா (தென் ஆப்பிரிக்காவில்) என்னும் இடத்திற்கு முதல் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்தார். நிறத்திமிர்கொண்ட ஒரு வெள்ளையன், ஒரு போலிஸ்காரனைக் கொண்டு அவரை முதல் வகுப்பு வண்டியினின்றும் கீழே இறக்கிவிட்டான். இத்தகைய கொடுமைகளே, காந்தியடிகளுக்கு வெள்ளையரின் நிறத்திமிரை ஒழித்துக்கட்ட உறுதி கொள்ளும்படி செய்தது. **கடைசியில் வெள்ளையரின் ஆதிக்கமே இந்நாட்டில் இல்லாது ஒழிந்ததற்கு உத்தமரின் ஓயா உழைப்பொன்றே காரணமாயிற்று.**

நாடு விடுதலைபெற, அன்னியருடன் போராடவேண்டியிருந்தது. தர்மம் என்ற பலத்தை நம்பி போரைத் தொடுத்தார். வயலோரத்திலிருந்து வாட்டமுற்ற உழவன் முதற்கொண்டு வசீகர வாழ்விலே இருந்து வந்த சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை வரையிலே அவர் முகாமில் வந்து குமிந்தனர்.

1942, மே மாதம் இந்தியாவை விட்டு வெள்ளையர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார் காந்தி அடிகள்.

1942, ஆகஸ்டு 9ந்தேதி காந்தி அடிகள் கைதுசெய்யப்பட்டு பூனாவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறைவைக்கப்பட்டார். *1943, பிப்ரவரி 10ந் தேதியில் 21 நாள் உபவாசம் ஆரம்பம். 1944, பிப்ரவரி 22ந் தேதி கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் சிறையில் உயிர் நீத்தார்.*

மாலை நேரத்தில், ஒரு நாட்டு மக்களையே உலகறிய வைத்த உத்தமர் தன் பேத்திமார் இருபக்கமும் வர, தன் சொல்லை எதிர்நோக்கிக் கூடியிருக்கும், ஆர்வமிக்க மக்கள்முன் வந்துகொண்டிருக்கிறார்.

இதோ இன்னோர் நிமிஷம்—அவர் மேடைமீதேறிப் படிக்கட்டுகளில் கால் வைக்கும் நேரத்தில், எவனோ ஒரு கயவன், (கோட்ஸே என்னும் கொடியோன்) மாபெருந் துரோகம் புரிய மனதைத் துவேஷக் கூடாக்கிக் கொண்ட மாபாவி, ஒன்று, இரண்டு, மூன்று என்று துப்பாக்கியால் சுட்டான். மார்பிலே, அடிவயிற்றிலே—கண்கள் மூடிக்கொண்டன.

இந்த வெறியன், எந்த மாபெருந்தலைவரால் மதிப்புப் பெற்றானோ, நாட்டுக்கு ஓர் புது நிலை ஏற்பட்டதோ, அந்த மாபெருந் தலைவரையல்லவா மார்பிலே சுட்டுக்கொன்றான்.

பெற்ற தாயைக் கொல்லும் பேயன் அந்த மாலை நேரத்திலே, மக்களுக்கு மதிமொழி கூறவந்தபோது, மஞ்சள் நிற வெய்யில் அவருடைய பொன்னிற மேனியிலே பட்டபோது, அவருடைய முதுமை தெரிந்த போது, ஒரு பெரிய துணைக்கண்டத்தில் சர்க்காரே அவர் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரக் காத்திருந்தும், ஒரு பாதுகாப்பையும் விரும்பாமல்... கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாகத் தன் சொந்த வாழ்க்கை என்பதையே மறந்து, நாட்டுக்குப் புது வாழ்வு பெற்றுத்தர வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் பணியாற்றி வந்தவராயிற்றே என்பதையும் எண்ணிப் பாராமல் சுட்டான்—மும்முறை—அவர் கீழே சாயும் வரை.

முப்பதாண்டுகளாக எந்த ஏகாதிபத்தியத்தின்மீது அவர் தாக்குதலை நடத்தினாரோ, அந்த ஏகாதிபத்தியம் செய்யத் துணியாத காரியத்தை, எவனை ஏகாதிபத்தியத்திடமிருந்து, விடுவித்தாரோ அவன் செய்திருக்கிறான்.

—அறிஞர் C. N. அண்ணாதுரை, M.A.

யமுனை நதிக்கரையிலே, 31-1-48 மாலை 5 மணிக்கு மூட்டப்பட்ட தீ, அங்கு காந்தியாரின் சடலத்திற்கு மட்டுமல்ல, உலகிலே இலட்சக் கணக்கான மக்களின் அடிவயிற்றிலே கூட அல்ல, இருதயத்தையே **தீண்டிய தீ ஆகும்.**



"கலங்கரை விளக்கம் அணைந்தது! கல்விக்
களஞ்சியம் மறைந்தது! நாட்டின்
விலங்கினை அறுத்தே விடுதலை கண்ட
வீரனை வீழ்த்தினன் வீணன்!

கலங்கிட யமுனைக் கரையினில் தீயிற்
காந்தியின் உடல் மறைந்தாலும்
இலங்கிடும் கருணை வடிவினை என்றும்
இதயமாம் கோவிலில் வைப்போம்!"

—புத்தனேரி ரா. சுப்பிரமணியம்

அண்ணல் காந்தி அடிகளின் வாழ்க்கையில் முக்கிய சம்பவங்கள்

1869, அக்டோபர், 2. காந்திஜி பிறந்தார்.

1881, ராஜகோட் ஹைஸ்கூலில் சேர்ந்தார்.

1883, அன்னை கஸ்தூரிபாவை மணந்தார்.

1888, செப்டம்பர், இங்கிலாந்துக்குப் பிரயாணம்.

1891, ஜூன். இந்தியா திரும்பி வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

1893, ஏப்ரல். தென்னுப்பிரிக்கா பிரயாணம் செய்தார்.

1896, இந்தியா திரும்பினர்.

1896, நவம்பர். தனது மனைவி மக்களுடன் தென்னுப்பிரிக்காவுக்குத் திரும்பவும் சென்முர்.

1907, வக்கீல் தொழிலை உதறித் தள்ளிவிட்டுச் சாத்வீகப் போராட்டத்தில் இறங்கினர்.

1908, ஜன. 10. டிரான்ஸ்வாலிலிருந்து வெளியேற மறுத்ததால் சிறை தண்டனை விதிக்கப்பட்டார்.

1908, பிப். 8. ஒரு பட்டாணியன் அவரைக் கொல்ல முயற்சித்தான்

1908, அக். மீண்டும் சிறைவாசம்.

1909, ஜூன். பிரிட்டிஷ் சர்க்காரிடம் தூது போக இங்கிலாந்துக்குப் பிரயாணம் செய்தார்.

1911—12, ஒரு வாரம் உண்ணுவிரதம். 4 மாதத்துக்கு தினசரி ஒரு வேளை சாப்பாடு பின்னர் 14 நாள் உண்ணுவிரதம்.

1912, ஐரோப்பிய ஆடைகளைத் துறந்தார்.

1913, நவ. 9. கைது செய்யப்பட்டு 9 மாத சிறை தண்டனையடைந்தார்.

1914, ஜன. 21. காந்திஜி-ஸ்மட்ஸ் உடன்படிக்கை சத்யாக்கிரஹம் நிறுத்தப்பட்டது

1914, ஆக. உலக யுத்தம் ஆரம்பம். காந்திஜி லண்டனில் இந்தியர் ஆம்புலன்ஸ் படையைத் திரட்டினர்.

1915, ஜன. இந்தியா திரும்பினர்.

1915, மே. சபர்மதி ஆசிரமம் ஆரம்பித்தார்.

1919, பிப். ரௌலட் சட்டத்தை ரத்து செய்ய சத்யாக்ரஹப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்.

1919, ஏப். 6. ஆசிய இந்திய சத்யாக்ரஹ இயக்கம் ஆரம்பம். நாடெங்கும் ஹர்த்தால்.

1919, ஏப். 13. அமிருதசரஸில் ஜலியன் வாலாபாக் கோர வதை நடைபெற்றது.

1919, ஏப். 14. ஜனங்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டதால் மூன்று நாள் உண்ணுவிரதம்.

1919, ஏப். 18. சத்யாக்கிரஹ நிறுத்தம்.

1919, செப். 'நவஜீவன்' ஆசிரியரானர். அக்டோபரில் 'யங் இந்தியா' ஆசிரியரானர்.

1920, கிலாபத் விஷயமாக வைசிராயிடம் தூது.

1920, டிச. அஹிம்ஸா முறையில் சுயராஜ்யம் பெறுவதென்று நாகபுரி காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

1921, ஜூலை. அந்நியத்துணி பகிஷ்காரம்.

1921, டிச. காங்கிரஸ் காந்திஜிக்கு சர்வாதிகாரம் அளித்தது.

1922, பிப். 1. பர்தோலியில் சத்யாக்ரஹம் ஆரம்பிக்கப் போவதாக வைஸ்ராய்க்கு நோட்டீஸ்.

1922, மார்ச் 18. ராஜதுரோகமாகப் பேசியதாகக் கைது செய்யப்பட்டு 6-வருஷ சிறைவாச தண்டனை விதிக்கப்பட்டார்.

1924, பிப். 5. விடுதலையானார்.

1924, செப். 18. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு 21-நாள் உண்ணுவிரதம் ஆரம்பித்தார்.

1924, டிச. பெல்காம் காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார்.

1925, நவ. ஆசிரமவாசிகள் தவருக நடந்துகொண்டதால் உண்ணுவிரதம் இருந்தார்.

1925, நவ. சத்திய சோதனை—காந்திஜி தனது சுய சரிதத்தை எழுத ஆரம்பித்தார்.

1928, டிச. 1929-க்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்படாவிடில் சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப் போவதாக காங்கிரஸில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

1930, பிப். சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்க முடிவு.

உப்பு சத்யாக்ரஹம்

1930, மார்ச். 2. உப்பு சத்தியாக்கிரஹம்.

1930, மார்ச். 12. தண்டி யாத்திரை.

1930, மே. 5. கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறை.

1931, மார்ச், காந்தி-இர்வின் உடன்படிக்கை.

1931, ஆக. 29. காங்கிரஸ் தூதராக இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில் கலந்துகொள்ள இங்கிலாந்து பிரயாணம்.

1932, ஜன. 4. கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றி சிறையில் வைக்கப்பட்டார்.

1933, பிப். 11. 'ஹரிஜன்' பத்திரிகை ஆரம்பம்.

1933, மே. 8. ஆத்ம பரிசுத்தத்துக்காக 21-நாள் உண்ணுவிரதம் ஆரம்பம்.

1934, செப். 17. அக்டோபர் முதல் தேதியிலிருந்து அரசியலிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாக அறிவித்தார்.

1934, டிச. 14. அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கம் ஆரம்பம்.

1936, ஏப். 30. வார்தா அருகிலுள்ள சேவா கிராமம் தலைமைக் காரியாலயமாயிற்று.

1937, அக். 22. வார்தா கல்வித் திட்டம்.

1940, செப். யுத்த நிலைமை சம்பந்தமாக வைசிராயைச் சந்தித்தார்.

1941, டிச. 30. காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினர்.

1942, மார்ச். 27. புது டில்லியில் ஸ்டாபோர்டு கிரிப்ஸுடன் சந்திப்பு.

1942, மே. இந்தியாவை விட்டு வெளியேறுமாறு பிரிட்டிஷாரைக் கேட்டுக் கொண்டார்.

1942, ஆக. 8. குவிட் இந்தியா தீர்மானம் பற்றி பம்பாயில் நடந்த அ. இ. கா. க. கூட்டத்தில் பேசினர்.

1942, ஆக. 9. கைதுசெய்யப்பட்டு பூனுவிலுள்ள ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டார்.

1943, பிப். 10. 21-நாள் உபவாசம் ஆரம்பம். 1944, பிப். 22. கஸ்தூரிபாய் காந்தி ஆகாகான் சிறையில் உயிர் நீத்தார்.

1944, மே. 6. நிபந்தனையின்றி விடுதலை.

1944, செப். 9. 27 பாகிஸ்தான் சம்பந்தமாக ஜின்னு வுடன் சம்பாஷணை.

1946, ஜன. 21. சென்னைக்கு விஜயம்.

1946, பிப். சென்னையில் பார்லிமெண்டரி தூது கோஷ்டி சந்திப்பு. 1946, ஏப்—ஹெர்பர்ட் ஹூவருடன் சந்திப்பு.

1946, ஜூன். 30. பூனு அருகில் காந்திஜி சென்ற ஸ்பெஷல் ரயில் கவிழ்க்க முயற்சி.

1946, அக். நவகாளி கலவரப் பிரதேசங்களில் சுற்றுப் பிரயாணம்.

1947, ஏப். 16. அமைதி ஏற்பட காந்திஜி-ஜின்னு கூட்டு அறிக்கை.

1947, ஆக. 15. இந்தியா சுதந்திரம் அடைந்தது.

1947, செப். 1. ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமைக்குக் கல்கத்தாவில் உபவாசம்.

1948, ஜன. 20. பிரார்த்தனையில் குண்டு வீசப் பட்டது.

1948, ஜன. 30. பிரார்த்தனை கூட்டத்துக்குப் போகும்பொழுது காந்திஜி சுட்டுக் கொல்லப் பட்டார். அவர் ஆத்மா சாந்தியடைக.

ஆச்சார்யா விஞேபா பாவே

THE MONARCH OF ALL HE SURVEYS

காந்தி அடிகள் ஏழை மக்களுக்காக வாழ்ந்து உயிர் நீத்தார். அவர் விட்டுச் சென்ற சேவைகளை விஞேபா பாவே காரியத்தில் செய்து காட்டி, ஏழைகளின் மத்தியிலிருந்துகொண்டு ஏழைகளுக்காக தன் கடமையை செய்து வருகிருர்.



வீரபாண்டிய கட்டபொம்மனும், ஊமைத்துரையும்.

வீரபாண்டிய
கட்டபொம்மன்

கலைஞர். கௌதமன்

சீறிப் பாய்கின்ற புலி, துரத்தி வருகின்ற யானைக் கூட்டங்களுடன் போராடுவது இயல்பு! துள்ளிக் குதிக்கின்ற மானும், தோகை விரித்தாடுகின்ற மயிலும், நீந்தி விரைந்தோடுகின்ற கயலும், அழகான வெண் புறவும், எழிலான கிள்ளையும், தமது அருமைச் சுதந்திரம் பறிக்கப்படுகின்ற நேரத்திலே போராடும் நேர்த்தியினையும், வீரத்தினையும், நேரில் காண்போரால்தான் வியந்து பாராட்ட முடியும்! நெஞ்சம் சிலிர்த்து; உள்ளம் நெகிழ்ந்து; கண்களிலே நீரருவி வழிந்தோட; இதயத்தின் அடிப்பீடத்திலே புதையுண்டு கிடக்கும் வீரவுணர்வுகளைத் தடவிக் கண்டெடுத்து; கோழையினையும், ஆவேசங் கொண்ட நல்லிளங்காளையாக ஆக்க வல்ல உலகின் ஒரே சாதனம், 'விடுதலைப்போ'ரென்பதைத் தவிர வேறொன்று மிருக்க முடியாது!

பிறந்த பொன்னாடு அவமதிக்கப்படுகின்றபோதும்; பெற்றெடுத்த புகழன்னை தூற்றப்படுகின்றபோதும்; போற்றி வணங்குகின்ற இலட்சியக் கொடி கிழித்தெறியப்படுகின்றபோதும்; ஒரு நாட்டின் இளைஞர் கூட்டத்திற்கு—இணையில்லா வீரர் கோட்டத்திற்கு—வருகின்ற ஆவேசமும், புத்துணர்வும், வாரித் தெறிக்கின்ற எரிமலையின் அக்கினிக் குழம்புகளின் உத்வேகத்தைவிட, பயங்கரமானது! கொடுமையானது!! அந்த நேரத்திலே எவரும் விளைவுகளைப் பார்ப்பதில்லை—பார்த்ததுமில்லை!! 'உயிர் ஒன்றுதான் போகும்—புகழ் நிலைக்கும்—மானம் தழைக்கும்' என்ற சிறப்பானதோர் கடமையுணர்ச்சி, அவர்களை வேறெதைப்பற்றியும் சிந்திக்கவே விடுவதில்லை! இங்ஙனம் தங்களின் அருமையான உயிர்களை ரத்தச் சேற்றிலே மிதிக்க விட்டாகிலும், 'தாயகம் காத்திட்டோம்' என்ற பெருமிதத்தோடும், வெற்றிக் களிப்போடும், உயிர் விட்டவர்களின் பட்டியல்தான் இன்று உலக சரித்திரத்திலேயே ஏராளம்!! 3000 ஆண்டுகளின் வரலாற்று நிகழ்ச்சிகளை முன்வைத்துப் பார்க்கின்ற நேரத்திலே இத்தகைய சுதந்திரச் சிற்பிகளின் 'உயிரோவியங்கள்' எல்லாம் நம் மனக்கண் முன்னே தோன்றி மறையாமற்போகாது!

புகழ் வாய்ந்த கிரேக்க நாடு கி. மு. 480ல், பாரசீக மாவீரன் ஜெர்ஸெக்ஸ் (Xerxes) என்பவனால் சுற்றி வளைக்கப்பட்டபோது, மற்றைய கிரேக்க மண்டலங்களெல்லாம், அவனுக்குப் பணிந்தும், அடிமைப்பட்டும், விட்ட நேரத்திலே, ஆத்தென்னஸ்—(Athenes) ஸ்பார்ட்டா—(Sparta) என்ற இருவேறு நகரங்கள் மட்டும், தங்களுக்குள்ளிருந்த பகைமையையும் மறந்து, அவனை எதிர்த்துப் போரிட்டது—லியோனிதாஸ் (Leonidas) என்ற ஸ்பார்டாவின் இளம் வீரனின் தலைமையின் கீழ்! தர்மாபோலே (Thermopylae) என்ற மலைக் கணவாய்களிலே, தங்களுயிரும், உடலும், துளைக்கப்படுகின்ற வரையிலே, லியோனிதாஸும், அவனுடனிருந்த 300 கடமை வீரர்களும், போராடி, இறுதியில் வீழ்ந்த பிறகேதான், பாரசீகர்கள், அவர்களின் பிணக்காட்டை மிதித்து, கிரேக்க எல்லைக்குள் புகுந்தனராம்!! இந்த நெஞ்சுறுக்கும் சம்பவத்தால், இன்றும் பெருமிதம் கொள்ளுகிறது கிரேக்கம்! 'தர்மாபோலே அவர்களின் இதய ஓவியம்! லியோனிதாஸும் அவன் கடமை வீரர்களும், அந்த அழித்தெழுத முடியாத ஓவியத்தின், இரு வேறு ஒளி விழிகள்!! இன்றும் வீரத்தைக் குறிக்க மேலை நாட்டார், சுட்டிக் காட்டும் ஆதிநிலைக் களமும், அழியாத பெரு வீரனும், முறையே தர்மாபோலேவும், லியோனிதாஸும் தான்!!

அதைப்போல தமிழகத்திற்கும், அழியாததோர் சிறப்பு இருப்பதை நம்மாலே மறக்க முடியவில்லை! தமிழகம்—தென்னாட்டின் கிரேக்கம்! பாஞ்சாலங் குறிச்சி அதன் உயர்வான 'தர்மாபோலே'! வீரபாண்டியன் கட்டபொம்மு அதன் புனிதமான லியோனிதாஸ்!! வாணிகம் புரிய வந்த வெள்ளையர்கள்தான், அதனைச் சுற்றி வளைத்த பாரசீகர்கள்! வீரபாண்டியனும், அவனின் திண்தோள் வீரர்களும், மாண்டு மடிந்த தமிழ் மண்தான், அன்று அங்கு அந்த முன்னூற்றுவர்கள் பொன்றி அழிந்த சாக்காடு!!

ஒப்பிட்டுக் காட்ட எழுந்த சம்பவமல்ல, மேலே காணுவது! கற்பனையுமல்ல!! வீரத்தை நெஞ்சத்திலே தேக்கி வைத்துக்கொண்டிருந்தவனின் புனிதமா காதை இது! அத்தனையும் உண்மை! அவ்வளவும் வரலாறு! தமிழகத்தின் சுதந்திரப் பொன்னேட்டின், இறுதிப் பதிப்பின், முதல் முழக்கம்!! வீறு கொண்டெழுந்து, உடல் சிலிர்க்கப் போரிட்டு, தமிழெல்லை காத்த சிறப்பு வாய்ந்த மகிபனை நாம் நினைத்துக் கொண்டதன் எதிரொலியிது!!

வீரபாண்டியன் கட்டபொம்மு தமிழகத்தின் செல்வ மகன்! அன்புறவால், அதற்குக் கிடைத்த ஒரே வளர்ப்புப் பிள்ளை!! அருமையான தமிழுள்ளத்தான்! தணியாத வீரமும், குன்றாத வலிமையும் கொண்ட சிங்க நெஞ்சினன்! மாற்றானின், கரைபடிந்த கால்கள் தமிழகத்தின் பொன் கொழிக்கும் எல்லையிலே படக் கூடாதென்று வீரம்பேசி, உயிரைப் பணயம் வைத்து இறுதியில் அதற்காகவே வீழ்ந்து மடிந்த மாவீரன்! கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும், தமிழ் உதிரத்தே உதித்தெழுந்தது, என்ற சிறப்பான சொல்லோவியத்திற்கு அணியாத இலக்கிய மாக விளங்கிய முதல் வாரிசு-கட்டபொம்மன்!! ஆந்திரம் நமக்குத் தந்த 47 தமிழுள்ளம் கொண்ட குறுநில மன்னர்களின் கடைசி மகிபன்—வீரபாண்டியக் கட்ட பொம்மு!

பதினாறும் நூற்றாண்டின் இறுதியில் விஜய நகர சாம்ராஜ்யத்தின் நேராட்சியின் கீழினின்றும் தம்மை விடுவித்துக்கொண்ட குறுநில மன்னர்கள் பாளையக் காரர்களென்றானார்கள்! பாண்டிய மண்டலத்திலே பாளையங்கள் 72. அதிலே 30 திருநெல்வேலி மண்டலத் தில்! 42 மதுரை மாவட்டத்தில்! பாஞ்சாலங் குறிச்சி திருநெல்வேலி மண்டலத்தின் கீழ் பகுதிப் பாளையங் களின் தலைமை நகர்! அதனின்றும்தான் வீரபாண்டியக் கட்டபொம்மு, கீழ்பகுதிப் பாளையங்களனைத்தையும் கண்காணித்து வந்தான்! கி. பி. 1101ல் வீரபாண்டிய புரத்தை ஆண்ட ஜெகவீர பாண்டியனின் அன்பளிப் பால், ஆதி கட்டபொம்முவால் அமைக்கப்பட்ட பாஞ் சாலங் குறிச்சி, கி. பி. 1799ல் வீரபாண்டியக் கட்ட பொம்முவால், முடிவுறும் வரை 47 தமிழுள்ளம் கொண்ட நாயக்க குறுநில மன்னர்களால், ஆளப் பட்டிருக்கிறது.

வீரபாண்டியக் கட்டபொம்மன் காலம் கி.பி. 1760 முதல் 1799 வரை. இதில் அவன் அரசாண்ட காலம் 9 ஆண்டுகள்தான். இந்த ஒன்பதாண்டு ஆட்சிக் காலத் திலே, அவன் சாதித்த சாதனைகளும், பெற்ற வெற்றி களும், அடைந்த பெரும் புகழும், அவனின் முன்னோர் கள் எவரும் சாதித்ததைவிட மிக, மிக மகத்தானது— உயர்வானது—அழித்தெழுத முடியாதது!!

கட்டபொம்மு பிறந்த நேரத்திலே—கி. பி. 1760ல் தமிழகத்திலே, பெரும்புயலொன்று வீசிக்கொண்டிருந் தது! அகில உலகத்தையும், கட்டியாளும் பயங்கரப் பேராசைகொண்டு, உலகெங்கணும் மோப்பம் பிடித் தலைந்த வெள்ளையர் கூட்டம், வணிகப் போர்வையிலே இவ்விந்திய உபகண்டத்திலே நுழைந்து; சோப்பையும் சீப்பையும், வெளியிலே அடுக்கிவைத்துவிட்டு; அந்தத் திரை மறைவிலே, இந்தத் தீஞ்சுவைத் தென்னாட்டை அழித்தொழிக்க, பீரங்கிப் படை வரிசைகளைத் தயாரித் துக் கொண்டிருந்த நேரமது! உரிமையும், செல்வம் கொழிக்கும் பெருமையும், இருந்தால்மட்டும் போதாது; இந்தத் தமிழ் தரணியாளும் புனித வாய்ப்பும், மணி முடியும் கூட, தமக்கே இருந்தாக வேண்டுமென்று, அந்த ஏகாதிபத்தியம், சதித் திட்டம் தயாரித்துக் கொண்டிருந்த நேரம்! பிரிட்டானிய கொலு மண்டபத் திற்கு தமிழகத்தின் இறை மட்டுமல்ல; கிழித்தெறியப் பட்டு, சின்னாபின்னப்படுத்தப்பட்ட, அதன் கொடியும் கூட 'அடிமை வரிசையிலே' நின்று அழகு செய்தாக வேண்டுமென்று அந்த புண்யாத்மாக்கள் (!) துடிதுடித் துக்கொண்டிருந்த நேரம்! அந்த நேரத்திலேதான் கட்ட பொம்மு பிறந்தான்; வளர்ந்தான்; வளர்க்கப் பட்டான்!! பாஞ்சாலங் குறிச்சி மகிழ்வுக் கடலிலே மூழ்க, மதுரையம்பதியார் வாழ்த்துக்கூற, ஈழத்தார் பரிசில்கள் அனுப்ப, பாளையத்தார் விழாக்கொண்டாட, தங்கத் தொட்டிலிலே, 'தமிழ்ப்பண்' ஓசையிலே, வளர்க்கப்பட்டான் கட்டபொம்மு!

ஆனால், அதே நேரத்திலே, வெள்ளையனும் வளர்ந் தான்! வேலி ஓரத்திலே ஒதுங்க வந்த ஓநாய், நாழியான பிறகு, வேலியைத் துளைத்து, உள்ளே நுழைவதைப் போல வணிகப்போர்வையிலே உள்ளே வந்தவன், அரண் அமைத்து; செல்வம் கொழித்து; கொழித்த செல் வத்தை, இங்கு தேய்ந்துபோன பெருமையுடன், அர சாண்டு கொண்டிருந்த மன்னர் கூட்டத்திற்கே கடனாகக் கொடுத்து; அதற்குப் பதில் மக்களிடம் இறை வசூலிக்கும் அருமையான வாய்ப்பைப் பெருமளவுக்கு அவனும் வளர்ந்து விட்டான்! வளர்ந்து விட்டான் என்பதுகூட அவ்வளவு பொருத்தமல்ல! வளர்க்கப் பட்டுவிட்டான் என்பதுதான் வெகுவான பொருத்தம்!! உள் நாட்டுச் சிக்கலிலே, மனம் வெதும்பி, பொறாமைத் தீயால் உளம் கருகி, ஒருவரையொருவர் கவிழ்க்கப் புகுந்துகொண்டிருந்த நேரத்திலே, பொக்கிஷம் வரண்டுவிட்டால் அதை நிரப்புவது எவ்வளவு புனித காரியம்! அதைத்தான், செய்தான் வெள்ளையன்! ஓரிடத்திலே மட்டுமல்ல; இத் துணைக் கண்டம் பூரா விலும்! ஆகையால்தான் வளர்க்கப்பட்டான்!!

'படையில்லையா?—இந்தா!'—'பணமா?—பிடித்துக்கொள்!—'போர் நுணுக்கம் வேண்டுமா?—இப்படிக் காதைக் கொண்டு வா!' என்ற இந்த அடுத்துக் கெடுக்கும் நிலைதான் அவனை, வெகுவாக வளர்த்து விட்டது!! உயர்த்திவிட்டது!!

இந்த சூழ்நிலையால் கவரப்பட்டவர்கள்தான், இங்கு அரசாண்ட நவாப்புகள். ஆற்காட்டு நவாப்புக்கு அப்போது, அகில தமிழகமும் அடக்கம்! அரசாளும் வெறி அவனைப் பண நோய்க்கு ஆளாக்கிற்று! வெள்ளையன் அந்த நோய் தீர்க்கும் சமய சஞ்சீவியானான்!! நவாப்பின் பொக்கிஷத்தை நிரப்பினான்! பிரதிபலன் தான் தெரியுமே—அதுதான் வரி வசூலிக்கும் உரிமை!—தமிழகத்தின் பகுதிகளிலே!

இப்படித்தான் வரி வசூலிக்கக் கிளம்பி விட்டான் வெள்ளையன்! சென்னையிலே அமைக்கப்பட்ட பண்ட மாற்றுக் கோட்டை, இப்போது பதவி மாற்றும் கூடாரமாகி விட்டது! நாடெல்லாம் வரி வசூலித்தான். பாளையங்களெல்லாம் வரி கேட்டான். பாளையக்காரர்களுக்கெல்லாம், ஓலை போக்கினான்! இதற்கு நவாப்பு ஆதரவு வேறு!! அவனுக்குத்தான் வெள்ளையன் முன் பணம் கட்டி விட்டானே—அதனால்தான்!! நிலங்களை அளந்தான்; வரிகளை நிர்ணயித்தான்! கொடுக்காதவரிடம் வேதனையைத் தூவினான்! பயங்கரத்தைத் தெளித்தான்! பீரங்கியைக் காட்டினான்!! இது கண்டு நாடே அஞ்சியது! குறுநிலமன்னர்கள் பயந்தனர்—! ஆனால் சிலர் வழக்கம்போல பல்லிளிக்கத்தான் செய்தனர்! இந்தச் 'சிலரால்'தான் 'பலர்' பலம் குன்றினர்—நமக்கேன் இந்தத் தொல்லை யென்று பணியவும் செய்தனர்! ஆம்! பாளையத்தார்களனைவருமே பணிந்தனர்! இந்த நேரத்திலேதான் கட்டபொம்மு பதவியேற்றான். வீரம் அரியணை யேறியது! சிங்கம் நாடாளக் கிளம்பியது! வரி இந்த அரிமாவிடமும், கேட்கப்பட்டது! ஆனால், வரி கேட்ட நரிக்கு, சிங்கத்தின் கர்ஜனைதான் பதிலாகக் கிடைத்தது! ஆம்! கட்டபொம்மு சீறியெழுந்தான். வரி கேட்டவரின் மேல்!

"யாருக்கு யார் வரி கொடுப்பது?—எவருக்கு எவர் இறை செலுத்துவது?—கரிகாலனும், ராஜராஜனும் எவருக்கு வரி செலுத்தினார்கள்? நெடுஞ்செழியனும், குலோத்துங்கனும், எவருக்குக் கப்பங்கட்டினார்கள்?—அத்தகைய மாவீரர்களைப் பெற்றெடுத்த தமிழ் மண் என்னை வளர்த்திருக்கிறது! கவனமிருக்கட்டும்! மாற்றான் இந்த அழகு எல்லை மிதித்து வரி கேட்டால், கொடுக்கச் சம்மதிப்பவன் தமிழ் மகனாக இருக்கமாட்டான்! இறை செலுத்துவதும் பாஞ்சாலங்குறிச்சியாக இருக்காது!!—பாஞ்சாலங்குறிச்சிக்கு முள் வேலியும், நல்லரணும், ஒளிறு வாளும் உண்டு! களிறு உண்டு! காளைகள் உண்டு! களம் உண்டு!! பதில் அங்குதான்! அங்குதான்!!"

என்று கர்ஜனை புரிந்தான் கட்டபொம்மு!

வெள்ளையனே வெகுண்டான்—முதலில்! பிறகு பயந்தான்; ஆயாசப்பட்டான்! எனவே சமாதானம் விழைந்தான்—இதன் எதிரொலியென கம்பெனியாரின் தளபதி மாக்ஸ்வெல் (Max Well) என்பவன், பாளையங்கோட்டையிலே கூடாரமமைத்திருந்தான்—வீரபாண்டியன் தன்னை வந்து கண்டு சமரஸம் பேசுவான் என்ற சபல புத்தியுடன்! ஆனால், வந்தது பாண்டியனல்ல—எட்டையப்பன்!! பாஞ்சாலங்குறிச்சியை எதிர்பார்த்தான்—ஆனால் எட்டையபுரம்தான் ஓடோடியும் வந்தது! கிரேக்க மாவீரன் அலெக்ஸாண்டரைச் சந்திக்க, போரஸ் வருவான் என்று எண்ணியிருந்த நேரத்தில் அம்பிபோனனே சரணடைய, அதைப்போல! எட்டையப்பனே அம்பியானான், சரணடைந்தான்! மாக்ஸ்வெல் மகிழ்ந்தான். பரி பிடிக்கப்போன இடத்திலே, தந்திர நரியாகிலும் கிடைத்ததே—அதுபோதும்!! அதை வைத்துக்கொண்டே பரியைப் பிடிக்க, சதி செய்தான் மாக்ஸ்வெல்! தமது கைதேர்ந்த பரம்பரைப் பண்பினால், எட்டையப்பனை பாண்டியன்மேல் ஏவி விடத் தீர்மானித்தான்! பாண்டியனின் இரு ஊர்களை, எட்டையப்பனுக்கு 'துரோகப் பரிசாக' அளித்தான் மாக்ஸ்வெல்! அது கண்டு பாண்டியன் இவன் மேல் சீறியெழட்டுமென்று! ஆனால், கட்டபொம்மு ஏமாந்து விடவில்லை. எட்டையப்பனைப்பற்றி அவனுக்கு நிறைய தெரியும்! என்றாவது ஒருநாள் சொல்லியனுப்பினாலே போதும்—நடுநடுங்கிப்போவான் இந்த எட்டையனென்று அவனுக்குத் தெரியும்! எனவேதான் பொங்கியெழவில்லை கட்டபொம்மு! இப்படியே இரு மூன்று ஆண்டுகள் சிந்தனையினூடே கழிந்தோடின!!

இதற்குள் 'ஆலன்' என்ற மற்றொரு தளபதி 1798ன் துவக்கத்தில் மீண்டும் பூசலுக்குப் புது மெருகிடக் கிளம்பி வந்தான், சமாதானக் கொடியுடன்! பொம்முவைச் சந்தித்து இறைசெலுத்தக் கேட்டான்; பொம்முவோ "இறையென்ற பேரால், எதையும் செய்ய முடியாது—பாஞ்சாலங் குறிச்சி, தமக்கிருக்கும் வரை, பரங்கியரின் ஏகபோகமிராசாக மட்டும் அது, என்றுமே ஆகாது" என்று அறுதியிட்டுச் சொல்லியனுப்பி விட்

டான்! ஆலன் துரையோ, தோற்ற அவமானத்தைச் சகித்துக்கொண்டே வெளிக்கிளம்பி வந்தான். கம்பெனியின் தலைமை நிலையத்திற் கறிவித்து விட்டான், நிகழ்ந்த பேச்சுவார்த்தைகளின் சாரத்தை! இது முதல் கட்டபொம்மு, கம்பெனியின் அமைதிக்கு பயங்கர எரிமலையாகி விட்டான்! கம்பெனிக்கு பாஞ்சாலங் குறிச்சியென்றாலே ஒரு தலைவலி! எனவே சரியான ஆளொருவன் தென்னாடு போகவேண்டும் வரி வசூலிக்க, என்று தீர்மானித்தனர். கம்பெனியார்! இதன் பயனாய் ஜாக்ஸன் (Jackson) என்பான் தென்னாட்டுக் கலெக்டரானான்!

பாளையங்கோட்டைக்குவந்து, வழக்கப்படி முகாமுமமைத்துக் கொண்டான் ஜாக்ஸன்! இந்நிகழ்ச்சி 1798, பிப்ரவரியில்! ஜாக்ஸனை அனைவரும் வந்து கண்டனர்! எட்டையப்பன் வழக்கம்போல முந்திக் கொண்டான்! பழி கூறியோரும், பகைவளர்த்தோரும் பாஞ்சாலங் குறிச்சியின் வீரங்கண்டு உள்ளம் வெதும்பியோரும், ஜாக்ஸனிடம் கைகுலுக்கினர்! ஜாக்ஸனே துரோகக் கும்பலுக்கு கைலாகு கொடுத்து வரவேற்றான்! ஆனால், கட்டபொம்முதான் தனித்திருந்தான் இமயம்போல! ஜாக்ஸனை சந்திக்கவில்லை! ஜாக்ஸனே வெகுண்டான்; ஏடெடுத்தான்; எழுதினான்; எழுதினான்; இருகடிதங்களெழுதினான்!! ஆனால், கட்டபொம்முவிடமிருந்து பதில்தான் வரவில்லை!! எப்படி வரும்? ஏன் வரும்? எவனோ வேற்று நாடு 'எடுபிடி' 'கலெக்டரெ'ன்று பெயர் வைத்துக்கொண்டு, மன்னரும் நடுங்கும் அடலேறுவை, 'வந்து நீ, சந்திப்பாய்!' என்று கட்டளையிட்டால், எப்படி வந்து விடுவான்? எனவேதான் பொம்மு போகவில்லை!!

ஜாக்ஸன், கம்பெனியின் தலைமை நிலையத்திற்கு ஓலை போக்கினான், இது விஷயமாக! தலைமை நிலையமோ பொறுத்திருந்து, நிலைதெளிந்து ஓர் முடிவுக்கு வந்தது! கம்பெனியின் பேரால்—அதன் முத்திரை பொறித்த ஆணையால்—கட்ட பொம்முவை செப்டெம்பர் 5-ந் தேதிக்குள் ஜாக்ஸனை சந்தித்துப் பேசி ஒரு முடிவு காணுமாறு, கட்டபொம்முவுக்கு அறிவிக்கும் உத்திரவு ஒன்றையும், கம்பெனித் தலைமை நிலையம் (Revenue Board) 18-7-1798-ல் ஜாக்ஸனுக்கு அனுப்பியிருந்தது! இந்த உத்திரவின் நகல் கட்டபொம்முவிடம் சேர்ப்பிக்கப்பட்டது! பொம்முவும், தம் அருமைத் தம்பி ஊமைத்துரை, அன்பு அமைச்சர் தானபதி ஆகியோருடன் கலந்தாலோசித்து, மறுமாதமே ஜாக்ஸனைச் சந்திக்கக் கிளம்பலானான்!!

பாஞ்சாலங் குறிச்சியிலே அன்று—24-8-1798-ல் உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டு கொண்டிருந்தது! அதன் ராஜவீதிகளை படை வரிசைகளின் நடையோசை, பொலிவும், ஒலியுமுள்ளதாக ஆக்கிக்கொண்டிருந்தது! 4000 திண்தோள் வீரர்கள் பின்னால் ஊர்ந்து வர, மன்னன் பொம்முவும், மந்திரி தானபதியும், இளவல்கள் ஊமைத் துரையும், துரை சிங்கமும், முன்னாலே போய்க் கொண்டிருந்தனர்! சென்ற பெரும் படை, திருநெல்வேலியிலே ஜாக்ஸனின் முகாமருகே நின்றது கம்பீரமாக!

ஆனால், ஜாக்ஸன்தான் அங்கில்லை! ஓடிவிட்டான் குற்றாலத்திற்கு! 4000 பேர்களுடன், ஆவேசத்தோடு திரண்டுவரும், வீரபாண்டியனின் படைகளை யார்தான் சந்திப்பர், நேரிடையாக!! எனவேதான் பின்வாங்கினான் ஜாக்ஸன்! தான் தக்க படை பலங்கொள்ளும் வரை சதியால், பொம்முவைத் தன் பின்னே தொடர்ந்து வரச்செய்து, அவனயரும்போது, அவனை வீழ்த்த சதித் திட்டம் தீட்டிக்கொண்டான் ஜாக்ஸன்! ஆனால் பொம்முவோ குற்றாலத்திற்கும் பின் தொடர்ந்தான்! ஜாக்ஸனே அங்கிருந்து சொக்கம்பட்டி போனான்! பாண்டியனே விடவில்லை. பின்தொடர்ந்தான்! ஜாக்ஸனே மீண்டும் ஓடினான்! சொக்கம்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகிரி போன்ற ஊர்களிலே ஓடி ஒளிந்து; இறுதியில் தன் எண்ணத்தை நிறைவேற்ற, ராமநாதபுரத்தை அடைந்து அங்குள்ள சேதுபதி மன்னன் மாளிகையிலே தங்கினான் ஜாக்ஸன், தக்க படை பாதுகாப்புகளுடன்!!

வீரபாண்டியனும் உடன் தொடர்ந்தான்; மாளிகையைச் சுற்றி வளைத்துக்கொண்டான்! பேட்டி விழைந்தான்! ஜாக்ஸனும் சம்மதித்தான்! பேட்டி கரண நிபந்தனை விதித்தான்! படை நீக்கித் தனித்து வரவேண்டுமென்றான்! பொம்முவும் சரியென்றான்; எச்சரிக்கையுடன்தான்!! ஜாக்ஸனின் சதித் திட்டத்தை முன்னாளே ஒருவாறாக கட்டபொம்மன் புரிந்து கொண்டான், நண்பன் கோபாலைய்யா என்பவனின் மூலமாக!!

மறுநாள் (10-9-1798) காலை 10-மணி யளவில், ஜாக்ஸனைக் காண, மன்னன் கட்டபொம்மு கம்பீரமாக மாளிகைக்குள் வழி நடந்தான்! அவனொருவன்தான் போனான் உள்ளே! ஜாக்ஸனே ஒரு தனிப் பெரும் வீரனைச் சந்திப்பதாக எண்ணாமல், மரியாதையுமில்லாமல், எதை எதையோ வெல்லாம் அடுக்கிக்கொண்டே போனான்!

'நீர் எம்மை வந்து சந்திக்காதது முதல் குற்றம்!'

'வரி செலுத்தாதது இரண்டாவது குற்றம்!'

'மற்றவரையும் வரி செலுத்தாமலிருக்கத் தூண்டியது மூன்றாவது குற்றம்!'

'நமது கடிதங்களை அலட்சியப்படுத்தியது நான்காவது குற்றம்!'

இப்படித்தான் குற்றப் பத்திரிக்கையை வாசித்தான் பொம்முவின்மேல்! பொம்முவோ, இதை யெல்லாம், வேடிக்கையாக ரசித்துக் கொண்டிருந்தானே தவிர ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை!

ஆனால் அந்த வெள்ளையன்தான் மேலும், மேலும், துள்ளிக்கொண்டேபோனான்! 'இறை செலுத்தாவிடில் பாளையம் பறிபோகுமென்று' எச்சரித்தான்!! இதைக் கேட்டதும் தான் பொங்கியெழுந்தான் வீரபாண்டியன்!

'பாளையம் பறிபோகும்!!'

இதைப் பரங்கியா கூறுவது? என்றுதான் சினந்தெழுந்தான் பொம்மு! ஜாக்ஸனோ, பாண்டியன் தனித்திருக்கிறானே, என்று மேலும் தூபமிட்டுப் பார்த்தான்!

'வரி செலுத்தாவிடில், நீர் இங்கிருந்து போகமுடியாது'! என்றான். இந்தச் சொல் கேட்டுத்தான் வேல் தைத்த வேங்கையெனத் துடித்தெழுந்தான் பொம்மு! ஆனால், இதே நேரத்தில்தான், மறைந்திருந்த வெள்ளையனின் 'எடு பிடிகள்' மன்னன்மேல் பாய்ந்தனர்! சிறையிடத் தாவினர் பொம்முவை? ஆனால் வீரபாண்டியனிடமா அது செல்லும்? பாண்டியனோ விலகிப்பாய்ந்து வாளை உருவிக்கொண்டான்! சமர்மூண்டது சந்திப்பின் முனையிலே! வாள் பேசியது! 'தென்னகம் வேண்டுமா? இல்லை; தமிழகம் போதுமா?' என்று சொல்லிக் கொண்டே கொடுத்தான் பொம்மு, கொடுக்க வேண்டியதை யெல்லாம்!! வெள்ளையனும் வாங்கிக்கொண்டான்!! தமிழகம் வீசிய முதல் வாளல்லவா அது? அதிலும் வீரபாண்டியன் வீசிய கூர்வாளல்லவா? இவ்விந்திய துணைக்கண்டத்திலேயே சுதந்திரப் பெரு முழக்கத்தின் முதல் தந்தையல்லவா வீரபாண்டியக் கட்டபொம்மு? எதிரிலே கண்டவரை—அதிலும் தன்னை அவமதித்தவரை சும்மாவா விட்டு விடுவான்? தனித்திருந்தாலென்ன? அல்லது பெருஞ் சேனைதான் தன்னைச் சூழ்ந்தெதிர்த்தாலென்ன? எல்லாம் ஒன்றுதான் வீரனுக்கு! எனவேதான் தனித்திருந்த போதும் பலரை வீழ்த்தினான் கட்ட பொம்மு! கம்பெனியின் தளபதி கிளார்க் என்பானும் துள்ளி வீழ்ந்தான் இவனை எதிர்த்தபோது! இதற்குள்ளே வெளியில் காத்திருந்த படைகள் மாளிகையைத் துளைத்தன! வெள்ளையன் படைகளும் மோதி யெழுந்தன! வேட்டுச் சத்தம் ஓர் புறமும்—வாள் வீசும் பேரொலி மற்றோர் புறமும்-கூக்குரல் எத்திக்கிலும் கிளம்பலாயிற்று! முதல் முழக்கம்—வெற்றி முழக்கமாகியது!! கட்டபொம்முவும், அவன் வீரர் திலகங்களும், நிலைமையைச் சமாளித்தது மட்டுமல்ல; எதிரிகளை திசை காணாது மிரண்டோடவும் செய்தனர்! வெற்றி கீதம் கிளப்பினர்—அணி வகுத்தனர் பாஞ்சாலங் குறிச்சி நோக்கி! வழி நடந்தனர்!! ஆனால், ஒன்று!!? அன்பு மந்திரி தானாபதியைக் காணவில்லையங்கு! துரதிஷ்டவசமாக அவர் சிறைபிடிக்கப்பட்டு விட்டார்! பொம்முவோ துடித்தான் சேதி கேட்டு! 'படைகளைத் திருப்பு!' என்றான். தம்பி, ஊமைத்துரையோ தடுத்து நிறுத்தி சமாதானம் சொன்னான்! 'தானாபதி இறந்து விட்டிருந்தால்...? செல்வது வீணாகமட்டுமல்ல; வினையாகவும் முடியுமென்று எடுத்துரைத்தான்! 'உயிருடனிருந்தால் மீட்டுக்கொள்ளலா' மென்றான். பொம்முவும், பாஞ்சாலங் குறிச்சி திரும்பிவிட்டான்.

இப்படி வரி கேட்ட ஜாக்ஸனுக்கு வாள்தான் பரிசாகக் கிடைத்தது! ஜாக்ஸனோ வெதும்பினான். சிதைக்கப்பட்ட பெருமையோடு, நடந்ததைத் திரித்துக் கூறி, கம்பெனிக்கு ஒரு கடித மெழுதினான். படை பலம் கேட்டான் கட்டபொம்முவைத் தொலைக்க!! பொம்முவும், டேவிஸன் என்னும் தனது ஆங்கில நண்பர் மூலம், நடந்ததை நடந்தவாறே கம்பெனிக்கு எழுதும்படி கேட்டுக்கொண்டான்! இரு கடிதங்களும் கம்பெனியில் படித்தாலோசிக்கப்பட்டன. சிறை பிடிக்கப்பட்ட தானாபதியும், ஜாக்ஸனும், தனித்தனியே விசாரிக்கப்பட்டனர்! இதன் எதிரொலியென தானாபதி விடுதலை செய்யப்பட்டார். ஜாக்ஸனோ திருப்பி அழைக்கப்பட்டான்!

இப்படி முதல் முழக்கமும், முடிவும், ஒருவாறு நிர்ணயிக்கப்பட்டது. இனி அடுத்த கட்டம்!! தானாபதி சிறை மீண்டபோது கட்டபொம்முவுடன், ஒரு நல்லுறவு கோஷ்டியாக திருச்சி வந்து, கம்பெனி அதிபர்களைக் கண்டு செல்வதாக வாக்களித்திருந்தார். அதன்படியே பொம்முவும், திருச்சியில் அதிபர்களைச் சந்தித்து, இரு சாராருக்குமிடையேயுள்ள மனக் கசப்பு மறைந்து நல்லுறவு வளரப் பாடுபடுவதாக அறிவித்துவிட்டு; தக்க பரிசில்கள் பெற்று மீண்டும் வந்தான்!

பரிசும் பதவியும், பட்டமும் உயர்வும், அளித்த
தால், தன்வயப்பட்டு 'விட்டான் பொம்மு' என்று
வெள்ளையர் இறுமாந்தனர்! அப்போது கலெக்டராக
வந்த 'லூஷிங்டன்' இந்த இறுமாப்பைக் கடிதமாக்கி
னுன்! மார்ச்சு 16 (1799)ல் வீரபாண்டியனுக்குக் கடித
மெழுதினுன். இராமநாதபுரத்தில் பிணமாக்கப்பட்ட
வெள்ளையன் கிளார்க்கின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு
கொடுக்கும்படி பணித்திருந்தான் கடிதத்தில்! அதோடு
பழையபடி வரியுடன் வருமாறும் கட்டளை யிட்டிருந்
தான்! இதுதான் இரண்டாவது கட்டம்!!

கடிதம் கண்ட பொம்மு 'நல்லுறவு ஒப்பந்தத்
தால்' பிணைக்கப்பட்டிருக்கிறே மென்ற ஒரே காரணத்
தால், நயமாகப் பதிலுறுத்தான்! பஞ்சம் — மழை
யின்மை, ஆகியவைகளால், தான் எதையும் தற்போது
செய்வதற்கில்லை யென்றும்; பெயரளவில் தவணை கேட்
டும் கடித மெழுதி யிருந்தான்! லூஷிங்டனே பதில்
கண்டதும், ஆத்திரங்கொண்டான்; தவணை கேட்டது
சதியின் விளைவு என்று எண்ணினுன்!

இதற்கிடையில் ஒரு தவருன சம்பவமொன்றும்
நிகழ்ந்துவிட்டது! அமைச்சர் தானுபதி, நெல் வாங்கப்
புறப்பட்டார், தன் மகன் திருமணத்திற்காக! நெற்
குவியல்களெல்லாம், வெள்ளையரால் வாங்கப்பட்டு,
பதுக்கப்பட்டிருந்த நேரமது! எனவே நெல் கிடைக்
காது, நேர்மையான விலையில்—என்று தெரியவே,
வெள்ளையர் களஞ்சியத்தைக் கொள்ளையிடச் செய்தார்
தானுபதி! இந்தத் தவறுதான் பாஞ்சாலங் குறிச்சியின்
எதிர்காலத்தையே மாற்றிவிட்டது! அதோடு கட்ட
பொம்மூவை களத்திற்கே கொண்டுவந்து நிறுத்தி
விட்டது!! இதன் மத்தியில் இராமநாதபுரத்திலே
ஒரு புரட்சி நடந்தது. அதில் இராமநாதபுரச்
சேதுபதி இராமலிங்கத் தேவர் சிறை பிடிக்கப்பட்டார்.
இதற்குக் காரணம் வீரபாண்டியன்தான் என்று
எண்ணியது கம்பெனி! எனவே மீண்டும் ஓலை போக்
கினுன் லூஷிங்டன் கட்டபொம்முவுக்கு! வருமாறு
பணித்தான்!! பொம்முவோ போகவில்லை!! மாருக
சிவகங்கை போனுன், அங்கு நடந்த புரட்சிக்கு உதவ!
இது எரியும் நெருப்பில் எண்ணைக் குடங்களை உடைத்து
வார்த்ததைப்போலாகி விட்டது! இனியும் தாமதம்
செய்தால் கம்பெனி வீழ்ந்து படுமென்று. உணர்ந்தான்
லூஷிங்டன். எனவே சென்னை கவர்னருக்கு—கிளைவின்
மகன், எட்வர்ட் கிளைவ்—என்பானுக்குக் கடிதம் எழுதி
னுன், படை அனுப்புமாறு! அந்த கவர்னரும், பேனர்
மேன் (Banerman) என்பானை முழு அதிகாரமும், படை
பலமும் கொடுத்தனுப்பினுன்! இதுதான் அடுத்த
கட்டம்!

இதன் விளைவாகப் பேனர்மேனின் படைகள் பாஞ்
சாலங் குறிச்சி நோக்கிப் புறப்பட்டது! இடையில்
பேனர்மேனைச் சந்தித்துப் பேச நினைத்த முயற்சியும்
முறிந்துவிட்டது! எனவே, இப்போது இருவருக்கு
மிடையே தெரிந்தது போர்க்களந்தான்!! பேனர்மேன்
இரவிலே தன் படைகளைக் கடத்தி வந்தான். அதுதான்
அவனுக்கு அந்த நேரத்திலே பட்ட போர்முறைத்
தந்திரம் போலும்! வீரபாண்டியனும் தயாராகிவிட்
டான், நல்லிரவில்!! வெள்ளையன் கோட்டையை
வளைத்தான்! பாண்டியனே அரணுக்குள் சித்தமானுன்!!
தானுபதியும் ஊமைத்துரையும், இருவேறு முனைகளிலே
நின்ருர்கள் கம்பீரமாக!!

தாக்குதல் ஆரம்பமாகப் போகும் நேரம்! தூது
விட்டனுப்பினுன் பேனர்மேன் - சரணடையச் சொன்
னுன்! பொம்முவோ சீறியெழுந்தான்!! போர்! போர்!
போரேதான் முடிவு என்ருன்! தாக்குதல் துவங்கியது!
பீரங்கிச் சத்தம் விண்ணைத் துளைத்தது! கடும்போர்!
கோரத்தாக்குதல்!-பிணக்குவியல்கள்-ரத்தம் வெள்ளம்
வேதனைக் கூக்குரல் - இதுதான் அங்கே நாம் கண்டது!
ஏழரை மணி நேரம் கடினத்தாக்குதல்—அதுவும் வெற்
றியை நிர்ணயிக்காத நிலையில்!! போர் நின்றது-பேனர்
மேன், பெரும்படை வேண்டினுன், பொம்முவைத்தோற்
கடிக்க! ஏன் வேண்டமாட்டான்? இவ்விந்திய
துணைக் கண்டத்திலேயே, முதன் முதல் வெள்ளைய
வெறியர்களை எதிர்த்து 7½ மணி நேரம் சமாளித்த
பெருவீரன் கட்டபொம்முவைத் தவிர யாரிருந்தார்கள்
அந்த நேரத்திலே? எனவேதான் அஞ்சி நடுங்கினர்!
படை வேண்டினர் வெள்ளையர்!! இதற்குள் பொம்மு
தன் சகாக்களுடன் கலந்தாலோசித்து, அகில தமிழகத்தி
லிருந்தும், படை திரட்டிப் போரிடலாம், பிறிதொரு
சமயம், என்ற தன் நம்பிக்கையுடன் கோட்டையை
விட்டு வெளியேறிவிட்டான்! உள்ளபடியே நம்பிய
தமிழ் நில மன்னர்கள் பிற்காலத்தில் அவனுக்கு ஆதரவு
காட்டாது தன்னையே காட்டிக்கொடுப்பார்கள் என்று
உணர்ந்திருந்தால்—இறுதி வரையில் கோட்டையின்
வாயில்களிலேயே போரிட்டு குருதி வெள்ளத்திலே
உயிர் விட்டிருப்பான் வீரபாண்டியன்! அகில தமிழ
கத்தையும், காத்தாக வேண்டுமென்று சபதம் பூண்
டிருந்த காரணத்தால், தப்பியோடினுன்! தமிழ் மன்
னர்களை நம்பவும் செய்தான்! தன்னினத்திலே கோடா
ரிக் காம்புகளும் இருக்கு மென்பதை அவன் அந்த
நேரத்திலே எண்ணிப் பார்க்கவில்லை. அதன் விளைவு
தான் வேதனையாக முடிந்தது!!

கட்ட பொம்மு இப்போது அகதியானுன்! அவன்
குடும்பம் வெள்ளையர் கையில் சிக்கி விட்டது. அவன்

கோட்டையும், கொத்தளங்களும் தகர்ந்து வீழ்ந்து, விதவைப்போலக் காட்சி யளித்தது! எங்கும் ஒற்றர்கள் சூழலாயினர்! வெள்ளையன் பக்கத்திலே எட்டையப்பன் பவனி வரலானான்! அவன் படைகள் பொம்முவைத்தேட முன்னோடியது. வெள்ளையரோ—விடுதலை வீரன் கட்ட பொம்முவைப், பிடித்துத் தருவோருக்குப் பரிசில்கள் மட்டுமல்ல; பாளையமாளும் உரிமையும் அளிப்பதாக பறைசாற்றி யிருந்தார்கள்! எனவே, இப்போது போட்டி அதிகரித்தது பொம்முவைப் பிடிக்க! எட்டையப்பன், கட்ட பொம்முவும் அவன் வீரர் திலகங்களும், கோலார்ப்பட்டி பாளையக்காரன் மாளிகையில் தங்கியிருப்பதாக சேதியறிந்து வெள்ளையர் படைகளுடன் விரைந்தானங்கு! மாளிகையில் தங்கியிருந்த வீரபாண்டியன் மீண்டும் கிளர்ந்தெழுந்தான் இவர்களைக் கண்டவுடன்! அங்கும் போரிட்டான்; நிலைமை மோசமாகவே தன் தம்பியருடன் புரவிகளிலே மீண்டும் தப்பிவிட்டான் பொம்மு! ஆனால் வழக்கப்படி அமைச்சர் தானாபதிதான் சிறையிடப்பட்டார்!

எனவே, பேனர்மேன் மகிழ்வு பொங்க, பாளையத்தார் முன்னிலையில், பகிரங்க விசாரணை நடத்தி, **தானாபதியையும்**, மற்றொரு அடலேறு **சௌந்திரபாண்டியனையும்** தூக்கிலிடவும் — தானாபதியின் தலையை மட்டும், பாஞ்சாலங்குறிச்சியின் வாயிலிலே ஈட்டி முனையிலே தொங்க விடப்பட! வேண்டுமெனவும், பணித்தான்! அங்ஙனமேயும் செய்து முடிக்கப்பட்டது. இந்த கோரசம்பவத்தால் தமிழகமே நடு நடுங்கியது! பாஞ்சாலங்குறிச்சி குமுறியது வேதனையால்! வெள்ளையனின் கொடுமைக்கு முதலிரண்டு பலிகளும் கொடுக்கப்பட்டாகிவிட்டது!

இந்த நேரத்திலே கட்ட பொம்முவோ புதுக்கோட்டைக்காடுகளிலே திரியலானான். புதுக்கோட்டை மன்னனிடம் அடைக்கலம் புகுந்தாகிலும் தமிழ் மண்ணைக் காக்கலாமென்று, எண்ணம் பூண்டிருந்தான் வீரபாண்டியன்! பேனர்மேனும் இது சேதியறிந்து அவனை எப்படியும் சிறைபிடித்தனுப்புமாறு சேதி யனுப்பியிருந்தான், புதுக்கோட்டை விஜயரகுநாதத் தொண்டைமானுக்கு—! தொண்டைமானோ, சிந்தையில் சதியைப் புதைத்து வைத்துக்கொண்டு, கட்ட பொம்முவைக் காடுகளிலேயிருந்து தேடிப்பிடித்து, நயமாகவே, தாம் அவனைக்காண விரும்புவதாக, நட்பின் முறைபேசி அழைத்து வருமாறு ஒற்றர்களுக்குப் பணித்தான்! ஒற்றர்களோ, அவர்களைத் தேடிப்பிடித்து சகல மரியாதைகளுடன் அழைத்து வந்தனர்! மன்னன் ரகுநாதனோ வீரபாண்டியனை உளமாரத் தழுவினான்!! 'வருக!—வருக!' வென்று வாழ்த்துக் கூறினான்! அளவளாவினான்; அன்பு பேசினான்! சகல வசதிகளையும் செய்து தந்தான்! கட்டபொம்முவும், தம்பி ஊமைத்துரையும்? ரகுநாதனை, "நொந்து கெட்ட நேரத்திலே, சிந்தை குளிர அழைத்தானே தொண்டைமான்! வாழ்க அந்த 'அருந்திறல்' என்று வாழ்த்துக்கூறிக்கொண்டே உள்ளே புகுந்தனர்!

பாவம்! அவர்களுக்கெங்கே தெரியப்போகிறது இந்த நரியினத்தானின் பண்பு! 'அநாகரீகத்தொண்டைமான், துரோக நினைப்பால், அழைத்துள்ளான் நம்மையெல்லாம்' என்பதை எங்ஙனம் அறிய முடியுமவர்கள், எனவேதான் விட்டில் பூச்சியானார்கள்!! விருந்துண்டு, மகிழ்ந்துறங்கும் நேரத்திலே, தொழுதுண்டு பணிசெய்யும் அந்த அடிமை யுள்ளம்கொண்ட தொண்டைமான், பேனர்மேனை அழைத்து வந்து விட்டான், சிறைபிடிக்க!! வீர பாண்டியனோ சுற்றி வளைக்கப்பட்டான் நிராயுதபாணியான நிலையில்!!

அவனின் அன்புக் கரங்களிலே—ஒளிறு வாள் அருஞ்சமர் முறுக்கி, களிறு எரிந்து பெயர்ந்த அருமைத் திருக்கரங்களிலே—விலங்கிட்டனர் வெள்ளையர்!! வாரியிறைத்த கரங்கள் தமிழகம் காத்த கரங்கள்-தீஞ்சுவை நாட்டின் பூம்பொழில் எல்லையை, இதய ரேகையாக வரைந்து வைத்துக் கொண்டிருந்தோனின் புனித பொற்கரங்கள்—அந்தக் கரங்களுக்குத்தான் விலங்கிட்டனர் வெறியர்கள்!! ஆம்! விலங்குதான்!! தொண்டைமான் அளித்த அன்புப் பரிசில்—அந்த விலங்கு! நயமாக அழைத்து, வினயமாகப் பேசி, சோகச் சுரங்கத்துக்குள்ளே தள்ளி மூடி விட்டோனின் ஞாபகச் சின்னம்—அந்த விலங்கு! நம்பி வந்தவருக்கு வனவிலங்கும் கொடுக்கத் துணியாத இரும்பு விலங்குதான், புதுக்கோட்டையான் தந்த—அந்த விலங்கு!!

கழுத்தறுத்த தொண்டைமான், ஓடி ஒளிந்துக் கொண்டான்—வீரபாண்டியனின் முகத்திலே விழிக்காமல்! எப்படி விழிப்பான், கொல்லும், மனச்சாட்சியும், கொப்பளிக்கும் கண்ணீரும், அவனைச் சுட்டெரித்து விடாதா எதிரிலிருந்தால்?, ஆனால், வீரபாண்டியனோ தொண்டைமானைத்தான் தேடினான்; விடை பெற! நன்றி(!) செலுத்த!! இமயந் துளைத்த தமிழகத்திலே இப்படியும் 'சில பிறவிகள்' வயிறு கழுவுகின்றனவே, அவைகளை இறுதியாக ஒருமுறை பார்த்தாகிலும்,

சாவோமென்ற ஆசை போலும் வீரபாண்டியனுக்கு!! ஆனால் ரகுநாதன்தான் வரவில்லை!!

சிங்க நெஞ்சினன் சிறையிலே வாடினான். விசாரணை நிகழ்ந்தது—பகிரங்கமாக! 16-10-1799ல் ‘கயத்தாற்றில்’ விசாரணை மன்றத்தின் முன்னே விலங்குடன் நின்றான் நம் விடுதலை வீரன்! பாளையக்காரர்கள் முன்னிலையில் குற்றச்சாட்டுக்கள் வாசிக்கப்பட்டன! பேனர்மேன் நீதிபதியானான்! நரி நியாய மன்றத்தின் தலைமை யேற்றது—எனவே தீர்ப்பும்—குற்றச் சாட்டுக்களும் தெரிந்ததுதான் என்றாலும் ஒரு கண் துடைப்பும் வேண்டாமா?'

“வரி கொடுக்கவில்லை!” — ‘வெள்ளையரை மதிக்கவில்லை!’—‘கம்பெனி உத்திரவுக்குப் பணியவில்லை!—மாறாக கம்பெனியாரைக் கொன்றிருக்கிறாய்!’—கலெக்டர்களை அவமதித்திருக்கிறாய்!’ — ‘நெற்களஞ்சியத்தைக் கொள்ளை யிட்டிருக்கிறாய்!!’—‘புரட்சியாளர்களைத் தூண்டி விட்டிருக்கிறாய்!”

இதுதான் படிக்கப்பட்ட குற்றச்சாட்டு!! இதற்குத்தான் பதில் கூறக் கேட்டான் பேனர்மேன். வீரபாண்டியனை—பாண்டியன் பேசலானான்!!

“குற்றச் சாட்டுக்கள் அத்தனையும் உண்மை! — ஆனால், இவைகளையெல்லாம் குற்றங்களாக நான் மதிக்கவில்லை! —இறை செலுத்தவில்லை: செலுத்தக் கூடாது என்பதால்தான்! பேட்டி காணவில்லை; அது எம் மரபுக்கு இழுக்கு என்பதால்தான்! பலர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; அது போர் களத்தின் விதி முறை! படுகளத்தில் ஒப்பாரியில்லை!! பாஞ்சாலங்குறிச்சி என் இதய சாம்ராஜ்யம்—அதன் பரந்த எல்லைகள் எம் முன்னோரின் உரிமைத்தாயகம்! அதை நான் காத்ததிலே குற்றமில்லை!! கர்ஜித்தெழுகின்ற சிங்கத்திற்குக் ‘கானகம்’ சொந்தமில்லையென்றால்—‘பாஞ்சாலங் குறிச்சி’ எனக்கும் சொந்தமில்லைதான்! சிறகடித்துப் பறக்கும் புள்ளினங்களுக்கு ‘வானம்’ சொந்தமில்லையென்றால்,—இந்தப் பாளையங்களெல்லாம் எனக்கும் சொந்தமில்லைதான்! மின்னுகின்ற தாரகைக்கும், ஒளிவிடும் குளிர் மதிக்கும், இந்நீல வானமும், வையகமும் சொந்தமில்லையென்றால், எனக்கும் இத் தென்பாண்டிய மண்டலம் சொந்தமில்லைதான்! ஆனால், இவைகளெல்லாம், அனைத்திற்கும் சொந்தமென்று ஒப்புக் கொள்ளப் படுகின்றபோது — இயற்கையின்பாற்பட்ட, என் ‘பிறப்புரிமை’ மட்டும் எப்படிக் குற்றமாகும்? **எனவே, நான் குற்றவாளியல்ல-நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படவேண்டியவன்!!”**

இப்படித்தான் பேசினான் பாண்டியன்! ஆனால், கிடைத்த தண்டனை என்ன தெரியுமா? தூக்கு மேடை!!

ஆம்! நீதி பேசியோனை பரங்கி தூக்கிலிடக் கட்டளை யிட்டான்! இது எதிர்பார்த்ததுதான்!! தொண்டைமான் களிக்க; எட்டையபுரம் புன்முறுவல் புரிய; புளிய மரத்தருகே போய் நின்றான் கட்டபொம்மு! தூக்குக் கயிறை முத்தமிட்டான்!!

“தாயகமே! என் சேவைக்காக, எனக்கு நீ அளிக்கும் அன்புப் பரிசு இதுவானால், இதை நான் தலை வணங்கி ஏற்றுக் கொள்ளுகிறேன்! இப்பொன்னாட்டைக் காத்தது குற்றமானால்—இப்புகழ் நாட்டின் எல்லையை, நாடோடிகள், மிதிக்கக் கூடாது என்று சூளுரைத்துப் போராடியது குற்றமானால்—அத்தகைய பெருங் குற்றவாளியாகவே நான் உயிர் விட ஆசைப்படுகிறேன்!”

‘அன்புத் தமிழ் நாடே! புகழ் வாய்ந்த நெடுந்தரையே! ஆழிசூழ் மறவர் வீடே! அழியாத திரு இடமே! தமிழ் கமழும் வளநாடே! நீ ஏனின்று கோழையாகி விட்டாய்? தார் புனைந்து பாராண்ட உன் மறவர் வீரத்தை நீ ஏனின்று பாழ்படுத்திவிட்டாய்? ஈழத்தைத் துளைத்த பெருநாடே! கடாரத்தை வென்ற தமிழ் புவியே! நீ ஏனின்று உன் வீரத்தைப் புதுக்கோட்டையான் காலடியில் கிடத்தி

விட்டுக் கோழையாகிவிட்டாய்? குமுறுகின்ற பெருங்கடலில் முத்து உண்டு!—ஒளி வீசும் ஆழ்கடலில் பவழம் உண்டு!—ஆனால், தாவித் தீண்டும். 'விஷநாகம்! ஏனோ அங்கு! வெடித்தெழும் எரிமலையின் 'ஜ்வாலை' நேர்த்திதான்! ஆனால், விளைவு என்ன? பொன் கொழிக்கும் தமிழ் நாட்டில் 'வைரம்' உண்டு! ஆனால், புல்லுருவிக் குழாங்கற்கள் ஏனோ இங்கு?'

'ரகுநாதத் தொண்டைமான், எம்மை வருந்தி அழைத்தான்—நயந்து பேசினான்—குழைந்து உபசரித்தான்! நம்பிய நாங்கள் பூரித்துப்போனோம், அவன் புது உறவு கண்டு! அவன் செயலில் ஓர் அழகு கண்டோம்! ஆனால், இன்றுதான் தெரிந்துகொண்டோம் அது எரிமலை—ஜ்வாலை' என்று! படமெடுத்தாடும் நாகத்தை வண்ணச் சரமென்று, மனமார நம்பி விட்டோம்! அதன் விளைவு இன்று தூக்கு மேடையிலே இருக்கிறோம்! இன்னும் சில வினாடிகளில் பிணமாக உங்களெதிரிலே வீழப் போகிறோம்!! உள்ளபடியே தொண்டைமானுக்கு நாங்கள் உயிருடன் உலவுவது, அச்சமாகவும், வேதனையாகவு மிருந்திருந்தால், அவன் எம்மைக் குத்திக் கொன்று விட்டிருக்கலாம், நித்திரைபுரியும்போதே! எவரேனும் கேட்டாலும், சொல்லி யிருக்கலாம்—தாயகம் இழந்த 'பொம்மு' மேலும் மேலும், அகதியாய் சுற்றித் திரிந்து துயருறுவதைக் காணச் சகியாதுதான், அவனை நான் அன்பு உள்ளத்தால், கொன்றுவிட்டேன்' என்று! மக்களின் அனுதாபங்களாகிலும், கிடைத்திருக்கும் இதோ நிற்கும் இந்த மகானுபாவனுக்கு! ஆனால். எம்மை, மாற்றானுக்கல்லவா காட்டிக்கொடுத்து கைக்கூலி பெருமளவுக்கு இழிந்தவனாகிவிட்டான், இந்தச் சிறுமதியாளன்! நாடு ஏற்குமா இதை? ஏற்கலாமா இத்தகையவர்களை? எனக்காகவா நான் போரிட்டேன்? என் சொந்த சுகத்திற்காகவா, நான் காடு சுற்றும் அகதியானேன்? எனக்கென்று இருந்திருந்தால் பாஞ்சாலங்குறிச்சியோடு என் வாழ்வே முடிந்துவிட்டிருக்குமே! வெள்ளையர்களை 'பொது எதிரி' என்று நான் கருதிய காரணத்தினாலேதான், நாடெங்கும் சுற்றித்திரிந்தாகிலும், ஒரு **'கூட்டு முன்னணி'** அமைத்து இவர்களை வீழ்த்த வேண்டுமென்று அரும்பாடு பட்டேன்! அகில தமிழகமும் என் தனிக்குரல் கேட்டு பொங்கியெழும் என்று மனமார நம்பியிருந்தேன்—ஆனால், ஏமாந்தேன்! இவ்வேமாற்றத்தை, அன்றே நானறிந்திருந்தால் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையின் பெரும் வாயில்களருகே, வீழ்ந்தாகிலும் பிணமாகியிருப்பேன்! இறுதிவரைப் போரிட்டு நானும் என் வீரர் திலகங்களும் ரத்தச் சேற்றிலே புதையுண்டுவிட்டாகிலு மிருப்போம்! தனியொருவன் போரிட்டதைக் கண்டு, தமிழகமாகிலும் ஒரு சொட்டுக் கண்ணீருடன், இவ் வேதனையைச் சகித்துக் கொண்டாகிலு மிருந்திருக்கும்! ஆனால், அந்தச் சாவுதான் எனக்குக் கிடைக்கவில்லை!! இருந்தாலும் பரவாயில்லை! இப்படிச் சாவதிலும் ஒரு மகத்துவம் இருக்கத்தான் செய்கிறது! **விஜய ரகுநாதத் தொண்டைமானே,** நானிப்படிச் சாகாவிட்டால் யார் நினைக்கப்போகிறார்கள்? கடைசி ஒரு தமிழன் இருக்கும் வரையில், இத்தகைய துரோக பரம்பரையினரின் திருவுருவம், அவர்களின் மனக்கண் முன் தோன்றாமல் போகுமா? அப்போதாகிலும் நினைக்க மாட்டார்களா?—விடுதலை வீரன் இறுதியில் நாதியற்றவனாகத் தூக்கிலிடப் பட்டான்—அவனை யொத்த குறுநில மன்னர்களெதிரிலேயே—அதுவும் அவர்களிலொருவனாலேயே காட்டிக் கொடுக்கப் பட்டு—என்று! அதொன்றே போதும்! நான் நிம்மதியாக உயிர் விட!!

போய் வருகிறேன்!—விடைபெற்றுக் கொள்ளுகிறேன்! பொங்கியெழும் இளைஞர் கூட்டம், துடிதுடிக்கும்போதே, சாவென்னும் 'புகழமுதை' வாரிக் குடித்திடுகின்றேன்! கலங்கும் மக்களின் கண்ணீர் உலரா முன்பே, இந்த இறுதிச் சாக்காட்டின் தனிப்பிணமாய் பொன்றி விடுகின்றேன்! கோழையுள்ளம் கொண்ட சந்தர்ப்பவாதிகளும், கொடும் நினைப்புடைய தொண்டைமான்களும் இங்கிருந்து அகலா முன்பே, வீறு கொண்ட தமிழ் மகனாய்—அவர்களெதிரிலேயே பலி பீடத்திலே சாய்ந்து விடுகின்றேன்! அப்போதாகிலும் அறியட்டு மவர்கள் சுயமரியாதை எதுவென்று! தன் மானம் எப்படிப்பட்டதென்று! விடைபெற்றுக் கொள்ளுகிறேன்! எதிர்காலத்தின் 'சோகச் சித்திரமாய்' என்றுமே இப்புனித மண்ணிலே உலவிக்கொண்டிருப்பேன் என்ற நம்பிக்கையோடே விடைபெற்றுக்கொள்ளுகிறேன்! போய் வருகிறேன்!!"

இப்படித்தான் கரம் கூப்பி வீழ்ந்தான் கட்டபொம்மு! கயத்தாறு அந்தமா வீரனின் சடலத்தை வாரி யணைத்துக் கொண்டது!! நினைத்தாலே நெஞ்சம் புழுங்கும், இந்த வேதனைச் சம்பவத்தை எப்படித்தான் சகித்துக் கொண்டதோ அந்த புகழ் நிலம்!! ஓங்கி வளர்ந்திருந்த புளியமரம்—சுற்றியிருந்த வீரர் கூட்டம்—சூழ்ந்திருந்த பாளையத்தார்—ஒதுங்கி யிருந்த எட்டையபுரம்—பதுங்கிக் கொண்ட புதுக்கோட்டை—இதன் மத்தியிலே வீரபாண்டியன்! அவன் கழுத்திலே இறுக்கப்பட்ட கயறு—அவன் உள்ளத்திலே பொங்கியெழுந்த வேதனை உணர்ச்சிகள்—அவன் வாயினின்றும் 'இடி யோசையென' உருண்டோடிய வார்த்தைக் கூட்டங்கள்—அவைகளிலே தெறித்தெழுந்த உணர்ச்சிப் பிரவாகம்—அவன் துடித்து வீழ்ந்த இறுதி நிலை—ஆகிய இவைகளை நீங்கள்தான் ஒரு கணம் நினைத்துப் பாருங்களேன்! இந்த 'உடல் சிலிர்க்கும் காட்சிகளை' நீங்களும்தான் ஒருமுறை உங்களின் மனக்கண் முன்னால் நிறுத்திப் பாருங்களேன்.........!

கண்களிலே நீர் வழிந்தோடுகிறதா!...... துடைத்துக் கொள்ளுங்கள்!! நெஞ்சம் குமுறுகிறதா?......... பொறுத்துக் கொள்ளுங்கள்!! என்ன செய்யலாம்? நமக்கிருக்கும் இந்த ஆவேசமும்—அன்புள்ளமும்—அன்று தொண்டைமான்களுக்கும், எட்டைய புரங்களுக்கும், இருந்திருந்தால்—இந்தத் துணைக் கண்டத்தின் சரித்திரமே வேறாகி யிருக்குமே! ஆனால் ஒன்று சேரும் முயற்சிக்கும்—சுதந்திர உணர்ச்சிக்கும்—அன்றே அவர்கள், 'மரண சாஸனம்' தயாரித்து விட்டிருந்ததால், நம்மைப் பொல்லாத எதிர்காலம் அணைத்துக் கொண்டு விட்டது! இருண்டிருந்த சகாப்தத்திலே பல காலம் தத்தளித்து விட்டோம்!! இருந்தாலும் பரவாயில்லை! இன்று வெள்ளையனை விரட்டிய நிலையில்தான் வாழுகிறோம்!! இன்னும் நம் புகழைத் தனித்திருந்து பேச கொஞ்ச நாட்கள்தான் பிடிக்கும்!!

நம்மைப் பொறுத்த வரையில் கட்டபொம்முவை நாம் என்றென்றும் மறக்கவே மாட்டோம்! உலகெங்கணும் நிகழ்ந்த விடுதலைப் போர்களையும்—அங்கு தனித்திருந்து போரிட்ட மாவீரர்களையும் இவ்வையம் நினைக்கும் போதெல்லாம், வீரபாண்டியனின் திருவுருவமும் நம் மனக்கண் முன் தோன்றி மறையாமலிருக்க முடியாது! கிரேக்க நாட்டைக்காக்கப் போரிட்ட லியோனிதாசும்—அவன் பொன்றுத நிலைக்களமாம் 'தர்மா போலே'வும்—கிரீஸின் விடுதலை மலரிலே அழியாத வண்ண ஓவியமாக இன்றும் இடம் பெற்றிருப்பதைப் போல, தமிழகத்தின் புகழேட்டிலே கட்டபொம்முவும்—பாஞ்சாலங் குறிச்சியும் இடம் பெறத்தான் செய்வார்கள்!! தாயகம் காத்த பிரான்ஸின் செல்வ மகள்' ஜோனும் (Joan of Arc) அவளிறுதியில், வெள்ளையரால், தீயிட்டுக் கொளுத்தப்பட்ட சிதைக் கோலமும்' எப்படி பிரெஞ்சு மக்களின் இதயத்திரையின் 'சோகச்சித்திரமாக' விளங்குமோ—அதைப்போல, பாஞ்சாலங் குறிச்சியின் அருமைக்காவலன்–வீரபாண்டியனும், அவன் தூக்கில் தொங்கிய 'கயத்தாற்றின்' தூக்கு மேடையும்—நம்மின் இதய பீடத்தினின்றும், என்றென்றும் மறையவே மறையாது! அழியாத அந்த அருமைக்காட்சிதான், நமக்கெல்லாம், எதிர்காலத்திற்கு வழிகாட்டியாக, விளங்கப்போகிறது! நம்மின் செங்குருதியையும் அதில் தவழ்ந்தோடும் ஜீவலங்களையும், வீறுகொண்டெழும்படித் தட்டி எழுப்பப்போகும் பல்வேறு சாதனங்களில், இந்த நெஞ்சுருக்கும் காட்சியும்–நினைப்பும் நிச்சயம் மகுடம் புனைந்து நிற்குமென்பதில் ஒரு சிறிதும் ஐயமிருக்க முடியாது! வாழ்க வீரபாண்டியன்!! வளர்க இத்தமிழ் புவி!!! ★

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,
லோகா அமிர்தம் எங்கள் தெய்வம்

ART IS LIFE

கலையே உயிர்

BALU BROS

ARTISTS

ஓவியர்

பாலு சகோதரர்களின்

கலைக்கூட மலர். 1955.

★ ★

PUBLISHED BY

Balu Bros'

ART GALLERY

MADRAS-2

Price Rs. 3.

(ALL RIGHTS RESERVED)

ஔவையார் :—அணுவைத் துளைத்தேழ் கடலைப்
புகட்டிக் குறுகத் தறித்த குறள்.

இடைக்காடர் :—கடுகைத் துளைத்தேழ் கடலைப்
புகட்டிக் குறுகத் தறித்த குறள்.

உருத்திரசன்ம கண்ணர் :—மணலைத் தோண்ட நீர் ஊறும்; மதலைகள் வாய் வைத்துண்ண தாய்க்கு முலைப்பால் ஊறும். திருக்குறள் ஆராய்தோறும் மதியுடைய புலவர்களுக்கு அறிவு ஊறும்.

மாங்குடி மருதனுர் :—"ஓதற்கெளிதாய், உணர்தற்கரிதாகி, தீதற்ருேர் உள்ளுதொறும் உள்ளுதொறும் உள்ளம் உருகும்.

கபிலர் :—தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்து.

கோதமனுர் :—வடமொழி வேதங்களை பிறர் பார்த்தால், படித்தால் அதன் பெருமை குறையுமென்று மறைத்தார்கள். வள்ளுவர் குறள், மக்கள் யாவரும் படிக்கப் படிக்க அதன் பெருமை குறையாமல் மிகுந்து வளர்கின்றது.

பரணர் :—'வாலறிவின், வள்ளுவரும் தங்குறள் வெண்பா வடிவால் வையத்தார், உள்ளுவவெல்லா மளந்தார் ஓர்ந்து''—மெய்யறிவுடைய வள்ளுவர் தன் குறளால் உலக மக்கள் உள்ளத்திலுள்ள எல்லாவற்றையும் ஆராய்ந்து அளந்து அறிந்தார்.

குலபதி நாயனுர் :—உள்ளக் கமலத்தை மலரச்செய்து அறியாமையாகிய அகவிருளை அகற்றலால், புறவிருளைப் போக்கும் கதிரவனைவிட அதிக உயர்வுடையது திருக்குறள்.

தேனீக்குடிக் கீரனுர் :—குறளால் மக்கள் மனத்தில் பொய்க் கொள்கைகளில் இருந்த மெய் நம்பிக்கையெல்லாம் பொய்யாய் மறைந்து போயின. மெய்க்கொள்கைகளின் மெய்மை நன்கு விளங்கின.

மனேன்மணீயம் சுந்தரம் பிள்ளை :—

வள்ளுவர் செய்திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி.

அறிஞர். திரு. வி. க :—திருக்குறள் தமிழ்மொழியில் பிறந்த ஒரு பெரும் பொது மறை. உலகைக் கூறுபடுத்தும் பொருள்கள் அதன்கண் இல்லை. உலகை ஒருமைப் படுத்தும் செவ்விய பொருள்கள் அதன்கண் மிளிர்கின்றன.



தமிழர் தம் தனி நெறி அருளிய
தன்னிகரில்லாத் தனிப்பெரும் புலவர்,
பொது மறை கண்ட பெரியார்,
புது வாழ்வு வகுத்த அறிஞர்,

திருவள்ளுவப் பெருந்தகையின்

திருக்குறள் அடிகளை நினைந்து
உள்ளன்புடன் ஊக்கங்கொண்டு
உணர்வுடன் ஓம்பி வளர்த்த

ஓவியக் கலையை

எமது உழைப்பினில் உருவாக்கிய
மணமிகு வண்ணமலர் மாலையைத்
தமிழன்னையின் தலைமகனார்தம்
திருமுன் படைக்கின்றோம்.

=பாலு சகோதரர்கள்..

ஜார்ஜ் பெர்னார்ட் ஷா :—அளவுக்கு மீறி நல்லவராக இருப்பது எவ்வளவு பெரிய ஆபத்து.

பெர்ள்பெக் அம்மையார் :—என் கணவர் திடீரென்று எங்கள் அறைக்குள்ளே வந்தார். 'வானொலி இப்போது ஒரு பயங்கரச் செய்தி சொல்லிற்று! காந்தி இறந்தார்!' என்றார். சகிக்கமுடியாத அந்த விவரங்களைக் கேட்டோம்! தம் மக்களுக்கு சேவை செய்வதில் தமது வாழ்க்கையையே ஈடுபடுத்திய சமாதான வாதியான காந்தி கொலையுண்டார்! எங்களுடைய பத்து வயது மகன் கண்ணீர் சொரிந்துகொண்டு "துப்பாக்கி செய்ய யாருக்குமே தெரியாமல் போயிருக்கலாகாதா!" என்றான்.

லின்-யு-டாங் *(சீன பேராசிரியர்)* :—மேலை நாடுகளில் காந்தீயத்தைப் போன்ற ஒரு தத்துவம் இயங்கமுடியாது. மேலை நாட்டினர் கீழை நாட்டு அரசியலில் தலையிடக்கூடாது என்பதே இஃது அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

பண்டித நேரு :—தாம் தவறு செய்துவிட்டதாக அறிந்தவுடன் அதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும்படி செய்தது சத்தியந்தான்! தாம் செய்த சில தவறுகள் " இமயத்தைப் போன்று மிகப்பெரியவை " என்று அவரே பல தடவைகளில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.........அவருடைய பருவுடல் மறைந்துவிட்டது. அவரை நாம் மீண்டும் பார்க்கமுடியாது. அவருடைய மென்மையான குரலைக் கேட்கமுடியாது. நல்லுரைக்காக இனி அவரிடம் ஓடமுடியாது. ஆனாலும் நம் உள்ளத்தில் அவருடைய நினைவை அழிக்க எவராலும் முடியாது. அவருடைய அறிவுரை என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.........இந்த நஞ்சு காந்தியடிகளைக் கொல்வதுடன் நிற்கவில்லை. இந்தக் கொலையை பல்வேறு வகையாகச் சிலர் கொண்டாடியதுதான் கொலையைவிட மிகவும் வெட்கப்படுவதாகும். அவ்வாறு கொண்டாடியவர்களும் அதே முறையில் நினைத்தவர்களும் இந்தியர்கள் என்று அழைக்கப்படும் உரிமையை இழந்தவர்களாவர்.........

ராஜாஜி :—மகாத்மா காந்தியைக் கொன்றவன் சுத்த முட்டாள் மனிதன். ஏனெனில் நிழலைச் சாய்த்து விடுவதன்மூலம் மனிதனைக் கொன்றுவிடலாம் என்று அவன் எண்ணினான். மகாத்மா காந்தி என்றும் வாழவேண்டுமென்று நாம் எல்லோரும் முடிவுசெய்து கொண்டோமானால் என்றும் அவர் நம்முடன் வாழ்வார். விவேகானந்தரையோ, மகாத்மா காந்தியையோ உயிருடன் வைத்திருக்க உள்ள வழி அவனவன் பணியை அவனவன் செய்து வருவதேயாகும். ஏனெனில் உழைப்பதே கடவுள் வழிபாடு என்பதை இருவரும் போதித்தனர்.

ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் :—" தீர்க்காலோசனை இல்லாதவர்களைக் காப்பாற்ற ஒவ்வொரு சகாப்தத்திலும் ஒரு கிருஸ்து கொடுமைக்குப் பலியாகத்தான் வேண்டுமா!" என்று வியப்புறும் பெர்னட் ஷாவுடன் சேர்ந்து ஒவ்வொருவரும் வியப்படைய வேண்டியிருக்கிறது.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் :—வாயால் உரைக்கமுடியாத துக்கம்! மனத்திலும் நினைக்கக்கூடாதது! கொஞ்சமும் நம்பக்கூடாதது நடந்துவிட்டதே! நம் காலத்திலே தூய்மை, மேன்மை, உளங்கவர் ஆற்றல் ஆகிய எல்லாவற்றிலும் முதல்வராக இருந்துவந்தவர் ஒரு பேதையின் சீற்றத்திற்கு இரையாகிவிட்டார்! சாக்ரடீஸ் நஞ்சைக் குடிக்க நேர்ந்தது! இயேசுநாதரைச் சிலுவையில் அறைந்தார்கள்! அந்த அநாகரிக நிலையிலிருந்து நாம் மாறவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

தமிழ்ப் புலவர் திரு. வி. க. :—அமரத்தன்மை வாய்ந்த மகாத்மா காந்தியைப்பற்றி அறியாதார் உலகில் எவரும் இல்லை. அவரைப்போல் உயிர் நீத்த பெரியோர் உலகில் ஒருவரும் இல்லையென சொல்லலாம். அப்பெரியார் வகுப்புவெறி, மதவெறி பிடித்த ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டது நாட்டிற்கே அவமானமாகும்.

நான் மறுபிறவி எடுத்தால்
தமிழனாகவே பிறக்க ஆசைப்படுகிறேன்.

—காந்தி அடிகள்.



தமிழ் மொழியைப் பயிலப் பயில அதன் அழகை உணரலானேன். அது மனங்கவரும் ஒரு இனிய மொழி. தமிழ் மக்களுள் பண்டை நாளிலும் இந்நாளிலுங்கூட அறிஞர் பலர் இருந்தனர்—இருக்கின்றனர் என்பது அம்மொழியின் அமைப்பாலும் பயிற்சியாலும் அறியக்கிடக்கின்றது.

இந்தியாவில் ஒரே இனம் ஏற்படவேண்டுமானால் சென்னை மகாணத்திற்கு அப்புறமுள்ளவர்களும் தமிழ் மொழியைக் கற்கவேண்டும்.

—காந்தி அடிகள்

A. Einstein: "A leader of his people, unsupported by any outward authority; a politician whose success rests not upon craft nor mastery of technical devices, but simply on the convincing power of his personality; a victorious fighter who has always scorned the use of force; a man of wisdom and humility, armed with resolve and inflexible consistency, who has devoted all his strength to the uplifting of his people and the betterment of their lot; a man who has confronted the brutality of Europe with the dignity of the simple human being and thus at all times risen superior.

Generations to come, it may be, will scarce believe that such a one as this ever in flesh and blood walked upon this earth."

* * * *

Pandit Jawaharlal Nehru:—"India has attained a great name in the world to-day for many reasons. But the most important of these reasons is Mahatma Gandhi. It is he who has given this stature to India. This stature was not given because of India's army, navy or wealth, but because people followed India in certain moral terms. I suppose his death made the people think of some of the things he stood for even more than during his life. Unless we understand what he stood for and act up to it, we are not going to succeed."

* * * *

K. A. Abbas:—"Gandhiji remains, as ever, a staunch friend of Islam and of Muslims. The man who courted imprisonment in the cause of Islam in 1922 would surely never allow the legitimate interests of Muslims to suffer much less Islam to be in danger. For, here is one who has risen above the petty considerations of race, caste, creed, or colour, and who has summed up his religion in seven significant words—THERE IS NO OTHER GOD THAN TRUTH!

B B

தமிழ் நாடு நமது சுதந்திரப் போராட்ட காலத்தில் வீரமிக்க பங்கெடுத்திருக்கிறது. இந்திய கலாசாரத்தின் அடிப்படை முக்ய அம்சங்களுக்கெல்லாம் நிலைக்களமாக இருந்து வருவது தமிழ்நாடே. தமிழ் நாட்டின் பழம் பெரும் தமிழ் மொழி, இந்தியாவின் பெருமை மிகுந்த பொக்கிஷம்.

—பண்டிட் ஜவஹர்லால் நேரு

மனிதருள் மாணிக்கம்

LIGHT OF ASIA

RAJ BHAVAN

Guindy,
Madras-22,
January 5, 1955.

Message.

Owing to indisposition I regret it was not possible for me to see the exhibition of Gandhiji's paintings by Messrs. Balu Bros., held at Rajaji Hall in November last. I understand from all those who went there that there was a very fine collection.

I am very grateful to Messrs Balu Bros., for having donated all the proceeds of the exhibition to the Mahatma Gandhi Memorial Fund.

Sri Prakasa

BALU
BROS

BALU BROS
artists
MADRAS.2.   SOUTH INDIA

விலங்கிடப்பட்ட வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரமொழிகள்

"பாஞ்சாலங்குறிச்சி எனது உரிமைத் திருநாடு. அதைப் பிறர் தாக்கும்பொழுது எதிர்த்துப் போரிட்டது எப்படிக் குற்றமாகும்! பகைவர்கள் தாக்கும்போது அதைப் பார்த்துக்கொண்டு வீண் பொழுது போக்கியிருந்தால் அதுதான் குற்றமாகும். ஆகவே நீங்கள் நான் செய்த செயலைக் குற்றம் என்று கூறுவதுதான் குற்றம்."

வீரபாண்டியன் தூக்குமேடையில் முழங்கிய வீரமொழிகள்

"இவ்வெள்ளை மனிதனுக்கு முன் கைதியாய் நிற்கவும், அவன் முடிவுப்படி இப்புளிய மரத்தில் தொங்கித் துடித்து மாளவும் நேர்ந்துள்ள இந்நிலை கண்டு நான் வருந்தவில்லை; ஆனால் என் கோட்டையைப் பாதுகாத்துப் பகைவரைப் படழித்துப் போர்முனையில் பகைவரால் வெட்டப்பட்டு வீரமரணம் அடைந்திருப்பேனேயானால் எம் பாண்டியர் குடிக்கும், இந்நாட்டுக்கும் வீரம் தேடித் தந்திருப்பேன். நான் அந்த வாய்ப்பை இழந்ததற்காக வருந்துகிறேன்; அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து எனது தாய்நாடு மீளவேண்டும் என்பதைத் தவிர எனக்கு வேறு ஆசை எதுவும் கிடையாது. என்றாவது ஒரு நாள் இந்நாட்டு மக்கள் வெள்ளையரை விரட்டியே தீருவர்."

வித்துவான் வை. சுப்ரமணியம், சேலம்.

பொன்றும் போதும் பொன்றாத வீரம்!

கலைஞர் 'கௌதமன்'



'விழுப்புண்' கிடைக்காத நாட்களெல்லாம் வீண் நாட்களாம் வீரனுக்கு! இது தமிழகத்தின் வீரத்திற்கோர் இலக்கியம்!! கைவேலைக் களிற்றோடு போக்கிவிட்டு; எதிரிக்குத் தன் மெய்வேலைப் பரிசாகத் தந்தவன்—யானை பிழைத்த வேலை கம்பீரமாக ஏந்தி நின்றவன்—'விழுப் புண்' பெற்று மகிழ்வுடன் உலவியவன்—வீரக் கழலை, காலிலே அணிந்து களித்தவன்—மார்பிலே வேல் தைத்து வீழ்ந்தவன்—என இப்படி வீரத்திற்கு இலக்கணம் கிடைக்கும் இங்கே! வற்றாத திருநாட்டில், வழிந்தோடும் வீரத்திற்கு என்றுமே குறை யிருந்ததில்லை!!!

இத்தகைய மறவர் நாட்டின் வீரப் பட்டியலுக்கு மேலுமொரு ஏடு சேர்த்தான் படத்திலே காணும் நபாப்! குண்டடிபட்ட முள்ளம் பன்றியை, வாரி எடுக்கலாமென்று அருகில் நெருங்கும் போதும், ஆவேசத்தோடு சீறி யெழுமாம் அந்த வன விலங்கு! அந்தநேரத்திலே அதை எவரும் நெருங்க முடியாது; நெருங்கினால் கூரிய முட்களால் குத்துண்டு மாள வேண்டியதுதான்!! அவ்வளவு 'ரோஷம்' அந்த சிறு மிருகத்திற்கும்!! விலங்கினத்திற்கே இப்படியென்றால்—'விழுப்புண்' பரம்பரையினருக்கு எப்படிக்கிளர்ந்தெழும் ரோஷம்! அதிலும் தன் நாடு பறிக்கப்படும் போது! தன் எல்லை மிதிபடும்போது!!

எனவே தான் ஆத்திரங்கொண்டான் நபாப்! நபாப்—ஊமைத் துரையுடன், சேர்ந்து போரிட்ட வாள்வீரன்! களம் அஞ்சா அடலேறு!! கட்டபொம்முவை வெள்ளையர் பிணமாக்கி மகிழ்ந்தபிறகு, ஊமைத் துரையை மட்டும், பாளையங்கோட்டையிலே சிறையிலடைத்து வைத்திருந்தனர்! ஆனால், பிறந்த பொன்னாட்டினர், அவனைச் சிறையிலே வாட விடவில்லை! நல்ல சமயத்தில் சிறைக்கூடத்தை தகர்த்தெறிந்து அவனைச் சிறைமீட்கவும் செய்தனர்! மீண்டும் பாஞ்சாலங் குறிச்சிக்கு நல்லரண் அமைத்து, படைக்கலம் பூண்டுநின்றனர்! சிறைவிடுத்த வெள்ளையரோ மீண்டும் சிறைபிடிக்க வெறிபிடித்தெழுந்தனர். முற்றுகை யிட்டனர் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை! பீரங்கியால், மீண்டும் தரைமட்டமாக்கி

னர், கோட்டையின் வாயில்களை ! உள்ளேயும் விரைந்தோடினர் ! ஆனுல் கோரமாகத் தாக்குண்டனர், விடுதலை வீரர்களால்! நீண்ட வேல்கம்புகள் மடமடவென்று வெள்ளையரின் உயிரைக் குடித்த வண்ணமிருந்தன ! வெள்ளையரோ துப்பாக்கியால் நம்மவரை அழித்துக்கொண்டே முன்னேறினர் ! அந்த நேரத்திலே வேலெறிந்துகொண்டிருந்த நபாப், குண்டடிபட்டு வீழ்ந்துவிட்டான்! எதிர்பாராத சம்பவந்தான்—ஆனுலும் போர்க்களமல்லவா ? எதிரிகள் இயந்திர சாதனம் கொண்டு போரிட்டால், வெறுங் கையான் வீழத்தானே செய்வான் !!

எனவேதான் நபாப் வீழ்ந்துவிட்டான் ! அங்ஙனம் இடறிவீழ்ந்தவன் 'வரப்பின்'மேல் சாய்ந்து கிடந்தான் !! அதுபோது வெள்ளைய வீரனெருவன், புரவி மேலேறி அங்கே வந்தான் ! இன்னும் சில வினடிகளிலே சாகப்போகும் அந்த மாவீரனிடம், மின்னும் வாளொன்று, கரங்களிடையே வீழ்ந்து கிடப்பதைக் கண்டான் ! 'அந்த வாளைத் தா !' வென்று கேட்டான், அந்த குணக் கேடன் !! 'குண்டு பாய்ந்து துயருறுவதையும் அறிய முடியாமல், வாளைக் கேட்கிருனே இந்தப் பரங்கிப் பயல் !' என்று நபாப் சினங் கொண்டானுயினும், பொறுத்திருந்து மெள்ள பதிலிறுத்தான் ! 'குண்டு பாய்ந்திருக்கிறது ! எழ முடியவில்லை ! நீயே குனிந்து வாங்கிக்கொள் !' என்று ஈனக் குரலிலே பேசினுன் நபாப் ! பரங்கியோ 'சரி'யென்று குனிந்து, தலை நீட்டிக் கேட்டான் வாளை ! ஆனுல்......பரங்கிக்குக் கிடைத்தது வாளல்ல...... ? வாளின் வீச்சு !' மறுகணம் தலையறுந்து கீழே வீழ்ந்தான் பரங்கி !!

ஆம் ! ஈனக்குரல், கோர கர்ஜனையாக மாறியது. இப்போது ! வலுவிழந்த கரங்கள், தலையை அரிந்து கீழே தள்ளியது ! பரங்கி ஏறிவந்த குதிரையையும் விடவில்லை நபாப் ! அதனையும் தாவியெழுந்து குத்தி வீழ்த்தினுன் !! அதுதான் அவனின் கடைசி வீரச் செயல் !! கையிலே திகழ்ந்த வேலை, எதிரிகளின் நெஞ்சகத்திலே பாய்ச்சிவிட்டு ; மெய்யிலே துவண்ட கூர் வாளை 'வந்தவனுக்கும்' பரிசளித்துவிட்டான் ! பொன்றும் போதும் ஒரு வைரியை வீழ்த்தினேமே என்ற வெற்றிக் களிப்போடு உயிர் விட்டான் நபாப் !

என்றுமே இளமைகுன்ருத தமிழகத்தின் வீரத்திற்கு மேலுமொரு பொன்னேடு சேர்த்த பெருமிதத்தோடு, வீழ்ந்து மடிந்தான் அந்தப் புகழ் வீரன் !

அவனின் செயலுருவந்தான் மேலே தீட்டப்பட்டிருப்பது !!

பொன்றும் போதும் பொன்ருத வீரத்திற்கு இவனுமொரு எடுத்துக் காட்டல்லவா ?

வீர மங்கை—முத்து வடிவு !!

மோகன முத்து வடிவு !—நாம் இதுவரை கேட்டிராத பெயர் ! கேட்க முடிந்திராத பெயர்...!! ஆம் ! இளமைபொங்கும் அந்தத் தளிர் மேனியாளின் வீரமா காதையை, தமிழகத்திலே வெகு பல பேர் கேட்டிருக்க முடியாது !!

மயிலென உலவிய அந்தத் தோகை நல்லாள்—தன் பைந்தளிர்க் கரங்கள் இருபுறமும் ஆர்ப்ப; துகிலென அலையும் கருங்குழல் முடித்து ; மதுநிறைந்த வண்ண மலர் சூடி ; தென்றலிலே மிதந்துவரும் சந்தணத்தின் இன்மணம் நுகர்ந்து ; வெண்ணிலவின் தண்ணொளியால் உள்ளம் பூரித்து ; காதல் கீத மிசைத்து; மணுளனின் வருகை கண்டு 'அல்லி'யென முகிழ்த்தெழுந்து ; அவன் தம் தடம் தோள்கள்பற்றி அணைத்து ; தன் ஒளி முகத்தை எதிரிகளும் கண்டஞ்சும், அவன் அகன்ற மார்பகங்களிலே பொதித்து வைத்துக் கொண்டு ; கொஞ்சி ; குலவி ; கிளிமொழி பேசி ; நுதல்வியர்ப்பக் காணக் கிடைக்கும் நிறையின்பத் தெள்ளமிதை வாரி வாரிப் பருகி ; இல்லறத்தின் ஒளிவிளக்காய், காட்சி தரவேண்டிய பருவத்திலே—புள்ளிமானெனக் கானகம் போந்து ; பொன்முகம் மறைத்து ; காவியணிந்து ; கமண்டலமேந்தி ; நெஞ்சிலே பூண்ட 'சூளுரையை' செயலிலே காட்ட தன்னையே மறந்து ; இறுதியில், கொண்ட 'சபதத்தை' நிறைவேற்றிக் காட்டிய ; மறவர்குல திலகமாய், கோபச் சிரிப்புச் சிரித்து நின்ருளென்ருல், உள்ளபடியே எவருக்குத்தான் ஆச்சர்யமாக இருக்காது. !!

மோகன முத்து வடிவு - கட்டபொம்முவின் பிரஜை ! வீர உணர்வும், தியாக சிந்தையும் கொண்டவள் !! கட்டபொம்மு தாயகம் காத்த குற்றத்திற்காக (!) தூக்கில் தொங்கிய பிறகு, வெள்ளையர், பாஞ்சாலங்குறிச்சியின் பாளையங்களனைத்தையும் இடித்துச் 'சமவெளி'யாக்கக் கிளம்பினர் ! அந்த நேரத்திலே ஆவேசங் கொண்டு, பொங்கியெழுந்த மறக்குடியினள் தான் முத்து வடிவு !! 'வெள்ளையரை எப்படியும் பழி வாங்கியே தீருவேன்' என்று சபதம் பூண்டு வெளி வந்தாள்—வந்தவள், துறவியெனக் கமண்டலமேந்தி ; காவிதரித்து ; அடவிபோந்தாள் !!

இந்த நேரத்திலேதான் தன் அழிவுப் படைகளைக் கிளப்பிக்கொண்டு அங்கே வந்திருந்தான் கேப்டன் புரூஸ் ! 'மேல்படாகை' என்னும் முத்துவடிவின் பாளையத்தை இடித்து நிரப்பும் பணி அவனிடம்தான் ஒப்புவிக்கப்பட்டிருந்தது ! எனவேதான் புரூஸ் 'மேல் படாகை'யில் கூடாரமைத்துக் கொண்டிருந்தான் ! கொடுமைகள் பல புரிந்தான் ; கொத்தளங்கள் பல இடித்தான் ; கொள்ளையையும், கொலைகளையும் நித்திய நிகழ்ச்சியாக்கினுன் !!

அந்த புரூஸ்தான் அன்று கானகம் போயிருந்தான்—அடவியின் வளத்தை ரசித்துக்கொண்டே நெடுந் தொலைவு உள்ளேயும் வந்துவிட்டான் ! புரவியில்லை; தனித்துவந்தான் ! அங்கேதான் இந்தக் 'கமண்டல மேந்தி'—முத்து வடிவு—அமர்ந்திருந்தாள் ! நெற்றி

யிலே நீறு—தலையிலே ஜடாமுடி—முகத்திலே வெண் தாடி—சொல்லிலே மந்திரம்—பேச்சிலே சிவம்—ஆனால், சிந்தையிலே பழிவாங்கும் வீர உணர்ச்சி !! புரூஸின் நினைவிலோ இதுவெல்லாமில்லை ! அவன் எண்ணங்கள் வேறு !! தோளிலே துப்பாக்கி—நினைப்பிலே அழிவு வேலை!? இதுதான் முக்கியம் அவனுக்கு!! எனவே துறவியைக் கேட்டான் 'நீ யாரென்று?' துறவியோ சினந்தான் ! 'உன் பணி கவனி !'யென்றான். ஆனால் அந்தக் குரலிலே, மென்மை கண்டான் புரூஸ் ! எனவே மேலும் மிரட்டினான் ! அருகில் சென்றான் ; அலறியெழுந்தாள் அந்த ஆண் உடை அணங்கு ! காவி அவிழ்ந்தது ; கமண்டலம் நெகிழ்ந்தது !! ஒளிவிடும் கண்கள்—துடிக்கும் இளமை—நாணத்தின் சாயல் ! எனவே ஒதுங்கி நின்றாள் !! புரூஸோ வியந்தான், அந்த எழிலோவியம் கண்டு !! அருகில் சென்றான் ; 'அன்பே !' என்றான். சிரித்தாள் வடிவு !! அந்தக் கோபச் சிரிப்பை, புன்னகை என்று சிந்தை குளிர்ந்தான் புரூஸ் ! அடுக்க ஆரம்பித்தான் அழகு வசனங்களை !! 'ஒண்தொடியாளே பைங்கொடியாளே ! துடியிடையாளே'! என்றெல்லாம் ஆரம்பித்தான் ! முத்துவடிவோ, 'அடக்'கென்றாள் ! புரூஸோ குழைந்தான் நாய்போல !! துப்பாக்கி வேண்டு'மென்றாள் வடிவு ! 'பூ ! இவ்வளவுதானா ! இந்தா ! இது உனக்கே காணிக்கை !' என்றான். அது மட்டுமா ; 'பொற்சிலையே! புதுவண்ணமலரே ! மணப்பாயா என்னை ?' என்றான் !! 'சாகஸம் பேசாதே, சாக்காட்டின் நரியே ! குரங்கொன்று கொண்டு வளர்த்தேன்—இளமையிலே... ! கூண்டை மறந்து மாண்டுவிட்டது அந்த வானரம்...! இன்றோ கூண்டு காலி...! என்னுடன் வந்தால், பேணி வளர்ப்பேன், என் வெள்ளைக் குரங்கே !' என்றாள். புரியாமல் தவித்தான் புரூஸ் !! ஆனாலும்...ஆசை !! நெருங்கினான் ரோஜா மலரை தளிர்மறைத்துப் பதுங்கிக் கிடக்கும் நாகத்தையும் பாராமல் !! ஆனால் மறுகணம் பிணமானான் ! மடமடவென்று குண்டுகள் பாய்ந்தன ! அலறி வீழ்ந்தான் புரூஸ் !! முத்துவடிவோ, கேலிச் சிரிப்புச் சிரித்து நின்றாள் !!

குருதி வெள்ளத்திலே தோய்ந்தூறிக்கொண்டிருந்தோனின் தலையை உடனே அரிந்தெடுத்தாள் !! ஓடிப்போய் பனைமரத்தின் 'கருக்'கொன்று கொண்டுவந்து ; அதன் நுனியிலே புரூஸின் தலையைச் சொருகினாள் ! தூக்கிப் பிடித்துக்கொண்டு ஓடினாள் அடவியைவிட்டு ! ஆவேசத்தோடு ஓடிவந்தாள் 'மேல்படர்கை' வீதிகளிலே—ஒற்றைக்கால் சிலம்பொன்று கொண்டு, ஆவேசத்தோடு ஓடிவந்தாளே, கண்ணகி, மதுரை வீதிகளிலே—பாண்டியனைக் காண—அதைப்போல !! 'ஓ' வென்று கர்ஜித்தாள் ! 'வென்றேன் !—வென்றேன் !' என்று கைகொட்டினாள் ! பழிவாங்கினாள் ; சாந்தி கண்டாள் !!

'நினைத்தாலே உடல்சிலிர்க்கும். அந்த வீரமங்கையின் செயலுருவந்தான் மேலே காணுவது...!!

மோகன முத்துவடிவு—இதுவரை நாம் கேட்டிராத பெயர்தான் ! ஆனால், இன்றுமுதல் அதுதான். அழித்தெழுத முடியாத நம் இதய ஓவியம் !!

* * * *

கையில் பிடித்த மூவர்ணக் கொடியை போலீசாரிடம் கொடுக்க மறுத்து, அக்கொடியரது குண்டாந்தடிக்கு இரையானான் **திருப்பூர் குமரன்.** உயிரைவிட மானமே பெரிதென்பது தமிழர் பண்பாடு. அந்த மானமிக்க தோழர் மரபில் தோன்றியவன் **குமரன்.**

ஜான்ஸி ராணி வீர ரமணி லக்ஷ்மி பாய்

இந்திய சுதந்திரத்திற்கே கண்போல் இருந்து வருவது ஜான்ஸி ராணி லக்ஷ்மி பாயின் வாழ்க்கைதான்......

அவர் போன்ற ஒரு பெண்குலத்தைப் பெறும் பாக்கியம் இங்கிலாந்திற்குக் கிடைத்ததில்லை......

தாம் செய்திருந்த பிரதிக்ஞைக் கிணங்க, அடிமைத்தனம் தன் சரீரத்தையும் ஆத்மாவையும் தீண்டுமுன் அவர் வீர ஸ்வர்க்க மடைந்தார்......

உவமையற்ற அந்த ரத்னத்தை ஈன்றெடுத்த பெருமை நமது பாரத நாடு ஒன்றுக்கே உரியது!......அது அக்கினியைக் காட்டிலும் அதிக சோபையுடன் விளங்கி வருகிறது.

—வீர சவர்க்கார்



மஞ்சிலா வான மதியின் ஒளிபோல
விஞ்சிசீ ரூழி விளங்குகவே—வன்சிறையில்
செக்கிழுத்த வீரன் சிதன்பரன் மெய்ப்புகழ்தான்
மக்களிடை ஓங்கி வளர்ந்து.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

கடுமையான வேலைகளைச் செய்து, சவுக்கடிபட்டு, கேப்பைக்கூழ் கறியின்றி சட்டியில் வாங்கியுண்ணும் கொடுங்குற்றவாளிகளின் வாழ்வு பிள்ளை அவர்களின் சிறைவாசம். தமிழர் புத்துணர்வும் நல்வாழ்வும் எய்த வழி வகுத்து வாழ்ந்த இப்பெரியாரை வழுத்தாத நாளெல்லாம் தமிழருக்கே வீணாகும்.

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

பேசுதல் யார்க்கும் எளிது; பேசும் கொள்கையின்படி நடப்பதே அரியது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய—அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.
—குறள்

என்கிறார் திருவள்ளுவர். அந்த வகையில் செயற்கரிய செயல் செய்து வெற்றி பெற்ற பெரியார் வ. உ. சி.

—டாக்டர் மு. வரதராசனார்

அமைச்சு

பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொறுத்தலும் வல்லது அமைச்சு. —குறள்

ஈ. வே. ரா. & நாகம்மையார்

தமிழ் நாட்டில் காங்கிரஸ் தலைவர்களாகவும், தியாகிகளாகவும், ஊழியர்களாகவும், கதர் இயக்கத்திற்கு முதுகில் பஞ்சும், நூலும், சர்க்காவும் சுமந்து கிராமங்கள் தோறும் காலால் நடந்து சென்றவர்களாகவும், வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கணவன் மனைவி இருவரும் சிறை சென்று கஷ்டப்பட்டவர்களாகவும் இருந்து முதன்மை பெற்றவர்கள் ஈ. வே. ராமசாமி பெரியாரும், அவர் மனைவி நாகம்மையாரும்.

ஒரு சமயம் வடநாட்டில் நடந்த ஒரு காங்கிரஸ் மகாசபை கூட்டத்திற்கு "நாகம்மையார்" போக இயலாமையை முன்னிட்டு, மகாசபை கூட்டத்தையே ஒத்தி வைத்தார் உத்தமர் "காந்திமகான்".

தில்லையாடி (தஞ்சை ஜில்லா) வள்ளியம்மை

தென் ஆப்பிரிக்கா இந்தியர்களின் சத்யாகிரஹத்தில் காந்தி அடிகளுடன் ஈடுபட்டு, ஒருதரம் அவரின் உயிரையும் காப்பாற்றியிருக்கிறார். காந்தியார் இவரைப்பற்றி "Valliamma's service is imperishable. And the name of Valliamma will live in the History of South African Satyagraha as long as India lives" என்று சொல்லியிருந்தும், இளம் வயதிலேயே சுதந்திரத்திற்காக உயிர்த் தியாகம் செய்த இத்தமிழ் பெண்மணியைப் பற்றி, தமிழ் நாட்டில் பிறந்த காரணத்தினாலோ, என்னவோ, எட்டு பாகங்கள் கொண்ட காந்தியின் வாழ்க்கைச் சரித்திரத்தில் ஒரு வரிகூட எழுதவில்லை.

எஸ். சீனிவாச ஐயங்கார்

ஆசிய ஜோதி நேருவே 'இந்திய சுதந்திர போராட்டத்தில் தமிழ்நாடு முக்கிய பங்கு கொண்டிருக்கிறது'' என்று கூறியிருக்கிறார். எனினும் 60 வருட காங்கிரஸ் தலைமைப் பீடத்திற்கு 2 வருஷங்கள்தான் தமிழ் நாட்டிலிருந்து, இதுவரையில் இருவரைத்தான் தேர்ந்தெடுத்தனர். அதில் ஒருவர்தான் நமது நக்கீரர் எஸ். சீனிவாச ஐயங்கார். காந்தியடிகளாயிருந்தாலும், தவறை, தவறென்று மார்தட்டி கூறுவார். இன்று தமிழ் நாட்டில் காங்கிரஸ் செல்வாக்குடன் இருக்க வழிகாட்டிச் சென்றவர். காந்தியார் உள்ளிட்டு இந்தியாவிலுள்ள எல்லா தலைவர்களும் நேதாஜி போஸுக்கு எதிராக வேலை செய்தும், நமது சீனிவாசய்யங்கார் ஒருவராலேயே நேதாஜீ வெற்றி பெற்றார்.

எஸ். சத்தியமூர்த்தி

புராணத்திலுள்ள பகீரதனல்ல. ஆனாலும் பூண்டி தண்ணீர் தேக்கம் இவருடைய முயற்சியே. கள்ளம் கபடமற்றவர். தான் என்ற மமதை இல்லா தேசிய வீரர். அக்காலத்தில் வெள்ளையருக்கும், வடநாட்டு காங்கிரஸ் வாதிகளுக்கும் இவரைக் கண்டால் பயந்தான். ஒரு சமயம் நேரு ஏதோ முன் கோபத்தினால் கூறிவிட்டார். உடனே அவரை, அதே மேடையிலேயே மன்னிப்பு கேட்கும்படி செய்தார், வீரத் தியாகி சத்தியமூர்த்தி.

ஓவியம் :—S. சூர்யா. வயது 7.

ஒரு சிலர் உழைப்பதற்குத்தான்
உலகில் உண்டாக்கப்பட்டார்கள்
என்றால் கடவுள் அவர்களுக்கு
கைகளையும்,
கால்களையும்,
மாத்திரமே படைத்திருப்பார்..

ஒரு சிலர் உண்டு களித்திருப்-
பதற்காகத்தான்
உலகில் உண்டாக்கப்பட்டார்கள்
என்றால் கடவுள் அவர்களுக்கு உடலில்
வாயையும், வயிற்றையும் மாத்திரமே
படைத்திருப்பார்..

அப்ரகாம் லிங்கன் *பொன்மொழிகள்...*



தமிழ் முரசு

(மலாயாவில் சிறந்த தமிழ் தினசரி)

இருபது ஆண்டுகளாக மலாயாவில் தலைசிறந்து விளங்கும் தமிழ் தினசரி பத்திரிகை. தினம் 12 பக்கங்களில் 10 பாயிண்ட் எழுத்துக்களில் வெளிவரும் தமிழ் பத்திரிகை இது ஒன்றே.

*

மலாயாவில் வெளிவரும் எல்லா தமிழ் பத்திரிகைகளையும்விட பன்மடங்கு அதிகமான பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகையும் இதுவே.

71, சிலிகி ரோட்: சிங்கப்பூர் - 7.

தந்தி: முரசொலி; த. பெட்டி: 621; போன்: 5306.

பிராஞ்சு ஆபீஸ்:—

581, பைக்கிராப்ட்ஸ்ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.

தந்தி: "முரசொலி," சென்னை.

Registrered Trade Mark :
" EVEREST "

Telephone : **2305**
Tel. : **" Fire works "**

P. R. NATHAN & CO.

2/285, Netaji Subash Chandra Bose Road, Madras-1.

HIGH CLASS STATIONERS

Importers of :

DRAWING MATERIALS, ARTIST COLOURS AND ARTIST BRUSHES.

Sole Distributors of :

EVEREST BRAND STATIONERY AND CARBON PAPERS

Estd: **1904** Grams: **KETIOR** Phone: **18**

தரத்திலும்
குணத்திலும்
முன்னணியில் நிற்பவை...

K.T.R

☆ கோபுர மார்க் பன்னீர்
☆ சந்தனுதி தைலம்
☆ பொன்னுங்கண்ணி தைலம்
☆ சேரன், சோழன், பாண்டியன் ஜவ்வாஜி பத்திகள்

K.T.R. வாசனுதி திரவியசாலை, விஜயபுரம். தஞ்சை ஜில்லா.

இசையும் இலக்கியத்து யானையும்

அகநானூறு

நா. பாண்டுரங்கன், எம்.ஏ.

ஒழுங்கு எங்கே தங்குகிறதோ அங்கே அழகு பொங்குகிறது. அழகை விரும்பாதவர் யார்! இருவிழி பெற்றோர் எவராயினும் எதிரே சதிராடும் அழகு அவர் இதயத்தைப் பருகாமல் விடுவதில்லை. எழிலைக் கண்டு உள்ளம் மகிழவில்லை என்றால், அவர் விழிகளில் பழுது உறைந்திருக்கவேண்டும் அல்லது கண்ணீர் நிறைந்திருக்க வேண்டும்! ஓசையின் அழகே இசையாகிறது. காற்று கிளப்பினாலும் கண்டத்திலிருந்து எழுந்தாலும் அல்லது கருவிகள் எழுப்பினாலும் அந்த ஒலியில் ஒழுங்கு உண்டானால், அந்த ஒழுங்கே இசையை உண்டாக்குகிறது. அழகு, கண்பெற்றோர் இதயத்தைக் கவர்வதுபோலவே இசை, காது பெற்றோர் இதயத்தைக் கவர்கிறது. இசையைக் கேட்டு உள்ளம் மகிழவில்லை என்றால் அவர் உள்ளமே இல்லாதவராக இருக்கவேண்டும். உள்ளமே இல்லாதவர் என்றால் அத்தகையோர் கொடுஞ் செயல் புரிந்தால் வியப்பில்லையல்லவா? அதனால் தான் போலும் ஆங்கில நாடகக் கவி, இனிய இசையைக் கேட்டு உருகாதார் கொலையோ கொடுஞ்செயலோ புரிய அஞ்சார் என்று கூறியிருக்கவேண்டும்!

குரல்பெற்ற உயிர் தோன்றிய காலத்திலிருந்து இசைதோன்றி இன்பம் தந்துகொண்டிருக்கிறது. வசந்தம் வரக் கண்ட குயிலின் உள்ளத்தில் வரம்பில்லாத இன்பம் பொங்குகிறது. அதனால் குயில் கூவுகிறது! கூவும் அந்தக் குயிலின் இசையைக் கேட்போர் உள்ளத்தில் இன்பம் பொங்குகிறது! இப்படிப் பார்த்தால் இன்ப உணர்வால் தோன்றும் இசை இன்ப உணர்வையே உண்டாக்குகிறது எனலாம். கற்கண்டு இனிக்கிறது. கற்கண்டைத் தோற்றுவிக்கும் கரும்பும் இனிக்கிறது. இசையைக் கற்கண்டு என்று கூறுவோர் இதை எண்ணித்தான் சொல்லுகின்றனர் போலும்!

மலர்விழி மழலைமொழி மைந்தன் முகத்தில் சிரிப்பு மலர்கிறது; அந்தச் சிரிப்பைக் கண்ட தாயின் முகத்தில் சிரிப்பு மலர்கிறது; அந்தத் தாயின் முகத்தைக் கண்ட தந்தையின் இதழ்களில் சிரிப்பு



மலர்கிறது. இனிய இசையின் பயனும் இந்தச் சிரிப்பைப் போன்றதே! இனிய இசையைப் பாடுபவன் உருகுகிறான். அந்த இசையைக் கேட்பவனும் உருகுகிறான். தோன்றும் இடத்திலும் தொடும் இடத்திலும் இன்பத்தையே தருகிறது இசை!

மனித வாழ்வில் இசையின் வாழ்வு சிறந்தது, பரந்தது! ஏற்றம் இறைப்பவர்கள் பாடுவது இருக்கட்டும், இறைக்கும்போது அந்த ஏற்றமே பாடுகிறது! நாற்று நடுவோர், காற்றில் பயிர் தூற்றுவோர், ஆற்றில் உடை வெளுப்போர், அனைவரும் பாடுகின்றனர். படகு செலுத்துவோர், பல்லக்கு சுமப்போர், பயணம் போகும் இரட்டைமாட்டு வண்டிக்காரர்கள் பாடாதிரார்! சுண்ணமிடிப்போர் தொடங்கி இன்னும் பல்வேறு தொழில் புரிவோரிடையே இசை இடம்பெற்று இன்பநடம் புரிகிறது. பூத்த சோர்வை நீக்கிப் புதிய ஊக்கத்தை ஆக்கும் அரும்பணியை இசை செய்வதால் தான் அறிந்தோ அறியாமலோ இவர்களெல்லாம் பாடுகிறார்கள்!

தொட்டில் தொடங்கி சுடுகாடு வரை மனிதனை இசை தொடர்கிறது. குழந்தைப் பருவத்தில் தாலாட்டு, திருமணப் பருவத்தில் நலங்கு, இறந்ததும் வீட்டில் ஒப்பாரி, காட்டுக்குத் தூக்கிச் செல்லும் போது தாதனின் பாட்டு என்றெல்லாம் இசை மனிதனைத் தொடர்ந்து செல்லுகிறது.

எந்த விழாவாக இருந்தாலும் அந்த விழாவில் இசைக்கு ஓர் இடம் எந்த உருவிலாவது அமைந்து விடுகிறது.

போர்க் காலத்தில் அந்த நாளிலிருந்து இந்த நாள் வரை வீரர்களிடையே களைப்பைப்போக்கவும் களிப்பைப் பெருக்கவும் இசை பயன்படுத்தப் பெறுகிறது. 'போர் தொடங்கிவிட்டது' என்று அறிவித்த முரசின் முழக்கமே ஓர் இசைதான்!

மனிதனின் மனத்தில் எழும் பல்வேறு வகை உணர்வுகளுக்கேற்ப இசையில் பல்வேறு வகைப் பண்களை அடிநாட்களிலேயே தமிழர்கள் கண்டிருக்கின்றனர். அது மட்டுமா? பொழுதுக்கு ஏற்ற பண்களையும் வகுத்திருந்தனர் தமிழ் முன்னோர்! மாலைப்பொழுதில் செவ்வழிப் பண்ணைப் பாடி மகிழ்ந்தனர். காலைப் பொழுதில் மருதப் பண்ணைப் பாடிக் களித்தனர். இப்படி எத்தனையோ! இசையின் திறத்தை அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால்

தான் இனத்தின் விழியாகிய மொழியை முப்பெரும் பிரிவாக வகுத்த போது இசைக்கு நடுவிடம்தந்து இசைத் தமிழ் என்றனர். இத்தகைய மாண்பை இசைபெற்றுள்ளதெனின் அதன் திறத்தை விரித்துரைக்க வேண்டுவதில்லை. என்றாலும் இசையின் ஆற்றலை எண்ணும்போது வியப்பே மேலிடுகிறது.

அலைகடல்போல் குழுமியுள்ள கூட்டத்தில் மக்கள் மனதை உருக்கும் ஆற்றல்பெற்ற சொற்பொழிவாளர் பேசிக்கொண்டிருக்கும்போது, அச்சடித்த பதுமைகளாக மக்கள் அமர்ந்திருந்தாலும் அருகேயிருந்து ஒலிபெருக்கி வழியே இனிய இசை காற்றிலே மிதந்து வந்தால், கூட்டத்தின் கவனம் முழுதும் திடீரென இசையின் பக்கம் திரும்பிவிடுகிறது! அறிஞர் வர நேரமாகிக்கொண்டே இருக்க ஆத்திரத்தால் தாக்குண்ட கூட்டம் அலைகடலாக இரைச்சலிட அப்போது மேடைமீது நின்று இனிய இசையை யாராவது பாடினால், ஆரவாரத்துடன் எழும் அலைகடல் அமைதி மிகுந்த பனிக் கடலாக உறைந்துவிடுவது போல அக்கூட்டம் ஆய்விடுகிறதல்லவா? பொங்கியெழும் சினத்தைப் பொசுக்கிச் சாம்பலாக்கும் ஆற்றல் இசைக்கு இருப்பதைத்தான் அது காட்டுகிறது! அம்மட்டோ?

இசை, தோட்டக்காரனாக இருந்து காதல் செடிக்கு நீர்மொண்டு ஊற்றுகிறது; விருந்து மண்டபத்தில் தாதியாக இருந்துப் புழுங்கும் உள்ளத்துக்கு மயில் விசிறியெடுத்து வீசுகிறது; துயரத்தால் தாக்கப்பட்டவனுக்குத் தோழனின் கண்ணீராக இருந்து ஆறுதல் அளிக்கிறது; சோர்ந்துபோன உள்ளத்துக்குத் தாயாக இருந்து அறுசுவை உணவை ஊட்டுகிறது! மனித உள்ளத்தை மட்டுமல்ல மற்ற விலங்கு பறவைகளைக்கூட இசை மயக்குகிறது.

நச்சு உள்ளம் கொண்டவர்களின் நயமொழி போல் கருத்தைக் கவரும் படமெடுக்கும் நாகம் இசைக்கு அடங்குவதை அறியாதார் யார்?

யாழ்மீட்டி ஒருவகைப் பறவையை மயங்கவைத்து வலைப்படுத்தும் செய்தியை இலக்கியமே கூறுகிறது!

தலைக்குமேல் கதிரவன் தணலைச் சொரியும் வேளையில் மரத்தடியில் அமர்ந்து குழலைத் தன் இதழ்களில் பொருத்தி இசைகிளப்பும் கோவலன், தன்னைப் பொறுத்தவரையில் சூழ்நிலையில் வெண்ணிலவு வீசச் செய்வது மட்டுமா, நடனசுந்தரிபோல் சலங்கை குலுங்கக் காற்றிலே அசைந்துசெல்லும் அந்த இசையால் சிதறிக் கிடக்கும் மாடுகளை மந்தையில் இணைக்கிறான்; மந்தையிலிருக்கும் மாடுகளை மகிழ்ச்சியில் அணைக்கிறான்! மாடென்ன, காட்டு யானையே இசைக்கு அடங்குகிறது.

பெரிய தினைப்புனம்: உயர்ந்த பரண். சிங்கம் போலும் வலிமையுடைய கானவன் கள்ளுண்டு களித்துக் கிடக்கிறான். அவனுக்கு மகிழ்ச்சி யூட்டுவதற்காக அவன் மனைவி குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள். பூசிய மயிர்ச் சாந்தினையுடைய பரந்த பெரிய கூந்தலைக் காற்று உலர்த்த அவளும் விரல்களால் கோதிக்கொண்டே பாடுகிறாள். அங்கே ஓர் அழகிய காட்சி! ஓர் இளயானை வாய்வைத்த தினைக்கதிரை உண்ணாது, நிலையிலிருந்தும் பெயராது, கண்கள் உறங்கிய நிலையில் நிற்கிறது. காரணமென்ன? கொடிச்சி பாடிய பாட்டு இள யானையை அந்நிலையில் நிறுத்திவிட்டது! இசையின் திறத்தை இவ்வாறு குறிக்கும். அகநானூற்று அடிகள் இவை:

உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கழுதிற் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்
பைதுவரல் அசைவளி யாற்றக் கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம்புகல் மழகளி றுறங்கும் நாடன்.

(அகம். 102).

பண்டைத் தமிழர்கள் இயற்கை வழி வாழ்வை நடாத்தியவர்களாதலால், அவர்களால் குருட்டு வரம்புகள் கோலப்படவில்லை. இடைக் காலத்தில் சிலர், சொல்லடுக்கு இன்பத்தில், போலிச் சங்கத்தில்—கருத்தைச் செலுத்தித் தமிழைக் குலைத்தனர். அவர்கள் பின் வந்தவர், பழந் தமிழர் நிலையை மறந்து, இடைக்காலத்தார் நிலையைத் தமிழ் நிலை என்று உணர்ந்து, தமிழ் வளத்தையே கெடுத்தனர். பழந் தமிழ் மலையும், அருவியும், யாழும், நிலவும், சோலையும் மன அமுதமாக இன்னும் அதன் அதன்கண் வாழ்வோருக்கு இன்ப உணவை அளித்து வருகின்றன.

திரு. வி. க.

மயில் ஏன் இருக்கிறது—கண் படைத்தவர்களுக்காகத்தானே! குயில் ஏன் கூவுகிறது—கேட்க முடிந்தவர்களுக்காகத்தான்! பசுமை நிறைந்த வயலும் இளமைபொங்கும் நிலாவுள்ள நீலவானும் இருப்பானேன்—ரசிக்கும் இதயம் படைத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான்! இருண்ட குடிசைகளும், மருண்ட வாழ்வு வாழும் மக்களும் ஏன் வாழுகிறார்கள்—சிந்திக்கத் தெரிந்தவர்களுக்கு வேலை கொடுக்கத்தானே! எல்லாம் இருக்கிறது இந்த உலகத்தில் மனிதனைத் திருப்திப்படுத்த. ஆனால் எதற்காகவும் இல்லாது தனக்காகவே வாழும் மனிதனால் அவற்றால் மகிழ்ச்சியடைய முடிவதில்லை!

அறிஞர் டி. கே. சீனிவாசன்

புறநானூறு

வெஞ்சினமும் பேருவகையும்

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.

தமிழ் இனத்தின் தனிச் சிறப்புடைய வரலாற்றில் 'பொற் காலம்' எனத் திகழ்வது, இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலமாகும். தமிழகம் அன்று பெற்றிருந்த பெருவாழ்வு அளவிட்டு உரைக்க இயலாததாம்.

அந்நாள், அறம் செங்கோலாக, அறிவு மணிமுடியாக, கடமை அரியணையாக, கற்பு கைவாளாக, வீரம் கொடியாக விளங்கித் திகழ தமிழ் அன்னை காவல் பூண்டாள். ஆண்களேயன்றிப் பெண்களும் மறக்குடி இயல்பை மறவாது போற்றினர். இளையரேயன்றிக் கிழவரும், மழலை மொழி பயிலும் சிறுருங்கூடப் போர் எனில் தோள் தட்டி மார்பு காட்டி முன்னின்றனர். பால் மணம் மாறாத பாலகராயினும், தாயகத்தின் உரிமை காக்க, மறக்குடியின் மானம் காக்க, இன்னுயிரையும் வழங்கத்தான் வேண்டும் என்று பெற்ற தாயரும் கருதியிருந்தனர். எனில், அக்கால வீரத்தை, கு;டியிலே கமழ்ந்த மானத்தை, உரிமைப் பயிருக்கு இட்ட 'தியாக' உரத்தை விளக்குவதும் எளிதாமோ ?

போரில் புறமுதுகிட்டான், படை இழந்து ஓடினான், தோற்றுத் திரும்பினான் என்பன போன்ற தொடர்களைக் காதுகளால் கேட்கவே வெட்கப்படுவர், வேதனை கொள்வர். ஐயய்யோ! இப்படியுமா செய்துவிட்டான்? அவனும் ஒரு ஆண் மகனோ? குடிப்பிறப்பும் பழுதாவதோ? பழியன்றோ சேர்த்துவிட்டான்? வீரக் குடியின் மானமும் தொலைந்ததே என்றெல்லாம் பெற்ற தாயும் உள்ளம் குமுறுவாள்! உடன் பிறந்தவளும் உற்றமனையாளும் மற்றவருங் கூட அவ்வாறே எண்ணிடுவர். எண்ணி, அவனோடு தமக்குள்ள உறவையே வெறுப்பர், உயிரும் துறப்பர்.

போர், போர்! என முழக்கம் கேட்டது. முரசம் அதிர்ந்தது. வீரர் திரண்டனர். தலைவன் கட்டளையிட்டான். படை புறப்பட்டது எல்லையை நோக்கி.

முதியவள் ஒருத்தி தன் பிள்ளையையும் வழியனுப்பிவைத்தாள் வழக்கம் போல. அவள் உள்ளம் காத்து நின்றது வெற்றிச் செய்தி கேட்க, வீரனுக்கு வெற்றி மாலை சூட்டிக் கண் குளிர.

மாலை வந்தது, காளை திரும்பவில்லை. உடலில் ஓடும் நரம்புகளெல்லாம் மேலெழுந்து, தோல் சுருங்கி, காய்ந்த சுள்ளியென வாடி மெலிந்த எலும்பு தோன்றும் தோள்களைக் கொண்ட அக்கிழவியின் உள்ளமும் வாடும் நிலை. 'அவன் படைக்கலம் இழந்து புறமுதுகிட்டான்' என்ற செய்தி அவள் செவியில் விழுந்தது. அங்குற்ற பலரே அவ்வாறு கூறினர்.

என் மகன் கோழையா? மானமிழந்து உயிர் காக்க ஓடினனா? எனக் குமுறலானாள். கோழை ஒருவனையா, பத்து மாதம் தாங்கிப் பெற்றேன்? பாலூட்டித் தாலாட்டி வளர்த்தேன்? வீர மரபும் வீணாயிற்றா? என்றெண்ணிக் கொதித்தெழுந்தாள்.

அடர்த்து வரும் போரில் அஞ்சி ஓடியவன் அவனாயின், அவன் உண்டு வளரப் பாலருத்திய என் மார்பை அறுத்திடுவேன் எனச் சூளுரைத்துக் கையிலே கிடைத்த வாளோடு களம் நோக்கி விரைந்தாள். தலையும் உடலும் சிதைந்து, தசையும் கொழுப்பும் சிதறிக்குருதி தோய்ந்து பரந்த களத்திலே கிடக்கும் பிணங்களையெல்லாம் கைவாளாலே புரட்டிப் புரட்டிப் பார்த்து வருகின்றாள் அக்கிழவி!

பலவற்றைப் புரட்டி விட்டாள், ஒன்றும் அவள் மகனாகத் தோன்றவில்லை! அடுத்து ஓர் உடலைக் கைவாளால் திருப்புகின்றாள்! முகத்திலும் மார்பிலும் ஆழப்பதிந்த புண்கள் பலவற்றால் சிதைந்து கிடக்கின்றது அப்பிணம்! ஒரு கணம் தயக்கம்! உருவழிந்து கிடக்கும் அவன், அவள் மகன் தானா? ஆம்! அவள் மகனே தான்! ஒரே பரபரப்பு! ஆ! என் மகனே தான்! மார்பிலே புண்! நெஞ்சிலே பாய்ந்த வேல்! ஆம்!
ஒரே திகைப்பு!

ஒருவேளை, முதுகிலும் பாய்ந்ததோ வேல்! முன் வைத்த காலைப் பின் வைத்தானோ? என்றெண்ணிப் புரட்டியும் பார்க்கின்றாள்! முதுகிலே காயம் இல்லை! அவனைப் போருக்கனுப்பியபோது, அவள் நின்று கண்ட அவனது பின்னழகு, முதுகுப் பொலிவு அப்படியே காட்சி தந்தது.

வீரம் பழுதாகவில்லை, மானம் காத்தான் என் மகன் என்றெண்ணினாள்! பெற்ற தாயின் வயிற்றிலே பால் வார்த்தான் அந்தப் பிணமான மகன்.

கைவாளைத் துறந்தாள்! காளையைத் தூக்கி அணைத்தாள்! களத்திலே அந்தக் காளை களிறெறிந்து பட்ட காட்சி அவள் நினைவாயிற்று. பெருமிதம் பிறந்தது. நா பேசவில்லை. உவகை வெள்ளம் கண்ணீராகப் பெருகிற்று. அவள் பெற்ற இன்பம், அம்மகனைப் பெற்றெடுத்த பொழுது எய்திய இன்பத்தையும் கடந்தது. கடமையைச் செய்த கண்ணியனைப் பெற்றோம் என்ற உணர்வில் வாழ்வின் எல்லையைத் தொட்டு நின்ற அவளது வீர உள்ளம், உவகையின் எல்லையையும் கடந்தது.

ஆம், இந்தக் காட்சியை நல்கும் பழம் பாடலும், காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவராலேயே பாடப்பட்டதாம்! புறநானூறு 278-ஆம் பாட்டே அதுவாகும். இதோ அது:

"நரம் பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழறிவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை ணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

தமிழின் பெருமை

தன்னைப் பழித்தவனைத் தாய்
தடுத்தால் விட்டுவிடு
தமிழைப் பழித்தவனைத் தாய்
தடுத்தாலும் விடாதே.

—பாரதி தாசன்

சீவக சிந்தாமணி

சிந்தாமணி புலவர் பண்டித நடேசனார்

பஞ்ச காவியங்களில் தலை சிறந்தது சிந்தாமணி எனும் ஜைன நூல். இதன் பெறலரும் பேராசிரியர் பாலசந்யாசி எனும் திருத்தக்க தேவர் ;* பிற்கால இலக்கியங்களாகிய கம்பராமாயணம், தணிகை புராணம், ரட்சண்யாத்திரிகம் முதலியவைகளுக்கு வால்மீகம் போன்று தமிழில் சிந்தாமணி மேல்வரிச் சட்டமாய் விளங்கியது. இன்றும் புலவர்க்கும், கவிஞர்க்கும், அறிஞர்க்கும் தெய்வமணியாம் சிந்தாமணி போன்று சீவக சிந்தாமணி உதவுகிறது. இம் மண நூலின் மணம் மேனாட்டிற்கும் சென்றதுண்டு. மங்களம் பொங்கும் மண நூலை யாண்டும் பயில்க ! ஓவியங்களாகவும் தீட்டுக !

* சீவகனின் பிறப்பு முதல் வீடுபேறு பெற்றவரை கூறும் சரித்திர நூலுமாகும்.

சீவகன் மதயானையை அடக்கல்

கண் உமிழ் தீயினால் சுட நிறம் கரிந்த போல்
பண் உமிழ் வண்டு உலாய்ப் பரத்தரா நின்றசீர்
அண்ணலங் களிற்றினை அடக்கினான் ஜீவகன் ;
வண்ணமேகலையினார் மனம் என மடிந்ததே.

1839.

இ - ள். கண்ணில் தீயால் சுடுதலின் நிறம் கருமையுற்றாற்போலும் வண்டுகள் உலாவப்பட்டுப் பரத்தலைத் தாரா நின்ற சீரையுடைய அம் மதயானையைச் சீவகன் அடக்கினான் ; அப்பொழுது சீவகனிடத்தே மகளிரது மனம் தாழ்ந்தால்போல அக்களிறு வந்து தாழ்ந்தது என்க.

உரைச் செய்யுளுக்கும் பாச் செய்யுளுக்கும் வேற்றுமை உண்டு. உரைச் செய்யுள் சுவரி லடித்துள்ள சுண்ணாம்பு போன்றது. பாச்செய்யுள் சுவரில் எழுதப் பட்டுள்ள ஓவியம் போன்றது. முன்னது காண்போர் மனத்தைக் கவராது; பின்னது கவரும்.

திரு. வி. க.

தாமரை சேற்றிலும் தண்ணீரிலும் முளைக்கிறது. ஆனால் அதை மலர்விப்பது யார் ! ஆகாயத்திலுள்ள சூரியன் ! சேறு தாமரையை வளர்த்தது என்பதற்காக யாரும் அதை ஒடித்துச் சேற்றில் போடுவதில்லை.

காண்டேகர்

சிவகன் சுரமஞ்சரியை மணத்தல்

“தேறினேன் தெய்வம் என்றே;
தீண்டிலேனுயின் உய்யேன்
சிறடி பரவ வந்தேன்; அருள்”,
எனத் தொழுது சேர்த்து,
நாறிருங் குழலினுளைநாகணை
விடையிற் புல்லிக்
கோல் தொடுத்து அறங்கன்
எய்யக் குழைந்து,
தார் திவண்டது அன்றே.

2071

இ-ள். “நின்னடியைப் பரவவந்தேன்; வந்த யான் நின்னைத் தெய்வம் என்றே கருதிப் பின்னர் மானிடம் என்றே தேறினேன்; இனித் தீண்டேனுயின் பிழையேன்; அருளாய்” என்று சேர்ந்து, காமன் மலரம்பு எய்தலால் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றி நாகை அணைகின்ற விடை போல் அணைய மாலை குழைந்து வாடிற்று, என்க.

மூடக் கொள்கைகளை உடைத்தெறிய எழுந்த புத்தர், கிறிஸ்து முதலியோர் தமக்கு மாறுபட்டாரைத் தாக்கிப் போர் புரிந்தாரில்லை. அக்காலக் கொள்கையில் பற்று வாய்ந்தோர் வாயினின்றும் பிறந்த வசை மொழிகளையும், கையினின்றும் பிறந்த அடி உதைகளையும் பெரியோர் பொறுமையுடன் ஏற்றே கடனுற்றி யிருக்கிருர். அவர் அடிச்சுவட்டைப்பற்றிச் சீர்திருத்தக்காரர் கடனுற்றுவராக.

‘சாதி வேற்றுமை தொலைந்தே’ தீரல் வேண்டும். அப்பேய் நாட்டில் உலவுமட்டும் நாட்டுக்கு உய்வில்லை என்பது உறுதி. சாதிப் பேயை எவ்வாறு ஓட்டுவது? பேச்சாலும் எழுத்தாலும் அப்பேய் ஓடாது. நடைமுறையில் படிப்படியாக அப்பேயை ஓட்ட முயலல் வேண்டும்.

திரு. வி. க.

“வாழ்க்கை கலையா? கவிதையா? அல்லது வெறும் வரவு செலவு கணக்குத்தானு?

“கலையுமல்ல—கவிதையுமல்ல. வாழ்க்கை ஓர் இயந்திரம்! அதை இயக்குபவர்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது அது கலையாவதும் கவிதையாவதும்!”

“ஏன் எல்லோராலும் அதிலிருந்து இன்பத்தைப் பெற முடியவில்லை! அத்தனை பேரும் திறமையற்றவர்களா?”

“இல்லை! இயந்திரம் பழுதுபட்டிருக்கிறது. இன்றைய சமுதாயத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வால் ஓட்டை இயந்திரங்களைப் பெற்றிருக்கிருர்கள் பலர். இயந்திரத்தையும் திருத்த வேண்டும் — இயக்குபவர்களுக்கும் திறமையை உண்டாக்க வேண்டும்.”

அறிஞர் டி. கே. சீனிவாசன்

திருவாசகம்

மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

இளநங்கை யொருத்தி. இளமையின் துடிப்பும் பூரிப்பும் அவளுடைய ஒவ்வொரு அவயவங்களிலும் கணத்திற்குக் கணம் விம்மி நிற்கிறது. அவள் மனம் பிரிந்த காதலனை எண்ணி எண்ணி இன்பத்தால் விளைந்த துன்பத்தை அடைகிறது. இந்த நிலையில் அவளுக்கு உற்றதுணை தேவையாகிறது. சுற்றிலும் பார்க்கிறாள். கருத்தறிந்து கடிதிற் சென்று காரியம் முடிக்கும் துணை குயில்தான் என்ற முடிவுக்கு வருகிறாள்.

பிரிந்த காதலனோ இளவேனில் வரட்டும், நான் தவறாமல் வந்து விடுவேன் என்று சொல்லிச் சென்றவன். இப்போது மரங்கள் எல்லாம் இலையுதிர்த்து புதுத் தளிர் பொருந்தியுள்ளன. மாமரம் அரும்பிப் பூத்தும் இருக்கின்றன. கொடிகள் யாவும் பூத்த மங்கையரைப்போலக் பூக்குலுங்கி அசைந்தாடுகின்றன. வண்டுகளும் மான்களும் இணைந்து திரிகின்றன, இருந்தும் தலைவன் வரக்காணவில்லை. அதனால்தான் தூதாவது அனுப்பலாம் என்ற முடிவுக்கு வருகிறாள். குயிலை வேண்டிக்கொள்கிறாள்.

"குயிலே! உன்னைப் பார்த்தால் எனக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது. இந்தா உனக்கு நான் தோழி. கொஞ்சம் என் கணவன் வரும்படிக் கூவு பார்க்கலாம்.

கணவன் யாரென்று கேட்கிறாய்! அவர்தான்; தெரியாதா? பெருந்துறையார், பாண்டியன், சேரன், சோழன் எல்லாரும் அவர்தான்.

ஆகா! அவர் மேனி பொன்னைப் பழித்தமேனி. அவரைப்பற்றி ஊர் உலகமெல்லாம் விடாமல் புகழ்ந்து பேசிக் கொள்கின்றன. அன்றைக்கு ஒருநாள் குதிரைமேல் வந்தார் பாரு, அவர்தான். எப்படியாவது இங்கே ஒரு முறை வரும்படியாக உரக்கக் கூவு பார்க்கலாம்" என்று வேண்டிக் கொள்கிறாள்.

இப்படி ஒரு பெண் நிலையில் இருந்து ஆண் மகன் ஒருவர், அவர்தான் மாணிக்கவாசகர், வேண்டிக் கொள்கிறார். காதலனைப் பிரிந்த காதலி நிலைமையும் கடவுளை நேசித்த அன்பர் நிலையும் ஒன்றுதான்.

உன்னை யுகப்பன் குயிலே! உன்துணைத் தோழியு
மாவன்
பொன்னைப் பழித்தநன் மேனிப் புகழிற் றிகழு
மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரவன் சோழன் சீர்ப்புயங்கன் வரக்
கூவாய்.

கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக
அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள் நயந்த
நல்லோர் நினைத்த நலம் பெருக நன்று நினைத்
தெல்லோரும் வாழ்க இசைந்து.

—அருட்பெருஞ்ஜோதி வள்ளலார்

சென்னை
காஸினோ
பிரபாத்
ஸரஸ்வதி
மற்றும்,
தமிழ் நாடெங்கும்
கணவனே
கண் கண்ட
தெய்வம்
நடனங்கள்
கேவா கலரில்
டைரக்ஷன்
T.R. ரகுநாத்
அஞ்சலி தேவி · லலிதா · கணேஷ் · நாகய்யா
நம்பியார் · பிரண்ட் ராமசாமி
முத்துலக்ஷ்மி · ராஜம் நடித்தது...
நாராயணன் கம்பெனி தயாரிப்பு
BAKTHA.

சுகாதாரத்திற்கு உகந்ததாயும், நீடித்த உழைப்பும், உறுதியும், கருக்காததும்,
கைக்காததும், விசேஷ காலங்களில் வெகுமதியாக அளிப்பதற்கு
விலை மலிவானதுமான, உங்கள் வீட்டிற்கு தேவையான



எவர்சில்வர் பாத்திரங்களுக்கு

கீழ்காணும் கடைக்கு விஜயம் செய்யுங்கள்.

கிரௌன் & சூரியன் மார்க்கு அலுமினியம் பாத்திரங்கள்
குடும்பங்களுக்கு பிரசித்திப்பெற்றவை.

M. A. E. N. மார்க்கு அலுமினியம் வார்ப்புப்
பாத்திரங்கள் ஒவ்வோரு வீட்டிற்கும்
ஒரு விசேஷ அம்சம்.

*

M. A. எத்திராஜுலு நாயுடு

7/4, ஈவினிங் பஜார், சென்னை-3.

போன் நெ. 4106.

அடிகளாரும் அறிஞரும்

(மறைமலை அடிகள்)

கலைத்துறை முற்றிய புலத்துறை முதல்வர்
புலமைச் செம்மலார்
அறிஞர் தலைவர்
சான்றோர் மணி
தமிழகத்தின் ஞானமணி விளக்கு
அறிவுலகத்தின் ஆராய்ச்சி ஞாயிறு
சைவவானத் தமிழ் நிலாவின் தண்ணொளி.
தமிழ்ப் பெருங்குடல்
உணர்வுப் பெருவெளியில் ஒளிவீசும் சுடர்
புலமையின் புகலிடம்.
தமிழின் தனியரண்.
புது நெறிகள் வகுத்தவர்
அஞ்சாத சிந்தனையாளர்
இமயமலை, பொதிய மலை இவற்றை
எல்லாம்விட பெரியமலை
செந்தமிழின் ஊடற்றழகு செங்நாவினர்.
தமிழ் வளர்த்த தந்தை.
வான்முறை வாழாது மும்மொழிப்
புலமை பெற்ற முதுபெரும் புலவர்
வடமொழி நல்லுநர்
ஆங்கில அறிஞர்.
தூய தமிழைச் சுவை சொட்ட விளைத்த
குகைக் குன்று
பழந்தமிழர் நாகரிகம் பறைசாற்றிய
பாவலர்
சீர்திருத்தச் செம்மல்
இரண்டாம் இளங்கோ அடிகள்
தமிழ் பாதுகாவலர்
ஆராய்ச்சிக் கருவூலம்
கள்ளத் துறவைக் கடிந்தவர்

(திரு. வி. க.)

அறிவுப் பேராறு, அன்பின் ஊற்று.
தனித்தமிழ்க் கலங்கரை விளக்கம்.
உயிரோடு வாழ்ந்த கலைக் களஞ்சியம்
தனித் தமிழுக்குத் தலைமைத் தளபதி.
உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு, என
உழைத்த உத்தமர்.
செந்தமிழண்ணல்
புலவர் பெருமகனார்.
தன்னலந் துறந்த தனிப் பெருந்தகை.
அறத்தின் தாய்
தொழிலாளர் தோழன்.
இராயப்பேட்டை முனிவர்.
எழுத்துலகப் பேரறிஞர்.
சமரச சன்மார்க்க ஞானி.
தமிழகத்தின் அறிஞர்
அறிஞருள் பேரறிஞர்.
அன்பு பூண்டொழுகிய அந்தணர்
அறநெறி வழுவாதவர்
செந்தமிழுக்குச் சிறப்பளித்த செம்மல்
பெண்ணினத்திற்கு பெருமை யளித்தவர்
அறன்பொழியும் வான்முகில்
நேர்மைக்கோர் தனியுருவு.
பாநலம் பயின்ற பண்பினர்
கலை ஊற்று.
அறிவுக் கடல்
அன்பின் ஆறு
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அருள் பழுத்த உள்ளத்தார்
அருமைமிகு கலைக் குரிசில்

மறைமலை அடிகள்

கொழும்பு பல்கலைக் கழகத்திலும் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலும் அடிகளாரின் நூல்கள் பாடமாக வைக்கப்பெற்றாலும், நம் நாட்டுப் பல்கலைக் கழகங்கள் அவற்றைப் பாடமாக வைத்தால் மாணவர்க்கு அறிவு மிகுதியாகிவிடுமே என்று அஞ்சி பாடமாக வைப்பதில்லை !



திராவிட வித்யாபூஷணம், தாக்ஷிணாத்ய கலாநிதி
மஹாமஹோபாத்தியாய அறிஞர்

உ. வே. சுவாமிநாத அய்யர்

மாகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்களின் சீடர். பழைய காலத்து ஏட்டுச்சுவடிகள் கிராமங்களில் இருந்தன. அவற்றைப் படிக்கவோ பார்க்கவோ உரியவர் கொடுப்பதில்லை. அவைகளை அறிந்து, வண்டிகள்கூட செல்ல இயலாத இடங்களில் நடந்து பல ஊர்களில்தேடி இறுதியில் வெற்றி பெற்றார், இந்தத் தமிழ் தாத்தா.



திரு. வி. கலியாணசுந்தரனார்

அன்பர் **கலியாணசுந்தரனார்** அவர்களின் தமிழ்த் தொண்டை நானே நன்றாய் அறிந்தவன். அவரது தமிழ்த் தொண்டுக்கு எடுத்துக்காட்டு வேண்டுமானால், நானே யாவேன். நான் தமிழ் பேசுவதும், எழுதுவதும் தப்பாக இருந்தாலும், நான் பல பத்திரிகைகள் நடத்துவதும், சுமார் 50, 60 புத்தகங்கள் வெளியிட்டதும், அன்பர் திரு. வி. க. அவர்கள், தமிழ் மொழியில் "தேசபக்தன்." "நவசக்தி" முதலியவற்றின் தொண்டே ஆகும். திரு. வி. க. அவர்களின் "தேச பக்தன்" பத்திரிகைக்குப் பிறகே, தமிழ், அரசியல் மேடைகளைக் கைப்பற்றிற்று என்று சொல்லுவேன். அரசியல் தலைவர்களையும் தமிழ் அடிமை கொண்டதற்குக் காரணம் அவர்களது பத்திரிகைகளேயாகும். அப்பத்திரிகைகள் என்னைவிட மோசமானவர்களையும் தமிழ் மொழியில் அரசியலை உணரவும், தமிழ்ப் பேசவுஞ் செய்துவிட்டதால், தமிழ் மொழியைக் காதால் கேட்டால் தோஷம் என்று கருதும் சாதியாரும் தமிழில் கலந்து கொள்ளவும், தமிழை ஒப்புக்காவது மதிக்கவும் செய்துவிட்டது."

சென்னை,
13—1—'36.

பெரியார் ஈ. வே. ராமசாமி நாயக்கர்.

அப்போது...



தாயான கடல் தழுவும் குமரியிலிருந்து அத்தாயின் குழந்தைகளான மேகங்கள் தவழும் இமயம்வரை தமிழர் புகழ் பரவியிருந்தது. முத்தமிழ் வளர்த்த மூவேந்தர்களின் மூன்று கொடிகளும் இமயத்தின் முடியிலே பறந்து தமிழர் போர்வீரம் பாடின. ஜூலியஸ் சீசர் தன் படையெடுப்பைப்பற்றி, 'வந்தேன். கண்டேன்—வென்றேன் !' என்று கூறினானும். ஆனால் மூவேந்தர்கள் இமயப் படையெடுப்பைப்பற்றிக் கூறும்போதெல்லாம் சீசர் போல மூன்று நிகழ்சிக்களைக் கூறுவதில்லை—இரண்டே நிகழ்ச்சிகளைத்தான் கூறுவர். 'சென்றேன்—வென்றேன்!' என்று இரண்டே நிகழ்ச்சிகளைத்தான் கூறினர் மூவேந்தர். அவர்களின் இமயப் படையெடுப்பு இப்படி இரண்டே நிகழ்ச்சிகளில் அடங்கிவிட்டது. இமயம்வரை குமரிமுதல் தமிழர் புகழ் என்றால் அந்தப் புகழ் எத்துணையளவு நீண்டு எத்துணையளவு பரந்து இருந்திருக்கவேண்டும்! இது அப்போது.........! ஆனால் இப்போது.........?

சாவும்

சாதியை முன் நிறுத்தினால் சண்டைகள் கிளம்பும்
சமயத்தை முன் நிறுத்தினால் பிணக்குகள் ஏற்படும்
கட்சிகளை முன் நிறுத்தினால் போராட்டங்கள்
உண்டாகும்
மொழியை முன் நிறுத்தி அனைவரும் தமிழராக ஒன்று
பட்டால்
முன்னது மூன்றும் சாவும்.

கி. ஆ. பெ. விசுவநாதம்

தமிழ் மகனே

உனது மொழியைத் தமிழ் என்று கூறு.
உனது கலையைத் தமிழ்க்கலை என்று சொல்.
உனது பண்பைத் தமிழ்ப் பண்பு என்று கருது.
உனது நாட்டைத் தமிழ் நாடு என்று அழை !
நீ தமிழன் என நினை ! மறவாதே !
மறந்தால் உனக்கு வாழ்வில்லை.

கி. ஆ. பெ. விசுவநாதம்

இப்போது...

......நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்றுநித்தம் தவம்செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு!

—என்று பாரதியார் பாடினார். குமரி கடல் ஓரத்தில் நின்று தவம்செய்கிறாள். ஏன்? பரவியிருந்த தமிழ் நாட்டின் பகுதியைப் பசியோடு குடித்த கடல் மீண்டும் மீண்டும் அலைக்கை நீட்டுவதைக் கண்டு 'வேண்டாம்! வேண்டாம்! தமிழ் நாட்டைக் குடிக்க வேண்டாம்!' என்று வரம்கேட்கவா தவமிருக்கிறாள், குமரி? அப்படியிருக்காது! தமிழர் தம்முடைய மொழியை மறந்தனர்—இனத்தை மறந்தனர்—நாட்டின் உரிமையைத் துறந்தனர். இந் நிலைகண்ட குமரி இப்படிப்பட்ட தமிழ் நாடு முழுதும் கடல் அலையில் மறைந்துவிட்டால், 'ஒரு பெரிய இனம் பெருமையுடன் வாழ்ந்தது—கடலால் கவரப்பட்டு அழிந்தது! என்ற சிறப்பாவது வரலாற்றில் நிற்கும்—இப்போதுள்ள சூழ்நிலை மறையும் என்று கருதித்தான் 'அலைகடலே! ஓடிவா! தன்னைமறந்த தமிழ் நாட்டைக் கவர்ந்துக்கொள்-' என்று வரம் கேட்கத்தான் தவமிருக்கிறாள் குமரி-நிந்தம் நித்தம் தவமிருக்கிறாள்!

இப்படி எண்ணித்தான் பாரதியார் பாடியிருக்க வேண்டும். அடுத்த அடியிலே 'புகழ் மண்டிக்கிடக்கும் தமிழ் நாடு' என்று கூறுவதிலேயே அவர் மனப்புழுக்கம் புலனாகிறது. குமரிமுதல் இமயம்வரை பரவிய புகழை, வேங்கடம் முதல் குமரிவரை திணிப்பதென்றால் அது எப்படி இருக்கும்! மண்டித்தானே கிடக்கும்!

நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்றுநித்தம் தவம் செய் குமரி எல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு

என்று பாட்டில் இப்போதுள்ள தமிழ்நாட்டின் எல்லையை மட்டுமல்ல, அப்போதிருந்த தமிழர் பகையை எண்ணியதால் ஏற்பட்ட தொல்லையையும் கூறுகிறார் பாரதியார்!

தமிழ்—ஒரு வான விளக்கு !!

மயிலை சண்முகசுந்தரம்

வானத்து வெண்ணிலாவும், விண்ணுயர்ந்த மலை முடியும், விரிந்த பெருங்கடலும், வளைந்தோடும் நல்லாறும், உலகின் அழியாத சொத்துக்கள் ! ஒளிவிடும் தாரகையும், மழைவிடும் மேகங்களும், உலகில் என்றுமே நிலைத்திருக்கும்! கதிரவன் ஒளியும், தென்றலின் இனிமையும் உலகு உள்ளளவும் அழியாது !! அதைப் போலத்தான் நமது அருமைத் தமிழும், தோன்றி வளரும், எதிர்காலப் புது நெஞ்சங்களிலெல்லாம் என்றுமே ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் அழியாத பெரும்பொருள் !

அகத்தியர் வகுத்த தமிழ்! தொல்காப்பியரும், வள்ளுவரும், போற்றிவளர்த்த தமிழ் ! நக்கீரரும் இளங்கோவும், மதித்து உரையாடிய தமிழ் !—சாத்தனாரும், பவனந்தியும், ஔவையும், புகழேந்தியும், நாடெல்லாம் உலவி வளர்த்தமிழ்! கண்ணுதற் பெருங்கடவுளும்,முடியுடை மூவேந்தர்களும், கழகங்களால் காத்த தமிழ் ! அந்த தமிழைத்தான் அழியாத பெரும்பொருள் என்கிறோம் !! அணையாத வானவிளக்கென்கிறோம் !!

தமிழ் உணர்வால் சிந்தை குளிரும்! தமிழ்கற்றதால் நெஞ்சம், பூரிக்கும் ! தமிழ் மகனென்றழைக்கப்படுவதால், உள்ளமெலாம் களிப்பால் கூத்தாடும் ! தோண்டி எடுக்கப்படும் பொன்னும், வெட்டியெடுக்கப்படும் வைரமும், மூழ்குவதால், கிடைக்கும் ஒளி முத்தும், செம்பரிதியும், முழுமதியும், வானவில்லும், வளர்பிறையும், நீள் மலையும், நெருங்கடலும் புகழ் நாடும், புவியரசும், ஒருங்கே இணைந்து நின்றாலும், ஒரு தமிழ்மொழிக்கு இணையாகாது என்பதுமட்டும் திண்ணம் ! மண்ணிடை மல்கிக் கிடக்கும். எத்தனையோ ஆயிரம் மொழிகளுள் இனிது தமிழ் மொழிபோல் இனிதாவது எங்குமே காணோம்! இலக்கணத்தால் வரம்பமைத்து; எளிமையால் இனிமை சேர்த்து; தூய்மையால், தலைநிமிர்ந்து நிற்கும் மொழிகளுள் நமதமுதத் தமிழ் மொழிபோல், இன்றுவரை எதுவுமே இருந்ததாகவோ இருப்பதாகவோ தெரியவேயில்லை ! இளமையும் எழிலும், வனப்பும், வாய்மையும் ஒருங்கே தோய்ந்தூறிய இதய மொழிதான் தமிழ் ! அந்தத் தமிழ்மொழியைத் தான் போற்றுகின்றோம் !

மனித இனமே முதல் முதல் தோன்றி வளர்ந்த 'லெமூரியாவில்' மனிதனின் தேவைகளையும், எழுச்சிகளையும், எண்ணங்களையும், ஒருசேரத் தொகுத்து முறையாக அறிவிக்கப் பயன்பட்ட ஒரே மொழி—தமிழ் ! கையசைப்பால் செய்கைகாட்டி; முகபாவத்தால் நுணுக்கமுணர்த்தி; பயத்தையும், மகிழ்வையும் தனித்தனியே அறிவிக்க, புதுச் செய்கை முறைகளைப் பயன்படுத்திய மனிதனுக்கு, காலவேகம் மொழி நுணுக்க முறைக்குத் தொடங்கியது ! எண்ணத்தை முதலில் எழுதிக்காட்ட முடியாவிட்டாலும், பொருள்களையும், தேவைகளையும், சிறுசிறு ஓவியம் தீட்டுவதன் மூலம் வரைந்துகாட்டி, எதிரிலிருந்தவர்களைப் புரிந்துகொள்ளச் செய்திருக்கிறான் மனிதன் ! அந்த முறை அதிகமாகப் பயன்படாமையால், மொழியொன்றை அமைக்க அவன் அரும்பாடுபட்டிருக்கிறான் ! காகம் கரையும்போதும், மாடுகள் சத்தமிடும் போதும், குயில்கள் கூவுகின்ற போதும், அவன் ஒலிகளைமட்டும் கேட்பதில்லை ! அதிலே புதிய மொழிக் குறிப்புக்கள் ஒலிப்பதைக் கண்டெடுத்திருக்கிறான் ! அதனை வெகுநாட்கள் வரையில் கூர்ந்தும் கவனித்திருக்கிறான் ! அப்படிக் கவனத்தின் எதிரொலியென இவனுக்கென ஒருமொழிக் குறிப்பையும், அமைத்துக் கொண்டிருக்கிறான் ! அத்தகைய அருமையான மொழிக்குறிப்பின் தொகுப்புத்தான் நமது இனிமைத் தமிழ் !

எனவே, தோன்றி வெகு நாட்களாகிவிட்டது தமிழ் ! உலகம் தோன்றும்போதே தமிழ்தாய், ஆனந்தத் தாண்டவமாடியிருக்கிறாள் ! உலகிலே வழங்கும் 7500 மொழிகளுள் தமிழ் மொழிபோல், தொன்மையும் சிறப்பும் கொண்ட மொழியோ—சீரிளமை கொண்ட மொழியோ—உலகிலே இன்றுவரை தோன்றியதாகவே சரித்திரக் குறிப்பில்லை !. எல்லாமொழிக்கும் சில நூறு ஆண்டுகள்தான் வயது; ஆனால் தமிழ்தாய்க்கு அதுவல்ல வயது ! வரலாறும், ஆராய்ச்சியும், கூறுகின்றபடி நோக்கினால், தமிழின் தொன்மையை எம்மொழியும் பெற்றிடமுடியாது ! இக்காரணம் பற்றியே தமிழ், மன்னர்களாலும், மக்களாலும், வளர்க்கப்பட்டு; புலவர்களாலும், கவிஞர்களாலும், புதுமை மருகும், இலக்கியச் செறிவும் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது. எவ்வளவோ ஆயிரம் காவியங்கள். எத்தனையோ அருமையான இலக்கியங்கள்—எவ்வளவோ நாகரிக மறுவிக்கும் தமிழ் நூல்கள், எத்தனையோ அரசியல், நீதிநூல்கள், எவ்வளவோ கவிதைக் குவியல்

கள்—தமிழ்மொழி பெற்றெடுத்த அருமைச்செல்வங்களிவைகள் !

தமிழுக்கு எவ்வளவோ எதிரிகள் தோன்றியும் இவைகளெல்லாம், இன்றும், இன்னும் பெருமிதத்துடன் உலவிடக்காணுகிறோம் ! வெள்ளத்திலே கொட்டிக் குவிக்கப்பட்ட ஏடுகள், தீயிட்டுக் கொளுத்தப்பட்ட ஏடுகள், செல்லரிக்க மறைமுகமாகக் குவித்துவைக்கப்பட்டிருந்த ஓலைச் சுவடிகள், பதினெட்டாம் பெருக்கிலே வாரி வீசியெறிப்பட்ட ஏடுகள் போன்ற எவ்வளவோ அருமை இலக்கியங்கள் பாழாகி அழிந்திட்டபோதிலும், இன்றும் தமிழ் வாழுகிறது ! இளமை கமழ, இலக்கியச் செறிவும், மொழி நுணுக்கமும், ஒளிவிட, தமிழகத்திலேமட்டுமல்லாமல்; பல்வேறு நாடுகளிலேயும் புகழும், சிறப்பும் பெற்று வாழுகிறது தமிழ் ! இளமை குன்றாத அந்தக் கன்னித் தமிழ் இன்றும் வளர்ந்துகொண்டேயும் இருக்கிறது. உலகம் உள்ள அளவும் அது வளரத்தான் செய்யும் ! உலகம் தோன்றும்போது தோன்றிய மொழி, உலகம் மறையும்போதும், இருந்துதான் மறையும் ! இவ்வொரு காரணம்பற்றித்தான் தமிழை போற்றுகிறோம் ! உலகின் உயர்வான மொழி தமிழ்—என்கிறோம் ! தமிழோடு சமீபகாலம்வரை எவ்வளவோ மொழிகள் மோதி யிருக்கின்றன ! இருந்தாலும் தமிழ் வாழுகிறது ! அதுதான் அதற்குள்ள தனிச்சிறப்பு !

மூவாயிரம் ஆண்டுகளாக தமிழுக்கு எவ்வளவோ ஆபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன ! பேச்சு வழக்கற்ற சமஸ்கிருதம் தமிழோடு மோதியிருக்கிறது ! ஆனாலும் சிதைந்திருக்கிறது ! படையெடுப்பாளரின் ஒவ்வொரு மொழியும் நாகரிகமும் நம் தாய்மொழியோடு மோதியெழுந்திருக்கிறது; ஆனாலும் தமிழ் பிழைத்திருக்கிறது ! பாரசீகமும், கிரேக்கமும், முகலாயமும், டச்சும், போர்ச்சுகலும், பிரெஞ்சும், ஆங்கிலமும், இந்தியும், தமிழோடு மோதி யெழுந்திருக்கின்றன; என்றாலும் தமிழ் இன்றும் வெற்றிக் களிப்புடன்தான் பவனி வந்துகொண்டிருக்கிறது ! அதுதான் அதற்குள்ள தனிச்சிறப்பு ! உலகின் எம்மொழிக்குமில்லாத சிறப்புச் செல்வமும் அதுதான் !

உலகின், ஒரு நாட்டை அழித்தொழித்து அதன் எல்லைகளை அடிமைகொள்ள வேண்டுமென்றால், முதலில் சிதைக்கப்படவேண்டியது அந்நாட்டின் மொழிதான், அது சிதைந்தால், அந்நாடு தானாக அழிந்துபடும்—வீழ்ந்து விடும் ! இந்த இலக்கணம் அறிந்தவர்கள் உலகின் அத்தனை யெடுப்பாளர்களும் ! பிரிட்டாவிய நாடு ரோமானியர்களால் அடிமை கொள்ளப்பட்டபோது; ரோமானிய நாகரிகமும், மொழியுந்தான் அங்கே பரவியது ! அதைப் போலத்தான் நம் மிந்திய துணைகண்டமும், பல்வேறு மொழிகளால் நிரம்பி வழிந்திருக்கிறது ! ஆரியர்கள் படையெடுத்த போது ஆரியம்—பாரசீகர்களும், கிரேக்கர்களும் வந்தபோது பாரசீகமும், கிரேக்கமும்—முகலாயர் வந்தபோது முகலாயம், டச்சுக்காரரும், போர்துக்கேஸியரும், பிரெஞ்சுக்காரரும், வெள்ளையரும் வந்தபோது முறையே, டச்சு மொழியும், போர்த்துக்கேஸிய மொழியும், பிரெஞ்சு மொழியும், ஆங்கில மொழியும்—இறுதியாக வடவர் ஆளும்போது இந்தி மொழியும்—நம்மைப் பல்வேறு கோணங்களிலே யிருந்தும் தாக்கியழித்த வண்ணந்தான் வந்திருக்கிறது என்றாலும், நாமும் நமதருமைத் தமிழும் அழியவில்லை ! ஒரு நாட்டைச் சிதைத்தொழிக்க, முதலில் அந்நாட்டின் மொழியைக் கொன்று விடு !' (If you want to kill a nation, first, kill its Language) என்ற தந்திர வாக்கியம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பலிக்கவில்லை ! எனவே எவ்வளவு மாண்புடையது தமிழ்மொழி என்று எண்ணிப்பாருங்கள் !

இக்காரணம் பற்றித்தான்,

"பல்லுயிரும், பலவுலகும், படைத்தளித்துத்
துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி
இருப்பதுபோல,
கன்னடமும், களிதெலுங்கும்,
கவின்மலையாள முந்துறுவும்
உன்னுதரத்துதித் தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந்
தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல்மறந்து வாழ்த்ததுமே"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் வாயார வாழ்த்தியிருக்கிறார்கள் !

ஆக, தமிழ்மொழியை, நாம் வாழ்த்தி, போற்றி வணங்குவது நமது கடமை என்பது ஒருபுற மிருக்க; மேலைநாட்டார் போற்றி வாழ்த்தியிருப்பதை நம்மாலே மறக்க முடியவில்லை ! தமிழுக்கு அழியாத புகழ் தேடுவது அவர்கள் தந்த அமுதவாக்கியங்கள் தான் ! அவை, அனைத்தையும் இங்கு ஒரே அடியாக தொகுத்துக் குறிப்பிடுவது இயலாத காரியம்தான். ஆனாலும், தமிழை வாழ்த்திய மேலைநாட்டுப் பேரறிஞர்களின் பெயர்களையாவது நாம் தெரிந்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகும் !

தமிழ் வாழ்த்திய இத்தகைய பேரறிஞர்களான, கால்டுவெல், தெமர்லே, ஸ்மித், பார்னெட், பெர்சி

வெல், ரேனே, ராபர்ட்ஸன், G. U. போப், வின்சன், போன்ற பெரியார்களின் பெயர்களை நம்மாலே மறக்க முடியவில்லை! திருக்குறளும், சிலப்பதிகாரமும், சங்க நூல்களும், தொல்காப்பியமும், நம்மிடையே இருக்கும் வரையில், தமிழின் பெருமையும், தமிழமுதின் இனியும் எவராலும் மாற்றிடமுடியாது! ஆனால் இவைகளை வைத்தே இனியும் புகழ்பாடிக் கொண்டிருப்பதை விட, மேலும் மேலும், புதிய இலங்கியங்களை உருவாக்குவதும் நமது நீங்காத கடமையும், பிறப்புரிமையுமாகும்! புதிய தமிழ் இலக்கியங்கள் மேலும் மேலும் உருவாக வகை செய்தல் வேண்டும்!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகள் குறிப்பிடுவதைப்போல, ''எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும். இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்''—''செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும். எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால் இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்!'' என்ற உயர்பொருளை மனதில் கொண்டு தமிழ்ப் பணியாற்ற வேண்டும் நாமெல்லாம்! அப்போதுதான் 'தமிழ் புவி' தனிப் புவியாகும்! தமிழர் வாழ்வு மணங்கமழ்ந்ததாகும்!

சிலப்பதிகாரம்



வேட்டுவவரி

தமிழகத்தில் சுதந்திரப் போருக்கு வித்திட்ட பெரியார் வ. உ. சிதம்பரனார். அவ்வித்து கன்றானவுடன் அதைத் தம் உழைப்பென்னும் எருப்போட்டு தியாகம் என்னும் தண்ணீர் வார்த்து வளர்த்து, வீரம் என்னும் வேலியிட்டுக் காப்பாற்றியவர்கள் மூவர். அவர்கள் டாக்டர் வரதராஜுலு நாயுடு, திரு. ஈ. வே. ராமசாமி நாயக்கர், அறிஞர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆவர்.

—தமிழர் தலைவர் ம. பொ. சி.

1



2

3

1.ரா.பி.சேதுப்பிள்ளை.

2.மு.வரதராசனார்.

3.கி.வா.ஜகந்நாதன்.

4.இரா.நெடுஞ்செழியன்.

5.அ.ச.ஞானசம்பந்தம்.

6.புலவர் குழந்தை.

7.பண்டித நடேசனார்.



4

5

6

7

1



2



3

கி.ஆ.பெ.விசுவநாதம்.1
திருக்குறள் வி.முனுசாமி.2
க.அன்பழகன்.3
டி.எம்.பூ.பதி. 4
ச.தண்டபாணி தேசிகர். 5
நா.பாண்டுரங்கன்.6
கௌதமன்.7

4



5



6

7



அந்த அரசிளங்குமரனை உலகின் துன்பம் கண்ணில் படாதவாறு வளர்த்தனர். ஆனால் அவனே உலகின் துன்பத்தை அதுவரை எவரும் தொடாதவாறு தன் கருத்தால் தொட்டான்! அந்த அரசிளங் குமரனை அரண்மனைக்கு மட்டுமே சொந்தம் என்று வளர்த்தனர். ஆனால் அவனே அகில உலகத்திற்கும் சொந்தமானான்!

அந்த இளவரசனை மனதை மயக்கத்தில் ஆழ்த்தும் மகிழ்ச்சி அருவியிலேயே எப்போதும் குளிக்க வைத்தனர். ஆனால் அவனே மனதை இயக்கத்தில் நிறுத்தும் கவலைத் தீயில் குதித்தான்! ஆடும் மயில் அவன் மனைவி—கொஞ்சும் கிள்ளை அவள் பிள்ளை—செல்வம், சுகம், செங்கோல் இவை அவன் உத்தரவுக்குக் காத்துக் கிடந்த சேவகர்கள். ஆனால் அவனே இவர்கள் எல்லோரையும் இந்த எல்லாவற்றையும் விட்டு விலக்கி விட்டுக் காவியணிந்து நடந்தான் காட்டை நோக்கி! மக்கள் வாழ்வில் மலரும் துன்பத்தின் காரணத்தை அறியக் கிளம்பினான் அவன். அதனால் அவன்வாழ்வே துன்பத்தில் ஆழ்ந்தது. கவலை கொள்ளவில்லை.

இரத்தின கம்பளத்தில் மட்டுமே நடந்து செல்லும் அவன் பாதங்கள் நெருஞ்சி முற்களில், பருக்கைக் கற்களில், காட்டில், மேட்டில் எங்கும் சுற்றி யலைந்தன. வேதங்கள் அவ்வளவும் அலசிப் படித்தான்; வேதாந்திகளின் உபதேசங்களைக் குடித்தான்; முனிவர்களோடு வாதம் செய்தான்; கனியும் கந்தமூலங்களும் உண்டு அவர்களைப் போலவே வாழ்ந்தும் பார்த்தான். அதுமட்டுமா! உடம்பின் எலும்புகள் ஒவ்வொன்றும் வெளியே தெரியும்படி கடுந்தவம் புரிந்தான். அப்போதும் அவன் தேடி வந்தது அவனுக்குக் கிடைக்கவில்லை. அலுத்தான். களைத்தான். கால்கள் போன திக்கில் நடந்தான். இறுதியில் ஒருநாள்......போதி மரத்தடியில் அமர்ந்து இரு விழிகளையும் மூடிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது திடீரென்று உணர்ந்தான் அவன் தேடிவந்த உண்மையை!......

"எல்லோரும் சமம்—எவ்வுயிர்க்

கும் அன்புசெய்—எங்கு துயர் கண்டாலும் பொங்கி யெழும் அன்பால் ஓடி அதைத் துடை!''—என்று தன் சீடர்களுக்கு மான் நந்தவனத்தில் முதன் முதல் உபதேசம் தொடங்கினன் அந்த இளவரசன் சித்தார்த்தன்! விளைவு! சித்தார்த்தர் புத்தரானர்! புத்த மதம் பூத்தது. அது, இந்நாடு மட்டுமா! சீனம், சாவகம், ஈழம்...கடல் கடந்து சென்றது—மக்கள் உள்ளத்தை வென்றது! ஆனல் இப்போது......புத்தரை உலகுக்களித்த பெருமை மட்டும் இருக்கிறது இந்நாட்டுக்கு!

ஓவியனுக்கு தீட்டுவதற்கு ஒரு சித்திரம்—கதாசிரியனுக்குச் சுவைபட வர்ணிக்க ஒரு நிகழ்ச்சி—சீமான் வீடுகளை அலங்கரிக்க ஒரு சிங்காரச் சிலை—நவராத்திரியில் கொலுவில் வைக்க ஒரு நல்ல பொம்மை......இந்த அளவோடு அடங்கியிருக்கிருர் புத்தர் இப்போது! ஏடுகளில் மட்டுமே சிறைப்பட்டு சிறகொடிந்து கிடக்கும் வானம்பாடியாக இருக்கிறது அவர் தந்த ஞானம்!

"உயிரும் உடலும்"

ஜாதகம்: டி. எம். யூ. பதி

ஓவியமும் காவியமும் உயிரும் உடலும் போல் ஒன்றேடொன்று பிணைக்கப்பட்டது. இதில் எது உயிர்? எது உடல்? என்ற வினு எழலாம். காவியம் உயிர், ஓவியம் உடல் என்பது அடியேன் கற்பனையின் முடிவு.

காரணம் என்னவென்றல் உடல் காணக் கூடியது. உயிர்காணமுடியாதது. அதைப்போல் கண்ணுல்கண்டு களிப்படையக் கூடியது "ஓவியம்." காதால் கேட்டு மகிழக்கூடியது "காவியம்." அதனுல்தான் ஓவியத்தை உடலுக்கும் காவியத்தை உயிருக்கும் ஒப்பிட்டேன்.

ஓவியத்துக்கு காவியமா? காவியத்துக்கு ஓவியமா? என்ற மற்ருெரு வினுவும் எழலாம். காவியத்திக்குத்தான் ஓவியம் என்பது அடியேன் சொந்த அபிப்பிராயம். காவியத்தில் சொல்லப்பட்டிருக்கும் அங்கங்களையும், அடையாளங்களையும், அளவுகளையும், வர்ணிப்புகளையும் ஆதாரமாகக் கொண்டுதான் ஓவியம் சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

காவியத்தின் கருத்துக்கு ஓவியம் அமைத்தாலும், ஓவியத்திக்குத் தான் கவர்ச்சி சக்தி அதிகம். உலகத்தில் காணப்படுகின்ற, இயங்கப்படுகின்ற, சகல பொருள்களுக்கும், ஜீவ ராசிகளுக்கும் மூலப்பொருள் ஒலியும், ஒளியுந்தான். (Sound of Lights) இவ் விரு பூதங்களில் "ஓவியத்தை" ஒளியின் அம்சத்துக்கும், "காவியத்தை" ஒலியின் அம்சத்துக்கும் ஒப்பிடலாம்.

ஒளி, ஒலி, இவ்விரண்டு பூதங்களும் இயங்கும்போது "ஒளிதான்" முதலில் தென்பட்டு கண்ணையும், மனதையும் கவருகிறது. "ஒலி" பிறகுதான் உண்டாகி காதில் விழுகிறது. உதாரணமாக தூரத்தில் நிற்கும் "ரெயில் இஞ்சின்" விசில் ஊதும்போது, ஒரே சமயத்தில்தான் புகையும் சப்தமும் உண்டாகிறது. ஆனல் முதலில் நமக்குத் தென்படுவது "ஒளி" அம்சமாகிய புகைதான். பிறகுதான் "ஒலி" அம்சமாகிய சப்தம் கேட்கிறது. அதைப்போல் மின்னலும் இடியும் ஒரே நேரத்தில் உண்டானுலும், "ஒளி" அம்சமாகிய மின்னல் தோன்றி, பிறகுதான் ஒலி அம்சமாகிய இடி கேட்கிறது. ஓவியம் பஞ்சபூதங்களில் ஒரு பூதமாகிய ஒளி அம்சம் என்பதற்கு "சினிமா" படக்காட்சியே ஒரு சிறந்த அத்தாட்சியாகும்.

ஓவியக்காரர்களும், காவியக்காரர்களும், ஜீவ ராசிகளை உண்டாக்கிய சிருஷ்டி கடவுளைவிட

மேலானவர்கள் என்று ஆன்ஹோர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏனென்றால் சிருஷ்டிக் கடவுள் உண்டாக்கிய மனிதர்கள் அநேகமாக நூறு ஆண்டுகளுக்குள்ளேயே மாண்டுவிடுகிறார்கள். "ஓவியனும்" "காவியனும்," உண்டாக்கிய கலைச் சித்திரங்கள் பல ஆயிரம் ஆண்டுகள் மறையாமல் இருக்கின்றன.

ஓவியங்கள் எழுதுவது கலைஞர்களும், கற்றோர்களும் மட்டும் ரசிக்கும் முறையில் எழுதக் கூடாது. பாமர மக்களும் கண்டு களிக்கும் முறையில் எழுதவேண்டும். ஓவியத்தில் உயிர் இருக்கவேண்டும்! உயிர் என்றால் அசைய வைக்கும் சக்தி அல்ல! உயிர் அம்சமாகிய காவிய கருத்துக்கள் இருக்கவேண்டும். "ஓவியம்" வாழ்க்கைக்கு ஒருவழி காட்டியாகவும், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு ஒரு ஆதரவு கோலாகவும், நேர்மையாக நடப்பதற்கு ஒரு நீதி நூலாகவும், உயர்ந்த நோக்கங்கள் உள்ளதாகவும் இருக்கவேண்டும்.

"காவியம்," கற்றோர்களில் பலர் செய்யக்கூடிய கலை. ஓவியம் மக்களில் சிலர் செய்யக்கூடியது. காவியம், ஓவியம் இரண்டும் எழுதப்படும் "கலைதான்." "சிரிப்பு முகத்தோடு சீமான் இருந்தான்," என்பதற்கு காவியம் செய்யச் சொன்னால் கற்றோர்கள் முதல் மற்றவர்கள் வரையில் எளிதில் எழுதி விடுவார்கள். "சிரிப்பு முகத்தோடு சீமான் இருந்தான்" என்பதை "ஓவியமாக" சித்தரிக்கச் சொன்னால் ஒரு சிலரால்தான் செய்யமுடியும். ஆகையால் "ஓவியன்" பிறப்பிலேயே ஓவியக் கலையின் தொடர்பு கொண்டிருக்கிறான்.

உதாரணமாக ஒரு "டாக்டர்" மகன் "டாக்டராவதில்லை." ஒரு வக்கீல் மகன் வக்கீல் ஆவதில்லை. இன்னும் எத்தனையோ உத்தியோகஸ்தர்கள் மக்கள், தொழிலாளிகளின் பிள்ளைகள், தந்தையைப்போல் ஆவதில்லை. ஆனால் அநேகமாக ஒரு ஓவியன் மகன் பயிற்சி அளிக்கப்படாமலேயே ஓவியனாகிறான். அதற்குக் காரணம் ஒரு ஓவியன் ஒரு சித்திரத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது எழுதும் சித்திரத்தில் ஏதாவது ஒரு பாகம் தன் விருப்பப்படி அமையவில்லை என்றால் அப்படியே நிறுத்திவிட்டு தன் சிந்தனையை வேறு வழியில் திருப்பி சில நேரம் ஓய்வு எடுக்க விரும்புவான். அவன் என்ன ஓய்வு எடுத்தாலும், எந்த வேலையில் ஈடுபட்டாலும், அவன் துவக்கிய சித்திரம் பூர்த்தியாகும் வரையில் அவனுடைய சிந்தனை முழுதும் அந்த சித்திரத்திலேயே இருக்கும். அவன் உண்ணும்போதும் உறங்கும் போதுங்கூட அவன் சிந்தனை அரைகுறையாக இருக்கும் சித்திரத்திலேயே இருக்கும். அதனால் அவனுக்குப் பிறக்கும் பிள்ளையும் சொல்லி வைக்கப் படாமலேயே சித்திரக்காரனாகிறான்.

கருத்து நிறைந்த உயிர் உள்ள ஓவியம் எழுதவேண்டுமானால் "ஓவியனுக்கு" கவலையற்ற வாழ்க்கை வேண்டும். களிப்புள்ள சிந்தனை வேண்டும். இவ்விரண்டும் கிடைக்கவேண்டுமென்றால் அரசாங்கம் அவனை ஆதரிக்கவேண்டும். ஆனால் அடிமையாக்கக் கூடாது. சோத்துக்கும் துணிக்கும் எழுதும் ஓவியம் சிறப்பிக்காது.

கடவுளுக்கு மேலாக கருதப்பட்ட ஓவியனும், காவியனும் இன்று கஷ்டப்படுவதற்கு காரணம் அவர்களுக்கு அரசாங்க ஆதரவு இல்லை. ஆனால் கவலையற்ற வாழ்க்கையும், களிப்புள்ள சிந்தனையும், சிலருக்கு சிலநேரம் வரையில் இருக்கும்.

பழமையான சித்திரங்களும், சிற்பங்களும் கருத்துள்ளவைகள் என்றும், கண்ணை கவருகிறவைகள் என்றும் புகழப்படுவதற்கு காரணம் அக்காலத்து கலைஞர்களை அரசாங்கம் ஆதரித்தார்கள். அவர்களும் கவலை அற்றவர்களாக இருந்து, கருத்து நிறைந்த சித்திரங்களையும், சிற்பங்களையும் உற்பத்தி செய்தார்கள்.

இன்று வயற்று பிழைப்புக்கு எழுதப் படும் ஓவியத்தில், உயிர் எப்படி இருக்க முடியும்? அடியேனும் ஓவியக் கலையில் கொஞ்சம் அனுபவம் உடையவந்தான். பதினைந்து ஆண்டுகள் வரையில் "வெளிச் சப்படம்" (Photo) பிடிப்பவனாகவும் இருந்தவன். "ரெயிலுக்குப் போகும் அவசரத்தில் இருப்பவனையும், சாப்பிடப் போகவேண்டுமென்று பசியோடு இருப்ப வனையும் படம் பிடிக்காதே. அவர்கள் எண்ணங்கள்தான் பிடிக்கப்படும் படங் களின் முகத்தில் தென்படும். "போட் டோ" பிடித்துக் கொள்வதெற்கென்றே நிம்மதியாக வந்திருக்கிறவர்களை படம் பிடிக்கவேண்டும்" என்று என் குருநாதன் எனக்கு சொல்லி இருக்கிறார்.

ஆகையால் கருத்து நிறைந்த உயிர் உள்ள ஓவியங்கள் இக்காலத்தில் எழுத வேண்டுமானால், ஓவியக்காரர்கள் கவலை யற்றவர்களாக இருக்கும்படி அரசாங்கம் அவர்களை ஆதரித்து ஆடாசம் இல்லாத ஓவியங்களை சித்திரிக்கச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் ஓவியக் கலை"யில், உயிரும், கருத்தும் அமைந்து, ஓங்கி வளருவதற்கு இடமுண்டு என்பது அடியேனுடைய தாழ்மையான அபிப் பிராயம்.

கரிகாலனும் சேரமானும்

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்" —குறள்

ஓவியன் அ. சீனு

உலகப் போர்முறைக்கே சிறப்பான இலக்கண முறைக்கும் சமர்முறைப் பெட்டகம்தான் தமிழகம்! தமிழகக்தின் போர்முறையும் வீரநெறியும் கரைபடாத செயல் முறைகளால், பல நூற்றாண்டுகளாக பாது காக்கப்பட்டு வந்திருப்பவை என்றால், அந்த மங்காத உயர்வால், இன்னும் பெருமிதம் கொள்ளவேண்டிய வர்கள் நாம்தான். இமயம் நமது வெற்றிச் சின்னம். குமரி நமது சிறப்பெல்லை. இருவேறு கடல்கள் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளக்கிடைத்த இயற்கை சாதனங்கள்—இதற்கிடையேதான் தமிழ் கூறும் நல்லுலகம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது!!

தழைத்தோங்கி நின்ற வீரமும், தனியாத போர்முழக் கமும், இந்தத் தமிழ் புவியெங்கனும், கேட்டுக்கொண் டிருந்ததும் அந்த நேரத்திலேதான்! நல்லிளைஞனை ஈன்ற தாயும்—அவனைச் சான்றோனாக்கிய தந்தையும்—அவனுக்கு வேல்வடித்துக்கொடுத்தக் கொல்லனும்—பிறகு நல் நடை நல்கிய வேந்தனும் அதனால் கள்ளு எரிந்து பெயர்ந்த கண்ணையும், இங்கு உலவிக் கொண்டிருந்ததும் அந்த நேரத்திலேதான்!

இவ்வளவு சிறப்பு வாய்ந்த "அந்த நேரத்தைத்" தான் சோழ மன்னன் கரிகாலன் பொற்காலமாக்கினான்! சோழனில் சிறந்தவன் கரிகாலன்! **தூய்மையான** வீரத்திற்கு அவன் செயல் முறைதான் வழி காட்டி!

கரிகாலச் சோழன், தன்னுடைய அணையாத வீரத்தை முன்வைத்து எல்லைபரப்ப விரும்பினான்! எனவே பலநாடு படைகொண்டு சென்றான்! இதன் எதிரொளியென பாண்டியம் வீழ்ந்தது; சேர மண்ட லத்தின் மீதும் படைகொண்டு சென்றான் கரிகாலன்! சேரமன்னன் - பெருஞ்சேரலாதன், கரிகாலனை எதிர்த்து நின்றான்! சமர்களத்தில் சேரலாதனின் சங்கநாதம் விண்ணைப்பிளந்தது! அன்று **'வெண் ணிப் பறந்தமலை'** என்ற அந்த அருமைக் களத் திலே இந்த இரு பெரும் படைகளும் மோது எழுந்தன. குருதி வெள்ளத்திலே மிதந்த பிணக்குவியல்களை கண்டு மகிழ்ந்து இரு சாராரும் தனித்தனியே வெற்றி யின் முடிவை திட்டமிட்டுக் கொண்டிருந்தனர்! ஆனால் பொதுவான சூழ்நிலையோ அதுவல்ல! சேரன் வாகை சூடுவான் என்ற எண் ணம்தான் சிறப்புறும் போல் நிலைமையிருந்தது! இந்த நிலையை கரிகாலனும் அறிந் தான்! ஆத்திரம் கொண்டான்!



வெற்றிக் களிப்பு சேரலாதனுக்கா என்ற ஆவேசம் கரிகாலன் உள்ளத்திலே கிளர்ந்தெழுந்தது. எனவே சீறியெழுந்து போரிடத் தொடங்கினன்! குத்தீட்டியை உருவினன்; அதைச் சேரலாதனின் மார்புக்கு நேராகப் பாய்ச்சினன்! சேரலாதனே கேடயம் கொண்டான்; தடுத்தான்? ஆனலும் வேல் பாய்ந்துவிட்டது!! எதிர்பார்த்தபடி மார்பில் அல்ல! முதுகில்!! வீரம் கரைபடிந்து விட்டது! அதோடு இரு சாராருக்கும் வேதனையையும் உண்டாக்கி விட்டது! எய்தவேல் முதுகில் அல்லாமல் மார்பில் பாய்ந்திருந்தால். வேதனை நீங்கி புன்னகை மலர்ந்திருக்கும் கரிகாலனுக்கு! சேரலாதனும் தோல்வியை ஒப்புக்கொண்டு. உண்மை வீரனக களத்திலே நின்றிருப்பான், அல்லது பொன்றி இருப்பான்!! ஆனல் எய்தவேல் முதுகில் புதைந்ததால், இரு சாரருக்குமே அது வெட்கத்தை உண்டாக்கிவிட்டது! சேரன் தலை கவிழ்ந்து நிலை தடுமாறினன். சோழனே நிலை தெரிந்து உளம் சோர்ந்தான். "முதுகிலே பாய்ச்சி விட்டோம்" இது அவன் கொண்டவேதனை! "முதுகிலே வாங்கிக் கொண்டோம்!" இது சேரனின் துக்கம்?!

ஆனல் உண்மை என்னவோ இந்த இரண்டுமே அல்ல, கரிகாலனே முதுகைக் குறியிடவில்லை; சேரனும் புறமுதுகிட்டோடவில்லை! ஆனலும் முதுகு துளைக்கப்பட்டு விட்டது! காரணம் என்ன? அது தான் வேடிக்கை!

செங்குருதி தோய்ந்ததால் பாறை நிலம் "வழுக்கு" நிலமாகியது; வழிந்தோடிய இரத்தவெள்ளம், எவருமறியாமல் அந்நிலையை உண்டாக்கி விட்டது! எனவேதான் ரத்தபசை சேரனின் குதிரைக் கால்களை இடறவைத்தது! ஆகையினலேதான் மார்பு முதுகாகியது! வேல்பாய்ந்தபோது, குதிரை திரும்பி விட்டது, வழுக்கியதால்! அதன் எதிரொலியால்தான் மார்பு முதுகாகியது! வீரம் வெட்கத்தால் தாழ்ந்தது. இருவருமே துயருற்றனர்! சுத்த வீரர்களல்லவா? எனவேதான்...வெட்கித்தலை குனிந்தனர்.

சேரலாதன் அதுமுதல் உணவொழித்தான்; தலை தாழ்ந்தான்; உளம் வெதும்பினன்; இறுதியில் அந்த வேதனையே அவன் உயிரை பிணமாகவும் ஆக்கிவிட்டது! 'வீரம் குன்றினேமே' என்ற அதிருப்தியாலேயே அவன் மாண்டான்!

சோழன் கரிகாலனும், "தவறிழைத்தோம்! களங்கம் கொண்டோம்!" என்ற சிந்தை நளிவாலேயே உயிர் நீத்தான்!

இத்தகைய வீரமும்—தூய்மை உள்ளமும்—தமிழகத்தின் 'போர்முறைக்கு' இலக்கியமென்பதை எவரே மறுக்கமுடியும்!! என்னே இவர்களின் வீரம்!! என்னே இவர்களின் மாட்சி!! என்னே இவர்களின் தன்மானம்!!

காந்தி அடிகள் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது 15—2—34 அன்று பாலு சகோதரர்களுக்கு ஆசி



M. D. தியாகராஜ பிள்ளை, M. L. A., கொரடாச்சேரி, தஞ்சை ஜில்லா.

கும்பகோண மார்க்கமாக கொடவாசல் வந்து மாலையில் கொரடாச் சேரிக்கு காந்தி அடிகள் விஜயம் செய்தபோது, பொது மக்களிடம் ரூ. 834-ம் வசூலிக்கப்பட்டு அண்ணலிடம் அளித்தோம். அவ்வப்போது தஞ்சை ஜில்லாவில் எங்கும் கண்டிராத மக்கள் கூடி காந்தி அடிகளைக் கண்டு களித்தனர். அதே நேரத்தில் பாலு சகோதர்கள் அவர்களுடைய காணிக்கையாக, ஸ்ரீராமர் பட்டாபிஷேக படமொன்றும், காந்தி அடிகளின் படமொன்றும் அன்னை பாரதமாதா படமொன்றும் அண்ணலிடம் அளித்தனர். அவைகளில் ஸ்ரீராமர் படத்தை விற்கமாட்டேன் என்றும், மற்றைய இரண்டு படங்களையும் ஏலத்தில் விட்டு ரூ. 96-ம் பெற்றுக்கொண்டார். ஏலங்கூறும்போது, காந்தி அடிகள் "இவ்விளவயதிலேயே சித்திரம் தீட்டும் ஆர்வத்தைவிட, பொதுப் பணிக்கு சேவைசெய்ய வேண்டுமென்ற தர்ம சிந்தனை இருப்பதற்கு நான் ஆசி கூறுகிறேன். அவர்கள் உள்ளூரிலிருப்பதால் விலை குறைவாக இருக்கிறது படங்கள். சீக்கிரத்தில் அவர்கள் வெளியூர் சென்றுவிட்டால் இவ்வளவு விலைகுறைவாக எழுதி வாங்க முடியாது" என்று வேடிக்கையாக ஏலங்கூறினர். காந்தி அடிகள் அன்று ஆசி கூறியதுபோலவே பாலு சகோதரர்கள் 1936-ல் சென்னைக்கு வந்துவிட்டார்கள். அவர் ஆசி கூறியதுபோல் ஓவியக் கலையில் முன்னேறிக் கொண்டிருப்பதோடல்லாமல் பொதுப்பணிக்காக தர்ம சிந்தனையுங் கூடியிருப்பது நமக்கு பெருமையே. ஏன் தஞ்சை ஜில்லாவில் பிறந்த இந்த ஓவியர்கள், இந்தியா முழுதும் புகழ் பெற்றும் சிலோன், சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் புகழ் பரவி வருவது தமிழ் நாட்டுக்கே பெருமைதான்.

நானும் பாலு சகோதரர்களுடைய மூத்த சகோதரர் திரு. ஷண்முகம் அவர்களும், இவர்கள் உத்தியோகதிலீடுபடாமல் ஓவியத்துறையிலீடுபட வேண்டுமென்றே வற்புறுத்தி வந்தோம்.

அவர்கள் இன்று புகழேணியில் இருக்கும் நிலை கண்டு அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வளவு முன்னுக்கு வந்தும் அவர்கள் 20 வருடத்திற்கு முன்

இருந்ததுபோலவே, எளிய வாழ்க்கை, தெய்வபக்தி தர்ம சிந்தனை எல்லோரிடம் அன்புடன் பழகும்விதம் எல்லாவற்றுடன் இன்றும் இருந்து வருவது பாராட்டத்தக்கது.

"கல்கி" அவர்கள் வாழ்நாளில் எடுத்துக்கொண்ட கடைசி போட்டோ.

(ராஜாஜி ஹாலில் 21—11—54)



இடமிருந்து வலம்: 1. பாலு சகோதரர்களில் மூத்தவர் பாலு; 2. "கல்கி"; 3. இளையவர் சீனு; 4. பாலு பிரதர்ஸ் மானேஜர் S. நடராஜ்.

21-11-54ல் கல்கி தனக்கு உடல் நலம் மோசமாயிருந்தும் ராஜாஜி ஹாலுக்கு தனது அருமை புத்திரி, ஆனந்தியுடன் மாலை 4 மணிக்கு வந்து சுமார் 1 மணி நேரம் கண்காட்சியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பர்லாங்குகள் கணக்கில் பல்லாயிரக்கணக்கானவர்கள் 'க்யூ' வரிசையில் நின்று பார்த்ததைப் பார்த்து தாம் மிக்க மகிழ்ச்சி அடைந்து "இவ்வளவு சிறப்பாக கண்காட்சியை நடத்தி மக்களின் பூர்ண ஆதரவைப் பெற்றதை நேரில் காணவிட்டால், ஒரு குறையாய்விடும் என்றுதான் இந்த உடல் நிலையிலும் வந்தேன், பார்த்தேன், மகிழ்ந்தேன். வாழ்க நீவிர் என்று பாராட்டி பாராட்டுதல் கடிதமும் அங்கேயே எழுதிக் கொடுத்தார். (அதுவே அவர் கைப்பட எழுதிய கடைசி கடிதம்.)

முகிழ்த்து மணங்கமழ்ந்து அழகாய் மலரும் பருவத்தே ஓர் அரிய ரோஜா மலர் அதனருமையறியான் ஒருவனாற் கிள்ளி எறியப்பட்டு அழிந்தாற் போலவும், மறைநிலாக் காலத்தே திணிந்து பரந்து இருளின்கட் செல்லும் நெறி இதுவெனக் காட்டுதற்கு ஏற்றி வைத்த ஓர் பேரொளி விளக்குச் சடுதியில் வீசிய சூறைக்காற்றினால் அணைந்து மறைந்தாற்போலவும், இத்தமிழ் நாட்டுக்கு ஓர் எழுத்தாளர் திலகமாய், ஓர் அருங்குணப் புதல்வராய் தோன்றிய "கல்கி"யார் தமது 53-ம் ஆண்டில் கதுமெனக் கூற்றுவனாற் கவரப்பட்டார்.

அமரரான பேனு ஓவியர் "கல்கி."

நமது "கல்கி" அமரர் ஆனுர் ; அவரது கதைகள் ஒவ்வொரு இல்லத்திலும், எல்லோர் இதயத்திலும் இடம் பெற்று விட்டது. அவர் நல்லோர் எல்லோரையும் உயர்த்திக்கொண்டே தானும் உயர்ந்தார். அவர் வாழ்க்கையில், நாங்கள் அவரைப் பன்முறை சந்தித்த போதும் "தமிழகத்தின் பெருமையை சித்தரித்துக் காட்டும் நிரந்தரமான ஓவியங்களைத் தீட்டி, நீங்கள் இக்கலையைப் பயின்று இவ்வளவு முன்னேற்றம் அடைந்தமைக்கு பிரதி பலனுக தமிழர்களின் பண்பையும், வீரத்தையும் வடவரும், வெளிநாட்டாரும் அறியச் செய்யவேண்டு மென்பதே என் அவா- அதையே நீங்கள் தற்போது செய்து வருவது தமிழகத்தின் பெருமை. இப்பணியை மேன் மேலும் பரவச் செய்ய உங்களை வாழ்த்துகிறேன்" என்று அவர் அன்புடன் கூறிய இறுதி மொழியை மறக்க முடியாது.

லட்சுமணன் அன்பு

அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டத்திலும் இருக்கிறது என்று சொன்னால் நம்புவது சற்றுச் சிரமம். ஆனால் சக்ரவர்த்தித் திருமகனாக பிறந்த ராமனை எடுத்துக் கொண்டால் சுலபமாக விளங்கும்.

காட்டுக்குச் சென்ற ராமனை எப்பாடு பட்டாகிலும் நாட்டுக்குத் திரும்ப அழைத்துவந்து முடிசூட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்தான் பரதன்.

ஆம்; அவனால் ராமன் காட்டுக்குப்போனான் என்று சற்றும் ஆற்ற முடியவில்லை, மரவுரியைத் தரித்துக் கண்ணீரும் கம்பலையுமாக நகரமக்கள் புடைசூழ புறப்பட்டு விட்டான்.

கங்கைக் கரையை அடைந்தான். கங்கையில் செல்லும் படைகளின் அதிபன் குகன், ராமபிரானிடம் மாறா நேயம் பூண்டவன். எனவே பரதன் மாபெரும் கூட்டத்துடன் வருவதைத் தூரத்திலிருந்தே பார்த்த குகன், பரதனுடைய நோக்கத்தில் ஐயங்கொண்டான். இராமன்மீது படைதிரட்டிக் கொண்டுவந்து விட்டானோ என்று சந்தேகப்பட்டான். பின்னர் தான் கொண்ட சந்தேகம் தவறு என்று அறிந்தவுடன் பரதனை அணுகி நட்புக்கொண்டான்!

பரதன் குகனிடம் கங்கைக் கரையில் ராமன் என்ன சாப்பிட்டான்; எங்கே தூங்கினான்; என்றெல்லாம் கேட்டான்.

"ராமன் கிழங்கையும் காயையும் அமிர்தமெனக் கருதித் தின்றான்; கல்லில் பரப்பிய புல்லில் ஆனந்தமாகத்தூங்கினான்" என்றான் குகன்.

இதைக் கேட்டவுடன் பரதன் ஆவி துடித்தான். பின்னர், "ராமன் இப்படி என்றால், ராமனுடன் மாறா அன்பு கொண்டுவந்த தம்பி லட்சுமணன் எப்படிப் பொழுதைக் கழித்தான்!" என்று கேட்டான் பரதன்.

அதற்கு குகன் :

"அல்லை யாண்டு அமைந்தமேனி
அழகனும் அவளும் துஞ்ச
வில்லை யூன் றியகை யோடும்
வெய் துயிர்ப் போடும்வீ ரன்
கல்லையாண் டுயர்ந்ததோ ளாய்
கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லைகாண் பளவும் நின்றான்
இமைப் பிலன் நயனம்" என்றான்.

ஆகா! ராமன்மீது எவ்வளவு அன்பிருந்தால் இப்படி இரவெல்லாம் கண்விழித்துக் கண்ணீர் சொரிய நிற்பான்!

இரவின் எல்லையைக்காண இமைகொட்டாமல் லட்சுமணன் நின்றான் என்பது இந்த குகனுக்கு எப்படித் தெரிந்தது! மூவரையும் காவல் காத்துக் குகன் இவர்களுக்குத் தெரியாமல் நின்றுகொண்டிருக்க வேண்டுமல்லவா! குகனுடைய அன்பே அன்பு!

இந்தத் தொனிப்பொருள் எதனால் நமக்குக் கிடைத்தது! கவிச் சக்ரவர்த்தி கம்பரின் அபாரமான நாடகத் திறமையினாலே.

ஆரம்பத்திலேயே, ராமன் குகனுடன் கங்கைக் கரையில் வசித்த வரலாற்றைக் கூறும் கங்கைப் படலத்தில் கூறி இருக்கவேண்டிய இவ்விஷயத்தை அங்கே கூறவில்லை. பல படலங்கள் கழித்து பரதனும் குகனும் சந்திக்கும் இடத்தில் பரதனுக்குக் குகன் சொல்லுவது போல் வைத்ததில், குகனுடைய அன்பை அற்புதமாகக் கூறிவிட்டார்!

இப்படி பரதனுடைய அன்பு, லட்சுமணனுடைய அன்பு, குகனுடைய பக்தி, கவிச் சக்ரவர்த்தியின் நாடகத் திறன் யாவும் வனவாசம் என்னும் துரதிஷ்டத்திலும் அதிர்ஷ்டம் இருக்கலாம் என்பதை நம்பத்தானே வேண்டியிருக்கிறது!

• • •

ஆயிரம் வருடங்களுக்கு முன் கவிச் சக்ரவர்த்தி கம்பர், அருளிய சொற் சித்திரத்திற்கு ஒரு வண்ண ஓவியம் தீட்டிய பெருமை பாலு சகோதரர்களைச் சார்ந்தது!

பாட்டை எத்தனை தரம் படித்தாலும் புதுப்புது நயங்கள் தோன்றி எப்படி மனசை மயக்குகிறதோ, அப்படியே சித்திரமும் நம்மை மயக்குகிறது! கண்கள் நீர்சொரிய நிற்கும் லட்சுமணனைப் பார்க்க நம் உள்ளமும் உருகி விடுகிறது!

—"கல்கி" 1953

Courtesy : KALKI

லக்ஷ்மணன் அன்பு

கண்ணீரைத் துடைத்துக் கடமையைச் செய்வோம்

அமர ஓவியர்

ராஜா ரவிவர்மா

தோற்றம்
28-4-1848

மறைவு
18-9-1906

மலரில் நீல வானில்
  மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன்
  இயற்றினான், கீர்த்தியிந்த
உலகினி லெங்கும் வீசி
  யோங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணா
  லனைத்துயு நகரு மாறே

மன்னர் மாளிகையி லேழை
  மக்களின் குடிலி லெல்லாம்
உன்னருந் தேசு வீசி
  உள்ளத்தினைக் களிக்கச்செய்வான்
நன்னரோ வியங்கள் தீட்டி
  நல்கிய பெருமான் இந்நாட்
பொன்னணி யுலகு சென்றான்
  புவிப்புகழ் போதுமென்பான்.

—பாரதியார்.


RUBENS.
REMBRANDT.
MICHAEL ANGELO
LEONARDO-DA-VINCI.
VELAZQUEZ
TITIAN
BALU BROS

அமர ஓவியர்

ராஜா ரவி வர்மா

ஓவியர் பாலு சகோதரர்கள்

வான வில்லின் கவர்ச்சியையும், அந்திவானின் பொலிவையும், கானருவியின் சிறப்பையும், வண்ணப் பிறையின் நேர்த்தியினையும், எழில் நடையில் அமுதாக்கித் தந்திடுபவன்தான் கவிஞன்!

இதனையே உள்ளம் தொடும் சித்திரமாக்கி மகிழ்பவன் ஓவியன்!

ஓவியனின் சித்திரச் சோலையிலே நின்று, கவிஞனின் கவிதை மழை பொழிந்து தலைவியோடு சாகஸம் புரிந்து நிற்பவன்தான் நடிகன்!

இவர்கள் அனைவருமே கலைஞர்களென்று போற்றப்படுகிறார்கள்! தமிழகம் இத்தகையவர்களை மதிக்கிறது! வாழ்த்துகிறது!! வளர்க்கிறது!!! மூவேந்தர்களின் கலைக்கூட்டத்தின், மாண்புள்ள கலைஞர்களின் பட்டியலில், இவர்களுக்கும் தொடர்பு கெடாத வாய்ப்பு அளிக்கப்பட்டு வந்திருக்கிறது! மன்னர்களின் ஆதரவும், மக்களின் அரவணைப்பும், இவர்களைமட்டுமல்ல; இவர்களின் சிறப்புக் கலைகளையும் வளர்த்திருக்கிறது, உயர்த்தியிருக்கிறது! உலகின் எந்த நாட்டினரின் தரத்திற்கும் முன்னும் சமநிலையை இழக்காத அளவுக்கு பெருமிதம் அடைந்திருக்கிறது இந்நாட்டுக் கலை!

இந்நாட்டுக் கலை யென்றாலே உலக அரங்கில் ஓர் தனிப்பட்ட மதிப்பு இருக்கத்தான் செய்கிறது! காவியத்திற்கு ஒரு புகழ், நல்ல ஓவியத்திற்கு ஒரு உயர்வு என்று இப்படி நிலையிருக்கிறது! இன்று!! வள்ளுவர் போற்றப்படுகின்றார் தனிப் பெருங்காவியத்திற்காக ராஜா ரவி வர்மா போற்றப்படுகின்றார் கண்கவரும் ஓவியத்திற்காக! மேலை நாடும் போற்றுகிறது இவர்களை!

ரவி வர்மாவை, இன்று உலகம் மைக்கேல் ஆஞ்சிலோவோடு ஒப்பிட்டுப் பேசுகிறது! கடவுளர் தம் கூட்டத்திற்கே எழிலோவியம் சமைத்தவர் ரவி வர்மாதான்! பரமசிவன் அவர் தீட்டிய உருவம்!—பார்வதியும் இலக்குமியும், சரஸ்வதியும் தமயந்தையும், அவர் படைத்த படைப்பு!! எப்படி ரோம் நாட்டு கிருஸ்தவ ஆலயங்களிலே, மைக்கேல் ஆஞ்சிலோவின் மத ஓவியங்கள் புகழ்பெற்று விளங்குகின்றனவோ, அதைப்போல, ரவி வர்மாவின் வண்ணச் சித்திரங்கள் இவ்விந்திய துணைக்கணிடம் முழுவதிலும் மட்டுமல்ல; மேலைநாட்டு நல்லறிஞர்களாலேயும் போற்றப்பட்டு வருகிறது!

ரவி வர்மாவின் சித்திரங்கள் இயற்கைப் பொலிவை பின்னணியாகக்கொண்டு தீட்டப்பட்ட உயிரோவியங்கள்! அவர் தீட்டும் கண்கள் ஒளி விட்டுக்கொண்டு மட்டுமிருப்பதில்லை; பேசவும் செய்கிறது. அவர் அமைத்த எழில் முகம், அழகை வாரித் தெளிக்கும் கவர்ச்சி ஓவியமாக மட்டும் இருப்பதில்லை; உள்ளத்தின் அசைவுகளை தெளிவாக்கிக் காட்டும் மெய்யுணர்வுச் சித்திரமாகவும் இருக்கிறது. இயற்கைக் காட்சிகளை அவர் தீட்டும்போது மாறுபடாத இயற்கை யுணர்வு அங்கே எழுகிறது. தூது சொல்லும் அன்னத்தை அவர் அமைத்துக் காட்டும்போது, அரசிளங்குமரி தமயந்தியிடம் மட்டுமல்ல; நம்மிடமும் பேசுமா அந்த வெண்ணிற அன்னம் என்ற ஆவல் பிறக்கிறது. தமயந்தியின் முகத்திலே துடிக்கும் இளமை, மின்னித் தெறிக்கின்றபோது அதை—நாமல்ல—நளனே பார்த்தாலும் ஐயுறுவான், இவள் நாம் பார்த்த தமயந்தியாவென்று! அவ்வளவு எழில் ததும்புமங்கே! உள்ளத்தின் சாயல்—எண்ணத்தின் பிரதிபலிப்பு—எழுச்சியின் மகத்துவம்—காதலின் கிளர்ச்சி இவையத்தனைக்கும் இடமுண்டு அந்தச் சிறு காதலோவியத்தில்!

அடவிசூழ் பொலிவுக் காட்சிகளை மையமாகக் கொண்டு மிரண்டு நிற்கும் மானும், தாமரைத் தடாகமும் பர்ணகசாலைகளும், பின்னணிக் காட்சிகளாக அமைய; பசும்புற்

தரையில், தங்கநிற மேனியாள்—எழில் நிறைக் கூந்தலை—தன் தளிர் மலர்க்கரம் ஊன்றி; விரித்த கருங்குழல் இருபுறமும் புரள; துஷ்யந்தன் நினைவுகளை நெஞ்சத்திலே மறைத்துவைத்துக் கொண்டு; பகலை நோய் வந்துற்றவளென, தாமரை இலைகளிலே அவனுக்கு கடிதம் தீட்டிக்காட்டும் காட்சியும், அதனை தன் தோழியர் இருவர் வியந்து பார்த்துக் கொண்டிருக்கும் நேர்த்தியும்கொண்ட அவரின் 'சகுந்தலையின் காதல்' சித்திரத்தை நாம் இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாலும் மகிழ்ச்சியைத்தான் தரும்!

அவர் தீட்டிய லக்ஷ்மி புராணத்தின் உண்மைகளை அப்படியே பிரதிபலிப்பதாக இருக்கிறது. தாமரை மலர் சிறியதுதான் அதன் மேல் பளு நிறைந்த பொருள்கள் நிற்கவைப்பது கூடாதுதான்; அறிவு அதை ஏற்காதுதான்; ஆனாலும் நிறுத்தி வைத்திருக்கிறார் ஒரு எழில் மங்கையை அதன்மேல்! தனத்திற்கு அதிபதி லக்ஷிமி. அவள் தாமரையில் தான் உறைவாள். இது புராணத்தின் கூற்று! இதைத்தான் வர்மா அப்படியே சித்திரமாக்கியிருக்கிறார். 'வெறும் தாமரைத்தாளின்பளுவை அது எங்ஙனம் தாங்குமென்று' கேலிபேசுவோர் இதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். தவறு அவருடைய தல்ல; அடிப்படையிலுண்டான கோளாறு இது! அதற்கு எங்ஙனம் ஓவியர் திலகம் பொருப்புள்ளவராவார்?

காணும் அலையுருவில் தெய்வீகம் பொங்கியெழுவதைத்போல, அவர் சமைத்த எழிலோவியங்களில் தெய்வீக மூலாம்கள் இல்லையே என்று குறைபடுவாருமுண்டு. தெய்வங்களைத் தீட்டும்போது மனித பண்பே அதற்கு அதிகமாக தரப்பட்டிருக்கிறது என்று நொந்துகொள்வாருமுண்டு! இந்திய கலாச்சாரத்தை தீட்டிக்காட்ட, ஐரோப்பிய முறையையும், ஓவிய இலக்கணங்களையுமே, வர்மா கையாண்டிருக்கிறாரே தவிர பாரத பண்பாட்டிற்கு சிறிதளவும் மதிப்புத் தரவில்லையே என்று வருந்திக் கண்டிப்பதுமுண்டு! ஆகவே, அவருக்கு இந்தியக்கலை மரபில் இடமில்லை என்று எச்சரித்து முடிப்பவருமுண்டு! இத்தகையவர்கள்பால் உள்ளபடியே நமக்கெல்லாம் அனுதாபந்தான் பிறக்கிறது.

ஆசான் சரியில்லாத சிடனுக்கு தாளம் தவறத்தான் செய்யும்! அடிப்படையில்லாத வழக்குகள், நீதிமன்றத்திற்கு வரும்போது நிச்சயம். கேலிக் கூத்தாகத்தான் முடியும்! அதைப் போலத்தான் ஒரு தனி நாட்டின் கலாசாரத்திற்கு உயர்வு தேடும் தெய்வீக ஏடுகளிலே, குழப்பமும், கோளாறுகளும், நெளியும் போது, அதை எடுத்துச் சொல்பவரோ அல்லது அதுபற்றி பெருமிதமாகப் பேசுபவரோ—அல்லது அதிலுள்ள தகுதியான காட்சிகளை எடுத்து ஓவியமாகத் தீட்டுபவரோ—ஒரு சில ஐயப்பாடுக்கா முன் வைத்து வினவப்படுகின்ற காலமும்—கண்டிக்கப்படுகின்ற துர்பாக்கிய நிலையும், நிச்சயம் எழத்தான் செய்யும்! ஆனால், அத்தகைய சூழ்நிலை பிறக்கும்போது மற்றவர்களைக் குற்றவாளிகளாகவும்—குறையுள்ளவர்களாகவும், காண விழைகின்ற விமர்சன விற்பன்னர்கள் சற்று கூர்ந்து கவனிக்க வேண்டும்? உண்மையான குறை, எவரிடத்திலே அல்லது எதனிடத்திலே மறைந்து கிடக்கிறது என்று பார்க்கவேண்டும்?

ஒருவர் திறமையைச் சந்தேகிக்கு முன்னர் குற்றங்களை ஆய்ந்து, தெளிந்து, தெரிவித்து இறுதியாக அதைத் தெளிவுபடுத்தியுமாக வேண்டும். அதுதான் முறை—விமர்சனத்தின் உண்மையான இலக்கணங்கூட. ஆனால் ரவி வர்மாவை அத்தகையதோர் கண்கொண்டு எவரும் பார்த்ததாகத் தெரியவில்லை.

எடுத்த எடுப்பிலேயே வர்மாவின் கற்பனைத் திறனைக் குறைகூற ஆரம்பித்து விடுகிறார்கள்! தாமரையிலே லக்ஷ்மி தகாதென்கிறார்கள். தகாதுதான் நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் கற்பனை அவருடையதல்லவே. வர்மாவின் தெய்வீக சித்திரங்களைப் பொறுத்தவரையில் புராணங்களைப் பிரதிபலிக்கும் வெறுங் கண்ணாடியாக மட்டும்தானே அவரிருந்திருக்கிறார்! கலையார்வம் காரணமாகவும், பக்தியில் அவர் வைத்த நம்பிக்கையின் காரணமாகவும். அவர் மத ஓவியங்களைத் தீட்ட ஆரம்பித்திருக்கிறார்! எனவே அவரின் இத்தகைய ஓவியங்களுக்கு அடிப்படை நம்முடைய இதிகாசங்கள்தான். அங்ஙனமாயின் அவரை அதற்காக எங்ஙனம் குறை சொல்ல முடியும்? வர்மா வரைந்த உருவாரத்திலே தவறு இருந்தால் அவர் கண்டுபிடிக்கப்படுவது நியாயந்தான். ஆனால் இத்தகைய பொருள்களைப் பொறுத்தவரையில் அவரின் எண்ணம் தவறு என்றால் அதற்கு யார் பொறுப்பாளி? அவரா அல்லது அவரின் ஆசையைக் கிளறிவிட்ட ஏடுகளா? ஏடுகள்தான் தவறு

என்றால் அதைக் கண்டிப்பதைவிடுத்து வரைந்தவரை ஏன் குறைகாணவேண்டும்? எய்தவரைக் காயாமல் அம்பை நோவது ஏன்? வர்மாவைத் தவிர வேறு யார் இத்தகைய ஓவியங்களை உள்ளது உள்ளவாறே தீட்ட ஆரம்பித்திருந்தாலும் முடிவு இங்ஙனமாகத் தானே இருந்திருக்க முடியும்! தாமரைக்குப் பதில் லக்ஷ்மி நிற்க எவரேனும் சப்பரம் அமைத்திருந்தால், தெவீகத் தத்துவமும்— உட்பொருளும் சிதைக்கப்பட்டதாகிவிடுமே! அந்த குற்றத்திற்கும்—நிந்தனைக்கும் ஆளாக எவர் இசைவார்? முந்திய குற்றச் சாட்டை விட பிந்திய குற்றச்சாட்டு ஓவியனை எங்கோ கொண்டுபோய் விட்டுவிடுமே! எனவேதான் வர்மா எதனையும் மாற்றவில்லை !!

அதோடு லட்சோபலட்சம் மக்கள் பார்த்து மகிழ்ந்து போற்றி, வணங்கிடும் அவரின் தெய்வீக ஓவியங்களிலே, மனிதப் பண்புதான் மிளிருகிறதே தவிர, சிலைகளிலும் ஆலயங்களிலும் காணுவதைப் போன்ற தெய்வீகக் கவர்ச்சியை அங்கே காணமுடியவில்லை என்றும் குறை சொல்லப்படுகிறது. இதற்கும் அவர் பொறுப்பாளியாக முடியாது. ஏனெனில் மனிதப் பண்பும், சாயலும் கொண்டுந்தான், கடவுளர்களின் திருவிளையாடல்கள் முழுக்க, முழுக்க அமைந்திருக்கிறது! இதை எங்ஙனம் அவர் மாற்ற முடியும்? மேலும், சிலையுருவங் காணும் தெய்வங்கள் அனைத்துமே, அதனதன் பண்பிற்கும், செயலுக்குமேற்ப அமைக்கப்படாமல், ஒரே அச்சின் பிரதி பிம்பங்களாகத்தான் தோன்றுகிறது. எனவே இவைகளின் உண்மை பண்பிற்கேற்ப அவற்றை மாற்றி அமைத்தலே என்ன தவறிருக்கமுடியும்?

“ஐரோப்பிய முறையும் இலக்கணமும் கொண்டு பாரதத்தின் பழமை தீட்டப்பட்டிருக்கிறதே தவிர இந்நாட்டின் பண்டைய ஓவிய முறையும் இலக்கணமும் கொஞ்சமும் அதில் கையாளப்பட்டில்லை. ஆகவே வர்மா இந்திய மாபுக் கலைஞர்களில் ஒருவர் அல்லர்; அவருக்கு இந்தியக் கலைமரபில் இடமில்லையென்று ஒதுக்கித் தள்ளும் திருப்பணியில் ஈடுபட்டிருக்கின்றனர் சிலர்! இது எவ்வளவு வேதனையானது என்று அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை!

நாடே வணங்கும் பல நூறு தெய்வங்களின் சிறப்போவியங்களைச் சமைத்தவருக்கு, இத்தகைய பாராட்டும் அன்பு பரிசும் கிடைக்கிறது என்றால், அவர் எத்தகைய துர்பாக்கிய நாட்டிலே பணிபுரிந்திருக்கிறார் என்பதற்கு இதைவிட வேறென்ன எடுத்துகாட்டு இருக்க முடியும்! ஐரோப்பிய முறையில் ‘பாரதம்’ அமைந்ததால் எப்படிக் கரைபடிந்தாகிவிடும்? பஜனைப் பாட்டு பாரதத்தின் சாயல் இன்று மேலைநாட்டு ரேடியோவிலே கேட்கிறோம்! கண் படிந்துவிட்டதா? திருவையாறு மகத்துவத்தை செய்தித் தாள்கள் தீட்டும்போது பரவசமடைகிறோம். ஆனால் தீட்டும் சாதனங்கள் எவர் தந்தது? மேலை நாடல்லவா! களங்கம் வந்துற்றதா? கும்பமேளாக் காட்சிகளைப் படத்திலே பார்க்கிறோம். மாமாங்கத்தின் ஜனத்.திரளை படம் பிடித்துவைத்துக் கொள்ளுகிறோம்! இவையெல்லாம் எந்த நாட்டின் முறை? ஓவியக் கலையும் அதன் இலக்கணமும், நாட்டுக்கு நாடு சூழ்நிலைக் கேற்ப ஒரு சிறிது மாறுபட்டதாக இருந்தாலும், அது ஓர் உலகின் பொதுசொத்து! ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும் இயல்புடையதல்ல! ஒன்றினால் ஒன்று வளரும் தன்மையது! ஒன்றுடன் ஒன்று இணைந்து பெருகுவது! உலகம் போற்றும் ஓவியர்களான ரெம்ப்ராண்டுகும்—ரூபன்ஸும், முறையே டச்சு நாடும்—ஆண்ட்வெர்ப் நகரும் தந்த ஓவியக் கலைஞர்களாவார்கள்! ஆனால் அவர்களைப் பயிற்றுவித்தது இத்தாலிய நாட்டு ஓவியப் பள்ளியும் முறையுந்தான்! அதனால் அவர்களுக்கு டச்சு நாட்டு ஓவியக்கலை மரபிலும் பெல்ஜிய நாட்டு ஓவியக்கலை மரபிலும் இடமில்லாமல் எவரும் செய்யவில்லை.! எவரும் அவர்களை விலக்கும் தேவையற்ற பிரச்சினையைக் கிளப்பவில்லை! மாறாக அவர்களைப் பெற்றெடுத்ததால் பெருமித மடைகிறார்கள் அவ்வந்நாட்டுமக்கள்! அது மட்டுமல்ல இங்கிலாந்தின் கண் காட்சி சாலையிலும், லக்ஸம்பார்க்கின் அரண்மனையிலும், இன்றும் தங்கள் நாட்டின் செல்வங்களாகப் போற்றப் படுவது இவர்களின் வண்ண ஓவியங்கள்தான்! அங்கே கலை மரபு எவரையும் தடைசெய்வதில்லை; கலை கலைக்காகவே என்பதால்! ஆனால் இங்குதான் ஏதேதோ பேசப்படுகிறது! ஒவ்வொரு வினாடியும் முன்னேறிக் கொண்டே போகும் உலகில் அடிப்படையில்லாத இத்தகைய பேச்சுக்கள் வேடிக்கையாகமட்டும் இருப்பதாக எவரும் எண்ணிவிடக் கூடாது; வேதனையும் இதனுள்ளே பொதிந்து இருக்கிறது!

ரவி வர்மாவுக்கு இடமில்லை என்று இப்படிச் சிலர் சொல்லுவதால்தான் என்னவோ, இந்தியக் கண்காட்சி சாலைகளிலே, குறிப்பாக சென்னை கண்காட்சி சாலையிலே அவரின் வேலைப்பாடுகள் மெள்ள, மெள்ள ஒவ்வொன்றாக திரை மறைவிற்குப் போகிறதோ என்று கூட அஞ்சவேண்டியிருக்கிறது! எது எங்ஙனமாயிருந்தாலும் நாட்டின் இதயம் என்று பேசப்படுகின்ற பாமரர் உள்ளத்தில் அழியாத இடம் பெற்று விட்டவர் ரவிவர்மா அவரின் நினைவுருவை எவரும் அவ்வளவு எளிதில் அழித்துவிட முடியாது! சாலையோரத்தி லிருந்து—ஆளும் மாளிகைவரையிலே—உள்ள எல்லா இடத்திலும் அவரின் ஓவியங்கள் நின்று நிறைவு செய்த வண்ணந்தானிருக்கின்றன என்பதை இத்தகையவர்கள் மறந்துவிடக் கூடாது. பாமரர் முதல் நாட்டின் ஆவேசக் கவி பாரதியார் வரையிலே, போற்றக்கூடிய நிலையுள்ள ஒரே ஓவியர் ரவி வர்மா! கிளிமானூர் தந்த செல்வம்—தென்னகம் வளர்த்த ஓவிய மேதை—தென் திருவதாங்கூரின் திறல்மிகு மாணிக்கம்—அரச குடும்பத்தின் அணையாத விளக்கு— பாமரரின் உள்ளங்கவர்ந்த ஓவியப் பெட்டகம்—புதுமையால் பழமை காத்த புகழ் வண்ணக் கலைஞன்—கடவுளர்தம் உருவாரங்களையே தன் கைவண்ணத்தால் லட்சோப லட்ச மக்களின்முன் நிஜ உருவாக்கிக் காட்டிய வண்ண ஜாலக்காரர்—அவருக்குத்தான் இடமில்லை என்று பேசுகிறார்கள் !!! இந்தக் கலை மரபின் உண்மையான பிரதிநிதி அவராகார் என்று எடுத்துரைக்கிறார்கள் ! பாமரர் அவரைப் போற்றுகிறார்—கலை நுணுக்க மறியாதால்' என்றுரைக்கிறார்கள். ஆனால் புரட்சிக் கவிஞர் பாரதியார் வர்மாவை 'எம்மானே' 'பெருமானே !' என்று வாழ்த்துகிறார் ! வழுத்துகிறார் ! மறந்தார்களிதையவர்கள் ! வாழ்க அவர்கள் !!

வர்மாவைப் பொருத்தமட்டிலே அரச பரம்பரையினராதலால், வசதியோடு கலை வளர்த்தார். மேலை நாடும் போற்றுமளவுக்கு மன்னர்களும்—சமஸ்தானாதிபதிகளும்வியந்து பரிசளிக்குமளவுக்கு அதனை அவர் வளர்த்தார். அத்தகைய ஒரு மேதை இன்றுமட்டுமிருந்திருந்தால், இன்றைய சூழ்நிலைக்கேற்ப பல நூறு வண்ண ஓவியங்களை அவர் உலகிற்களித்திருப்பார் ; 1848 ல் பிறந்து 1905-ல் அவர் மறைந்து விட்டதால், அன்றைய சூழ்நிலைக்கேற்ப அனைத்தையும் அமைத்து விட்டார். இருந்தாலும் அது இன்னும் உலகின் முன் அழியாத ஓவிய விருந்தாகிவிட்டது ! எனினும் இப்புகழ் நிலைத்து நிற்கும்.

கலாச்சார தூது கோஷ்டிகளும் கலைக் காட்சி விருந்துகளும் உலகின் நாடுகளிடையே பறிமாறிக்கொள்ளப்படும் இந்த நேரத்திலும் இந்தியர் கலை மரபின் உண்மைப் பிரதிநிதியாகவும் உயர்ந்ததோர் ஓவியத் தந்தையாகவும், ஒளிவீசும் உயர் வாழ்வு மண்டலத்திலேயிருந்து நமக்கெல்லாம் நல்லாசி கூறிக்கொண்டிருப்பவர்தான் ராஜ ரவி வர்மா என்ற பெருமிதத்தோடு, நமது அன்புக் காணிக்கைகளை இதன் மூலம் அவருக்குச் சமர்ப்பித்துக்கொள்ளுகிறோம் ! வாழ்க ரவிவர்மா ! வாழ்க ஓவியக் கலை !

கலை மன்னனும், நாட்டு மன்னனும்

ஒரே மன்னர் காலத்தில் இருந்ததைப் போல் எல்லோரும் இந்நாட்டு மன்னரான இக்காலத்தில் சித்திரக்காரருக்கும், சிற்பிகளுக்கும் அவ்வளவு மதிப்பு கிடையாது. பாண்டிய நாட்டில் ஒரு நாள் கோவிலில் ஒரு சிற்பி ஒரு தூணில் தனது கைத்திறனை காண்பித்துக் கொண்டிருந்தான். அப்போது பின்னால் இருந்துகொண்டு சிற்பியின் வேலையாள் சிற்பிக்கு தாம்பூலம் மடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தான். அப்போது அப்பக்கம் வந்த பாண்டிய மன்னன் ஏவலாளை ஜாடைகாட்டி போகச் சொல்லிவிட்டு தன் கையிலிருந்த தாம்பூலத்தை சிற்பிக்குக் கொடுத்தான். சிற்பி வேலையில் ஆழ்ந்தபடியே இடது கையால் வாங்கி வாயில் போட்டுக்கொண்டே வேலை செய்து கொண்டிருந்தான். ஆனால் இத் தாம்பூலம் அதிக மணத்துடனும், சுவையுடனும் இருந்ததால் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். மன்னனைக் கண்டதும் பயந்து காலில் விழுந்து தாம்பூலம் வாங்கிக் கொண்ட தன் கரத்தை வெட்டிக்கொள்ள போனான். மன்னன் அவனை நிறுத்தி 'சிற்பியே ! நான் இந்நாட்டுக்கு மாத்திரமே தான் மன்னன். நீ, இந்த கலைகளுக்கெல்லாம் மன்னனல்லவா' என்று தட்டிக் கொடுத்து ஆசிர்வதித்துச் சென்றான்.



மேலே உள்ள கட்டத்திற்குள் சித்தன்னவாசல், தஞ்சைபெரியகோயில், அஜந்தாசித்திரங்கள் மறைந்து இருக்கின்றன. அவைகளை நீங்கள் வெளிக்கொண்டு வரவேண்டுமானால் ஒரு பென்சிலை எடுத்துக் கொண்டு பொறுமையுடன், இலேசாக, மேலிருந்து கிறுக்கிக்கொண்டே வந்தால் சித்திரங்கள் வெளிவரும்.

மேல்நாடு கண்ட ஓவியக் கலைஞர்கள்

(தொகுப்பு: 'கௌதமன்')

(இவ் ஓவியர்களின் படங்களை 89ம் பக்கத்திற்கு எதிரில் பார்க்கவும்)

I ரெம்ப்ராண்ட் *(1606—1669)*

ரெம்ப்ராண்ட் டச்சு நாட்டு 'ஓவியப்பள்ளி' தந்த அருமையான ஓவியக் கலைஞன்! வெற்றிச் சுவை, நனி சொட்டச் சொட்ட, எழிலான வண்ண ஓவியங்களைத் தன் இளமையிலேயே தயாரித்து, அவைகளையே தன் சிறந்த வேலைப்பாடுகளுக்கு எடுத்துக்காட்டாகவும் அமைத்தவன். ஒருமுறை கடன் தொல்லைகளிலே மூழ்கி, தன் வீடு, கஷ்டப்பட்டு சேகரித்து வைத்த நூல் நிலையம், அருமையான பொருள்கள், அத்தனையும் பறிபோனபோதுகூட, மனதில் ஒரு சிறிதும் கவலையே இல்லாமல், வியக்கத்தக்க சித்திரங்களை அந்த நேரத்திலேதான் தீட்டி வைத்தானும்! இன்றும் இவனுடைய அருமையான வேலைப்பாடுகள் பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் வைத்துப் போற்றப்படுகின்றன!

II சர். பீட்டர் பால் ரூபன்ஸ் *(1577—1640)*

சர் பீட்டர் பால் 'ரூபன்ஸ்' இத்தாலிலே படித்துத் தேறிய பிறகு 'ஆண்ட்வெர்ப்' நகரிலே குடியேறி பல்வேறு சரித்திர, மத சம்மந்தமான ஓவிய வேலைப்பாடுகளை செய்துவைத்து, அவன் புகழை என்றும் நிலவும்படி செய்தவன். கி. பி. 1620 முதல் கி. பி. 1623 வரையிலே 'லக்ஸம்பர்க்' நாட்டு அரண்மனையிலே 'ராஜாங்க ஓவியக் கலைஞ'னாக நியமிக்கப்பட்டு, சிறந்த கலைத் தொண்டு புரிந்தான். ஸ்பெயின் நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்து பல கலைஞர்களை சந்தித்து மகிழ்ந்தான்! இங்கிலாந்து மன்னன் முதலாம் சார்லஸ்ஸின் உருவத்தை மிக அழகாக (1629ல்) வரைந்தான். அதுகண்டு மகிழ்ந்த மன்னன் சார்லஸ், அவனுக்கு வீர விருதொன்றை (Knight title) யும் அளித்தான்.

III வெலாஸ் குவெஸ்! *(1599—1660)*

'வெலாஸ் குவெஸ்' புகழ்வாய்ந்த ஸ்பெயின் நாட்டு ஓவியன். மன்னன் மாளிகையில், ஓவியக் கலைஞனாக அமர்த்தப்பட்டு, போஷிக்கப்பட்டவன். ஸ்பெயின் நாட்டின் சிறப்பான வண்ண ஓவியங்களென்று போற்றப்படுபவைகளில், இவன் சித்திரங்களும் சிறப்புடையனவாகும்! இயற்கையாகவே எழும் கற்பனைக் காட்சிகளை மனதிலிறுத்தி அதையே ஓவியமாகப் புனைவதில் இவனுக்கிணை இவனேதான்! பார்த்த உருவத்தை மனதில் அப்படியே பதிய வைத்துக் கொண்டு, அந்த நினைவுருவை அப்படியே நிஜ ஓவியமாகத் தீட்டி, செயற்கையை விட இயற்கை மெருகை அதற்களிப்பதில் மிக மிகத் திறமைசாலி! கி. பி. 1628-ல் இவன் கலைஞன் ரூபன்ஸை சந்தித்ததும் அவன் அறிவுரையின்பேரில் இவன் இத்தாலி சென்று, ஓவியநிலை கண்டு வந்ததும், இவன் வாழ்க்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளாகும்! அரசாங்கத்தால், போஷிக்கப்பட்ட இவன், இறக்கும்போது, அரசாங்க பொக்கிஷத்திற்கே 3000 டாலர்கள் கடனாளியாகவே மாண்டது குறிப்பிடத்தக்கது!

IV மைக்கேல் ஆஞ்சிலோ *(1475—1564)*

'மைக்கேல் ஆஞ்சிலோ' 'பிளாரன்ஸ்' நகர் தந்த தலைசிறந்த ஓவியக் கலைஞன். பைபிளின் நிகழ்ச்சிகளை அப்படியே வண்ணச் சித்திரங்களாக்கி, ரோம் நாட்டு கிருஸ்துவ ஆலயங்களை அலங்கரித்த மகத்தான பெருமை இவனையே சாரும். உலகின் படைப்பு நிகழ்ச்சிகளை மத ரீதியான ஆதாரங்களுடன் ஓவியமாக அமைத்த இவன் ஓர் அருமையான சிற்பியுங்கூட. ரோம் நாட்டு மதாலயங்களின் வளைவுகளை இவன் சித்திரங்களால் நிரப்பிக்கொண்ட நேரத்தில், தன் தொழில் துறையில் காட்டிய உணர்ச்சியும் அக்கரையும் வியக்கத்தக்கவையாகும். காலையில் வளைவுகளுக்கு கீழுள்ள மேடையில் வண்ணந் தீட்டுவதற்கென போய் அமர்ந்து கொண்டால், இரவில் நித்திரை புரியத்தான் கீழிறங்கி வருவானும்! ஆகாரம் கூட அவனுக்குமேலேயே அனுப்பப்பட்டு வந்ததாம்! வளைவுகளில், மேடையிலிருந்தபடி வண்ணம் தீட்டும் போது இவன் முகமெல்லாம் எண்ணைச் சாயம் ஒழுகுவதைக்கூட பொருட்படுத்த மாட்டானும்! காலின் பூட்ஸுகளைக்கூட சில சமயங்களில் கழற்றுவதற்குகூட மறந்து போய் அவைகள் காலின் தோலுடன் ஒட்டிக்கொண்ட சம்பவங்களும் இருக்கின்றனவாம்! மத நிகழ்ச்சிகளுக்கு புத்துயிரளித்து அவைகளை என்றும் மறையாத சித்திரங்களாசச் செய்த மைக்கேல் ஆஞ்சிலோவை, கிருஸ்தவ மதாலயங்கள் என்றுமே மறவாது!!

V லியனர்டோ வின்ஸி! *(1452—1519)*

'லீயனர்டோ வின்ஸி' இத்தாலிய நாடு தந்த 'பல்துறை-மேதை'! ஓவியம் மட்டுமல்லாமல், கணிதம், சிற்பம், விஞ்ஞானம், பூதத்துவம், சங்கீதம் போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றிருந்த நல்லறிஞன்! இவனுக்கிருந்த 'சௌரி இயல்' உணர்ச்சி உள்ளபடியே வியக்கத்தக்கதாகும்! இவனின் ஓவியங்கள் உலக சிறப்பு வாய்த்தவையாகும். இவனுடைய 'கடைசி விருந்து'க் காட்சிகள் உலகம் இதுவரை காணுதவையாகும். அதோடு இவனைப் போன்ற 'பல்துறை மேதை'யையும் உலகம் இதுவரை கண்டதேயில்லை யென்ருலும் மிகையல்ல அது! மன்னரும் விரும்பிப் போற்றிய இம் 'மேதை' இறுதியில் இத்தாலிய முடிமன்னரின் மார்பின்மேல் சாய்ந்தபடியே உயிர் விட்டிருக்கிருன் என்ருல், அவன் புகழ் எத்தகையதாயிருக்க வேண்டுமென்று எண்ணிப் பாருங்கள்."

VI டிடியன் (1477—1576)

'டிடியன்' ஓவிய உலகிற்கே புது மெருகிட்ட கலைஞன்; புதுமையானவனும்கூட. 99 ஆண்டுகள்வரை உயிர் வாழ்ந்தது மட்டுமல்லாமல், இறுதி நேரத்திலும் ஓவியத்தில் தளராத ஆர்வங்கொண்டு உழைத்தவன். வெனீஸுக்குப் புகழ் தேடித்தந்த சிறப்பான முதல் கலைஞன். இவனுடைய மதசார்புற்ற ஓவியங்கள் மிகவும் கவர்ச்சிகரமானவை. 'வீனஸ்' என்ற ரோமானிய பெண் தெய்வத்தின் திருவுருவை இவன் தீட்டியுள்ள 'பாணியே' மிகமிக அலாதி! அழகும், உயிரொளியும், வண்ண அமைப்பும் கொண்ட அந்த உருவாரங்கள் பார்க்க பார்க்க, பரவசமூட்டும் தன்மையதாகும்! நிர்வாணச் சித்திரங்கள், காதலோவியங்கள், கண்கவரும் எழிலுருங்கள் தீட்டுவதில் இவனுக்கிணை இவனேதான்! 99 ஆண்டுகள் ஓவியக் கலைக்கு அழியாத தொண்டு செய்துவிட்டு, மறக்கமுடியாத 'நினைவுருவங்களை' உலகினருக்கு அளித்துவிட்டு கொடிய பிளேக் நோயால் மாண்டுவிட்டான் டிடியன்!

கண்காட்சி

நாவலர். இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

கண்காட்சி! கண்ணுக்கினிய — கருத்துக்கினிய காட்சிகளை ஒழுங்குபெற அமைத்துக்கொண்டு, அவற்றைக் கண்டுகளிக்கும் பழக்கம், நாகரிகத்தின் சாயல் ஒரு சிறிதும் படாத காட்டுமிராண்டிக் காலத்திலிருந்தே உலகெங்கணும் இருந்து வந்திருப்பதைக் காண்கிறோம்! காண்காட்சி காலத்தினால் மிகமிகப் பழைமையானது!

காட்டுமிராண்டிக் காலத்தில், மக்களில் வீரமும் தீரமும் படைத்தோர், நாள்தோறுமோ அல்லது நாட்கணக்கிலோ வேட்டையாடிக் கொண்டுவந்த உயிரினங்களை வரிசையாகப் பரப்பிவைக்க, வலிவற்றோர் அவற்றைப் பார்த்து வியக்க, அவர்கள் வியப்பது கண்டு வேட்டையாடி வந்தோர் மகிழ நடைபெற்ற காட்சி முதற்கண்காட்சி என்னலாம். உணவுக்கான வேட்டைகள் குவியும்போது மக்கள் கூடுவதும், மகிழ்ச்சியால் குதித்தாடுவதும், ஓசையிட்டுப் பாடுவதும், வேட்டையாடுவதற்குக் காரணமாக இருந்த எலும்பு—கல்—மரம் ஆகியவற்றாலான கருவிகளை அடுக்கி வைத்து அழகு பார்ப்பதும், விதவிதமான தோலாடைகளையும் தழையுடைகளையும் விதவிதமாக உடுத்திக்கொள்ளுவதும், பூக்கள்-காய்ந்த விதைகள்— விலங்குகளின் பற்கள் நகங்கள் ஆகியவற்றைக் கோர்த்து அணிகலன்களாக அணிந்து கொள்வதும் ஆகிய இவைபோன்ற எல்லாவற்றையும் ஒருங்குசேரக் கொண்டு அழகு பார்த்து மகிழ்வது காட்டுமிராண்டிக் காலத்து மக்களின் கண்காட்சியாகும்.

தன்னையும் தன்னுடைய சூழ்நிலையையும், கண்ணுக்கும்—கருத்துக்கும் இனிய காட்சிப் பொருள்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற பண்பு, மனிதனுக்கு ஒழுங்குபடுத்தும் உணர்வு ஏற்பட்ட மிகத் தொன்மைக் காலந்தொட்டே இருந்துவருகிறது என்று கூறலாம். நாகரிக வளர்ச்சி அந்தப் பண்பின் நோக்கம், ஆற்றல், பல்வேறு திறப்பாடு ஆகியவற்றை விரிவடையச் செய்ய உதவிற்றேயொழிய, நாகரிகமேதான் அந்தப் பண்பை உண்டாக்கிற்று என்று சொல்லுவதற்கில்லை; நாகரிகம் தோன்றுவதற்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பே அந்தப் பண்பு மனிதனிடம் ஊற்றெடுக்கத் துவங்கிவிட்டது.

மிகப் பழையகாலந்தொட்டே பட்டக்காரர்களும் பாளையக்காரர்களும், சிற்றரசர்களும் பேரசர்களும் தம்முடைய வெற்றிப் பொருள்கள், விருதுகள், யானைகள், குதிரைகள், தேர்கள், கொடிகள், படைக்கருவிகள், படைவீரர்கள், மதிப்பிற்குரிய பொருள்கள், மனைவிமார்கள், அமைச்சர்கள், அறிவுறையாளர்கள் ஆகியோரை யெல்லாம் அணிவகுத்துத் தம்முடன் அழைத்துகொண்டு உலாவாக ஊர்சுற்றி வருதலை ஒரு கண்காட்சியாகவே கொண்டிருந்தனர்—கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு நாட்டிலும் பண்டுதொட்டுக் கொண்டாப்பெறும் ஒவ்வொருவகைத் திருவிழாவும் ஒவ்வொரு கண்காட்சியாகும். பண்டைத் தமிழகத்தில் கடவுளர்க் கெடுத்த திருவிழாக்களும், காவிரிப்பூம் பட்டனத்தில் கொண்டாடிய கடலாடுதல்போன்ற விழாக்களும், ஏறுதழுவுதல் போன்ற விழாக்களும் ஒவ்வொருவகைக் கண்காட்சிகளேயாகும். வடநாட்டில் பண்டைநாளில் நடைமுறையில் இருந்துவந்த அசுவத்தைப் பூப்பிரதட்சணம் கொண்டுவருதலும், சுயம்வரம் வைத்தலும் ஆன நிகழ்ச்சிகள் ஒவ்வொரு விதமான கண்காட்சிகளேயாகும். பண்டைக் கிரேக்கத்தில் சந்தைக்கூடமும், கிரேக்கச் சொற்பொழி

வாளர்கள் சொற்பொழிவாற்றிய மேடைகளும், திறந்த வெளிநாடக அரங்கமும் அந்த நாளைய கண்காட்சிகளாக இலங்கின. பண்டைக் கிரேக்கர்கள் ஒலிம்பியாவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடி நடத்திய ஒலிம்பிக் விழாவும் ஒரு பெரிய கண்காட்சியாக அந்தக்காலத்தில் கருதப்பட்டது. விளையாட்டுப் பந்தயங்கள் நடப்பதும், புலவர்கள் தங்கள் இலக்கியங்களை அரங்கேற்றுவதும், வரலாற்றாசிரியர்கள் தாம் எழுதிய வரலாறுகளைப் படித்துக் காண்பிப்பதும், சிற்பிகள் தாம் செதுக்கிய சிற்பங்களைக் காட்சிப் பொருள்களாக வைப்பதும், ஓவியக்காரர்கள் தமது ஓவியங்களைக் காட்டுவதும், பாடகர்கள் பாட்டுப்பாடித் தம்திறனை வெளிப்படுத்துவதும் போர்வீரர்கள் தம் வீர விளையாட்டுகளைக் காட்டுவதும் ஆன இவைபோன்றவைகள் அந்த ஒலிம்பிக் கண்காட்சியின் கூறுபாடுகளாக விளங்கின. ஒவ்வொரு நாட்டிலும் கூடிய—கூடும்சந்தைக் கூட்டங்களெல்லாம் வாணிக நோக்கத்தை உள்ளடக்கிக்கொண்ட ஒவ்வொருவகைக் கண்காட்சிகளேயாகும். ஒவ்வொரு சந்தைக்கூடமும் வாணிகம் செய்வதோடு நின்றுவிடாமல், வேடிக்கை விளையாட்டு காட்டுமிடமாகவுந்தான் காட்சியளித்து வந்திருக்கிறது. தெருக் கூத்தாடுதல், கழைக்கூத்தாடுதல், பாம்பாட்டுதல், பகல் வேடம் புனைதல், குடக்கூத்தாடுதல், தந்திர வேடிக்கை காட்டுதல், போன்றவைகள் சந்தைக் கூடத்திலும் பிற இடங்களிலும் காட்டப்பட்டுவந்த கண்காட்சிகளாகும். இப்படிப்பட்டக் காட்சிகள் பிற நாடுகளிலும் உண்டு. பிரான்சும், பெல்சியமும் இத்தகைய காட்சிகளை மிகவாகக் கொண்டிருந்தன.

மகிழ்ச்சியூட்டும் நோக்கோடு பண்டை நாட்களில் நிலவிவந்த காட்சிகள் நாளடைவில் மகிழ்ச்சியூட்டுவதோடு வாணிகத்தைப் பெருக்குவதற்கான கண்காட்சிகளாக மாறின. இப்பொழுது உலகெங்கும் நடக்கும் கண்காட்சிகள் மகிழ்ச்சி— வாணிகப் பெருக்கம் ஆகிய இரண்டோடு பயனறியவும் பயக்கவேண்டுமென்ற நோக்கோடு அமைக்கப்பெறுகின்றன.

அகில உலகத் தொடர்பும், அகில உலக வாணிகமும் நாடுகளுக்கிடையே ஏற்பட ஏற்பட, வாணிகப் பொருள்களைச் திறந்த முறையில் விளம்பரப்படுத்தக் கண்காட்சிகளை நிறுவவேண்டிய இன்றியமையாமைக்கு ஒவ்வொரு நாடும் வந்துவிட்டது. கண்காட்சியின் கவர்ச்சியால் ஈர்க்கப்படும் மக்களிடையே வாணிகப் பொருள்களை விற்பனை செய்வதும், வாணிகப் பொருள்களுக்கு விளம்பரம் தேடுவதும் உற்பத்தியாளர்க்கு எளிதாக இருப்பதால், அவர்கள் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்ய இதுநாளில் உலகெங்கணும் முயலுகிறார்கள். எந்த ஒரு துறையைப் பற்றிய அறிவைப் பரப்பவும், எந்த ஒரு துறைக்கு விளம்பரந்தேடவும், எந்த ஒரு துறையின் பெருமையை விளக்கவும் இந்தக் காலத்தில் ‘கண்காட்சி’ பயன்படுவது போல வேறு எந்தப் பற்றுக்கோடும் பயன்படுவதில்லை. எனவேதான் உலக நாடுகளிலெல்லாம் அறிவியல், பொறிவியல், கலையியல், மொழியியல், அரசியல், சமூகவியல், பொருளியல், தொழிலியல் போன்ற பல்வேறு இயல்கள் பற்றிய கண்காட்சிகள் எங்கணும் தோன்றுகின்றன.

காட்சிக்குரிய பல்வேறு அறிய வியத்தகு பொருள்களை ஓரிடத்தில் கண்காட்சிக்கென்று திரட்டி, அவற்றை ஒழுங்குபட வைத்துப் பொது மக்கள் அவற்றைக் கண்டு மகிழ்ந்து பயன்பெறும்படி செய்ய வேண்டும் என்ற முயற்சியில் தோன்றும் கண்காட்சிகளில், வரலாற்றுக் காலத்திற்குள் முதற் காட்சியாகத் தென்படுவது கி. மு. 427-ஆம் ஆண்டில் ஐரோப்பாவில் **சாம்பன்** (Champayne) என்ற இடத்தில் வைக்கப்பட்ட கண்காட்சியேயாகும். அதே ஆண்டில் **பிரீ** (Brie) என்ற இடத்திலும் ஒரு கண்காட்சி நடைபெற்றிருக்கிறது. இந்தச் செய்தியை **சிதோனியச் அபோலினிசிச்** (Sidonuie Appollinasis) என்ற ஆசிரியர் எழுதிய குறிப்பிலிருந்து அறியப்படுகிறது. கி. பி. பத்தாவது நூற்றாண்டில் இங்கிலாந்திலும், வேறு சில ஐரோப்பிய நாடுகளிலும் கண்காட்சிகள் வைத்ததாகச் சிற்சில குறிப்புகளிலிருந்து தெரிய வருகின்றது கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மகிழ்ச்சிக்குரியனவாக வைக்கட்பட்ட கண்காட்சிகளில் வாணிகப் பெருக்கத்திற்கான வழிவகைகளும் காணப்பட்டன. இப்படி மகிழ்ச்சிக்கும் வாணிகத்துக்கும் ஆன முறையில் அமைக்கப்பட்ட கண்காட்சிகள் பல ஐரோப்பிய நாடுகளில் பல இடங்களிலும் நடைபெற்றன.

ஐரோப்பாவில் நடைபெற்ற கண்காட்சிகளில் **நிக்னி நௌகோராட்** (Nigni Novgorod) என்ற இடத்தில் ஆண்டுதோறும் நடைபெற்றக் கண்காட்சி மிகச் சிறப்பாக இருந்து வந்தது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் ஆரம்பித்த அந்தக் கண்காட்சி ஆண்டு தோறும் வைக்கப்பட்டு, மிகச் சீரும் சிறப்புடன் நடந்து வந்தது. முதல் உலகப் பெரும் போருக்கு முன்னால் ஐரோப்பா-ஆசியா நாடுகளிலிருந்து மட்டும் ஆண்டுதோறும் சுமார் 1 லட்சம் மக்கள் வந்தார்கள் என்றும், சிறுசிறு வியாபாரங்களையெல்லாம் தள்ளி விட்டுப் பெரு வியாபாரங்களை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டால் 37½ கோடி பொன் ரூபிள் நாணயங்கள் அளவிற்கு வியாபாரம் நடைபெற்றது என்றும் சொல்லப்படுகின்றன.

இந்தக் காலத்தில் நடைபெறும் பொதுக் கண்காட்சிகளெல்லாம், 1849-ஆம் ஆண்டில் பாரிசில் நடைபெற்ற கண்காட்சியை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவைகளாகும் என்று கூறலாம். சென்ற நூற்றாண்டில் மேலை நாடுகளில் நடைபெற்ற கண்காட்சிகளிலெல்லாம் மிகப் பெரிய கண்காட்சி 1851-ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற “பெரிய பிரிட்டன் கண்காட்சி” ஆகும். இதற்கு பாரிச் கண்காட்சிதான் முன்மாதிரியாகும். அந்தக் கண்காட்சியின் முழுப் பெயர் “எல்லா நாடுகளின் பொறித் தொழில் சாமான்களின் பெரிய கண்காட்சி” (Great Exhibition of the works of Industry of all Nations) என்பதாகும். இந்தக் கண்காட்சி இலண்டன்மா நகரில், **ஐட் பர்க்** (Hyde Park) என்ற பூங்கா வெளியில் வைக்கப்பட்டது. கண்காட்சியை எப்படி அமைக்கலாம் என்பதற்கு 245 பேர்கள் மாதிரிப் படங்கள் வரைந்து காட்டினார்களாம். எந்த ஒரு படமும் தனியாகப் பயன் படவில்லையாம். பல படங்களிலிருந்து மாதிரிகளை எடுத்து ஒன்றாக சேர்த்துப் புதிய மாதிரி ஒன்று கண்டுபிடித்தார்க

ளாம். அரிய கண்காட்சிப் பொருள்களை வைப்பதற்கென்று கிரிச்டல் பாலச் (Crystal Palace) என்ற ஒரு பெரும் மாளிகையை இரும்பினாலும் கண்ணாடியினாலும் கட்டிமுடித்தார்கள்.

இந்த மாபெரும் கண்காட்சி நடத்தியதன் மூலம் இலண்டன் மிகப் பெரு வருவாயை அடைந்தது. இந்தக் கண்காட்சியில் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் *13,937* பேரும், பிரிட்டிஷ் பேரரசைச் சேர்ந்தவர்கள் *7381* பேரும் காட்சிப் பொருள்களைக் காட்டினார்கள். ஒரு இலசட்சத்துக்கு மேற்பட்ட காட்சிப் பொருள்கள் காட்டப்பட்டன. இதிலிருந்த காட்சிப் பொருள்களின் விலைமதிப்பு சுமார் *30,00,000* பவுனாகும். அதனை மொத்தம் *60,39,195* பார்வையாளர்கள் பார்வையிட்டனராம். இந்தக் கண்காட்சியின் மூலம் கிடைத்த வருவாயைக்கொண்டுதான், சௌத் கென்சிங்டன் (South Kensington) என்ற இடத்தில் *87* ஏக்கர் நிலம் வாங்கி, அதில் பொருட்காட்சிசாலைகளும், ஆராய்ச்சிக் கூடங்களும், கலைக்கூடங்களும் கட்டினார்களாம் கண்காட்சியின் நிர்வாகிகள்.

இலண்டன் கண்காட்சியைத் தொடர்ந்து பாரிசில் *1878*-ஆம் ஆண்டிலும், *1889*-ஆம் ஆண்டிலும் இரண்டு பெரிய கண்காட்சிகள் வைக்கப்பட்டன. *1893*-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் சிகாகோ நகரில் ஒரு பெரிய கண்காட்சி திறக்கப் பட்டது. அதைப் போன்றே உலக நாடுகள் பலவற்றிலும் பெரிய பெரிய கண்காட்சிகள் தொடர்ந்து திறக்கப் பட்டன.

இலண்டன் கண் காட்சிக்குப் பிறகு, குறிப்பிடத்தக்கவகையில் அமைந்த மிகப் பெரிய கண்காட்சி *1924-25*-ஆம் ஆண்டில் **வெம்பிளி** (Wembley) என்ற இடத்தில் நடைபெற்ற **பிரிட்டிஷ் பேரரசுக் கண்காட்சி** (British Empire Exhibition) ஆகும்.

அமெரிக்கா *1933—34*-ஆம் ஆண்டில் சிகாகோ நகரில், தனது ஒரு நூற்றாண்டின் அரிய அரசியல்—பொருளியல்—சமூகவியல்—தொழிலியல்—அறிவியல் சாதனைகளைக் கண்காட்சியாக நடத்திக் காட்டிற்று. அந்தக் கண்காட்சி மிக்க வியப்புக்குரிய முறையில் அமைந்திருந்தது. இந்த முறையில் அமைந்த கண்காட்சி *1935*-ஆம் ஆண்டில் சான்டியாகோ, பிரேசில் போன்ற இடங்களிலும் திறக்கப்பட்டது. பிறகு டெக்சாச், சான்பிரான்சிச்கோ, பாரிச், நியூயார்க் ஆகிய நகரங்களிலும் தொடர்ந்து வைக்கப்பட்டது. இத்தகைய கண்காட்சி மக்களுக்குப் புதிய எழுச்சியையும், ஊக்கத்தையும் அளித்ததோடு, அறிவியல் துணைகொண்டு புதிது புதிதான பொருள்களைக் கண்டுபிடிப்பதற்கும், பொருளுற்பத்தியைப் பெருக்குவதற்கும், வாணிகத்தை விரிவாக்குவதற்கும் பெரிதும் பயன்பட்டது.

இரண்டாவது உலகப் பெரும்போர் முடிந்ததற்குப் பிறகு நடந்த கண்காட்சிகளிலே மிகப் பெரிய கண்காட்சி *1951*-ஆம் ஆண்டு இலண்டன்மாநகரில் நடைபெற்ற "நூற்றாண்டுக் கண்காட்சி"யாகும். அந்தக் கண்காட்சியில் பல்வேறு துறைபற்றிய பொருள் வைக்கப்பட்டு, வரலாறு கூறப்பட்டுச் செய்திகள், விளக்கப்பட்டுப். பயன்கள் கூறப்பட்டிருந்தன. உலகநாடுகள் பலவற்றிலிருந்தும் இலட்சக் கணக்கான பார்வையாளர்கள் அந்தக் கண்காட்சியைச் சென்றுபார்த்தனர்.

இந்தியத் துணைக்கண்டத்தை வெள்ளையர்கள் ஆண்டுகொண்டிருந்தபோது குறிப்பிடத் தகுந்த கண்காட்சி ஏதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இந்தியா விடுதலை பெற்ற பிறகு "இரயில்வே நூற்றாண்டுக் கண்காட்சி"யும் "அஞ்சல் கண்காட்சி"யும் குறிப்பிடத்தக்கவைகளாகும். *1952*-ஆம் ஆண்டில் பம்பாய் நகரில் நடைபெற்ற "அகில உலகக் கண்காட்சி" (International Exhibition) மிகச்சிறப்புடன் நடைபெற்ற ஒன்று ஆகும்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையில் கண்காட்சி இன்னமும் நல்ல முறையில் அமையவில்லை ; அது பெறவேண்டிய மதிப்பைப் பெறவில்லை; அது பயன்பட வேண்டிய வகையில் அமையவில்லை. கல்வியறிவில்லாதோர் நூற்றுக்கு எண்பத்தி மூன்று பேர்களாக வாழும் இந்த நாட்டில் கண்காட்சியைப் போல் பயன்படுத்தக்கூடிய வேறு சிறந்த கருவி எதுவும் இல்லை என்று சொல்லலாம். ஆனால் இங்குதான் கண்காட்சி அவ்வளவு அக்கரையோடு நிறுவப்படுவதில்லை. வெறும் பொழுதுபோக்கு 'தமாஷாக்'களுக்கும் மக்கட் கூட்டத்தை வேடிக்கை பார்ப்பதற்காகவுமே இங்கு கண்காட்சிகள் பயன்படுத்தப்படுகின்றன. கண்காட்சிகளை அமைப்பதில் இந்தியா மற்ற நாடுகளோடு போட்டிபோடத் துணிவு கொள்ளுமேயானால், நல்ல முறையில் அவற்றை நிறுவுவதற்கு வழிவகைகள் பிறக்கும்.

ஒவ்வொரு சிற்றூரிலும், பேரூரிலும், நகரங்களிலும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்து பொதுமக்கள் காண புதிய புதிய கண்டுபிடிப்புகளையும், அரிய பொருள்களையும் காட்சிக்குக் கொண்டுவந்து வைக்கலாம் என்ற முறையில் ஊக்குவிக்கப்படுவார்களேயானால், மக்களில் சிலருக்காவது புதியன கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆவலும், உணர்ச்சியும் ஏற்பட்டு நாட்டில் அறிவியல் அறிவு வளர வழி பிறக்கும்.

குறைந்த அளவு பெரியபெரிய நகரங்களிலாவது நிலையான கண்காட்சிகள் நிறுவப்பட வேண்டும். படித்தறிய பாமர மக்களுக்கு அறிவு புகட்ட அவை ஏதுக்களாக இருக்கும். மேலும் பெரிய நிலவூர்தி (லாரி) களில், நகரும் கண்காட்சிகளை அமைத்துச் சிறிய ஊர்களுக்கு அடிக்கடி கொண்டுசெல்வதன் மூலம் மக்களுக்கு உலகியல் அறிவை ஊட்டலாம்.

மனிதனின் அறிவு ஆராய்ச்சித் திறனாலும், கைத்திறனாலும், மெய்த்திறனாலும் உண்டாகும் அரிய பொருள்களையும், அவற்றின் பண்புகளையும் வரலாறுகளையும் கணகாட்சி சாலையில் வைத்து அறிந்து கொள்வதன்மூலம் பெறும் அறிவைக் கொண்டு மேலும் மேலும் நாட்டின் நிலையையும். மக்களின் வாழ்வையும் உயர்த்தலாம்.

கண்காட்சிக்கு வேண்டிய இன்றியமையாத பண்பு கவர்ச்சியாகும். அந்தக் கவர்ச்சியோடு வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களையும் சேர்த்துக் குழைத்துக் கொடுத்தால், மனித சமூகம் உறுதியாகப் பயன் பெற்றே தீரும், கருத்தும் கவர்ச்சியும் மிக்க கண்காட்சிகள் நாடெங்கும் பொலிவு பெறுமாக.

மொழியிற் சிறந்தது தமிழென்பதை மறுப்பார் யாருமில்லை,
நூலில் சிறந்தது திருக்குறளென்பதை தெரியாதார் யாருமில்லை,
தில்லை சிதம்பரத்தின் சிறப்பை அறியாதார் யாருமில்லை,
செடி மார்க் சிவபுரி புகையிலையை ருசியாதார் யாருமில்லை.

Use always

CHEDI MARK TOBACCO

MANUFACTURERS

★

THE SIVAPURI PUGAILAI LTD.
71, STATION ROAD, CHIDAMBARAM.

Complete Plywoods and Reapers for the Maingate of the Congress Exhibition
and the complete Gandhiji Gallery were supplied
by us to BALU BROS.

BHARAT PLYWOOD AND TIMBER PRODUCTS LTD.

Manufacturers of Commercial Plywood, Block Boards,
Lamin Boards, Tea-Chests and Laminated Furniture.

Head Office:
CANNANORE
N. MALABAR.

LAMINEX PLYWOOD

Sales Depot:
84, SYDENHAMS ROAD,
MADRAS-7.

(THE MAINGATE OF THE CONGRESS EXHIBITION, MADRAS, 1955)

GORDHANDAS KHIMJI

TIMBER MERCHANTS

84, SYDENHAMS ROAD, MADRAS-7.

தஞ்சை—கவின்கலைப் பொருட்காட்சி—கலை விழாவில்

ஓவியர் பாலு சகோதரர்கள்



13-4-53 திங்கள்கிழமை (தமிழ் வருஷப்பிறப்பன்று) காலை 9-30 மணிக்கு சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் **ஸ்ரீ சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்** *அவர்களால் கண்காட்சி திறந்துவைக்கப்பட்டது.*

தமிழ்நாட்டுச் **சித்திரக் கலை** எப்படி எப்படி எல்லாம் முன்னால் இருந்தது, இப்போது எப்படி வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதை இதே ஹாலில் மாடியில் அமைத்திருக்கும் எண்ணற்ற சித்திரங்கள் மூலம் காணலாம். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பியதுபோல, பல தமிழ்ப்பாக்கள் சித்திரங்களாக உருவாகி இருக்கின்றன. எங்கள் நோக்கம் லக்ஷியம் உயர்ந்தது. காலத்தால் அழிந்துபோகும் சித்திரங்களுக்கும், நாட்டு மக்களின் கலாசாரத்தை விளங்காத சிற்பங்களுக்கும், முக்யத்வம் கொடுக்க விரும்பவில்லை; வண்ணத்திலும், சுண்ணத்திலும் மட்டுமல்ல, எண்ணத்திலும் சிறந்தோங்கும் கலைகளை வளர்ப்பதுதான் எங்கள் குறிக்கோள்.

—டி. கே. பழனியப்பன்
தஞ்சை ஜில்லா கலெக்டர்.

சித்திரப்பகுதியில் நுழைந்ததும், முதலில் உங்கள் கண்முன் வருபவர் நடராஜர்தான். பொன் போர்த்த கட்டிடத்திற்குள் ஆடும் பெருமானும், அவர்பின் அந்த ஆட்டத்தினால் எழும் இன்பத்தை உணர்த்தும் இனிய தோற்றமும் சித்தரிக்கப் பட்டிருக்கிறது, சித்தரித்தவர்கள் சென்னை **பாலு சகோதரர்கள்.** இனி தொடர்ச்சியாகவே பாலு சகோதரர்கள் சித்திரங்களைப் பார்க்கலாம். பாலு சகோதரர்கள் படங்களுள் சிறந்தவை இரண்டு. **காந்திஜி ஒரு குஷ்டரோகிக்குத் தொண்டு செய்யும் காட்சி** ஒன்று, ஒரு **ஏழைப் பிச்சைக்காரனும் அவனது மகளும்,** மற்றொன்று. இப்படங்களை உருவாக்கியவர்களின் கைத்திறன் சிறந்தது. இது தவிர **திருக்குறளுக்கும் கம்ப ராமாயணத்திற்கும், திருவாசகப்பாவிற்கும்** விளக்கப் படங்கள் பல எழுதிவைத்திருக்கிறார்கள். இவற்றில் 'யான் நோக்கும் காலை நிலம் நோக்கும் நோக்காக்கால் தான் நோக்கி மெல்ல நகும்' என்ற குறளுக்கும் "அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை," என்ற குறளுக்கும் எழுதி இருக்கும் படங்கள் அழகாக இருக்கின்றன.

—தெ. மு. பாஸ்கரத்தொண்டமான்
காரியதரிசி, தஞ்சை கலைக்கூடம்.

தில்லியில் பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சி

Balu Bros' Art Exhibition at New Delhi

The President Dr. RAJENDRA PRASAD inaugurating the Sixth Tamil Festival in NEW DELHI, on 30th Aug, 1953. Dr. S. Radhakrishnan, Vice-President, Sri. O. V. Alagesan, Dr. K. S. Krishnan and Sri. T. S. Avinasalingam Chettiar, M. P., are also in the Picture.

இந்திய ஜனாதிபதி ராஜன் பாபு அவர்கள் 6-வது தமிழ் மகாநாட்டைத் திறந்து வைத்தார். அப்போது தில்லி பிரதம கமிஷனர் ஸ்ரீசங்கர் பிரசாத் கலைக் கண்காட்சியைத் திறந்துவைத்து, இக்கண் காட்சியால் பல நூறு வட இந்தியர்கள் தமிழ் நாட்டுச் சிற்பங்கள், ஓவியங்கள் பண்புகளைப் பற்றித் தெரிந்து கொண்டார்களென பாலு சகோதரர்களைப் பாராட்டினர்.

—காவேரி, செப். '53

ஓவியர் பாலு சகோதரர்கள் கலைக் கண் காட்சியை வெற்றிகரமாக நடத்தி 6-வது தமிழ் மகாநாட்டை சிறப்பித்ததற்கு டெல்லித் தமிழ்ச் சங்கத்தார் அளித்த பெரிய வெள்ளிக் கேடயம்.

BALU BROS' ART EXHIBITION AT NEW DELHI, 30—8—53.



குறள் ஓவியம்

தில்லித் தமிழ் விழாவின் கலைக் கண்காட்சியில் ஓவியர்கள் பாலு சகோதரர்களின் ஓவியங்களை மத்திய சர்க்கார் நிதி மந்திரி ஸ்ரீ சிந்தாமணி தேஷ்முக் அவர்களும், உதவி ரயில்வே மந்திரி ஸ்ரீ. ஓ. வி. அளகேசனும் பார்த்து ரசிக்கிறார்கள். படத்தில் இருக்கும் காந்திமகான் ஒரு வயோதிக நோயாளிக்குப் பரிவுடன் சிகிச்சை செய்யும் சித்திரம் தஞ்சை கண்காட்சியில் பரிசு பெற்றது,

---

ஓ. வி. அளகேசன்,
உதவி ரயில்வே மந்திரி.

புது டெல்லி,
4—11—1953

பாலு சகோதரர்கள் தீட்டிய ஓவியங்களை கண்ணுற்று களிப்பெய்தினேன். இலக்கியத்தில் காணப்படும் நல்ல அடிகளை அப்படியே படமாகக் காட்டியிருக்கிறார்கள். நம் நாடு கலைப்பெருமை அடைந்து முன்னேற்றமடைய ஒவ்வொருவரும் இந்த சகோதரர்கள் தீட்டிய கண்காட்சியைக் கண்டு களிப்பது அவசியம். வள்ளுவரின் ஒவ்வொரு குறளுக்கும் இவர்கள் வரைந்திருக்கும் சித்திரங்கள் உள்ளத்தைத் தொடும்படியாக இருக்கின்றன. குறளில் கூறி இருக்கும் பொருள் அணு அளவும் மாறாது ஓவியத்திலே பிரதிபலிப்பதுதான் அவர்களின் திறமையை உயர்த்துகிறது. வாழ்க அவர்களின் கலைத்திறன்.

ஓ. வி. அளகேசன்

BALU BROS' ART EXHIBITION AT BOMBAY

பம்பாயில் பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சி

17—10—53 சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரபல தமிழ்நாட்டு ஓவியர்களான பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சியை, முன்னாள் கவர்னர் H. P. மோடியால் திறந்து வைத்து, தமிழோடு இணைந்து வரப்பெற்றுள்ள தென்னாட்டுச் சித்திர சிற்ப கலைகள் நமது இந்திய கலாசாரத்திற்கே மூலதாரமாகுமென்று, பாலு சகோதரர்களைப் பாராட்டினார். பிறகு பாலு சகோதரர்களுக்கு வாழ்த்துப் பத்திரத்தை வாசித்தளித்தார்கள். பிறகு பன்மொழிப் புலவர் ஸ்ரீ தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் தமிழ் இலக்கியங்களிலிருந்த கஷ்டமான பொருளுக்கு எழிலோவியத்தை எழுத்தறிவில்லாதவர்கள் கூட உணர்ந்து மகிழ பாலு சகோதரர்கள் சித்திரம் தீட்டியுள்ளனர் என்று பாராட்டினார்.

கலைகள் பலவற்றில் சித்திரமும், சிற்பமும் தனிச் சிறப்புடையவை. வானளாவி நிற்கும் கோபுரங்களும், குகைக் கோயில்களும் நமது நாட்டில் சிற்பக்கலை எவ்வளவு சிறப்புற்றிருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் முதலிய இடங்களில் காணப்படும் குகைச் சித்திரங்கள் சித்திரக் கலையின் மேம்பாட்டிற்கு அத்தாட்சி. அத்தகைய சிறப்பு பொருந்திய சித்திரக் கலையைத் தமிழகத்தில் வளர்த்து வரும் பெருமையின் பெரும் பகுதி ஓவியர்கள் பாலு சகோதரர்களைச் சாரும்.

பாலு சகோதரர்கள் தமிழ்மறை, சிலம்புச் செல்வம், கம்பராமாயணம், அக நூல்கள் முதலியவற்றின் சில காட்சிகளுக்கு அருமையான விளக்கச் சித்திரங்கள் வரைந்திருக்கிறார்கள். தவிர இந்தியத் தலைவர்கள், விஞ்ஞானிகள், கட்டபொம்மன் வரலாற்றுச் சித்திரங்கள் முதலியனவும் சித்தரித்துள்ள இச் சகோதரர்கள் சமீபத்தில் மகாத்மாஜியின் வாழ்க்கையையும், தேசியப் போராட்டங்களையும் ஓவியமாக வரைந்திருக்கிறார்கள். வரைந்ததோடு மாத்திர மின்றி, அதனை ஒரு சித்திரக் கண்காட்சியாகவும் அமைத்து, ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரஸிக்கும்படிச் செய்கிறார்கள். அதனின்று கிடைக்கும் வருவாயை நல்ல காரியங்களுக்கு உதவ முற்படுவது மேலும் பாராட்டத்தக்க நல்ல பணியாகும்.

ஸ்ரீ பாலு சகோதரர்களின் இத்தொண்டு மேலும் மேலும் நீடித்து நிலைபெற்று வளர்வதாகுக.

பம்பாய். ரெ. முருகையா.

1953 அக்டோபர் 16, 17, 18 தேதிகளில் பம்பாயில் நடைபெற்ற தமிழ் மகாநாட்டில்
சித்திரக் கண்காட்சி நிறுவிய

ஓவியர் பாலு சகோதரர்களுக்கு

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார் அளித்த வரவேற்பிதழ்.

காலவான் போக்கில் என்றும் அலகிலாப் பெருமை கொண்ட
கோலவான் தொழில் செய்து குலவிய சகோதரர்களே வருக, வருக!

காந்தியக் கொள்கைகளில் அழியாத நம்பிக்கையுடன் தேச பக்தியும், பாஷாபிமானமும் கொண்ட ஸ்ரீ அமிர்தம் பிள்ளையின் செல்வப் புதல்வர்களாகத் தோன்றிய தாங்கள் மொழிப் பற்றும், கலைச் சிறப்பும் மிகுந்து விளங்குவது இயற்கையே. சித்திரக் கலைஞர்களை மக்களாகப் பெற்றெடுத்த தெய்வ பக்தி மிகுந்த தங்கள் தாயார் லோகாம்பாளின் தனிப் பெரும் ஆதரவு தங்களைப் பிள்ளைப் பருவ முதல் சித்திரக் கலையைப் பேணச் செய்து, இன்று ஒரு ஓவியக் குடும்பத்தை உருவாக்கி இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம்.

இருபது வருடங்களாகத் துகிலிகை பிடித்த தங்கள் தளராக் கரங்களின் இடையறாத உழைப்பும், திறமையும் இன்று 'பாலு சகோதரர்கள்' என்ற சொற்களைக் கலையுலகம் அறிந்த பெயராகப் பரிணமிக்கச் செய்துள்ளன. அனுபவத்தாலும் ஆராய்ச்சியாலும் சித்திரக் கலையின் திட்ப நுட்பங்களைத் தேர்ந்து தீட்டும் விளம்பர, நுண்கலைச் சித்திரங்கள் தங்கள் 'கை வண்ண'த்தை வெளியிடுகின்றன. உயிரினங்களைப் படைக்கும் பிரும்மாவைப்போல், ஜீவகளையுள்ள உருவங்களையும் காணரிய வண்ணக் காட்சிகளையும் தோற்றுவிக்கும் தங்கள் தொழில் வளம் போற்றுதற்குரியது.

விளம்பரக் கலையில் தலைசிறந்த பீடமாகத் திகழும் தங்கள் ஸ்தாபனத்தில் உருவாகும் சுவரொட்டிகளும் கண்கவர் 'பானர்'களும், பத்திரிகை விளம்பரச் சித்திரங்களும் சினிமாக் கலையுலகத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதத் தேவையாக இருந்து வருகின்றன. ஜெமினி அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க ஓர் இரவினிலே மாணப் பெரிய 'பானர்' ஒன்றை மிக்க உவகையோடு உருவாக்கிய தங்கள் மிஞ்சு கலைத்திறனைக் கண்டு 'கஞ்ச மலரிற் கடவுளே' வியந்திருப்பார் எனில் மற்றவர்களின் அதிசயப்பாட்டைக் கூறவும் இயலுமோ!

வருவாய் வழங்கும் விளம்பர ஓவியங்களுடன் நிறுத்திக் கொள்ளாமல் தமிழ் நாட்டின் இலக்கியச் செல்வங்களாகிய சிறந்த காவியங்களை மணங் கமழ் ஓவியங்களில் சிருஷ்டி செய்யும் சிறந்த பணி தங்களது இலட்சிய மனப் பான்மையை வெளியிடுகிறது. கம்பனும், வள்ளுவரும், பாரதியும் சொல்லிலே வடித்த இலக்கியக் காட்சிகளைத் தாங்கள் வர்ணச் சித்திரங்களாகத் தீட்டிய கலைப் பொக்கிஷங்கள் தமிழ் நாட்டுக் கண்காட்சிகள் பலவற்றுள் பரிசும், பாராட்டும் பெறுவதில் ஆச்சரியமில்லை. இவை தவிர இறவாத புகழுடைய தமிழ் நூல்கள் இயற்றிய தெள்ளு தமிழ் புலவர்களின் திருவுருவங்களை வண்ணமுற எழுதி, அவர்களது நினைவு தமிழன் மனதில் மறவாது நிரந்தரமாக நிலைபெறச் செய்து, புத்துயிர் அளித்த பெருமை தங்களைச் சார்ந்ததாகும்.

நன்னரோவியங்கள் தீட்டி பொன்னுயர் சேவை செய்திடும் உங்கள் உள்ளத்திடையே மின்னும் அன்பும், அடக்கமும் ஒற்றுமையும், ஆர்வமும் தங்கள் புகழைப் புவிமிசை என்றும் சாற்றுகின்றன. குலவு சித்திரம் பலபல எழுதி ஓவியப் பொற்பும், கலை மாண்பும் கொண்டுள்ள தங்களது சீலமும் பெருமையும் ஞாலத்தில் என்றும் வளர, வற்றாத கலைத் திறனும் வளரும் ஆயுளையும் நல்க இறைவனை இறைஞ்சுகிறோம்.

மாதுங்கா,
17—10—'53

இங்ஙனம்,
பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தார்.

1954-ம் வருட சென்னை தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சி : 1—1—54

சென்ற வாரத்திலே, தேனாம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியிலே, பாலு பிரதர்ஸ் கலைக் கண்காட்சியை 'கல்கி' ஆசிரியர் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் திறக்கப்பட்டது.

அன்று வந்திருந்தோரை நாரதர் ஸ்ரீநிவாச ராவ் வரவேற்றார். இந்தப் பெரிய பொருட்காட்சியிலே, கலைக் கண்காட்சி இல்லாதது, சுமங்கலி ஸ்திரீ நெற்றியிலே திலகமில்லாதிருப்பது போலிருந்ததாகவும் அந்தக்குறை இன்றோடு நீங்கி விடுமென்றும் கூறினார். பிறகு இக்கலைப் பகுதியை சிருஷ்டித்த ஓவிய நிபுணர்களான பாலு சகோதரர்களைப்பற்றி எடுத்துச் சொல்லி விட்டு தலைவரைப் பேசச் சொன்னார்.

ஸ்ரீமான் 'கல்கி' பேசுகையில், பண்டைத் தமிழரின் பெருமை, தமிழ் நாட்டின் கலைகளின் பெருமை ஆகியவற்றை எடுத்து வர்ணித்துவிட்டு, பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் பல மறைந்துவிட்ட போதிலும், சளுக்கியர் காலத்திலே பல நூறு வருடங்களாக எழுதப் பெற்ற அஜந்தா சித்திரங்கள் இன்னமும் இருப்பதைச் சுட்டிக் காட்டினார். அந்த பரம்பரையிலே வந்த பாலு சகோதரர்களும், சில அற்புத சித்திரங்களை அழகாக எழுதி இக்காட்சியில் வைத்திருக்கிறார்கள். பொது ஜனங்கள் இவற்றை ஏராளமாகச் சென்று பார்த்து, ஆதரவு காட்டவேண்டும் என்று உரைத்தார்.

இக்கலைக் கண்காட்சியைத் திறந்துவைத்த மந்திரி கனம் ஸ்ரீ சுப்ரமண்யம், 'இம்மாதிரி கலைகளுக்கு ராஜாங்கமும் ஆதரவு அளிக்கவேண்டியதுதான். பாலு சகோதரர்கள் இருவரும் எழுதியுள்ள சித்திரங்களில் பல அற்புதமாயிருக்கின்றன' என்றார்.

பிறகு ஸ்ரீ. ஆர். பி. சேதுப்பிள்ளை, இக்கண்காட்சியில் உள்ள கம்பராமாயணம், புறநானூறு பாடல் சித்திரங்களின் அழகைப் பற்றிச் சிலாகித்துப் பேசினார். அதோடு, 'இலக்கியம் படித்த பண்டிதர்களுக்கும் இன்றியமையாதது இக்கலைப் பொருட்காட்சி' என்ற நற்சாட்சிப் பத்திரத்தைக் கொடுத்து விட்டார்.

நாரதர் ஸ்ரீநிவாச ராவ் வந்தனோபசாரம் கூறினார். 'இங்குள்ள அரிய படங்கள், இங்கே இப்பொருட்காட்சி முடியும்வரைதான் இருக்கும். அப்புறம் பலர் இவற்றைப் பார்க்க முடியாது. ஆகவே சர்க்கார் இவற்றில் பலவற்றை விலைகொடுத்துவாங்கி, மியூஸியத்தில் வைத்துவிடவேண்டும்' என்றும் அவர் கூறினார்.

திரு. 'கல்கி'; திரு. C. சுப்ரமண்யம்; திரு. வி. எஸ். தியாகராஜ முதலியார் மற்றும் பத்திரிகையாளர்களும் பார்வையிடும் காட்சி.

இக்கலைக் கண்காட்சியில் இந்திய சர்க்கார் சேதி இலாகாவினர் அனுப்பியுள்ள பல ஸ்வாரஸ்யமான போட்டோக்கள் தவிர, பாக்கி அனைத்தும் இந்தச் சகோதரர்களாலேயே வரையப் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குறள், அகநானூறு, புறநானூறு, கம்ப ராமாயணம் ஆகியவற்றில் உள்ள பாடல்களைச் சித்திரங்கள்மூலம் வர்ணித்திருக்கிறார்கள்.

காந்திஜியின் வாழ்க்கையிலிருந்து எடுத்த சில சம்பவங்களைச் சிருஷ்டித்துப் படமெழுதி யிருக்கிறார்கள். நமது தேசியத் தலைவர்களின் உருவப்படங்கள், உலக அறிஞர்களின் சித்திரங்கள், கட்ட பொம்மனின் வாழ்க்கையிலிருந்து சில சம்பவங்கள் ஆகியவை, பார்க்க வெகு அழகு. சில செப்பு சிலைகளும் இருக்கின்றன.

—நாரதர் 6-1-54

கண் காட்சியில்
கட்டபொம்மன் படங்கள்
இருக்கும் ஒரு முக்கிய பகுதி.

நாட்டுக்குத் தொண்டாற்றிய
அரும்பெரும் தலைவர்களின்
படங்கள் இருக்கும் மற்றொரு
பகுதி.

இலங்கை—யாழ்பாணத்தில் பாலு சகோதரர்கள்.

இலங்கை மந்திரி திரு. நடேசனார் அவர்கள் கலைக்கண் காட்சியைத் திறந்துவைத்துப் பார்வையிடுகின்றார்

"காணிவல்" கலைக்காட்சி

வண்ணச் சித்திர ஓவியங்கள்

"சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்" என்று அமரகவி பாரதியார் அன்று பாடினார். சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்பதன் மூலம் இந்தப் பாலம் ஏற்பட முடியுமென்று எவருமே எதிர் பார்த்திருப்பதற்கில்லை. கலைவளம் மிக்க தமிழகம் தன் கலைச் செல்வங்களைச் சேய் நாடாம் ஈழத்துக்குப் பண்டு தொட்டு வாரி வாரி வழங்கிக் கொண்டேயிருக்கிறதென்பதைக் காணும்போது இக்கலைப் பாலம் நினைவுக் கெட்டாத காலத்திலிருந்தே நின்று நிலவுகிறதென்றுதான் சொல்லவேண்டும். கலைவளத்தை மட்டு மல்லக் கலைஞர்களைக்கூட அவ்வப்போது அனுப்பி இருநாட்டு உறவையும் உறுதிப்படுத்தி வருகிறது. இந்த இணைப்பை இனி எந்தக் கடல் கோள்களினாலும் பிரித்துவிட முடியாது.

இப்போது யாழ்ப்பாணம் முற்ற வெளியில் நடைபெற்றுவரும் மகாஜனக் கல்லூரிக் காணிவலைப் பார்க்கும்போது நம் தமிழ்க் கலாச்சார உறவும் உயர்கலைப் பண்பும் உள்ளத்தில் தோன்றி உவகையூட்டுவிடுகின்றன.

தென்னிந்தியக் கலைகளாலும் கலைஞர்களாலும் அழகொளி பெற்றுச் சோபிக்கும் இந்தக் காணிவல் யாழ்பாண மக்கள் இன்றுவரை கண்டிராத பல அற்புதங்களைக் கண்டு அனுபவிக்க அரிய சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறது.

சித்திரக் கோட்டம்

காணிவல் மைதானத்திலே நின்று அங்கு நடைபெற்றுவரும் நவநவமான காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்போரை, வர்ணஜால ஒளியை எங்கும் பரப்பிக் கொண்டிருக்கும் மகாபலிபுரச் சிற்ப அமைப்பைச் சிறிதளவு பிரதிபலித்துக் காட்டும் காணிவல் கோபுர வாயல், அதனருகிலிருக்கும், பாலு சகோதரர்களின் உயிர்பெய் ஓவியக் காட்சிசாலையை மிக இலகுவாக அறிமுகப்படுத்தி விடுகின்றது. கலா சொரூபியான நடராஜ மூர்த்தியின் ஆனந்தத் தாண்டவ ஓவியச் சிலையை நடு நாயகமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் இந்த சித்திரக் கோட்டம் கண்களுக்கு மட்டுமின்றிச் சிந்தைக்கும் நல்விருந்தளிக்கின்றது.

கம்பனின் காவியச் சோலையிலே புகுந்த பாலு சகோதரர், இராமாயண காவியத்தின் முக்கியக் கட்டங்கள் சிலவற்றை ஓவியத்தில் வடித்துக் கவிதைக்களுக்கு நல் விளக்கம் தருகின்றனர். துக்கம் தோய்ந்த முகத்துடன் ஏங்கியிருந்த சீதை அசோக வனத்தில் அரக்கியர் நடுவில் வீற்றிருப்பதையும், இராம தூதன் அங்கு சென்று நற்செய்தி கூறுவதையும் இரு ஓவியங்கள் மூலம் விளக்கியிருக்கின்றனர். சீதாபிராட்டியின் உள்ளத்துடிப்பையும், அநுமானின் பரிவையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் கண்கள் மூலமாகவே பார்க்கச் செய்துவிடுகின்றன அச்சித்திரங்கள். திருவள்ளுவரின் தமிழ் வேதமும், காந்தியண்ணல் வாழ்வின் முக்கிய கட்டங்கள் சிலவும், கலை அழகுடன் விளங்குகின்றன. காந்திஜி, குழந்தையிடம் கடவுளைக் காணும் ஓவியத்தைக் கண்கொட்டாமலே பார்த்துக் கொண்டிருக்காலாம். பாஞ்சாலங் குறிச்சி மண்ணிலே வெள்ளையனை எதிர்த்து வீர முழக்கமிட்ட வீரபாண்டிய கட்டபொம்மன், அதே வெள்ளைத் துரைமுன் தூக்குக் கயிற்றை முத்தமிடத் தயாராகயிருக்கும் காட்சி, தமிழ் பெருமகன் ஒவ்வொருவனுக்கும், நரம்புகளில் முறுக்கேற்றிச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டுகின்றது.

THE BIGGEST NAME IN THE FILM INDUSTRY TO-DAY

is

PAKSHIRAJA

PRODUCER..DIRECTOR

S.M.S.NAIDU

WHO GAVE US THE MIGHTY MOTION PICTURE

Azaad

AWAIT THEIR NEXT HIT!

Marakatham

in

TAMIL - TELUGU - HINDI

with

VYJAYANTIMALA .. DILIP KUMAR

in HINDI

BALU BROS

ஓவியர் பாலு பிரதர்ஸ் தீட்டிய எட்டு கலர் ஆப் செட்டில் அச்சடித்த நேரு, காமராஜ்—நேரு, நடராஜர் பெரிய படங்கள் எங்களிடம் கிடைக்கும் :

அருணா புக் ஹவுஸ்

8 G. பைக்ராப்ட்ஸ் ரோட், சென்னை-5.

விற்பனைக்குத் தயார் !

- அழகான மூவர்ண ஓவியத்தை முகப்பாகக் கொண்டது !
- 50 வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்களை மையமாக வைத்துப் பின்னப்பட்ட வரலாற்றுச் சித்திரம் !!
- மாணவர்களின் சிறப்பான போக்கிஷம் !!!

கிரேக்க மாவீரன்

அலெக்ஸாண்டர்

தீட்டியவர் : கௌதமன்

பக்கங்கள் **228** விலை ரூ. **2**

வியாபாரிகளுக்கு 25% கழிவு. தனிப் பிரதி தபால் செலவு இனம். முன் பணம் அனுப்ப வேண்டும்.

கிடைக்குமிடம் :

சிந்தனையாளர் பதிப்பகம்

68, அப்புமுதலி தெரு, சென்னை—4

கௌதமனின் இதர நூல்களும் கிடைக்கும் :—

இரத்த வெறியர்கள்—பிளேட்டோ

வெளியுலக தொடர்புகொள்ள வெளிநாட்டு பத்திரிகைகளை வரவழைக்க வேண்டுமா ? சந்தா விபரங்களுக்கு எழுதுங்கள்.

அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுகள் :

SALEM ADVERTISING SERVICE

GUGAI, SALEM, SOUTH INDIA.

30 ஆண்டுகளாக புகழ் பெற்றது

பிர்மா புகையிலை

தயாரிப்பவர்கள் :

A.N. இரத்தினம் & கோ

திருவாரூர்

பண்டைத் தமிழ் மக்கள் வாழ்க்கை முறைகள், தமிழ் வேந்தரின் வீரச் செயல்கள், நம் கலாச்சாரப் பண்பாடுகள், இன்றைய உலகின் ஏற்றத் தாழ்வுகள் ஆகிய யாவும் நம்முன் காட்சி தருகின்றன. தாய் நாட்டின் விடுதலைக்காக அரும்பணியாற்றிய நேருஜி, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ், இராஜேந்திர பிரஸாத், கப்பலோட்டிய தமிழன், சத்தியமூர்த்தி, இராஜாஜி, காமராஜ் நாடார் ஆகிய பல தலைவர்களை மட்டுமன்றி, தமிழ் இலக்கிய சிருஷ்டிக் கர்த்தாக்களான பாரதி, திரு. வி. க., டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், மறைமலையடிகள் முதலானோரையும், உலக விஞ்ஞான மேதைகளையும், சிந்தனைச் சிற்பிகளையும், அங்கு கொண்டுவந்து நம் முன் நிறுத்தியிருக்கின்றனர், அந்தச் சித்திரக் கலைஞர்கள்.

நவரஸங்களுக்கும் இடமளிக்கும் இச்சித்திரக் கோட்டத்தில் உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டும் ஒரு சில சிருங்கார ஓவியங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இளைஞர் உள்ளங்களைக் கவரக்கூடிய இச் சித்திரங்களைக் கலாரசனையுடன் நோக்கும்போது, அவற்றிற் பொதிந்துள்ள உயர்ந்த பண்பும், தத்துவார்த்தங்களும் புலப்படுகின்றன.

நீலத்திரைக் கடலோரத்திலே நித்தம் தவஞ்செய் குமரியையும், பண்டைய அழியா ஓவியங்களான சித்திரங்களையும், அவசியம் ஒவ்வொருவரும் பார்த்தேயாகவேண்டும். இயற்கை வர்ணங்களில் கற்பனைத் திறன் மிளிர அமைக்கப்பட்டிருக்கும் இக்காட்சிசாலையைப் பார்த்துவிட்டு வெளியேறும் ஒவ்வொருவரையும் கடைசியாகக் கலைவாணி புன்னகை பூத்த முகத்துடன் வழியனுப்பி வைக்கிருள்.

சமீபத்தில் இலங்கை வரவிருக்கும் எலிசபெத் மகா ராணி, தமிழர் வாழும் பகுதிகளுக்குச் சமூகமளிக்காமல் திரும்புமிடத்து, இச்சித்திரக் கூடத்தை ஒரு தடவை அவர்கள் பார்க்கக் கூடுமேயானல் தமிழர் கலைப்பண்பை ஓரளவாவது தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கலாம்

பாலு சகோதரர்—ஓவியங்கள்

மகாஜனக் காணிவலில் பாலு சகோதரர்களின் ஓவியக் காட்சிச் சாலையிலே கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் ஆகிய காட்சிகளைப் பார்க்கும்போது உள்ளம் விம்முகிறது. ஆகா ! காட்சிகளும், ஓவியங்களும் நம்மை எங்கோ அழைத்துச் செல்கின்றன.

வெறும் காட்சிகளும் அலங்காரச் சித்திரங்களும், 'உயிரற்ற' முகங்களும் தீட்டி அலுத்திருக்கும் சில யாழ்ப்பாண ஓவியர்களுக்கு இக்காட்சி மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றிப் 'பாலு சகோதரர்கள்' ஓவியங்கள் நமக்கு எவ்வளவோ போதிக்கின்றன. திரு. வி. க., சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்) ஆகியோரது ஓவியங்களில் உயிர் அப்படியே ததும்புகின்றது.

திருக்குறள் ஒவ்வொன்றிற்கும் பல பல வியாக்கியானங்கள் தம் மனம் போனபடி இப்போது செய்யப்படுகின்றது. திருவள்ளுவர் இப்போது மீண்டும் வந்தால்...நிச்சயம் தூக்குபோட்டுக் கொள்ளுவார். ஆனல் அவரது அருமையான குறள் சிலவற்றிற்கு ஓவியம் தீட்டியிருப்பதைப் பார்த்து, வள்ளுவர் நிச்சயமாக வாழ்த்துவாரென்பதற்கு ஐயமில்லை.

'அல்லை யாண்டமைந்தமேனி' என்ற கம்பன் பாடலுக்குத் தீட்டியிருக்கும் ஓவியமும், 'வீரத்தாய்' ஓவியமும் காட்சிக்கு வைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

காணிவல் மைதானமே காட்சிக் குரியதுதான். அதில் பாலு சகோதரர்கள் ஓவியங்கள் சிகரமாயிருக்கின்றன.

—ஈழகேசரி 28-3-54

மகாஜனக் கல்லூரிக் கண்காட்சி

பிரபல இந்தியக் கலைஞர் கலந்துகொள்வர்

கவர்ச்சி தரும் சித்திரக் கோட்டம்.

பிரபல தென்னிந்திய சைத்திரிகர்களான பாலு சகோதரர்களின் கைத்திறனை முற்றிலும் கொண்டதான ஓவியக் கோட்டம் யாழ்ப்பாண மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருப்பதை இங்குள்ள மகாஜனக் கண்காட்சியில் நாடோறும் காணலாம். அவற்றைக் கண்டு களிப்புறத் தூர இடங்களிலிருந்தெல்லாம் கலா ரசிகர்கள் வந்துக் கொண்டிருக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இந்த ஓவியச்சாலை திறந்து வைக்கப்பட்டது. திருக்குறள், கம்பராமாயணம், காந்தியடிகளின் அரசியல் வாழ்க்கை, வீரபாண்டிய கட்டபொம்மன் காட்சி, மற்றும் இன்றைய அரசியல் சமூக சேவையாளர்கள் ஆகியோரின் படங்களும், இயற்கை வனப்பு கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை எடுத்துக் காட்டும் ஓவியங்களும் அங்கு இடம் பெற்றுள்ளன.

—தமிழ்நாடு 26-3-54

தென்னிந்தியாவில் காந்தியடிகள் சுற்றுப்பிரயாணம் செய்தபோது தமிழ் நிலத்தின் வயல்களிலே, முழங்கால்களுக்கு மேல் இடுப்பில் ஒரு ஆடை, தோளின்மேல் மற்ருெரு துண்டாடை இவற்றுடன் காட்சியளிக்கும் தமிழ் உழவரைப் பார்த்துத்தான் அவர் தமது உடையைத் திருத்திக் கொண்டார்.

ஆம் ! காந்தியடிகளின் உள்ளத்தைத் திருத்தியவன் தென்னுப்பிரிக்காவில் குடியேறிய தமிழகத்துத் தொழிலாளியான பாலசுந்தரம். அவரது உடையைத் திருத்தத் தூண்டியதும் தமிழ் நிலத்து விவசாயி. சுருங்கக் கூறின், சத்தியாகிரக நெறியும், இரண்டாடை கட்டிய எளிமைத் தோற்றமும் தான், மோகன்தாஸ் காந்தியை மகாத்மா காந்தியாக்கியது. அதற்கு துணை செய்தவர் தமிழர் ! தமிழர் !! தமிழர் !!!

தமிழர் தலைவர், ம. பொ. சி.

சென்னை ராஜாஜி ஹாலில் பாலு சகோதரர்களின் அகில இந்திய சித்திரக் கண்காட்சி

(காந்தி அடிகளின் மணிமண்டப நிதிக்கு)



ராஜாஜி ஹாலில், பொதுமக்களின் ஆதரவு பெற்ற பாலு சகோதரர்களின் கண்காட்சிக்கு வருகை தந்த பல்லாயிரக் கணக்கான மக்களில் ஒரு பகுதி

ராஜாஜி ஹாலில் திரு. காமராஜ்

சாதாரண தொண்டராக இருந்து முதன் மந்திரியாக வந்தவரும், தனக்கென்று வாழா தனிப்பெரும் தமிழ் நாட்டுத் தலைவருமான திரு. கே. காமராஜ் அவர்கள் கண்காட்சிக்கு 11-11-54ம் தேதி வருகை தந்து, பாலு சகோதரர்களின் ஓவியங்களைப் பார்த்து வெகுவாகப் பாராட்டினர்.

ராஜாஜி ஹாலில் பாலு சகோதரர்களின் கண்காட்சி

சித்திரங்கள் பேசுகின்றன !

சித்திரங்களுக்கு உயிர் ஊட்டி, நம்முன் நேருக்கு நேர் பேசவும், கதை சொல்லவும் செய்யும் சித்திரக் கலையின் சிறப்பை அறிந்து கொள்ளப் பாலு சகோதரர்கள் ராஜாஜி மண்டபத்தில் வைத்திருக்கும் சித்திரக் கலைக் கண் காட்சியைப் பார்த்தால் போதும்.

காந்தி மகான் கைத்தடியைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஒரு சிறுவன் முன்னால் ஓடுகிறான்; காந்தி மகான் மோகனப் புன்னகை புரிந்த வண்ணம் அந்தச் சிறுவன் பின்னால் செல்லும் காட்சியைக் காட்டும் சித்திரம்; முகத்திலும் உடம்பின் ஒவ்வொரு நெளிவிலும் உற்சாகத்தைப் பிரதிபலிக்கும் தோற்றத்தில் காந்தி மகானுடன் சிலர் பம்பாய்க் கடற்கரையில் நடந்து செல்லும் காட்சி; மேற்படி சம்பவங்கள் உண்மையிலேயே நம் முன் நிகழ்வது போன்ற பிரமையை நமக்குக் காட்டுகிறது.

அடுத்தாற்போல காந்தி மகான் வலக்கரத்தைத் தூக்கி ஆசிர்வதிப்பதுபோல் ஒரு சித்திரம். அதன் அடியில் காந்திஜி தமது குருநாதர் என்று போற்றிய "மூன்று குரங்குகள்" சித்திரத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தச் சித்திரத்தின் வலது பக்கமாக நின்று பார்த்தால் அதே சித்திரம் புத்தர் பிரானாகத் தோற்றமளிக்கிறது. இடது பக்கத்தில் நின்று பார்த்தாலோ இயேசு நாதராகக் காட்சி தருகிறது,

இந்தமாதிரி சித்திர வித்தைகளுடன் இன்னும் முந்நூற்றுக்கு மேற்பட்ட சித்திரங்கள் இருக்கின்றன. பெரும் பகுதி காந்தி மகானின் புனித தியாக வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவியங்கள். இத்துடன் காங்கிரஸ் மகாசபையைக்கட்டி வளர்த்த புண்ணிய மூர்த்திகளின் திரு உருவங்கள், சுதந்திரப் போராட்ட நிகழ்ச்சிகள், சங்ககால இலக்கிய விளக்கங்கள், கம்பராமாயணக் காட்சிகள், புறநானூறு, திருக்குறள் முதலிய நூல்களில் இருந்து சில சித்திர விளக்கம் முதலியவைகளைக் கொண்டு ராஜாஜி மண்டபத்தில் விஸ்தாரமான கண் கவரும் காட்சியாக அமைத்திருக்கிறார்கள். இந்த அற்புதமான சித்திரக் காட்சித் திறப்பு விழாவைக் கலை நிபுணர்களான பாலு சகோதரர்கள் பெரிய திருவிழாவாகவே நடத்தி விட்டார்கள்.

தினம் தினம் ஆயிரக் கணக்கான மக்கள் கண் காட்சியைக் கண்டு களிக்கிறார்கள். கண்காட்சிக்குச் செலுத்தும் நுழைவுக் கட்டணம் காந்தி மகான் மணிமண்டப நிதியில் போய்ச் சேருகிறது. இச் சந்தர்ப்பத்தைப் பொது மக்கள் நன்கு பயன் படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

சித்திரக் கண்காட்சியைப் பார்க்கும் போது நமக்கு முக்கியமாகத் தோன்றும் எண்ணம் என்னவென்றால், காங்கிரஸ் மகா சபை சுதந்திரம் பெறுவதற்குச் சாதித்த சாதனைகள், அந்தச் சாதனைகளை நிகழ்த்திய மகா புருஷர்களின் தியாகங்கள் எல்லாம் நினைவுக்கு வருகின்றன. இந்த எண்ணங்கள் நமது இதயங்களில் பசுமையாக இருக்கும்படி செய்து, காந்தி மகானுக்கு நல்ல ஞாபகார்த்தச் சித்திரக் கூடமாக அமைத்திருக்கும் பாலு சகோதரர்களின் தேச பக்தியையும், கலை ஆர்வத்தையும் பாராட்டுகிறோம்.

'கல்கி' *21—11—54.*

11 தினங்கள் வெற்றிகரமாக நடைபெற்ற கண்காட்சியில் வசூலான முழுத் தொகையையும், (ரூ. 2500) காந்திஜி ஞாபகார்த்த நிதிக்கு, நிதி அமைச்சர் திரு. C. சுப்ரமண்யம் மூலமாக சபாநாயகர் J. சிவசண்முகம் பிள்ளையிடம் அளிக்கப்படும் காட்சி.

1955-ம் ஆண்டில், 60வது காங்கிரஸ் நடத்திய தேனும்பேட்டை அகில இந்திய பொருட்காட்சியில் பாலு சகோதரர்களின் காந்திஜி கண்காட்சி



இந்தியாவிலேயே ஒரு கண்காட்சிக்கு இரண்டு லட்சம் மக்களுக்குமேல் வருகை தந்து பாராட்டிய மக்களில் ஒரு பகுதி

காந்திஜி கண்காட்சியுள் நுழைந்தவுடன் இருக்கும் படம் காந்தி அடிகள் உயர்ந்த ஹிந்து குழந்தை, ஹரிஜனக் குழந்தை, முஸ்லீம் குழந்தை, கிருஸ்துவக் குழந்தைகளை மத வேறுபாடில்லாமல் அணைத்துக்கொண்டிருக்கும் காட்சி. மடியில் இருப்பது ஹரிஜனப் பெண்.

பெருமை தரும் ஓவியக் கண்காட்சி

— தமிழ்த்தும்பி —

கண்காட்சிகளின் எண்ணிக்கை குறிப்பாக சென்னையில் கூடிக்கொண்டு வருகிறது. பொது மக்கள் கலைத் துறையில் கொண்டுள்ள ஆர்வம் பெரிதாக இருப்பதால் நுண் கலைகள் கொண்ட காட்சிகளும் சென்னையில் பெருத்த ஆதரவுடன் வெற்றிகரமாக நடக்கின்றன. முடியரசு இல்லாமற் போனதும் கலை வகைகளின்கதி என்னவாகுமோ என்ற கலக்கம் ஏற்படுவது இயற்கை. குடியரசு சர்க்கார் கலைத்துறையைப் புறக்கணிக்காதது மகிழ்ச்சிக்குரியது.

ஓவியக் கண்காட்சிகள் ஓவியக் கலைஞர்கள் பொது மக்களிடம் கொண்டுள்ள தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. அதே சமயம் பொது மக்கள் ஓவியக் கலையிடம் கொண்டுள்ள பாசத்தை எடுத்துக் காட்டுகிறது. சென்ற வாரம் சென்னையில் நடந்து முடிந்த பாலு சகோதரர்களின் ஓவியக் கண் காட்சி முன் சொன்ன கூற்றுக்களை ஐயத்துக் கிடமின்றி நிரூபித்தது. கண் காட்சியின் வசூல் தொகை காந்திஜி நினைவு மண்டப விழா நிதிக்கு சேருகிறது.

பாலு சகோதரர்கள் உயிர்க்களை ததும்பும் வண்ண ஓவியங்களைத் தீட்டியிருக்கிறார்கள். அகநானூறு, திருக்குறள், புறநானூறு, கம்ப ராமாயணம் போன்ற பேரிலக்கியங்களில் விவரிக்கப்படும் உணர்ச்சிச் சித்திரங்களை செவ்வனே வரைந்திருக்கிறார்கள். விஞ்ஞான அறிவு வளர உதவிய எடிஸன், மார்க்கோனி, பிளெமிங் முதலியவர்களின் ஓவியங்களைப் பாங்குற அமைத்திருக்கிறார்கள். நவீனத் தமிழ் வளர்த்த மறைமலையடிகள், திரு. வி. க., டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் ஆகியோர் தத்ரூபமாக இருக்கிறார்கள். நம் விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்ட அரசியல் தலைவர்களையும் நம் போராட்டம் எவ்வளவு கடுமையாக அடக்க முயற்சிக்கப்பட்டது என்பதையும் உணர்ச்சிகரமாக விளக்கியிருக்கின்றனர். கட்டபொம்மனின் வீரக் கொடி உயரப் பறக்க நடத்தப்பட்ட போர்க் காட்சிகள் தத்ரூபம். அண்ணல் காந்தி ஒரு ஹரிஜனப் பெண்ணால் மாலையிடப் படுவதும், தேசபிதாவின் நவகாளி யாத்திரையும், அண்ணல் சுடப்பட்ட காட்சியும் நேருக்கு நேர் காண்பது போன்ற பிரமை அளிக்கின்றன. பெரியார் நாகம்மை தம்பதிகள் ஜீவனோடு காட்சியளிக்கிறார்கள். கடந்த நூற்றாண்டு அரசியல் காட்சிகள் அலை அலையாக நம் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஒரே படம் நடுவில் நின்று பார்க்கும்போது காந்திஜியாகவும், வலது முனையில் நின்று பார்த்தால் ஏசு கிறிஸ்துவாகவும், இடது முனையில் புத்தர் பெருமானாகவும் தெரிகிறது. காந்திஜி பற்றின விவரங்கள் பாராட்டும் வகையில் சேகரிக்கப்பட்டுள்ளன. ஒரு பிச்சைக்காரியின் பரிதாப நிலை மிக மிகத் தத்ரூபமாக எழுதப்பட்டுள்ளது.

ஒரு மணிநேரம், நம்மைச் சென்ற காலத்திற்கு அழைத்து சென்று, நம் அரசியல் வரலாற்றின் முக்கிய பகுதிகளையும், நம் முன் சமர்ப்பித்து தலைவர்களுடன் அளவளாவுவது போன்ற பிரமையையும் தருகிறது பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சி. அவர்கள் தமிழ் நாட்டின் தனிப் பெருமை. வாழ்க அவர்தம் நற்கலை !

ஹநுமான், ***21—11—54.***

காந்திஜி கண்காட்சி வெற்றிகரமாக நடந்தேறியதை முன்னிட்டு, முதன் மந்திரி திரு. காமராஜ் அவர்களுக்கும், திரு. S. வெங்கட்ராமன், திரு. R. கணேசன், மற்றும் பத்திரிகைகாரர்கள் எல்லோருக்கும் பாலு சகோதரர்கள் அளித்த தேநீர் விருந்தின்போது அவர்களின் சார்பாக நாரதர் சீனிவாச ராவ் எல்லோரையும் வரவேற்றுப் பேசும் காட்சி.

ஆவடி காங்கிரசில் பாராளும் நேரு முதல் ஏரோட்டும் ஏகாம்பரம்

நா. பா.

1. காவியம் பாடிய கம்பன்—வாழ்க்கை ஓவியம் தீட்டிய வள்ளுவர்—அறம் உரைத்த ஔவை—அன்பின் நிறம் பரப்பிய இராமலிங்கர்...... இவர்கள் என்றும் இருப்பவர்கள் !

2. பயிர் வளர்ப்பான் உழவன் —

மக்கள் உயிர்வளர்ப்பான் உழவன் !

உழவன் உழைப்பு நல்ல தொண்டு !

உழத்தியருக்கும் அதில் பங்கு உண்டு !

3. காளையை அடக்கி நிறுத்தும் காளைக்குத்தான் மாலை சூட்டி மனைவி யாவாள் அந்த நாள் தமிழ் மங்கை ! கட்டுக்கடங்காத காளையை அடக்கி நிறுத்த முன்வரும் காதலன் தன் உயிரைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஏனென்றால், அவளிடம் தான் அவன் தன் உயிர் உள்ளம் எல்லாவற்றையும் பறிகொடுத்து விடுகிறானே !......



4. கோயில் இல்லாத ஊர் இல்லை ; விழா இல்லாத கோயில் இல்லை ; தேர் இல்லாத விழா இல்லை—இது இடைக் காலத் தமிழகம் !



5. அலைபாடும் மாபல்லபுரத்தில் கலை பாடும் கற்கோவில்கள் !...... மகேந்திர, நரசிம்ம பல்லவர்கள் கடற் கரைப் பட்டினத்தில் கல்லையெல்லாம் கலையாக்கினார்கள். அந்தக் கலை அவர்கள் புகழை மலையாக்கியது. இன்றும் கல்லிலே வாழ்கிறார்கள் பல்லவர்கள் !

வரை பல லட்சம் கண்கள் கண்டு களித்த கருத்தோவியங்கள்

6. பறந்து செல்லும் அம்பைத் திறந்துவிடும் வில்—பகையைக் கொல்லும் புலி—பாய்ந்து துள்ளும் கெண்டை......இந்தச் சித்திரங்கள், வீர முத்திரைகள் பதிந்தச் சிங்காரத் தமிழ்க் கொடிகள் காற்றிலே பறந்து நாற்றிசையும் தமிழர் புகழைப் பறை சாற்றின. விண்ணைமுட்டும் இமயம் கூட இக்கொடிகளுக்கு அடிபணிந்தது!



7. தஞ்சைப் பெருவுடையார் கோவில் கோபுரத்தின் உச்சிக்கல் சில கல் தொலைவுள்ள ஒரு சிற்றூரிலிருந்து சாரம் அமைத்து ஏற்றப்பட்டது. அவ்வூர் இப்போது சாரப்பள்ளம் என்றே அழைக்கப்படுகிறது. இருநூற்றிப் பதினைறடி உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் அந்த கோபுரம் இராஜராஜனின் பெருமிதத்தை நிலை நிறுத்துகிறது!



8. ஆராய்ச்சிமணி பசு அசைத்ததால் அலறியது! தேர்க்காலில் அறைபட்டுப் பசுவின் கன்று பிணமாகிக் கிடக்கக் கண்டான். பிறகு...? கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர்ச் சக்கரத்தின் கீழே கிடத்தித் தானே தேரோட்டினான் சோழ மன்னன். மாட்டுக்காகவும் நீதி வழங்கிய சிறப்பு தமிழ் நாடன்றி வேறு எந்த நாட்டில் உண்டு? எந்த ஏட்டில் உண்டு?

9. தூக்கிலே ஏற்றப்பட்டதால் கட்டபொம்மன் நாட்டின் புகழைத் தூக்கி நிறுத்தினான்! அவனைக் கொன்றுவிட்டதாக மகிழ்ந்தனர் வெள்ளையர்கள். ஆனால் நடந்ததென்ன? மங்கிக் கிடந்த நாட்டின் தன்மானச் சுடரைத் தன் மரண நெய் ஊற்றிப் பொங்கி எரியச் செய்தான்.



10. பாட்டால் முரசுகொட்டினார்
பாரதியார்.
தமிழ்மானம் நிலைநாட்டி கப்பல்
ஓட்டினார் சிதம்பரனார்.
......கண்ட மக்கள் நாட்டை
மீட்க ஒன்று கூடினர்—
வென்று பாடினர்!

GANDHIJI'S GURU

காந்தி அடிகளின் குரு

Speak No Evil... See No Evil... Hear No Evil
தீயவை பேசாதே... தீயவை காணுதே... தீயவை கேளாதே

சென்னை பாலு சகோதரர் எண்ணமும் வண்ணமும்

சமீபத்தில் சென்னை ராஜாஜி ஹாலில் பாலு சகோதரர்களால் ஒரு சித்திரக் கண்காட்சி நடத்தப்பட்டது. பாலு சகோதரர்கள் எழுதிய சித்திரங்கள் என்ருலே அதற்கு சிறப்புரையோ, விமர்சனமோ தேவையில்லை, நன்ருக இருக்குமென்று சொல்வதற்கு.

ஓவியப் பித்துகொண்ட சகோதரர்கள் :—*ஓவியப் பித்தர்கள் என்று யாரையாவது காட்டவேண்டு மென்ருல் இந்த பாலு சகோதரர்கள்தான். ஏனென்ருல் கலைக்காகவே அவர்கள் வாழ்கிருர்கள். தாங்கள் எழுதும் சித்திரம் தத்ரூபமாக, மற்றவர் கண்களில் புலப்படாத சிருஷ்டி. இரகசியங்களை வெளியிடுவதாக இருந்தாலே அவர்களுக்குப் போதும்.*

ஓவியர் பரம்பரை உயிருடனிருக்கிறது :—*பாலு சகோதரர்கள் தஞ்சை ஜில்லாவில் திருவாரூரை யடுத்த மரக் கடை என்ற கிராமத்தில் பிறந்தவர்களாம். இதைக் கேள்விபட்டபோதும், அவர்கள் வரைந்துள்ள மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் பல நிகழ்ச்சிகளை விளக்கும் சித்திரங்களையும், திருக்குறளின் கருத்தை விளக்கும் ஓவியங்களையும் தேசத் தலைவர்கள் நேரு, காமராஜ், வீராங்கனைகள் ஜான்சி ராணி, தில்லையாடி வள்ளியம்மை, இவர்களின் திருவுருவங்களையும், நாட்டுக்கு நற்பணி பல துறையிலும் ஆற்றிய வ. உ. சி; வைக்கம் வீரர் பெரி யார் (நாகம்மையுடன்), மறைமலையடிகள், லாலா லஜபதிராய் போன்ற நல்லோர்களை நினைவு படுத்தும் வண்ணப் படங்களைப் பார்த்தபோதும் என்மனம் பூரித்தது.*

தஞ்சை பெரிய கோவிலிலும், அஜந்தா, சித்தன்ன வாசல் இவ்விடங்களிலுள்ள குகைக் கோவில்களிலும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே அழியாத, உயிரோவியங்களைத் தீட்டிய தமிழ்நாட்டு ஓவியர் களின் பரம்பரை இன்னும் ஒழிந்து விடவில்லை என்று உவகையடைந்தேன்.

தமிழ் முரசு (சிங்கப்பூர்)
2—12—54.

Courtesy : Ananda Vikatan

தாயகத்திலே சிற்பக்கலை

ஓவியன் அ. பாலு

'பிலடெல்பியா நகரிலே, பிள்ளையார் உருவமிருக்கிறது!'

'பாரீஸ் பொன்னகரிலே, நடராஜர் சிலை அமைந்திருக்கிறது!'

'சிற்பச்சிலைகளும், சிங்காரக் கல்லோவியங்களும், லண்டன் மாநகரக் கண்காட்சியிலே இடம் பெற்றிருக்கின்றன!'

'மொகஞ்சோதாராவின் சிற்பமும்—ஹாரப்பாவின், கல்லுருவங்களும், தமிழ்க்கலையின் பேருருவங்கள் தான்.'

என்று இப்படியெல்லாம் பேசப்படுகின்ற இந்த நேரத்திலே தாயகத்தின் சிற்பக்கலை நுணுக்க மறியக் கிளம்பி யிருக்கிறோம் நாம்!

எத்தனையோ ஆயிரம் சிற்ப வடிவங்களை துணி வெளுக்கும், கற்களாக்கிய பிறகு—எவ்வளவோ கல்லோவியங்களை படிக்கற்களாக்கி மகிழ்ந்தான பிறகு, வெள்ளப் பெருக்கிற்கும், அலைகடலின் ஆக்கிரமிப்புக்கும், எத்தனையோ கலைக் கோயில்களை பறிகொடுத்தான பிறகு—கிணறுகளிலும், கோயிற்குளங்களிலும், எவ்வளவோ சிலையுருவங்களை மூழ்கடித்தான பிறகு—சிற்பக் கலைப்பெருமை காணக் கிளம்பியிருக்கிறோம் நாம்! புதிய ஆர்வந்தான்; ஆனால், முற்றிலும் புதியதல்ல—! பழைய நினைப்பும், புதிய உரிமையும், கலந்த மறு மலர்ச்சி நிலை இது!!

எதிர்த்தெழுந்த முடி மன்னர், கல் சுமக்க; கற்பரசியின் கலைக்கோயில் சமைத்ததுண்டு தமிழகம்! பள்ளிவாசல், கற்பக்கிரகம், சயன அறை, சங்கீதக் கூடம், சதிராடும் மண்டபம், குளத்துப்படி, கோபுரத்தின் விளிம்பு, இவையாவற்றிலுமே, பேசும் கல்லுருவங்கள் பல அமைத்து கலை வளர்த்ததுண்டு தமிழகம்! மலைக்குடைந்த மணிமாடம் கற்குடைந்த எழில் ரதம்—சித்திரமமைந்த மணித்தூண்கள்—நீரிலே மிதக்கும் மண்டபங்கள் பொலிவுடன் ஒளிவிடும் கலங்கரை விளக்கங்கள்—இவையாவற்றிலுமே, சிற்ப நுணுக்கமமைத்த சிங்காரப் பொன்னாடு தான் தமிழகம்!!

உயர்வான கலையார்வம் தமிழகத்தை எழில்ததும்பும் கலைக் கோட்டையாக ஆக்கியிருந்தது! சிற்பக் கலை வளர்க்கும் எண்ணம் சிற்பிக்கு மட்டும் அந்த நேரத்திலே இருந்ததில்லை! ஊராளும் மன்னனுக்கும், திட்டம் தீட்டும் அமைச்சனுக்கும், ஆலயங்காக்கும் அறநெறியாளர்களுக்குங் கூடத்தான் அந்த எண்ணமும் ஆர்வமும் இருந்திருக்கிறது! மடாலயம் சொன்னால் மன்னன் இசைவான்! மன்னன் கிளம்பினால், மடாலயம் சாமரம் வீசும்! இந்த ஒற்றுமை கலையார்வத்தில்தான் அதிகமாக இருந்திருக்கிறது தமிழகத்தில்! இந்த ஒரே காரணத்தினால்தான், நம் தாயகத்தில் தோன்றிய எல்லா கலைகளுமே ஏறத்தாழ கடவுள்-மதச் சாயல்கள் படிந்ததாகவே அமைந்திருக்கிறது! மேலை நாட்டிலேகூட இந்த எண்ணங்களுக்குத்தான் அதிகமான ஆதரவு இருந்திருக்கிறது!! மைக்கல் ஆஞ்சிலோ ரோம் நாட்டு கிறிஸ்தவ ஆலயத்தில் சிறந்த ஓவியங்களை அமைத்தான் என்றால் அவையெல்லாம் 'பைபிளை' ஒட்டிய நிகழ்ச்சிகளாகத்தான் திகழ்ந்தன! அந்த அளவுக்கு கலை எண்ணம் அவர்களை தெய்வீகத்திலேதான் பிணைந்திருக்கச் செய்திருக்கிறது!!

எது எங்ஙனமானாலும், அக்காலத்திய கலைஞர்கள் வளர்த்த கலையை நம்மாலே என்றென்றுமே மறக்க முடியாது! அக்காலத்திய சூழ்நிலைக்கேற்ப கலைஞர்களிடத்திலே கிடைத்த எதுவுமே தெய்வீகப்பணிக்கே பயன்பட்டிருக்கிறது! இயல், இசை, நாடகம். ஓவியம், சிற்பம், இவையாவற்றிற்குமே 'தெய்வீக-மேடை'தான் நிலைக்களமாகி வளர்ந்துமிருக்கிறது!! இவ்வளவு வேகமாக வளர்ந்த கலை, தமிழகத்தைப் பொருத்தமட்டிலே இடைக்காலத்திலே தடைபட்டுவிட்டது!

சோழர் காலத்திலே எழுந்த கலைக் கோயில்களின் அருமையும், பல்லவர் காலத்திலே செதுக்கி வைக்கப்பட்ட சிற்ப ஓவியங்களின் பெருமையும் சிறிது சிறிதாக, மறைய ஆரம்பித்துவிட்டது! ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப்போல, கல்லோவியங்கள், சிதறித்தெறித்து குளங்களிலே விழலாயிற்று! கிணறுகளிலே வீசியெறியப்படலாயிற்று! மறைமுகமாக, சிற்பத்தின் பெருமையுணர்ந்த சிங்காரபுரியினருக்குத் தமிழகத்தின் கலையுருவங்கள், விலை பேசப்படலாயிற்று! வெளிநாடு போய் கலைக்கூடமமைத்துக் கொள்ளுகின்ற அளவுக்கு, இங்குள்ள சிற்பங்களின் நிலை தாழலாயிற்று! கவனிப்பாரற்றுக் கிடக்கலாயிற்று!

ஆனால், அந்த நிலை இன்று முற்றிலும் மாறிவிட்டது. தமிழகத்தின் கலையுலகில் மீண்டும் மறுமலர்ச்சி ஒளிவிடத் தொடங்கியிருக்கிறது. புதிய

ஆர்வமும், புகழ் தேடும் முறையும், மீண்டும், வளரும் நிலை பிறந்திருக்கிறது! லட்சியப்பாதை தெரிகிறது! மகாபலிபுரத்தின் கலைக்காட்சிகள் மீண்டும் இப்போது தான் தமிழகத்திற்கு தெரியத் தொடங்கியிருக்கிறது! நரசிம்ம பல்லவனின் கல்வெட்டுக்களின் அருமையையும், மகேந்திர பல்லவனின் கலையுள்ளத்தின் பெருமையையும், இப்போதுதான் தமிழகம் மீண்டும், உணரத் தொடங்கியிருக்கிறது! ராஜ ராஜ சோழனின் கலைக்கோயில்கள், இன்றுதான் மீண்டும் பொலிவு பெருகிறது! மக்கள் இன்று கலைத்தேடிப் போகின்றனர். சிற்றன்ன வாசல்களின் சித்திரங்கள் இன்று மீண்டும் பெருமை பெருகின்றன! மதுரையம் பதியும், தஞ்சை வளநாடும், காஞ்சியும், செஞ்சியும், திருவண்ணாமலையும், வேலூரும், இன்னும் மற்ற மற்ற ஊர்களும், கல்லுருவங்களினால் கலைப் பெருமை கொண்டதாக நம்மவர்களைக் கவரும் எண்ணம் பெருமை பெற்றுயர்ந்து நிற்கின்றன இன்று!

இந்த நிலையைத்தான் மறுமலர்ச்சி நிலையென்கிறோம்! இன்று தமிழகமெங்கும் கலையார்வம் மீண்டும் சிறப்புறத் தொடங்கியிருப்பதுமட்டுமல்ல; புதிய அளவில் பல கலைப்பணிகள் பெருகியவண்ணமும் இருக்கின்றன!

பண்டை காலத்திய புகழ் நிலையோடு, இன்றைய புதிய முறைகள் சிலகாலம் வரையில், சரிநிகர் சமானமாய், போட்டியிட முடியாதென்றாலும், என்றாவது ஒரு நாள், மீண்டும் நம் நாட்டுக் கலைகள் பொலிவு பெற்றுயரத்தான் செய்யும்! அந்த நேரத்திலே பிலடெல்பியாவின் பிள்ளையார் உருவம்போல, பல உருவங்களை, அவசியப்பட்டால், தமிழகம் உண்டாக்கும்! பாரீஸும், இலண்டனும், மீண்டும் வியப்புறும் வண்ணம் பல நூறு சிற்பச் சிலை வடிவங்களை நமது பொன்னகம் இனியும் செய்து காட்டும்! அந்த நேரத்திலே சிற்பம் உயர்நிலையெய்தி இருக்கும் காவியத்தின் காட்சிகளையெல்லாம் ஓவியம், தாங்கி நிற்கும்!! ஓவியத்திற்காக புதிய காவியங்கள் எழும்! கலை ஏட்டில் மேலுமொரு பொன்னேடும் மகுடம் புனைந்து நிற்கும்!! அந்த மகிழ்ச்சியிலே தமிழகம் பூரிக்கும்! அந்த பூரிப்பிலே தான் நமது வெற்றிப் புன்னகை மறைந்துகிடக்கிறது! அந்தப் புன்னகையை மீண்டும் அனைவர் முகத்திலே அரும்பி மலரச் செய்வது நமது கடமையும் கலைவாணர்களின் நீங்காத பிறப்புரிமையுமாகும்!! அந்தப் பணியை இன்றிலிருந்து செய்யுமா தமிழகம்!!

வெற்றி வீரனும்—வண்ணக் கலைஞனும்

குமாரி எஸ். ரேவதி

உலகின் சரித்திரத்தை முதன் முதல் வீரத்தால் நிரப்பிய கிரேக்கமா வீரன் **அலெக்ஸாண்டர்** ஒரு சமயம், தனக்கு பிடித்தமான ஆடலழகியருள் எழிலரசியென்று கருதப்பட்ட '**கம்பாஸ்பி**' என்ற அழகு ராணியை, கலையார்வம் காரணமாக நிர்வாண வண்ண ஓவியமாக (Nude)-த் தீட்டும்படி, தனது நண்பனும், உயர்ந்த வண்ணக் கலைஞனுமான **அப்பெல்லஸ்**' என்பவனின் கலைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றிருந்தானாம்!

அங்கு அந்த அழகுராணி கம்பாஸ்பி தனது இயற்கை யுடலை மறைத்திருந்த மென்றுகிலைத் திருத்தும்போது, ஏற்பட்ட ஆடை நெகிழ்ச்சியால் பெரிதும் பரவசமடைந்த கலைஞன் அப்பெல்லஸ், அந்த தங்கச்சிலையாள், இயற்கையின் நியதி ஒரு சிறிதும் மாறாத, ஓர் பொற்கொடியாள், என்று கண்டறிந்து மிக ஆர்வமாக, உள்ளது உள்ளவாறே, அவளைத் தீட்ட ஆரம்பித்தானாம்!

ஓவியம் பூர்த்தியாக அலெக்ஸாண்டர் விரும்பியவண்ணமே அம்மாது தினமும் அங்குவந்து சிலைபோல நிற்பதும், அதைக் கண்டு ஓவியன் குதூகலத்துடன் வரைவதுமான நிலை இருந்தது! இத்தகைய முறையில் ஓவியம் தீட்டிக்கொண்டு போவது அக்கால சகஜமான வழக்கமாயினும், அப்பெல்லஸுக்கு மட்டும், அந்தத் தோகை நல்லாளைத் தீட்டும் போதெல்லாம், ஒரு தனியான உள்ள நெகிழ்ச்சி! அவளை அப்பெல்லஸ் நெருங்கும் போதெல்லாம், அவனுள்ளம் நடுநடுங்கினாலும், அவன் கண்கள் மட்டும், அவள் கண்களைச் சந்திக்கவும், அவைகளிரண்டும் பேசிக் கொள்ளவும் மறந்ததில்லையாம்! எப்படியோ ஒன்று ஓவியமும் பூர்த்தியாகும் நிலையும் நெருங்கிக்கொண்டிருந்ததாம்! அதே நேரத்தில் அப்பெல்லஸின் காதலுணர்வுகளும் வளர்ந்து, இரண்டிலொன்று என்ற நிலைமைக்கும் வந்துவிட்டதாம்! இவ்வளவிருந்தும், அப்பெல்லஸ்ஸும்—அழகு ராணி கம்பாஸ்பியும்—ஒரு நாளும் பேசினதுமில்லையாம்! அலெக்ஸாண்டர்—என்ற தடைமட்டுமில்லாதிருப்பின் இன்ப சிகரத்தில் கூடாரமமைத்து, சிங்காரப் பண்ணிசைக்க வேண்டியவர்கள்தான் இந்த இருவரும்!! இந்த நேரத்திலே, ஓவியம் எப்படி அமைந்திருக்கிறது என்று பார்க்க, ஒரு நாள் அலெக்ஸாண்டரும் அங்கு வந்திருந்தான்! அப்பெல்லஸ்ஸும் தனது முழுத்

திறமையால் தீட்டப்பட்டிருந்த அந்த அழகு ஓவியத்தை தீட்டி முடித்துவிட்ட நேரமது! அலெக்ஸாண்டர் கண்டான், அந்த அழகு ஓவியத்தை ஒரு முறையல்ல; பல முறை! பல கோணங்களிலேயிருந்து!! மூலத்திற்கும், நகலுக்கும் ஒப்பிட்டுப் பார்த்தான்; சொல்லொணாத பரவசமெய்தினான் அலெக்ஸாண்டர்! அதோடு, அப்பெல்லஸை, வெகுவாகப் புகழ்ந்து பாராட்டச் செய்தான்!! ஆனால், அப்பெல்லஸ்ஸோ, அப்போது, கவலையால் உளம் சோர்ந்தவனாகக் காணப்பட்டான்! அவன் கவலையை இன்னதென்று அலெக்ஸாண்டர் புரிந்து கொள்ளா முன்பே, தானே, தன்மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொண்டு, விளைவுகளையும் பாராமல், துடியிடையாளின் மேல் தான் கொண்ட காதலை – அது வளர்ந்த நேர்த்தியை—அதனால் அவனுள்ளத்திலே எழுந்த கிளர்ச்சியை, ஒன்றையும் மறைக்காமல், அலெக்ஸாண்டரிடம் கூறிவிட்டான் அப்பெல்லஸ்!!

விபரீத முடிவுகளைக் கொண்டே தீர்ப்பளிக்கப்படவேண்டிய இந்தச்சேதியைக் கேட்டதும், அலெக்ஸாண்டர் ஆச்சரியமுற்றானும்! ஆவேசத்தோடு தண்டனை தரவேண்டிய அந்த மகிபனுக்கு, அப்பெல்லஸ்ஸின் காதல் நினைவுகள், உள்ளபடியே அனுதாபத்தைத்தான் தந்ததாம்! எனவே மறுமொழியொன்றும் பேசாமல், அந்த வண்ணக் கலைஞன், தான் இதய ராணியாக ஆக்கிக்கொள்ள துடி, துடித்த அந்த இயற்கை மகளைக் கரம்பற்றி இழுத்துவந்து; அப்பெல்லஸ்ஸிடம் ஒப்படைத்து புன்முறுவல் தவழும் முகத்துடன், 'நீ இந்த அழகோவியத்தின் உண்மைப் பிரதியை கம்பாஸ்பியை என்னுடைய அன்பளிப்பாக வைத்துக்கொள்!—எனக்கிந்த எழிலோவியமே போதும்—இதைக் கொண்டே நான் திருப்தியடைவேன்!!' என்றானும்!! கேட்டதும், களிப்பால் அப்படியே சிலையாகிவிட்டானும் அப்பெல்லஸ்!! அன்று முதல் கம்பாஸ்பி, கலைஞனின் காதலி!!

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா வெற்றி வீரனின் மாண்பும்—வண்ணக் கலைஞனின் சிறப்பும்!! கலையுணர்ச்சியின் மகத்துவமும்!!

ஹிந்தியை எல்லோரும் கற்றுக்கொள்ளும்படி கட்டாயம் செய்யக்கூடாது. வடநாட்டுத் தொடர்புள்ளவர்கள் மட்டும் கற்றுக்கொண்டால் போதும். எல்லோரும் கற்றுக்கொள்வது இயலாத காரியம்.

—காந்தி அடிகள்

ஹிந்தி பாஷையானது தற்போது பலவீனமான நிலையில் இருக்கிறது. ஆங்கிலத்திற்குச் சமம் என்பதில் வியப்பில்லை. தமிழுக்கும் சமம் இல்லை. வங்காளி பாஷைக்கும் சமம் இல்லை. மராட்டி பாஷைக்கும் சமம் இல்லை. இந்த நிலையில் செய்யவேண்டிய கடமை என்ன? தமிழ்க் குழந்தைகளை மிரட்டுவது அல்ல. ஹிந்தி பாஷையை மிரட்டி அதைக் கொஞ்சம் மேலே தூக்கவேண்டும்! எல்லா விஷயங்களிலும் ஹிந்தி பாஷை மூலமே பரீட்சை செய்யும் அந்தஸ்துக்கு இன்னும் ஹிந்தி வரவில்லை.

ஏப்ரல் 1955.

—ராஜாஜி

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்க பல கலைவாணரையும், மக்களை நல்வழிபடுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாகவேண்டும் எந்த நாடும். அனைவரும் ஏககாலத்தில் கிடைக்க மாட்டார்கள். உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏககாலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ளவேண்டிய குணத்தை அவர் ஒருவர் கொண்டிருந்தார்.

அறிஞர் C. N. அண்ணாத்துரை

இந்திய சுதந்திரப் போரில் இந்தியா முழுவதற்கும் தலைமை தாங்கும் வாய்ப்பு தமிழருக்குக் கிடைத்ததில்லை. என்றாலும், அன்று முதல் இன்றுவரை வட இந்தியத் தலைவர்கள் சிறப்புப் பெற்று வந்தது தமிழ்நாட்டுத் தலைவர்களின் சேர்க்கையாலே என்பதை மதியுள்ள எவரும் மறுக்க முடியாது.

—சிலம்புச் செல்வர்
மா. பொ. சி.



தமிழ் மொழியும் ஓவியக்கலையும் எமது இரு கண்கள்

கலைக்கூட மலர்—எமது நீண்டகால ஆசையை நிறைவேற்றி வைக்கும் ஓர் இனிய ஓவிய ஏடு! சிலபல தினங்களுக்கு முன்னே சென்னையில் கூடிய 'காங்கிரஸ் கண்காட்சி' சாலையில், நல்லதொரு இடம் பெற்றிருந்த எமது 'கலையரங்கின்' முழுப் பகுதியின் பிரதிபலிப்புதான் இந்த 'கலைக்கூட மலர்'!

எங்களின் இந்த கலை ஆர்வத்திற்கு 'கலையுணர்ச்சியே' பெரிதும் மய்யமாக அமைந்திருந்தாலும் இவ்விந்திய துணைக்கண்ட முழுவதிலிருந்தும், இங்கு வந்து குழுமி, நமது கலைக் கண்காட்சியைக் கண்டு, மகிழ்வுப் பெருக்கால், மக்களினம் வழங்கிய பாராட்டுரைகளையும், அன்பு வாழ்த்துக்களையும், நம்மாலே மறக்கமுடியவில்லை !!

கலை ஒன்றினால் மட்டுந்தான், உலகையே, அன்புச் சங்கிலியால், பிணைக்க முடியுமென்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டாக விளங்குவதுதான் இந்த அன்புரைகளும், வாழ்த்துச் செய்திகளும்! எவ்வளவோ, மத, இன, வேறுபாடுகளைப் பாராமல் எவ்வளவோ கட்சி வித்தியாசங்களையும் கூட பாராட்டாமல் எல்லோருமே ஒரு முகமாக, 'கலையுணர்வையே' சிந்தையில் கொண்டு, தங்களின் பாராட்டுரைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவித்திருக்கிறார்கள்!! இந்த ஐக்கிய நிலையைக் காணும்போது உள்ளபடியே 'கலைக்கிருக்கும், மகத்தான சக்திதான் என்னே'!

எங்கும் அபிப்பிராய பேதங்களே இருக்கும் இந்த நேரத்திலே, தமிழகம் மட்டுமின்றி, இந்தியா முழுவதிலும்; ஏன்? இந்தியாவுக்கு வெளியிலிருந்தும்கூட, கலையைப் பாராட்டி அபிப்பிராயங்கள் வழங்கியிருக்கிறார்களென்றால், அதில்தான் நம்நாட்டுக் கலையுலகின் பெருமிதம் பொதிந்து கிடக்கிறது!

பொது மக்களின் குரல் தெய்வக் குரல் என்பது நமது நம்பிக்கை. எனவே இந்த பொதுமக்களின் எண்ணக் குவியல்களை தங்களின் அன்புப் பார்வைக்கு வைப்பதிலே மிக்க மகிழ்ச்சி யடைகிறோம்! அன்புரைகளையும், பாராட்டுச் சேதிகளையும் வழங்கிய அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றி!

—பாலு சகோதரர்கள்

ஓவிய அறிஞர் பாலு சகோதரர்களின் கலைத் தொண்டின் சிறப்பைத் தஞ்சைக் கலைக் காட்சியிலும் கண்டு மகிழ்ந்தேன்; அண்மையில் நடந்த காங்கிரஸ் கண்காட்சியிலும் கண்டு மகிழ்ந்தேன். இவர்களின் கலைத் தொண்டில் கவின் கலையின் திறன் விளங்குவதோடு, தமிழ் நாட்டுப் பெருமையும் விளங்குகிறது; தமிழிலக்கியச் சிறப்பும் விளங்குகிறது. சில துறையில் ஓரளவு பிற்போக்கு உற்று வாடும் தமிழ்நாடு குறைதீர்ந்து மீண்டும் உயர்ந்து வளம் கொழித்துத் திகழவேண்டுமானல் தமிழர் எல்லோருடைய உள்ளத்திலும் நாட்டுப் பற்றும் இலக்கியப் பற்றும் செழித்தோங்கி ஒற்றுமை யுணர்வு ஏற்பட்டால்தான் முடியும். இத்தகைய பற்றும் உணர்வும் காண்போரின் உள்ளத்தில் நிறைந்திடுமாறு இவர்களின் கலைத் தொண்டு நற்பயன் விளைத்து வருகிறது.

டாக்டர் மு. வரதராசனர்,
எம். ஏ., எம். ஓ. எல்., பி.எச்.டி.,
பச்சையப்பன் கல்லூரி.

* * * *

I was very happy to see the paintings of Balu Brothers' Art Gallery at Y.M.C.A. Carnival at Royapettah. They bring out expressions very well. They have also a happy way of depicting the whole life of Mahatmaji in a circular picture. They have excellent ideas and good talent. I wish them all success.

(Sd.) V. N. SUBBAROYAN,
Commissioner, Madras Corporation.

* * * *

Madras,
20-1-1954.

This Art Gallery arranged by Balu Bros., is really good. They have some fine historical episodes in pictures. The Art of Balu Bros. is really good. I wish them all success.

K. VENKATASAMI NAIDU,
Minister for Hindu Religious Endowment, Govt. of Madras.

* * * *

அமுதத் தமிழ் உள்ளளவும்
ஆரூர் சகோதரர்களின் ஓவியச்
சிற்பிகளின் புகழ் நின்று நிலவுக.

—கருணை எம். ஜமால்,
திருவாரூர்

கலை, கலை என்ற பேச்சு எங்கும் ஒலிக்கிறது. ஒவ்வொருவரும் தாம் மேற்கொள்ளும் பணியை ஒரு கலை என்று சொல்லுகின்றனர். நான்கூட, 'பிரயாணம் ஒரு கலை' என்று சொல்லுவேன்!

பல இடங்களுக்குச் செல்லும்போது, பாலு சகோதரர்கள் என்னைத் தொடர்ந்து வருகிறார்கள். யாழ்ப்பாணம், டில்லி, சென்னை, பம்பாய் இவ்வாறு பல இடங்களில் இவர்கள் நடத்திய கலைக் காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்திருக்கிறேன். பிறர் மகிழ்ந்ததைக் கண்டு பெருமைப்பட்டிருக்கிறேன். ஓவியக் கலையைப் பேணியும், உயிருள்ள சித்திரங்களை நம் கண்முன்னே நிறுத்தியும் இலக்கியக் காட்சிகளைத் தீட்டித் தந்தும் தமது கலைத்திறனை வெளிப்படுத்திவரும் நண்பர்கள் பாலு-சீனு இருவரும் தமிழ் நாட்டின் செல்வங்கள்.

தமிழகத்தின் பழங்காலத்துக் கலைப் பொருள்கள் பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளன. அவற்றைத் திரும்பப் பெற இந்திய அரசியலாரால் இயலவில்லை. ஆனல், ஓவியத் துறையில் இணையற்ற புகழ்பெற்றுள்ள நம் இரு அன்பர்கள் அவற்றை வண்ண முற எழுதித் தமிழர் உள்ளத்தில் அவை நிலையான இடம்பெற உதவும் நாளை எதிர்பார்க்கிறேன்.

—உலகம் சுற்றிய தமிழன்
ஸ்ரீ சோம. லெக்குமணன் செட்டியார்.

* * * *

Madras,
8-1-1954.

This is a feast for eyes, food for thought, festival of time.

T. CHENGALVAROYAN, M.C.,
and ex Mayor, (Madras).

* * * *

உங்கள் கலைத்திறனைக் கண்டு
ரசியாதவர் மானிட உள்ளம்
படைத்தோரல்லர்.

—கமலா—பரிமளா,
சென்னை—2

86, Saladuna Road,
Megambo, Ceylon,
14-11-1954.

After seeing this exhibition I am fully convinced that it is an excellent reflection of the various deeds done by great personalities. I should specially give a word of praise to the artist who has drawn the photographs of Lord Buddha, Jesus and Gandhiji together.

S. A. REGINALD FORNAND.

* * * *

Madras,
18-1-1954.

We were very pleased to see the interesting exhibits in this Art Gallery organised by M/s. Balu Bros.

V. KUDVA,
Commissioner of Commercial Taxes.

* * * *

Madras,
23-1-1954.

A very interesting collections of paintings. The colour schemes are attractive and bold. It is worth visiting by all interested in Indian Art and its development.

R. VENKATARAMAN, M.P.,
Secretary, T.N.C.C.

* * * *

Madras,
24-1-1954.

I have great pleasure in having visited the Arts Gallery to-night and I find the pictures drawn by Balu Bros. are extremely nice and life-like and instructive also of the many sayings of our ancient Saint Tiruvalluvar. I wish the Artists further success in their line.

K. M. DESIKAR, M.L.C.

* * * *

கருத்துக்கள் உயிர் பெற்றெழும் கண்காட்சி.

—"சி. வி. ர."
தமிழ் எழுத்தாளர் சங்கம்
சென்னை.

I have gone through the Art Exhibition. Paintings are all very good and worth encouraging.

Mombasa, Kenya. R. B. PANDYA,

* * * *

Madras,
13-1-1954.

It is a good idea to present to the public pieces of national art on the occasion of the Fair.

The pieces of ancient wonderful art, that speaks about great ancient traditions of Indian people, about their creative talent. With best wishes to the Indian artists.

ACADEMICIAN ALEXANDROV,
from the U.S.S.R.

* * * *

Madras,
24-1-1954.

This exhibition of works of Art is of rare loveliness and shows how the artists and the persons who have arranged the show are steeped in our national culture and in a fine sense of the things that are more excellent. I am glad to have come here and seen this exhibition.

K. S. RAMASAMI SASTRI,
Former Judge, Madras.

* * * *

Madras,
19-11-1954.

These pictures by Balu Bros. depicting the life of the father of the Nation should be perpetuated in the National Museum at New Delhi.

V. O. C. SUBRAHMANIAM.
(*Son of V. O. Chidambaram Pillai*).

* * * *

துன்பம் நீக்கி, இன்பம் மூட்டிய இடம்.

—C. U. Rajagopal,
முனிசிபல் கௌன்சிலர்,
காஞ்சிபுரம்.

ஓவியக் காட்சி

ஓவியத் துறையில் உயர்ந்த ஸ்தானத்தைத் தேடிக்கொண்டுள்ள பாலு சகோதரர்களை அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. திருக்குறள், கம்ப ராமாயணம், சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய நூல்களில் சில காட்சிகளுக்குப் படம் வரைந்து சிறிய அளவில் ஒரு சித்திரக் கண்காட்சியைத் துவக்கிய அவர்கள் நாளடைவில் தேசியத் தலைவர்கள், விஞ்ஞானிகள், கட்டபொம்மன் வாழ்க்கைச் சித்திரங்கள் முதலியவற்றையும் எழுதி பம்பாய், தில்லி, இலங்கை முதலிய பலவிடங்களிலும் சித்திரக் காட்சி சாலைகள் நிறுவி பலருடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார்கள். தஞ்சையில் நடைபெற்ற கலைக் காட்சியில் இவர்களது சில ஓவியங்கள் முதற் பரிசு பெற்றிருக்கின்றன. சென்னையில் நடைபெற்ற அகில இந்திய கதர், சுதேசி, கைத்தொழில் காட்சியில் இச்சகோதரர்களின் ஓவியக் காட்சி இடம் பெற்றிருந்தது குறிப்பிடத் தக்கது. முந்நூறுக்கு மேற்பட்ட இம்மாதிரியான படங்களைத் தவிர மகாத்மாஜியின் வாழ்க்கையையும், தேசியப் போராட்டத்தில் பங்கு கொண்டு உயிர்த் தியாகம் செய்த பெரியார்களின் வர்ண ஓவியங்களையும் கொண்ட அகில இந்திய சித்திரக் கலைக் கண்காட்சியை திரளான மக்கள் தினசரி விஜயம் செய்து வெகுவாகப் பாராட்டினர்.

பம்பாய், "விந்தியா,"

I was very glad indeed to have been able to visit this interesting Exhibition of paintings by Balu Bros. The exhibits speak very highly of the great interest taken by the artists and their love of art.

Raj Bhavan, Guindy, Madras-22. N. PARASURAM, *Comptroller,*

* * * *

கட்சி சார்பற்ற தங்களைபோன்ற உண்மை உயிரோவியம் தீட்டும் அருமையான சித்திரக்காரர் நம் தமிழகச் செல்வம். நீங்கள் நீடூழி வாழ்க. புகழ் எண் திசை பரவுக.

—K. C. தங்கவேலு

I along with 20 college students had the pleasure of visiting the Arts Exhibition and see the different paintings on 19th inst. and was well impressed with some of the rare paintings of the father of the Nation, Gandhiji's life. The paintings along with the remarks written down will fill anyone with emotions and with enthusiasm and bring back to his memory the sad happenings of the past, I am sure it is worth a visit by lovers of Art.

Madras, 19-11-1954. P. C. TATNAIH, M. P. C. College, Orissa.

* * * *

உங்கள் கண்காட்சியைக் கண்டு களித்தோம். தென்னாட்டுக்குப் பெயரும், புகழும் கொடுக்கும் உங்கள் கலை எல்லா நாடுகளிலும் நல்ல பெயரெடுக்க வாழ்த்துகிறேன்.

வால்டேர். —வே. இரா. இலிங்கன்

* * * *

நீவிர் இருவரும் இந்நாட்டின் பொன் மணிகள். யாதை எழுதுவது என்றே எனக்குத் தோன்றவில்லை, தங்கள் ஓவியக் கண்காட்சியை கண்டபின்.

நா. சௌந்தரம், B. Com.

* * * *

"மரக்கடை மாணிக்கங்களே" உங்களது ஓவியத்தினால் நீங்கள் அடையும் பெருமையும் புகழும் உங்களைவிட எங்களுக்கு அதிகம் உரித்தாகும். மேன்மேலும் நல்வாழ்வும் நற்புகழும் அடைய வேண்டுகிறேன்.

—துரை ராஜன்

* * * *

சொர்க்கம் என்ற சொல் உண்டென்றால் அதற்கு என்னை உங்களது கலைக் கண்காட்சி அழைத்து சென்று விட்டது.

பூந்தமல்லி —C. T. சண்முக சுந்தரம்

* * * *

ஒரு மனிதன் தன் வாழ்க்கையில் கண்ணாரக் காண வேண்டியது.

—பெ. கோவிந்தசாமி

* * * *

உண்மையில் இது மிகவும் பிடித்திருக்கிறது. நன்றாக இல்லை என்று சொல்லுபவர்கள் மனிதர்களே இல்லை.

—T. V. சாந்தா

உலகம் போற்றும் ஒப்பற்ற உத்தமன் காந்தியடிகளின் வாழ்க்கையில் ஏற்பட்ட வரலாற்றை சிறந்த முறையில் மக்களுக்கு உணர்த்தும் வண்ணம் ஓவியம் தீட்டியுள்ளது தமிழ் நாட்டின் கலைச் செல்வச் சிறப்பைத் தெள்ளனெ எடுத்துக் காட்டுவது சிந்தைக்கு விருந்து மட்டுமல்ல சிறந்த தேசிய பணியும் ஆகும். இத்துறையில் என்றும் சிறந்துவாழ இறைவன் அருள் நிற்க.

ஓவியக் கலைஞன்,

—வி. கிருஷ்ணசாமி படையாச்சி, M. A., M. L. A.

* * * *

டைரக்டர் சாந்தாராம், கனுதேசாயை பட உலகுக்குப் பயன் படுத்துவதுபோல, தமிழகத்தில் பாலு சகோதரர்களைப் பட உலகுக்கும் பயன் படுத்த இதுவரையிலும் ஒருவரும் வரவில்லை. வரும் நாள் பட உலகுக்கு ஒரு நன்னாள் ஆகும். பாலு சகோதரர்கள் கனுதேசாயைவிட மிகச் சிறந்தவர்கள்.

A. V. M. Studios —R. பாஸ்கரன்

* * * *

ஒப்பற்ற ஓவியங்களை உயிருள்ளவை என உணர்ச்சிகளை நொடிக்கு நொடி எழுப்பி ஒவ்வொருவரையும் சுதந்திர உலகத்திற்கு அழைத்துவரும் உங்கள் ஓவியங்களைக்கண்டு தெரிந்து கொண்டது யாதெனில் தமிழ் நாட்டை சுதந்திர நாடாக்க தமிழ் தலைவர்களின் தனிச் சிறப்பைக்கண்டு களிப்படைந்தேன், என்னுடும் பெருதகை தமிழ்நாடு பெற்றுவிட்டது. வீரபுத்ரி ஜான்சி ராணி லக்ஷிமிபாயின் வீரச் செயல்களைக் கண்டு மிகவும் பெருமை படுகிறேன். ஓவியம் எழுதி யாவர்க்கும் தொண்டு செய்யும் உங்களுக்கு ஆண்டவன் அருள்புரிய வேண்டுகிறேன்.

—ருக்மிணி தேவி

* * * *

தமிழ் நாட்டின் கலை—சிற்பக் காவலர்களாக பணி பல ஆற்றிவரும் தங்கள் அரிய முயற்சிக்கு யார் பாராட்டும் தேவையில்லை. தங்கள் ஓவியங்களே தமிழ் நாடெங்கும் தங்களைப் பாராட்டி காட்சி தருகின்றன. என்னை பெரிதென மதித்து விரும்புகிறீர்கள். என் துணைவியார், மற்றும் குடும்பத்தாருடன் தங்கள் கலைக் கண்காட்சியைக் காண நேரிட்டநாள், அன்று மட்டுமல்ல, நிரந்தரமாக சிந்தனை பெறும் நேரமெல்லாம் அகமகிழ்கிறேன். தங்கள் தொண்டினைப் பாராட்டுகிறேன்—வாழ்த்துகிறேன்.

திருச்சி —Dr. மதுரம், M. P.

* * * *

நுங்கள் சித்திரம் கடிய ஈரமில்லா நெஞ்சினர்களை இரங்கச் செய்வதுடன், அவர்களை வீரர்களாகவும் ஆக்கும்.

—K. ராமமூர்த்தி

இந்த ஓவியச் சித்திரத்தை இந்தக் கண்காட்சி சாலையில் வைத்தால் மட்டும் போதாது. இதை வெளி நாடுகளுக்கு எடுத்துச்சென்று அங்குள்ள கண்காட்சிச் சாலையில் வைத்தால் மிகவும் நன்ருக இருக்கும். அதற்கு தகுந்த ஏற்பாடு செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

—K. V. Ragavan.

* * * *

காவியத்திலே கவி நயம் கண்டான் கவிஞன். சிற்பத்திலே சிருங்காரம் கண்டான் சிற்பி. பாட்டிலே பண்பாடும் சிறப்பைக் கண்டான் பாடகன். ஆனல் நீங்களோ ஓவியத்தில் ஒளிச்சிறப்பை உணர்ந்ததோடு உங்களது உரிய ஓவியச் சிறப்பைக் காட்ட தமிழ் நாடு பெற்றது தமிழர் மரபுக்கோர் தனிச்சிறப்பேயாகும், இதோடு ஓவியர் ரவி வர்மா எத்துணை பெரிய கலைக் கண்காட்சியை தரவில்லையே.

கீழ்ப் பூங்குடி —கொ. சிவசுப்ரமண்யம்

* * * *

காணக் கண்கோடி வேண்டும் தங்கள் ஓவியங்களைக் காண. குன்றின் மேல் இட்ட விளக்கென தங்கள் புகழ் பிரகாசிக்க இறைவனை வேண்டுகிறேன்.

Madras—5 —M. Ramachandran

* * * *

சமுதாயம் என்னும் உலகிலே ஜாதி வேற்றுமையும் கட்சி வேற்றுமையும் இல்லாமல் நீங்கள் வரைந்த சித்திரம் தமிழ் மக்களுக்கு என்றென்றும் காட்சியளித்து, களிப்புறவைக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமுண்டோ !

—க. கந்தவேலன்

* * * *

செந்தமிழ் நீரில் நீந்தி சிந்தை மகிழ யான் மறுபிறப்பு எடுப்பினும் தமிழனுகவே பிறக்க விரும்புகிறேன் என்ற வித்தகர் காந்தியடிகளின் வாழ்வை சித்திரமாக்கி சீர்பெற்ற இத்தமிழகத்திற்கு தந்தது பற்றி யான் என்ன உங்களுக்கு கைம்மாறு செய்வதென்றேயறியேன்.

எரவக்காடு —மரி. இரத்தன. இருதய ராஜ்

* * * *

உங்களது கலைத்தொண்டு எதிர் காலத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். உங்களது அறிய பெரிய சேவைக்கு மக்கள் கடமைபட்டவர்களாவார்கள்.

—எ. இ. குமார்

பிரஸிடெண்ட்

வாசனை திரவியங்கள்

பிரபல

சினிமா நட்சத்திரங்கள்

கூறுகிறார்கள் :

பிரஸிடெண்ட்

வெஜிடபிள் ஹேர் ஆயில்,

ஸ்னோ, டால்கம் பவுடர்

மிகவும் சிறந்தவை என்று

எங்கள் அனுபவத்தில்

கண்டுகொண்டோம்.

தயாரிப்பவர்கள் :

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சென்னை-1

501 SPECIAL

Preserves your lovely fabrics.

*

Makes them so clean and fresh.

*

Makes home washing easier.

It's a Tata Product

THE TATA OIL MILLS CO., LTD.,

MADE IN INDIA WITH
INDIAN CAPITAL AND MANAGEMENT

All kinds of :—

ARTISTS' MATERIALS — WINSOR & NEWTON SABLE HAIR — HOG HAIR — SQUIRREL HAIR-BRUSHES — POSTER COLOURS — ARTISTS' CANVAS — WATER COLOUR — OIL COLOUR TUBES, CAKES Etc. — TRACING PAPER — CLOTH & OTHER STATIONERIES

Available at :

Vasan Brothers

49, ERULAPPAN STREET, SOWCARPET,

MADRAS-1.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர். அ. சிதம்பரநாதஞ் செட்டியார், M. A. Ph. D. அவர்களின் கருத்துரை :—

திரு, பாலு சகோதரர்கள் இன்று சென்னையில் தொடங்கிவைத்து நடத்துகின்ற ஓவியக் கண்காட்சியைக் கண்டு மிகவும் மகிழ்ந்தேன். நல்ல பொலிவோடும், உயிரோடும் கூடிய பல ஓவியங்களைக்கண்டு இக் கலையைத் திறம்பட வளர்த்து வருகின்ற இவர்கட்கு என் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்கிறேன். திருக்குறள், புறநானூறு, முதலிய தமிழர் சொல்லோவியங்கட்கு ஏற்ற நிழலோவியங்களைக் கற்பனையால் கண்டு எழுதி அச் சொல்லோவியங்களை நம் கருத்தை விட்டு அகலாவண்ணம் செய்து வரும் இப்பெரியார்கள் தொண்டு பாராட்டுதற்கு உரியது. வாழ்க இவ்விரு கலைஞர்களும், வளர்க அவர்கள் கலை.

சென்னை
10-11-54

அ. சிதம்பரநாதன்

*   *   *

சென்னை—7,
11—11—1954.

திரு. பாலு பிரதர்ஸ் அமைத்துள்ள காந்தியார் உருவங்களின் ஓவியங்களைக்கண்டு வியந்தேன். யானும் முதன் மந்திரி, ஸ்ரீ காமராஜ் அவர்களும் ஒவ்வொரு படத்தையும் பற்றிப் பேசி மகிழ்ந்தோம். வார்தாவில் காந்தியுடன் வாழும் பாக்கியம் பெற்ற எனக்குப் படங்களைப் பார்த்ததும் பழைய நினைவுகள் என் கண்முன் தோன்றின.

திருக்குறள் சித்தரிக்கும் ஓவியங்கள் மனம் கவரக் கூடியன. கட்டபொம்மன் வீரத்தைக்காண்போர் யாவரும் வீரம் காண்பர் எனல் மிகையன்று. பாலும் பிறரும் பாரத ரத்னங்களாக நீடு வாழ்க! ஓவியம் வளர்க.

இங்ஙனம்
திரு. வி. நடேசன்
ஆசிரியர், "முத்தமிழ்"

*   *   *

சென்னை, 8—1—54.

உணர்ச்சிகளை அப்படியே ஓவியத்தில் கண்டோம்.

த. ந. அனந்தநாயகி, B.A., B.L.
கார்ப்பரேஷன் கவுன்சிலர்.

சென்னை பச்சையப்பன் கல்லூரி உதவித் தமிழ்ப் பேராசிரியர், திரு. க. அன்பழகன் அவர்களின் கருத்துரை :—

நண்பர்கள் பாலு சகோதரர்கள் பல ஆண்டுகளாகவே கலைத் துறையில் ஆற்றிவரும் நற்றொண்டைத் தமிழ்நாடும், இந்தியாவும், சிலோனும் நன்கறியும். அந்தக் கலைச் செல்வத்தைப் பொதுமக்கள் கண்டு களிக்கும் வாய்ப்பு இப்போது நிறைவேறியுள்ளது. உத்தமர் காந்தி அண்ணலின் வாழ்க்கையை விளக்கிக் காட்டும் வகையிலும், உரிமைப்போரின் உயர்வைப் புலப்படுத்தும் முறையிலும், அவர்கள் தீட்டியுள்ள வண்ண ஓவியங்கள் காணக்காண இன்பந் தருவன. மற்றும் உலகப் பெரியார்களின் உருவங்களும், இலக்கிய காட்சிகளும், சிறப்பாகக் குறட்பாவிற்கு விளக்கந் தரும் ஓவியங்களும் கண்காட்சியில் அமைந்திருப்பது பெருமையளிப்பதாகும். பாலு சகோதரர்கள் மேலும் மேலும் தமிழ் இலக்கியச் செல்வத்திற்கும் குறள் நெறிக்கும், ஓவியப் பணிபுரிய வேண்டுமென்று விரும்பும் பலருள் யானும் ஒருவன். அவர்களின் கலைத் தொண்டு வளரவும், முயற்சி ஓங்கவும், வெற்றி கூறுகிறேன். உளங்கனிந்த வாழ்த்துக்களும் உரியவாகும்.

சென்னை,
11—11—54

இங்ஙனம்
க். அன்பழகன்

*   *   *

சென்னை,
19—1—54.

ஓவியக் கலைஞர்கள் திருவாளர்கள் பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சியைக் கண்டோம், களித்தோம். இது தமிழர்களுக்குப் பெருமைதரும் காட்சி. பழம்தமிழ் இலக்கியங்களில் இருந்து நுண்ணிய கருத்தோவியங்களைக் காட்சியாக்கித் தருவது மிகமிகப் பயனுள்ள தொண்டு. நாட்டுக்கு நலன் பயப்பது. பாலு சகோதரர்களுக்கு எங்கள் உள்ளங்கனிந்த நல் வாழ்த்துக்கள்.

டி. கே. எஸ். சகோதரர்கள்.

*   *   *

சென்னை, 19—11—55.

வெறும் மனதுடன் வந்தோம்; வீர சுதந்திர நினைவுடன் சென்றோம்.

(கப்பலோட்டி சிதம்பரனாரின் குமாரர்)
வ. உ. சி. சுப்ரமண்யம்.

சென்னை-17, 14—11—54.

பாலு சகோதரர்கள் தீட்டிய ஓவியங்கள் தத்ரூபமாக காட்சியளிப்பது பாராட்டத்தக்கது. முக்கியமாக காந்தி, புத்தர், ஏசு ஓவியங்கள் தலைசிறந்தன. குறள் கருத்துக்கு உகந்த ஓவியங்கள் போல மற்ற குறள் கருத்து ஓவியங்கள் எழுதி நூல் வடிவில் வந்தால் நலம் என ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்தபதி. T. P. கணேசமூர்த்தி
சிற்ப ரகசிய நூலாசிரியர்.

*   *   *

தியாகராசர் கல்லூரி
மதுரை, 12—11—54

திருவாளர்கள் பாலு சகோதர்கள் தீட்டிய பல்வேறு கலைச் செல்வங்களும் ராஜாஜி மன்றத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்த்துக் களித்தேன். நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அரும்பெரும் தலைவர்களின் உயிரோவியங்களும் தந்தை காந்தியடிகளாரின் பல்வேறு பருவங்களையும் குறிக்கும் நிகழ்ச்சிச் சித்திரங்களும் உள்ளத்தோடு பேசுவனவாக உள்ளன. சிறப்பாக காந்தியடிகள் புத்தராகவும், ஏசுநாதராகவும் ஒரே கண்ணுக்கு மாறி மாறி காட்சி அளித்து உள்ளத்தை கொள்ளை கொள்வது உலகிலேயே இச் சகோதரர்கள் சிறந்த ஓவிய நுட்பமுடைய உயர் கலைஞர்கள் என்பதைக் காட்டுகின்றது. இவர்களது கலைச் செல்வம் செழிக்க. தமிழ்நாடு இவர்களால் பெருமை பெறுகிறது.

நா. பாலுசாமி.
தமிழ் விரிவுரையாளர்.

*   *   *

சென்னை, 7—1—54.

பாலு சகோதரர்கள் ஏற்பாடுபண்ணி இருக்கும் இந்தக் கலைப் பொருள் கண்காட்சியைப் பார்வையிட்டேன். தனிப்பட்டவர்கள் முயற்சி பாராட்டுதற்குரியது. சித்திரப்பகுதி சிறப்பாக இருக்கிறது, கலை வளர்க்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பாலு சகோதரர்களுக்கு என் ஆசி.

தொ. மு. பாஸ்கரத் தொண்டமான்
காரியதரிசி, கலைக்கூடம்,
தஞ்சை.

சென்னை, 14—11—1954.

பாலு சகோதரர்களின் கலைக் கண்காட்சியிலுள்ள ஒவ்வொரு ஓவியமும் உயிர்பெற்றுப் பேசுகின்றன. காந்தியடிகள் பற்றிய சித்திரங்கள் மறக்க முடியாக் காட்சிகளாகும். கம்ப சித்திரங்களும் குறள் ஓவியங்களும் பண்டைத் தமிழகத்தின் பண்பை நமக்கு நினைவு படுத்துகின்றன.

நாரண துரைக்கண்ணன்.

*   *   *

(முகாம்) சென்னை,
23—1—55.

கலைவாணியின் இரு கரங்கள் பாலு சகோதரர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

பாரதி நேசன்
நேதாஜி குடிசை, வரகனேரி, திருச்சி.

*   *   *

சென்னை, 20—11—54.

பாலு பிரதர்ஸ் அவர்களுக்கு,

தங்கள் சித்திர கண்காட்சியை நாங்கள் பார்வையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறோம். மேலும் தங்களின் காக்ஷிகளுக்கு ஆண்டவன் எப்போதும் பழுது இல்லாமல் உங்களுடன் ஒத்துழைப்பார்கள். மென்மேலும் நீங்கள் உங்கள் வாழ்க்கையை இதில் கவனம் செலுத்தி வரவேண்டுமென்று நாங்கள் கடவுளை வாழ்த்துகிறோம்.

K. சங்கர நாராயண மூப்பனார்.
உதவி சேர்மன், முனிசிபல் கௌன்சில்,
திருநெல்வேலி.

*   *   *

சென்னை, 29—1—55.

ஓம்: சித்தி விநாயக சிவசக்தி வடிவேலன் தம்பியே சரணம் ஐயப்பா ! தாய் நாட்டுக்கு பாட்டுப் பாடி சேவை புரிந்தார் பாரதியார். பாலு சகோதரர்கள் சித்திரக் கலையால் சேவை செய்து வருகிறார்கள். தெய்வத் திருவருளால் நீண்ட ஆயுளுடன் கூடிய நோயற்ற பெருவாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று வாழ என் இஷ்ட தெய்வங்களை மனதார பணிகிறேன்.

நவாப் T. S. ராஜமாணிக்கம்

சென்னை, 19—11—54.

காலத்தின் கோலத்தை கருணையாலாண்ட
காந்தி மஹான் பெருமை
கால முள்ளளவும் கண்டு களித்திட
கற்பனைச் சித்திரத்தால்
காலம் மாறினாலும் மாறாத பண்பிலே
காட்டினர் சோதரர்கள்
காலமுள்ளளவும் போற்றிட வேண்டுமே
கன்னி அன்னை அருளால்.

"பித்துக்குளி" முருகதாசா
சத்சங்கம் தி. நகர்—சென்னை-17.

* * *

26—1—55.

தமிழன் பெருமையை காந்தியடிகளின் மூலம் மிக அழகாக விளக்கி இருப்பதைக் கண்டு பெருமிதப் படுவதுடன் உளமாற பாராட்டுகிறேன்.

மு. பொன்னுவேலு
6, பெரியபாளையத்தம்மன் கோவில் தெரு,
மூலக்கொத்தளம், சென்னை-21.

* * *

20—11—54.

கலைஞர் பாலு சகோதரர்களின் கலைப் பொக்கிஷம் மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கின்றன. கலா ரசிகர் கருத்திற்கொரு நல் விருந்து. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊருக்கும் இவைகளைக்கொண்டு போய் காட்டினால் நல்ல பயன் விளையும்.

சேர்மன், ஈரோடு.

* * *

சென்னை, 18—11—54.

உலகு என்றால் அதிலே பாலு சகோதரர்கள் போன்ற ஓவியர்கள் இருந்தே ஆக வேண்டும்.

இப்படிக்கு,
நு. தாமோதரன்.

* * *

பாலு சகோதரர்களை பெற்றெடுத்த வயிறே வயிறு. நாட்டுக்கு நற்பணியாற்றி, தமிழுக்கு உயர்வு தந்த சகோதர உள்ளங்களும், கலைத்திறமையும் நீடு வாழட்டும்.

B. கிருஷ்ணசாமி,
தலைவன், கிராம சேவா சங்கம்,
வாணியம்பாடி.

சென்னை, 21—1—55.

இங்குள்ள இந்த காந்திஜி கண்காட்சி இந்த பொருட் காட்சி அனைத்திற்கும் முதல் ஸ்தானம் வகிக்கிறதென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

எஸ். இசக்கிமுத்து செட்டியார்,
மெம்பர், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி,
வீரவநல்லூர், திருநெல்வேலி.

* * *

வருங்கால நாட்டை வளமாக்க, விஞ்ஞான அறிவை விருப்புடன் அள்ளி அஞ்ஞான அறிவை அவைதனில் தள்ளி, கலை என்னும் பொக்கிஷத்தைத் திறந்து மக்களுக்கு பலவாரியாகக் காண்பித்துள்ளீர். வள்ளுவன் வாரி இறைத்தான், வையகமெல்லாம் தம் குறளை. அதுபோல்தான் நம் அண்ணல் காந்தியின் வாழ்க்கையை வாரி இரைத்துள்ளீர், இக்கலைகளைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன். களிப்பு என்னும் கடலில் நானும் எனது தோழர்களும் நீச்சலடித்துள்ளோம். ஆனால் இதேப்போல் முத்தமிழகத்தில் ஓர் உத்தம சகோதரர்கள் தோன்றினால் உலகம் முன்னேறும் என்பதோடு முற்று வைத்து விடுகின்றேன்.

வா. பொ. பழம்நீ.

* * *

சென்னை, 17—11—54.

அன்பார்ந்த பாலு சகோதரர்களுக்கு,

சித்திர பணியில் தொண்டு செய்து, மக்களுக்கு (குறிப்பாக பிற்காலத்தில் தோன்றப்போகும் நம் சமுதாய மக்களுக்கு) நமது தலைவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களையும், சரித்திர சம்பந்தமான உண்மைகளையும் நேரில் காண்பது போல் அறிவிப்பதை எண்ணி எண்ணி இறும்பூது எய்துகிறேன்!

மேலும் நீங்கள் இம்மாதிரி சரித்திர சம்பந்தமான உண்மைகளை வரைந்து நம் இந்திய திலகங்களுக்கு அளிப்பீர்களாக!!

வாழ்க பாலு சகோதரர்கள்!!!

இப்படிக்கு,
வே. நா. சிவப்பிரகாசம்.

* * * *

காந்திஜீயைச் சுடும் காக்ஷியைக் கண்டு கதிகலங்கி கண்ணீர் வடித்து திகிலடைந்தேன். வாழ்க பாலு சகோதரர்கள் கலை.

M. K. ஸ்ரீனிவாசன்
ஜல்லிப்பட்டி, உடுமலை, கோவை.

சென்னை, 19—11—54.

நன்றி உணர்ச்சி மறவாது நாட்டின் நானுதரப் பட்ட தலைவர்கள் ஓவியங்களையும் வரைந்து இடம் பெறச் செய்த பாலு சகோதரர்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

தங்கள்,
K. T. R. மூர்த்தி.

* * * *

94, பூந்தமல்லி பெரிய வீதி,
சென்னை-10, 29—1—55.

மக்களுக்கு அறியாமையை போக்கி அறிவைப் புகட்டுவதற்கு இரு வழிகள் உள்ளன. அவை ஒன்று காவியம், மற்ருென்று ஓவியம். மக்களுக்கு காவியம் மூலம் தங்கள் நல்ல கருத்துக்களை வெளிப்படுத்து வதைவிட ஓவியம் மூலம் வெளிப்படுத்துவது எளிதாகும். அவ்வரும் ஓவியத்தைத் தீட்டி மக்களின் அறியாமையை ஓட்டி, அறிவையும், கலையுணர்வையும் ஊட்டுவதே தங்கள் தலையாய கடன் என முன்வந்த தாங்கள் நீடூழி வாழ்க.

கடலுக்குள் இருக்கும் முத்துவையும் மண்ணிற்குள் இருக்கும் தங்கத்தையும் எடுத்து மக்களுக்குக் கொடுப்பவரை உலகம் போற்றுகிறது. அதுபோலவே நாட்டுத் தொண்டர்களையும், தலைவர்களையும் அவர்களது செயற்கரிய செயல்களையும் ஒன்றுவிடாமல் மக்களுக்குப் புரியும் வகையில் எடுத்து இயம்புகின்றத் தங்களைத் தமிழ்நாடு போற்றும். "நான் மீண்டும் பிறந்தால் தமிழனுகவே பிறக்க விரும்புகிறேன்" என்ருர் காந்தி. உண்மையிலேயே உங்களிடை அவர் பிறந்து இருக்கிருர். புத்தர், காந்தி, ஏசு ஆகியவர்கள் உண்மையிலேயே அதிசய பிறவிகள். அவர்களை அதிசய வகையில் ஒன்றுபடுத்திக் காட்டிய தாங்களும் ஏன் ஒரு பிறவியாக இருக்கக்கூடாது? பண்டைக்காலத்திலே வள்ளுவர் மக்களுக்கேற்றவாறு காவியம் அமைத்தார். அஃது இக்காலத்து மக்களுக்கு விளங்கும்படி ஓவியம் மூலம் தீட்டித் தந்த தாங்களை ஓவிய வள்ளுவர் என்று கூறுவேன். கட்டபொம்மனின் வீரச் செயல்களை அப்படியே வரைந்திருக்கிறீர். தாங்கள் தீட்டிய அத்தனை உயிரோவியங்களும் விலை மதிக்க முடியா முத்துக்களே யாகும். இக்கண்ணிற்குபட்ட முத்துக் குவியலைப்பற்றியே எழுதினேன். தமிழ்நாட்டு ஓவியக் கலைஞர்களே நீங்கள் நீடூழி வாழ்க.

க. ப. கிருட்டினன்

சென்னை, 19—11—55.

இந்தக் கண் காட்சியைக் கண்டு என் மனம் களித்து துள்ளுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து இந்த கண்காட்சிக்கு ஏற்பாடு செய்வது நல்லது. வள்ளுவர் நம் நாடு நரம்புகளில் வீர இசை மீட்டிய குறளுக்குத்தக்க முறையில் ஓவியம் தீட்டப்பட்டிருக்கிறது. சிவ கிராமத்து முனிபுங்கவர் காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றின் பல பகுதிகளைப் பார்த்து மகிழ்ந்தவர்களில் நானும் ஒருவன். பாலு சகோதரர்கள் செய்யும் தொண்டு நல்ல தொண்டு. பாலு சகோதரர்களின் நன் முயற்சி மென்மேலும் வெற்றி பெருக.

நல்லன்பு வாழ்க,
அன்புப்பழம்நீ,
அமைச்சர், Y. M. C. A.
பட்டிமன்றம், சென்னை-1.

* * *

முத்தியால்பேட்டை உயர்நிலை பள்ளி,
சென்னை, 19—11—54.

அன்பு கனிந்த அருங்கலை மன்ன அண்ணலே!
வளர்க கலை! வளர்க கலைஞர்!! வளர்க கலைக்கரங்கள்!!!

தாங்கள் தங்கள் கருத்தாலும் கடமையாலும் கருத்தொருமித்து நடத்தும் நற்கலைத் தொண்டிற்கு நம் நாடு என்றும் தங்கள் நன்றியையும் தொண்டையும் நலம் பெற நினைவெய்தும் நூலும் நம்மினத்தே நிலை பெற்று நீடூழி நீடிக்கும்.

என். வி. பாலு,
ஓவிய ஆசிரியன்.

* * *

20—11—54.

பூங்காவிலுள்ள மலர்களை கண்டு வண்டுகள் ரீங்காரமிட்டு, மலர்களின் தேனை பருகுவதற்கு ஓடோடி வந்து குடித்து மெய் மறப்பதைப் போல், நம் பாலு சகோதரர்களின் சித்திரக் கண்காட்சி பூங்காவைக் கண்டு, சித்திரமாகிய மலரிலுள்ள தேனை பருகி மகிழ்ச்சி அடைந்தேன்.

வாழ்க அன்னவரின் கலை
ஓங்குக அன்னவரின் புகழ்.

ஏ. முருகேசம்,
1, படவட்டம்மன் கோவில் தெரு,
கொண்டித் தோப்பு சென்னை-1.

சென்னை, 20—11—54.

பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சி கண்களுக்கு மட்டுமல்ல கருத்துக்கும் இனிமை பயப்பதாகவே அமைந்துள்ளது. நாட்டு நலனுக்காக உழைத்த பல நல்லோர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், ஓவியங்களாக அமைந்துள்ளது பெரிதும் பாராட்டுவதற்குரியது. புறநானூறு, அகநானூறு உலகம் போற்றும திருக்குறட் கருத்துக்களையெல்லாம் பல வண்ண ஓவியங்களாக வடித்துத் தந்திருப்பது சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ளது. இது போன்ற பல குறட்பாக்களின் கருத்துக்களை இன்னும் பல ஓவியங்களில் வடித்துத் தருவார்களேயானல், மக்கள் அவற்றை பெரிதும் போற்றுவதோடு, அந்நூலைக் கற்று அறிவதற்கும் பெருவாய்ப்பாக அமையும். பாலு சகோதரர்கள் பெரிதும் இத்துறையில் ஈடுபட்டு, வெற்றிகாண தென்பாண்டிவிட்டான் திருவருளைப் பெரிதும் இறைஞ்சுகின்றேன்.

மு. இரத்தினசபாபதி, பி. ஏ.
எழுத்தாளன், தலைமை மருத்துவ நிலையம்
மதுரை.

* * *

சென்னை, 20—11—54.

பாலு சகோதரர்களின் சித்திரக் கண்காட்சியைக் கண்ட யான் ஓவியம் காவியத்தினின்றும், தோன்றியதா அல்லது காவியம்தான் ஓவியத்தின் அடிப்படையா என்ற ஐயப்பாடு தோன்றுகிறது. ராஜாஜி மண்டபத்தில் ஓவியக் கண்காட்சியைக் காண நுழைந்த யான், அகநானூறும், புறநானூறும், பொதுமறையும் பொலிவுடன், ஓவிய வடிவுடன் காட்சி யளிக்கும் தமிழ்ப் பூங்காவுக்குள் நுழைந்து விட்டேனென்றே எண்ணினேன். எல்லாச் சித்திரங்களுக்கும் நல்ல முறையில் உயிர் ஓவியமாக விஞ்ஞானிகள், உலகப் பெரியார்கள், நாட்டுக்குழைத்த நல்லவர்கள், மொழிக்காகப் பாடுபட்ட நம் முதியவர்களின் எழில் மிகுத் தோற்றங்களையும் கண்டேன். குறிப்பாக அண்ணல் காந்திஜியும் புத்தபிரானும், ஏசுவும் ஒரே ஓவியத்தில் சித்தரித்திருப்பது பெரிதும் பாராட்டுதற்குரியது. பாலு சகோதரர்கள் இத்துறையில் மென்மேலும் வெற்றி காண எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானக !

சு. நாயகம்,
கோடங்கிபட்டி,
பெரியகுளம் தாலுக்கா, மதுரை ஜில்லா.

சென்னை, 20—11—54

மனிதன் முன்னேற்றத்திற்கு சென்ற காலத்து சூழ்நிலைகளைச் சிந்தித்து செயற்கரிய செயல்களை ரண்ணினல் ஒரு நாடு முன்னேறும். படித்த-பாமர மக்களும் சொல்லும்-எழுதுதலைவிட ஓவியமாகக் கண்ணிற்கினிய காட்சியாக வரைதல் அரும்பெரும் தொண்டாகும். தமிழ் நாட்டை தென்னாட்டைப் பொருத்தவரை பாலு சகோதரர்களின் தொண்டு போற்றுதற்குரியது. உயர்ந்த திருக்குறட் கருத்துக்களையும், காந்தியடிகளின் சேவை வாழ்க்கை முறைகளையும், தெளிவாக எழுதியுள்ளன. தமிழருக்கு ஒரு அரும்பெரும் "அஜந்தா"வாகக் காட்சியளிக்கிறது. மேலும் மேலும் உயர்ந்த கருத்துக்களை ஓவியத்தின் மூலமாக எழுதித் தரும்படி தமிழ் மக்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன் சகோதரர்களை.

3-44, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி.

K. P. ஜெயவேலன்.
தமிழ்ப் புலவர்.

* * *

20—11—54.

ஓவியக் கலைஞர்கள் திரு. பாலு சகோதரர்களுக்கு,

தங்கள் ஓவியக்கலைக் காட்சி சிறப்புற அமைந்ததின் காரணம் அவைகள் ஓவியங்களாக இல்லாமல் உயிருடன் இருந்தமைதான். நான் கண்காட்சியில் இருந்த நேரம் முழுவதும் உள்ளேயிருந்த இறந்த இருக்கும், யாவருடனும் அளவளாவினேன் என்றுதான் சொல்லவேண்டும். மொத்தத்தில் கலைக்காட்சி கருத்துக்கு காட்சியாக அமைந்தது. கலைக்கும் உயிர் உண்டென்பதை இங்கு கண்டேன்.

மு. தர்மலிங்கம்,
18, பிரான்சன் கார்டன் தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை-10.

* * *

ஆப்ரஹாம் லிங்கனின் உடலுழைப்புத் தத்துவத்தைப் பற்றி நன்றாக விளக்கியிருக்கும் படம் மக்களுக்கு ஒரு நல்லுபதேசமாகத் திகழ்கிறது. பாலு சகோதரர்களின் இம்முயற்சிக்கு நன்றி.

கே. இராமானுஜம்.
43, நாகப்பய்யர் தெரு,
சென்னை-5.

சென்னை, 19—11—54.

பாலு சகோதரர்கள் மிக்க சிரத்தையுடன் நடத்தும் கண் காட்சியைக் கண்டு மனமுருகி மெய் மறந்திருக்கிறேன். இங்கிலையில் நான் என்ன எழுத!

15. கோவிந்து தெரு,
தி. நகர்.

ஆக்கூர் அனந்தாச்சாரி.

*　　*　　*

சென்னை, 17—11—54.

சரித்திர காலத்திலில்லாத முறையை ராஜாஜி மண்டபத்துள் நுழைந்து நிறைவு செய்து கொள்ளும் வாய்ப்பை பாலு சகோதரர்கள் தயாரித்தார்கள்.

ஜா. சுந்தரேசன்,
"குமுதம்"

*　　*　　*

சென்னை, 20—11—54.

கலைக் கோயிலைக் கண்டேன். உள் செல்லும் பொழுது பக்தி மேலிடுகிறது. எழுத வார்த்தைகளே வரவில்லை. அவர்கள் கலை வளரட்டும், தொண்டு செய்ய வேண்டும். பாலு சகோதரர்கள் நீடூழி வாழ்க. அவர்கள் கலைத் திறமை வாழ்க.

D. U. லக்ஸ்மன்.

*　　*　　*

மேலவாழக்கரை,
நாகப்பட்டினம்.
20—11—54.

பாலு சகோதரர்களால் நான் உலகில் காண வேண்டியதைக் கண்டேன்.

கோ. நா. வீராசாமி.

*　　*　　*

சித்திரக் கண்காட்சி சிறந்த முறையில் நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது. "க்யூ"வரிசையில் சுமார் ஒருமணி நேரம் நின்ற அலுப்பு கண்காட்சியை பார்த்த மாத்திரத்தில் சூரியன் ஒளிபட்ட பனித்துளி போல் அலுப்பானது போய்விட்டது. ஆனால் ஏற்பாடு செய்தவர்கள் ஒலிப்பரப்பி மூலம் இசைத்தட்டு சங்கீதம் வைத்திருந்தால் பொது ஜனங்களுக்கு "க்யூ"வில் மணிக்கணக்காக நிற்கும் அலுப்பானது அவ்வளவாக இருக்காது என்பது எனது தாழ்ந்த அபிப்பிராயம்.

சென்னை
21—11—54

R. K. கிருஷ்ணமூர்த்தி,
11, சுங்குவார் தெரு,
திருவல்லிக்கேணி.

நீங்கள் கட்டபொம்மனுக்கு அழியாத பெயரளித்துவிட்டீர்கள் கலையுருவிலே உங்கள் கலை மேன் மேலும் ஓங்கி சிறப்புறுக.

சென்னை,
27—1—55.

கோவிந்தராசன்
ராதாகிருஷ்ணன்
குப்புசாமி

*　　*　　*

சென்னை, 25—11—54.

கண்டேன் உமது ஓவியக்கலை காட்சிகளை மகிழ்ச்சியுற்றேன். உள்ளமதில், நானுமட்டுமல்ல! சென்னை சமூகமே!! நிற்க, கலை உலகில் ஒரு புரட்சி செய்துவிட்டீர். காரணம் உமது நீடித்த உழைப்பும் கண்யமும்தான் தாங்களுக்கு சித்திர கண்காட்சி மூலம் மாட்சிமிகும் பெரியோர் பட்டம்பெற்று பதவியில் இருக்கும் அறிஞர்கள் உங்கள் புகழை எடுத்துரைத்தது என் உள்ளம் பூரித்தது. ஏன் என்றால் நம் தொழிலுக்கு இவ்வளவு மதிப்புகொடுத்து யாரும் செய்ய முன்வரவில்லை. இந்த அறிய ஆற்றலை தாங்கள் செய்ததுபற்றி உங்கள் வெற்றி இன்னும் மேலும் மேலும் புகழடைய ஆண்டவன் அருள்.

ஒவ்வொரு படமும் எவ்வளவு அர்த்தத்தோடு எழுதியிருக்கிறீர்கள். ஒவ்வொரு ஓவியமும் மனதை இளகவைத்து விடுகிறதே. இன்னும் எத்தனையோ புகழ்பெற்ற ஓவியர்களும் இருக்கிறார்கள், அவர்கள் கூட இந்தக் காரியத்தைக் கண்டு தலைகுனிய சமயமாயிற்றே என்று பலவாறு பேசுகிறார்கள். ஒவ்வொருவரும் புகழாகத்தான் பேசுகிறார்கள். இந்த புகழ் உமக்குமட்டுமல்ல ஓவிய குலத்திற்கே ஒரு நன்மதிப்பு நாட்டிவிட்டீர்கள். நம் தொழிலுக்கு உம்மைப்போல் சிலர் எடுத்துக்காட்டினால் இந்தத் தொழிலுக்கே ஒரு வெற்றி. நீங்கள் ஒரு சங்கம் ஏற்படுத்துங்கள். அதில் நம்மைப்போல் எல்லா ஓவியர்களும் ஒன்று சேரட்டும். தனி "ஓவிய மகாநாடு" ஏற்படுத்துங்கள். உங்களால் முடியும், செய்யுங்கள். உங்களுக்கும் வெற்றி. இது என் எண்ணம்.

வெற்றி, புகழ், கனிமொழி, கவிஞர்கள், பட்டதாரிகள், ஏழைகள், மோழைகள், ஆணும் பெண்ணும் அனைவரும் வந்து உமது ஓவியத்தால் பரவசப்பட்டு விட்டார்கள்.

உமதுவெற்றி மேன்மேலும் ஓங்குக!

என். காசிநாதன்.
ஓவியர்.

சென்னை, 29—1—55.

இந்த கண்காட்சி ஏற்பாடு செய்து தந்த பாலு பிரதர்ஸ் சிறந்த தேசத்தொண்டு செய்தார்கள் என்று பாராட்டுகிறேன். மேலும் இவர்கள் திறமை அகில இந்தியாவுக்கு பரவ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

T. R. ஏழுமலை, M. L. A.
சென்னை.

* * *

பாலு சகோதரர்களின் ஓவியக் காட்சியைப் பார்த்தேன். இப்படியும் அண்ணலின் பெருமையை விளக்க முடியும் என்பதை தங்கள் ஓவியத்திறமையினுல் எடுத்துக்காட்டி, அதன் மூலம் நாட்டின் பெருமைக்கு ஓர் வழிகோலிவிட்டார்கள். அவர்கள் திறன் வெல்க; அவர்கள் புகழ்பொங்கி பெருக இறைவனை இறைஞ்சும்.

அன்பன்
காரியதரிசி, தமிழ் எழுத்தாளர் சங்கம்,
கோவை.

* * *

கண்களால் காணும் நிகழ்ச்சி எதுவாயினும் அதன் நகல்களைவிட அதிகமாக ரசித்திருக்க முடியாது. அசலைவிட அதன் உயிர்ப்படங்கள் உன்னதமானவை. உணர்ச்சி வசப்படுத்தி சிந்தை திருந்தச் செய்வன. தாய்நாட்டை விடுதலை செய்து ஜாதிமத வேறுபாட்டை ஒழிக்க உயிர் துறந்த உலகப் பெரியார் காந்தியடிகளார் சரித்திரச் சித்திரங்களை வண்ண ஓவியங்களாக உயிரூட்டித்தந்திருக்கும் ஓவியர்கள் பாலு சகோதரர்களுக்கு தமிழ் நாட்டினர் மட்டுமின்றி எல்லோரும் வணக்கம் செலுத்த கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை — வி. சிவராமன்
21—11—54 — செல்வி பதிப்பகம்
காரைக்குடி.

* * *

சென்னை, 21—11—54.

இந்தக் கண்காட்சியைக் கண்ட நான் மகாத்மாவை நேரில் கண்ட மகிழ்ச்சியை அடைந்தேன். இத்தகைய அரிய ஓவியக் கலைஞர்களை சென்னை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் தகுந்த ஆதரவு காட்டி அவர்களைக்கொண்டு ஓவியக் கலைக்கு ஊக்கமும் ஆக்கமும் காட்டவேண்டுகிறேன்.

S. சிவபோதம்.

தங்கள் ஓவியங்கள் உயிருள்ளவை.

சென்னை, — என். விஸ்வநாதன், B.A., B.Ed.
27—1—55. — செம்மங்குடி.

* * *

கருத்துக்கள் மிளிரும் ஓவியம். ஆனால் காணக் கண்கள் இரண்டே!

சென்னை, — சி. என். புருஷோத்தமன்
26—1—55. — தியாகராய மன்றம்—காஞ்சி.

* * *

சென்னை, 21—11—54.

கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கண்காட்சி, காந்தியடிகளின் வாழ்க்கையை நம் கண் முன்னே காட்டும் கண்ணுடி. கடமையை மறந்தோரை தட்டியெழுப்பும் சங்கநாதம் காங்கிரஸின் கீர்த்தி வாய்ந்த சரித்திரத்தை வருங்கால சந்ததிகளுக்கு தெள்ளெனக்காட்டும் சரித்திரப் பிரசித்தி பெறப்போகும் ஓவியங்கள். ஓவியங்கள் பாலு சகோதரர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் இவ்வரிய சேவையை செய்துவர ஆண்டவனை பிரார்த்தனை செய்கின்றேன். இதை ஏற்பாடு செய்தவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

டி. எஸ். வெங்கடேச ஜோஷி.
9, ஏகாம்பரேஸ்வர அக்ரகாரம்,
பி. டி. சென்னை.

* * *

21—11—54.

ஓவிய வல்லவர்களான பாலு சகோதரர்களின் ஓவியங்கள் மிகவும் பாராட்டுதற்குரியன. எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லாமல் பரந்த நோக்கத்தோடு தங்கள் ஓவியத்திறமையைக் காட்டியிருக்கின்றனர். தமிழ் பெரியார் திரு. வி. க. படமும், மறைமலையடிகளின் படமும் மிகவும் நன்றாக இருக்கின்றன. பாலு சகோதரர்களின் கலையை மனமார பாராட்டுகின்றேன், ஆண்டவன் அருளால் சகோதரர்களுக்கு நீண்ட வாழ்நாளும் பேரும் புகழும் நல்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

பி. எம். நடராஜம்,
ஆசிரியர், "ஆரியன்,"
சென்னை, 5.

சென்னை, *29—1—55.*

சித்திரங்களைக் காணக்கான ஆவல் தீரவே இல்லை. இவ்வளவு உயரிய மென்மையாக பார்ப்பவர்கள் மனதைக் கவரக்கூடிய வகையில் தீட்டக்கூடிய சக்தி வாய்ந்த சகோதரர்கள் நம்முடைய நாட்டில் இருப்பதே நமக்கு எவ்வளவு பெருமை வாய்ந்ததாக இருக்கிறது.

எஸ். சுலோசனு பானுமூர்த்தி.

* * *

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற குறள் எடுப்பிற்கேற்ப "பாலு சகோதரர்கள்" சித்திர உலகில் தோன்றி காட்சியளிப்பதைக் காணும் பேறு நான் பெற்றதை நினைக்குந்தோறும் மகிழ்ச்சியுறுகிறேன். அவர்கள் தமிழ் நாட்டில் தோன்றி தமது கை வண்ணத்தால் பாரதநாடு முழுமையும் பெயரெடுத்துப் புகழ்வுதேடுவது போல் மற்ற இளம் சித்திரக்காரர்களும் முயற்சி செய்தலே அவர்களை ஆதரிப்பதும், மதிப்பதும் ஆகும். வாழ்வு சிறிது. வளர் கலை பெரிதாகையால் தமிழ்நாட்டின் இத்தகைய சித்திரத் திறமையை கிரீஸ், ரோமாபுரி முதலிய பழைய நாகரிக நாடுகளில் சிறப்புற்றோங்கிய சித்திரத் திறனினும் மேலாக மதிக்கச் செய்யவேண்டும்.

21—11—54. வே. சி. சுப்ரமணியம்
சென்னை-*12.*

* * *

23—1—55.

கலை மண்டபம் கண்ணுற்றேன். உள்ளிருந்து வெளிவர மனம் இடம் தரவில்லை. 'போங்கள், போங்கள்' என்றனர். ஒவ்வொரு கலைப் படத்தையும் கலைக்கண் கொண்டு பார்க்க போதிய அவகாசமில்லை. வாழ்க இந்தியக்கலை. வாழ்க பாலு சகோதரர்கள்.

K. M. மாணிக்கம் செட்டியார், வக்கீல்.
நாச்சாண்டுபட்டி, திருச்சி ஜில்லா.

* * *

என்னே! கலையின் பெருமை! நான் ராஜாஜி ஹாலில் கண்ட கலைச் செல்வங்களை விவரிக்க இயலாது. ஒவ்வொரு மாபெரும் ஓவியத்தை நினைத்தாலே நம் கண்முன் நேரில் காண்பதுபோல் தோன்றுகிறது. நம்நாடு கலைப்பெருமை அடைந்து முன்னேற்றமடைய ஒவ்வொருவரும் இந்த சகோதரர்கள் தீட்டிய கண்காட்சியை கண்டுகளிப்பது அவசியம்.

ஏன். ஆர். ராஜலக்ஷிமி.
6, ஜெனரல் முத்தியா முதலி தெரு, சென்னை.

21—1—55.

நான் கண்ட ஓவியக் கலைக் காட்சியில் ஐம்புலனுக்கும் ஆற்றல் அளித்தது பாலு சகோதரர்களின் ஓவியக்கூடமே யாகும்.

சு. **செல்லம்,**
பறக்கை, நாகர்கோவில்.

* * *

21—1—55.

உலகப் பெரியார் காந்தியாரின் பெருமையோடு உங்கள் ஓவியத் திறனும் பலர் அறிந்துகொள்ள இந்த ஓவிய விழா ஓர் வாய்ப்பு. மேல்நாடாயிருந்தால் உங்கள், காந்தியார்-புத்தர்-ஏசு, என்ற ஒரு படத்திற்கே நிச்சயம் 'நோபிள்' பரிசு கிடைத்திருக்கும். உங்கள் திறமை தினம் தினம் வளர்வதாக.

பொம்மிடி. K. செங்கோடன்.

* * *

தங்கள் ஓவியக்கலையை தாங்கள் உயிருடனிருக்கும்போதே மக்கள் பாராட்டக்கூடிய நிலையை இந்திய மக்கள் அடைந்துவிட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். உமக்கு மேன்மேலும் கீர்த்தி ஏற்பட இறைவன் அருள்புரிவாராக.

22—1—55. ம. தாமஸ் மரியதாஸ்.

* * *

சென்னை,
28—1—55.

காந்தியடிகள் இறந்துவிட்டதாகக் கூறினர்கள்; இங்கு கலை உருவில் வாழ்வதைக் கண்டேன். அவருக்கு இறவாத நிலையை யளித்த தமிழ்க் கலை வாழ்க.

கோபாலன்.

* * *

26—1—55.

கண்டேன்! களிப்புற்றேன்! 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற கருத்தைப் போல இவ்வரிய ஓவியங்களை உலக நாடுகளும் கண்டு களிக்கச் செய்து தமிழ் நாட்டு பெருமையும் கலையுணர்வையும் ஓங்கச் செய்யுமா அரசாங்கம்?

அரக்கோணம். மகாதேவன்.

26—1—55.

கற்றவர்கள் மாத்திரமே படித்துத் திளைத்து மகிழ இயலுவது காப்பியங்கள் கொஞ்சமாகக் கற்றவர்கள் ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்ட கவிகள் உள்ளத்தை அப்படியே காணமுடியாது. நிறைந்த கல்வி அறிவு உடையவர்களே காப்பியத்தை உண்மையாக உணரமுடியும். பாலு சகோதரர்கள் தீட்டிய ஓவியங்கள் உண்மையிலேயே உயிரோவியங்கள். என்னுடன் அவை பேசின. கல்லாதவர்கள்கூட "கட்டபொம்மனின்" வீரத்தைக் காண முடிகிறது. காந்தியை இழந்த நேருவின் முகத்திலே படர்ந்த துயரச்சாயலை ஊர்ந்து பார்க்க முடிகிறது. இலக்கியத்திலே காணப்படும் நல்ல அடிகளை அப்படியே படமாகக் காட்டி இருக்கிறார்கள். நாமெல்லாம் பேசலாம். பேனாமுனை தேய்ந்து ஒடியும்வரை எழுதலாம்—அவர்கள் ஓவியத்தைப்பற்றி. அவர்கள் உண்மைக் கலைஞர்கள்; உயர்ந்த ஓவியர்கள்; அவர்கள் கலை செழிக்கட்டும்.

34, கீழரத வீதி, தூத்துக்குடி. முருகநாதன்.

* * *

27—1—55.

காந்தியாரின் சேவைகளை, தத்ரூபமாக எழுதி எனது உள்ளத்தைக் கொள்ளைக்கொண்ட பாலு சகோதரர்களே நீங்களும் உங்கள் கலைத் தொண்டும் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

எல்லாப் படங்களையும் பார்த்தேன். இறுதியில் காந்தியாரைத் தாங்கி நிற்கும் பாரத தேவியுடன் கூடிய படத்தை பார்த்த என் கண்கள் கண்ணீரைச் சிந்திற்று!

காந்தியார், குட்டரோஹிக்கு சேவை புரிகிறார். அவரைப் பின்பற்றுவதாகக் கூறும் ஆட்சியாளர். சாதாரண ஒரு, கிராம ஆஸ்பத்திரிகூட திறக்க மறுக்கிறார்கள். ஆகவே காந்தியாரே நீங்கள் மறுபிறப்பு பிறக்க வேண்டாம்.

ஒரு செங்கற்பட்டு ஜில்லா போர்ட் உறுப்பினன்,
மாதவரம், சென்னை-11.

* * *

29—1—55.

கவிஞனால் ஆக்கமுடியாது கலைகளை. கலைஞனால் ஆக்கமுடியும் என்ற உண்மையை உணர்த்திய பாலு சகோதரர்களுக்கு என் அன்பான ஆசி.

தி. சி. மதனகோபால்,
திருக்கழுக்குன்றம், செங்கற்பட்டு.

தங்களின் ஓவியத்தைக் கண்டு மிக்க ஆனந்தம் அடைந்தோம். அஜந்தாவின் அழகுச் சித்திரமும், எல்லோராவின் எழிலோவியமும் தாங்கள் தான் வரைந்தீர்களோ என்று சந்தேகிக்க வேண்டி இருக்கிறது.

நா. ம. உயர்நிலை பள்ளி, சீ. சௌந்திர பாண்டியன்,
7000 பண்ணை. சி. கிரகம் துரை,

* * * *

30—1—54.

உங்கள் சித்திர ஓவியக் காட்சியில் அண்ணல் மகாத்மாவின் வாழ்க்கையை சித்திரங்களினால் வைக்கப்பட்டிருப்பதை நான் கண்டு களித்து மெய்மறந்து நின்றுவிட்டேன். எவரெஸ்ட் சிகரத்தைக் கண்டு பிடித்த டென்ஸிங்கை உலகத்திலேயே மறக்க முடியாது. அதுபோல் உங்கள் சித்திர ஓவியக் காட்சியை என்றென்றும் மறக்க முடியாது.

சி. தேவராஜ்
32, வி. கே. பிள்ளை தெரு, சூளை, சென்னை-9.

* * *

பாலு பிரதர்ஸ் தமிழ் நாட்டின் ஓவியக்கலை மேம்பாடு அடைய அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

வனப்பாடி. எம். லோகநாதன்.

* * *

இவர்கள் கலை அமரத்வம் பெற்றது.

பாலாஜீ, மதுரை.

* * *

21—1—51.

காந்தி அடிகளின் வாழ்க்கைச் சித்திரம் வெகு எளிய முறையில் பசுமரத்தாணி போல் மனதில் ஊன்றி முதலில் இருந்து பார்த்துவந்து முடிவு பெரும் சமயம் காந்தியடிகளுக்கு கண்ணீர் வடிக்காமல் இருக்க முடியாது. உலகம் போற்றும் உத்தமர் காந்திஜி நமக்காகவே வாழ்ந்தார்; மாண்டார்; என்பதை ஒவ்வொரு தமிழனும் மறக்கமுடியாது. சித்திக் கண்காட்சியார் செய்த தியாகம், சரித்திரத்திலே செய்யமுடியாத தியாகம் என்பதோடு இச்சித்திரக் கண்காட்சி காந்தியடிகளின் ஆசிபெற்று பிரகாசமாக வேண்டுமென ஆசி கூறுகிறேன். நமஸ்தே!

R. V. நாக சுப்ரமணிய அய்யர்,
தலைவர் கிராம காங்கிரஸ் கமிட்டி,
விஷமங்கலம், திருப்பத்தூர், (N.A.).

23—1—55.

இதுவரை நான் பார்த்த ஓவியங்களுள் சிறந்தது இதைவிட வேறில்லை. இவ்வோவியங்களை திறம்பட எழுதிய பாலு பிரதர்ஸ் அவர்களுக்கு என் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

M. R. சேஷைய்யர்,
Member of Adult Education Committee, Palani.

* * *

12—11—54.

சென்னை பாலு சகோதரர்கள் நடத்தும் கலைக் கண்காட்சியைக் கண்ணுற்றேன். மிகவும் மகிழ் வெய்தினேன். முக்கியமாக இக்கண்காட்சியில் மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகள் அனைத்தும் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் சிறந்த முறையில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் கைத்திறன் மிகவும் போற்றத்தக்கது, இவர்கள் பல்லாண்டு வாழ்ந்து இவர்கள் கைத்திறத்தால் தமிழ் நாட்டின் கலைப் பெருமையை நிலைநாட்ட இறைவனை இறைஞ்சுகிறேன்.

புதுமண்டபம், A. T. N. நாகலிங்கம்.
மதுரை. புத்தக வெளியிடுவோர்.

* * *

15—11—54.

பாலு சகோதரர்களின் ஓவியங்கள் பொதுவில் எல்லாம் நன்ருய் அமைந்திருக்கின்றன. முக்கியமாக என் இதயத்தைத் தொட்டு உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தது மகாத்மா காந்திஜியினுடையதே. என்னுடைய தாழ்மையான அபிப்பிராயத்தில் இவைகள் நமது தேசத்தின் கலை பொக்கிஷமாக்கப்பட்டு, நமது தேசத்தின் தலைநகரில் உன்னதமான இடமளிக்கப் பட வேண்டுமென்பதே, என்பது என் அவாவும்கூட. இறுதியில் பாலு சகோதரர்களின் இத் தேசத் தொண்டு இன்னும் பற்பல நல்ல துறைகளில் பயன் பட அவர்கட்கு நீண்ட ஆயுளை அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சென்னை-5. வ. ரா. ஸ்ரீனிவாசன்.

* * * *

23—1—55.

பாலு பிரதர்ஸ் ஓவியத்தில் ஸ்ரீ தேபர் அவர்களை மிகவும் சீக்கிரத்தில் தயார் செய்தது மிக அதிசயம்.

சீர்காழி. எஸ். கிருஷ்ணமூர்த்தி.

பாலு சகோதரர்களின் இந்த சித்திரக் கண்காட்சி மிகவும் தெய்வீகமானது என்று குறிப்பிட லாம். காந்திஜி இவ்வுலகில் தோன்றியதிலிருந்து தமது முடிவு நாள்வரை இறைவனை மனதில் கொண்டிருந்தார். அந்த அண்ணலின் வாழ்க்கையை அழகாக சித்தரித்துக் காட்டிருக்கும் பாலு சகோதரர்கள் இத்தன்மையைத் தெளிவாகக் காட்டியிருக்கிருர்கள் என்ருல் மிகையாகாது.

வள்ளுவரின் ஒவ்வொரு குறளுக்கும் சகோதரர்கள் வரைந்திருக்கும் சித்திரங்கள் உள்ளத்தைத் தொடுபனவாக இருக்கின்றன. அவர் குறளில் கூறியிருக்கும் பொருள் அணுவளவும் மாருது சித்திரத்திலே பிரதிபலிப்பது தான் அவர்கள் திறமையை கண்ணுடிபோலப் பிரதி பலித்துக் காட்டுவதை உணர்த்துகிறது. வாழ்க அவர்களது வாழ்வும் கலையும்.

ஈஸ்வரதாஸ் லாலா தெரு, ரா. வேதமூர்த்தி.
சென்னை-5.

* * *

வல்லம் (P. O.)
(Via) திண்டிவனம்.

உயர் திரு. பாலு சகோதரர்கள் சித்திரக்கலையில் தமிழ் நாட்டிலேயே, ஏன்! இந்தியாவிலேயே சிறந்தது. ஆயினும் விளம்பரமில்லாத வேண்டிய அளவு பாராட்டுதலுமில்லாது இருப்பதற்குக் காரணம் அவர்கள் சுத்தத் தமிழர்களாக இருப்பதுதான். தமிழன் தன் மானத்தோடு தமிழனை போற்றப்படும் நாள் வர எவ்வளவு நாட்களாகுமோ! இருப்பினும் புரட்சிக் கவிஞர் பாடல்பாடி காரிருளால் சூரியன்தான் மறைவதுண்டோ-கரை சேற்ருல் சூரியனின் வாசம் போமோ-பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மையாமோ?

எஸ். பாண்டுரங்கன்.

* * *

18—11—54.

முருகா, பாலு சகோதரர் அவர்களுக்கு என் மனமார்ந்த வணக்கம். நீங்கள் எழுதிவைத்த கண்காட்சியைப் பார்த்துவிட்டு போகவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் திருத்தணியிலிருந்து வந்து பார்த்துவிட்டுச் செல்கிறேன்.

V. அண்ணுமலை ஆச்சாரி,
10, கச்சேரி தெரு, திருத்தணி.

இச் சிறந்த சித்திரக் காட்சிகள் காண்போரை சிலையாக சமைக்கவல்லன. ஆதலின் இச்சித்திர ஓவியர்கள் சிற்பிகளும் ஆவர். இவ்வழியில் ஓங்குக ஓவியரின் கைத்திறமை.

சென்னை. பாமன்

* * *

17—11—54.

தங்களுடையக் கலைப் பூங்காவிலே உலாவிய நான் பெருமை அடைகிறேன். தங்கள் கலை வாழ்க.

சென்னை. சே. வே. சுப்ரமணியம்.

* * *

17—11—54.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயிர் ஓவியங்கள். ஓவியங்கள் பேசுவதை இன்று நான் கண்டேன். வாழ்க கலைஞர்கள்.

சுப்பையா.

* * *

18—11—54.

தோழர் பாலு சகோதரர் அவர்களுக்கு,

தங்களின் ஓவியங்கள் நமது நாட்டுக்கே ஓர் உயர்ந்த பொக்கிஷங்கள். குறிப்பாக காந்தியடிகளின் படங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. தங்களின் சேவையை நம் தமிழ்நாடு நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

(சேலம்). எஸ். குமாரஸ்வாமி.

* * *

18—11—54.

தமிழ் மணம் கமழும் கலைக்காட்சி தமிழகத்தின் எழுச்சியை விளக்குகிறது. பாராட்டுதல்.

சென்னை, அன்பன்,
பச்சையப்பன் கல்லூரி. வி. இராசமனோகரன்.

* * *

23—1—55

தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலான்
தோன்றலின் தோன்ருமை நன்று.

சி. சிவகுருநாதன்,
மின்சார அலுவலகம், மேட்டூர் அணை.

மெஸ்டன் பயிற்சி கல்லூரி, சென்னை,
19—11—54.

ஓவியக் கண்காட்சி தந்த எழுச்சி இவ்வளவின் தென்று கூறுதல் எளிதன்று ; பாலு சகோதரர்கள் தம் ஓவியங்கள் எழில்மட்டும் உடையனவல்ல ; அவை உயிர் கொண்டும் இயங்குகின்றன. அவை வாழ்க.

சீ சங்கரலிங்கம்.

* * *

குமாரசாமியார் கழகம், சென்னை,
19—11—54.

யானும் எனது நண்பர் இருவரும் தங்கள் கண்காட்சியை பார்வையிட்டோம். இம்மாதிரி படங்களை இதுவரையில் நாங்கள் கண்டதில்லை. இவர்களுக்கு அரசாங்கத்தார் பரிசு கொடுக்குமாறு வேண்டுகிறேன்.

P. S. அண்ணுமலை,
வி. இரங்கநாதன்.

* * *

18—11—54.

உயர் திருவாளர்,

பாலு சகோதரர்களுக்கு என் மனமார்ந்த அன்பு வணக்கம். தங்கள் ஓவியத்தின் பெருமை தமிழ் நாட்டிற்கும் இந்தியாவுக்கும் ஓர் சிறந்த எடுத்துக் காட்டாகும். தங்களுக்கு எல்லாம்வல்ல இறைவன் என்றும் அருள்புரிந்து வருவாஞக.

74, ஹைரோட் T. N. சம்பந்தம் பிள்ளை.
புரசைவாக்கம். Sri Gandhiji Rama Rajyam.

* * *

பச்சையப்பன் கல்லூரி விடுதி, சென்னை,
20—11—54.

சிந்தையைக் கிளறிய உங்கள் சித்திரத்தையும், கண்களைக் கவர்ந்த கண் காட்சியையும் கண்ட எங்கள் உள்ளம் உவகையால் பூரித்தது. இத்தகைய சிறந்த ஓவியங்களைத் தமிழ் நாடு பெற்றிருப்பதைக் கண்டு நாங்கள் தமிழகத்திற்கு நன்றி செலுத்தாமலிருக்க முடியாது. உங்கள் தொண்டு உயர்ந்தது. குறிப்பாக ஒரு படத்தில் காந்தி, புத்தர், யேசு இவைகள் அமைந்திருப்பது தங்களுடைய உயர்ந்த திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டும் என்பதைக் கூருமல் இருக்க முடியாது.

பா. சந்திரன் ; பெ. பாலன்;
வெ. துளசிங்கம்.

20—11—54.

ஓவியம், காவிய அழகை காட்டுவதுடன் கலைப் பண்பினை எடுத்துக் காட்டுவதோடு இந்திய மக்களின் ஒழுக்கம், அன்பு, சாந்தம், வீரம், இவைகளை எளிய முறையில் எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது. கலை காந்தியாரின் திரு மண்டபத்தை இதிலிருந்தே அழகு படுத்தும் என்பதனை விளக்குகிறது.

சென்னை. ஆ. நெப்போலியன்.

* * *

14—11—54.

காந்தியின் வாழ்க்கைத் தத்துவங்களை கண் முன்னே காட்டுகிறது பாலு சகோதரர்களின் ஓவியம். காந்தியின் லக்ஷியத்தை நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் கடைபிடித்து சுதந்திரத்தைக் கண்போல் காப்போராக, இந் நல்ல பணிக்கு பாலு சகோதரர்கள் தாங்கள் அற்புத ஓவியங்களை தீட்டித் தந்தது எங்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஊத்துகுளி ரோட், சி. ராஜலிங்கம்.
திருப்பூர், கோவை.

* * *

பாலு சகோதரர்களின் கலைக் கண் காட்சி வெறும் கண் காட்சியாக இல்லாமல் உள்ளத்தைத் தொடவும் உணர்ச்சியைப் பெருக்கவும், நாட்டுப் பற்றும், விடுதலை உணர்ச்சியையும் தூண்டச் செய்வதில் சிறிதும் ஐயம் இல்லை. குறிப்பாக முன்னாள் காங்கிரஸ் தலைவராக சிறந்த பணியாற்றிய வைக்கம் வீரர் பெரியார் ஈ. வே. ரா. அவர்களையும், அறிஞர்கள் அண்ணா அவர்களின் புதுமை ஒளி வீசும், பொன் மொழிகளும் இடம் பெற்றிருப்பது மிகவும் பாராட்ட தக்கவை.

அ. பொ. அரசு,
சென்னை, வே. கண்ணன்,
14—11—54. நெ. சி. தேவராசன்.

* * * *

19—11—54

முன்னொரு காலத்தில் ரவிவர்மா தோன்றினார். அவருடைய வழி வந்தவராகவே பாலு சகோதரர்களை எண்ண வேண்டிய நிலையில் இருப்பது நான் கண்ட ஓவியக் காட்சி யாகும்.

வளர்க உமது ஓவியத்திறமை! வாழ்க நிமது புகழ்!!

சென்னை. ஜீவரத்னம்.

பவானி கதாயிமண்டல்,
(மார்க்கம்) ஈரோடு.

நாட்டு மக்களின் நினைவுகளை நற்பாதையில் இட்டுச் செல்ல ஏற்ற இம் முயற்சி பாராட்டதக்கதே காந்திஜியின் ஒவ்வொரு நிலையிலும் மக்கள் உள்ளங்களைத் தட்டி எழுப்பும் திறனை ஓவியத்தில் காட்டும் இத் தொண்டு மிக அவஸ்யமானது குறித்து திரு பாலு பிரதர்ஸ் அவர்களுக்கு நன்றி.

M. S. ஸ்ரீனிவாசன், காரியதரிசி.

* * *

24—1—55.

நான் கண்ட இந்த பொருட்காட்சி சாலையில் உங்களுடைய சித்திரக் காட்சியே சிறந்தது என தெரிவிக்கிறேன்.

சென்னை, D. முத்துராமன்,
ஓவியர்.

* * *

23—1—55.

உன் கலை படகு அலைக்கு அஞ்சாது. புயலுக்கு புரங்கணிக்காது. காவியம் கனிந்த ஓவியக் கலைகள் மலைபோல் வளர வாழ்த்துகிறன். இச் சேவை அதிலும் காந்தி சேவை நாட்டிற்கு சாந்தியும் சத்தியத்தையும் தளராது தரும்.

கோலார் தங்கத் தரை. வே. செ. வெங்கடேஸ்.

* * *

15—11—54.

பாலு சகோதரர்கள் அவர்களுக்கு,

சித்திரக் கண்காட்சி பந்தலில் காந்திஜியின் ஓவியங்கள் மிகவும் மனதை கவருகின்றன. இன்னும் சில சித்திரங்கள் பார்ப்பவர்களின் மனத்தை விட்டு அகலாது. என்றும் மறக்க முடியாத அரிய சேவை இது.

சென்னை. D. பங்காரு செட்டி,
முரளி சோப் ஓர்க்ஸ்.

* * *

பாலு சகோதரர்களே தமிழ் நாடு உங்களை மறந்துவிடாது. காரணம், நன்றி மறக்காத நாடு நம் தமிழ் நாடு.

து. இளங்குப்பன், ஆர்க்காடு.

சென்னை-30.

பாலு சகோதரர்களின் வண்ண ஓவியங்கள் பலப்பல இருந்தாலும் அவைகளின் தரத்தையும், அவர்களின் தரத்தையும் உயர்த்திக் காட்டுவது அண்ணல் காந்தி, அஹிம்ஸா உருவம் புத்தர், ஏசு இவர்களின் கூட்டு படமே யாகும். இவைகளுக்கு அடுத்து தென்னாட்டின் நிலையைச் சித்தரிக்கும் வகையாக அமைந்துள்ள இரு எளியவர்களின் படம்.

242, பச்சையப்பன் விடுதி. கண்ணுமணி.

*　*　*

21—1—55.

உங்களின் கலைத்திறனை தமிழர்களாகிய நாங்கள் போற்றினாலும் உலகம் முழுதும் உங்கள் கலைத் திறனைப் போற்ற வேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

இராமராவ், மதுரை.

*　*　*

23—1—55.

மூவர் தோன்றும் "காந்திஜி" உன்னத ஓவியம். தமிழர்கள் கடமைப்பட்டவர்கள் "பாலு" சகோதரர்கட்கு. வாழ்க அவர்கள்.

சிவகாரி, P. O. ஈரோடு. சு. ப. சுப்பையா.
(அறிவுக்கனல்)

*　*　*

21—1—55.

இயற்கையிலேயே கல்வி அறிவு இல்லாத ஒருவனுக்கு உங்கள் சித்திரத்தைக் கண்டால் கல்வி அறிவு தானாகவே வளரும். நிற்க, காந்தி அடிகளின் மரண படத்தைக் கண்டதும் ஒரு தடவை அழுதே விட்டேன் ஐயா.

அன்பன்,
63, ஆனந்தபுரம்,
மாமுண்டிசாமி கோவில் தெரு, திருச்சி.

*　*　*

நான் "உயிர் ஓவியம்" என்று சொல்ல கேள்வி பட்டிருந்தேன். ஆனால் அதை இன்றுதான் இந்த காந்திஜி கண் காட்சியில் கண்டு இன்புற்றேன்.

கோபாலன்.

மதுரை,
21—1—55.

21—1—55.

நீங்கள் இந்நாட்டில் பிறந்தது, தமிழ் நாடு எல்லாக் கலைகளிலும் சிறந்தது என்பதை நிரூபிக்கவே என்பது என்னுடைய எண்ணம். இன்னும் சிறந்த பல ஓவியங்களை வரைந்து நம் நாட்டின் மேன்மையை நிலை நிறுத்த வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

எஸ். கே. நாராயணன்,
N. H. E. School, சின்னப்பன்பட்டி, சேலம்.

*　*　*

24—1—55.

இந்த கண் காட்சியை எல்லோரும் அவசியம் பார்க்க வேண்டியது. இதை பார்த்தால் உண்மையிலேயே ஒவ்வொருவருக்கும் தன்னை அறியாமலேயே சுதந்திர நாட்டுப் பற்று உண்டாகும் என்பதில் சந்தேகமில்லை.

தஞ்சை ஜில்லா. மு. பத்மனாபன்,
(அந்தரங்க காரியதரிசி)
ஸ்ரீ கோ. த. ரெங்கனதன்,
(நிர்மாண ஊழியர்)

*　*　*

அன்பும் அறமும் வளர்ந்து அருங்கலைகள் பரவ இது போன்ற சித்திரக் கண்காட்சிகள் மிக மிக அவசியம். அதுவும் எழுத்து வாசனை யற்ற நம் நாட்டில் பெரும்பான்மையான மக்கள் தங்கள் உள்ளத்தைத் தொட்டு அறிவைத் தூண்ட இந்த படக்காட்சி மிக பயன்படும். உலக உத்தமர் காந்திஜியின் வாழ்க்கையைப் பலர் கேட்டிருப்பினும் இந்த காட்சிசாலையில் பார்த்த படங்கள் உள்ளத்தை ஊடுருவித் தொடும் அளவை ஏற்படுத்தியவர்களான பாலு சகோதரர்களுக்கு என் நன்றி-

K. U. சுந்தரம், சேலம்.

*　*　*

22—11—54.

தங்கள் அழகிய வண்ண ஓவியக்காட்சி பார்ப்போர் மனத்தை பரவசப்படுத்தும் பாரத நாட்டின் தலை சிறந்த சிற்பி என வருங்கால சரித்திரத்தில் பொன் எழுத்தால் பொறிக்கப்படும்.

பி. வெங்கடேசபெருமாள்.

பச்சையப்பன் உயர்நிலை பள்ளி, சென்னை,
21—11—54

அறிவும் ஆற்றலும் ஒருங்கே அமைத்து சிறப்ப, ஓவியங்களில் வரைந்து விட்டீர். காணக் காண மகிழ்ச்சி மிக்க கொள்கிறேன். கட்டணம் இரண்டணு போதாது. கொஞ்சம் உயர்த்தி இருக்க வேண்டும். எவ்வளவு கொடுத்தாலும் போதாது. பார்த்து மகிழ்விக்க வருடா வருடம் இக் காட்சியைத் திறந்து பல புதிய அபிப்பிராயம், வர்ணனை முதலியவற்றை ஓவியத்தில் அமைத்து என்றும் நீங்கள் ஓவியம் வரைந்துகொண்டிருந்து எங்கள் மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் பேருடையவர்களாக இருக்க நான் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

வி. ஆர். பாலசுப்ரமணியம்,
IV-பாகம், "டி" பிரிவு.

* * * *

21—11—54.

நான் சித்திரத்தில் விருப்பமுள்ள ஒரு பள்ளி மாணவன். நானும் தங்களுடைய படங்களைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இக் கண் காட்சிக்குள் நுழைந்து வெளியே வர விருப்பமில்லா மல் இன்பக்கடலில் மூழ்கினேன். நீங்களும் மேலும் இக்கலையில் சிறப்புற விளங்குமாறும், சித்திரக்கலை மேன் மேலும் ஓங்குமாறும் எல்லாம் வல்ல இறை வனை பிரார்த்தனை செய்கிறேன்.

5, சத்திதம்பரம் தெரு, க. திருநாவுக்கரசு.
சென்னை-12.

* * *

சிந்தாதிரிப்பேட்டை, 21—11—54.

தாங்கள் காந்தி சரித்திரம் பற்றி கண்காட்சி அமைத்தற்கு மிகவும் தகுதி உடையவர். இக் கண் காட்சி காந்தி நினைவு கட்டடத்தில் வைக்கும்மாறு கட்டிடத்தின் குழுவை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். உங்கள் ஓவியம் அந்நிய நாட்டினர் வரவேற்கும் அளவு சிறப்புற்று அமைந்துள்ளது. பாலு சகோதரர்களின் சலியாத உழைப்பு பாராட்ட தக்கது. இதை நீங்கள் நடக்கப் போகும் அகில இந்திய பொருட்காட்சியில் அமைக்கவும்.

வாழ்க சகோதரர்கள்; வாழ்க ஓவியம்
வாழ்க உமது உழைப்பு.

ச. இராமமூர்த்தி.

உலக ஓவியர்கள் வரலாற்றில் என்ன நடந்த தென, நான் நேரில் கண்டேன் இல்லை. ஆனால், தனிப்பெரும் ஓவிய வள்ளர்கள் பாலு சகோதரர்கள் அளித்த சந்தர்ப்பத்திலே, ஓவியத்தின் உண்மையைக் கண்டேன். அதோடு கட்சி பேதமற்ற முறையில் அறிஞர் அண்ணாவின் "அவர் பிறந்ததற்கு முன்னும், இறந்ததற்குப் பின்னும்" என்னும் தலைப்பிலே உள்ள ரேடியோ பேச்சை சித்தரித்திருப்பது மேலான எண்ணத்தைக் குறிக்கிறது. ஓவிய நண்பர்கள் பல்லாண்டு நீடூழி வாழ்ந்து கலைத் தொண்டாற்ற வாழ்த்துகிறேன்.

2. முக்கியம்மன் கோவில் தெரு,
சிந்தாதிரிபேட்டை, ஆ. திரவியநாதன்,
சென்னை. ஆசிரியர்.

* * * *

கலைச் செல்வம் நிறம்பிய இத் தமிழ் நாட்டின் கலைகளை நாடறிய காட்டும் திரு பாலு சகோதரர் களின் பெருந்தன்மைக்கு எல்லா தமிழர்களும், ஏன், ஒவ்வொரு இந்தியனும் நன்றி தெரிவிக்க கடமை பட்டிருக்கிறான். இப்புனித கைங்கர்யத்திற்காக இங்கு திறக்கப்பட்டிருக்கும் இக்கலை விழாவினால் காந்திஜி யின் மணி மண்டபத்திற்கு எல்லோரும் அளித்த காணிக்கையின் பெரும் பாக்கியத்தில் இவர்களுக்கும் பங்குண்டல்லவா?

2, O. V. M. தெருவு, தி. இ. சாரங்கபாணி,
சென்னை-5.

* * * *

சிறப்புக்குரிய ஓவிய கலையிலே முன்னேற்ற மடைந்து காந்தியின் வாழ்க்கை வர்ணனைகளை சித்தி ரத்தின் மூலம் நமக்கு புரியும்படி நன்கு எழுதி பாமர மக்களும் புரிந்துகொள்ளும்படியாக எழுதி அதைப் பார்த்து ரசிக்க வரும் திரள்திரளான மக்களின் பணத்தை காந்தியின் ஞாபகார்த்த மண்டபத்திற்கு செலுத்துகிறார் என்றால் கலைகளிலே சிறந்த வரல்லாது தருமத்திலும் சிறந்தவர் என்பதை காட்ட வேறென்ன அத்தாட்சியுள்ளது. அன்பு பல உரித்தாகுக.

Govt School of Arts and Crafts,
Madras.
D. கந்தசாமி.
ஓவியர்.

21—11—54

நான் இன்று கண்ட கலைக் கண்காட்சியில் ஒவ்வொரு சித்திரமும் கண்ணைக் கவரும்படியாயும் நான் நேரில் பார்க்காத பலவித செயல்களையும் கண்ணார கண்டுகளித்தேன். மனித சமுதாயம் முன்னேற வேண்டியதற்கு ஓவியப் படங்கள் முக்யமாக பார்த்து அதிலும். தேச மக்களுக்கு தொண்டு செய்யும்படியான முறையில் இன்னும் பலவிதமான ஓவியபடங்களை தயார் செய்து தேசமக்களனைவரும் நல்லமுறையில் சேவை செய்ய உங்கள் ஓவிய மூல்யமாய் பயன் பெறலாமென்று என் நம்பிக்கை.

சி. ஜே. கண்ணபிரான்,
காந்திஜி சாந்தி ஆசிரமம்,
37, A. P. Road, சென்னை-7.

* * * *

உழைப்பாளியின் தோள் வலிமையம். உண்டு களித்திருப்போரின் வாயும் வயிரும் என்ன நிலையில் இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் படம் நமது நாட்டின் தற்கால நிலைமையை மிக அழகாக சித்தரித்துக் காட்டும் சித்திரங்கள் மேலும் சேர்ந்திருந்தால் நமது நாடு முன்னேற ஏதுவாயிருக்கும். நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்களும் ஏற்படும் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

மு. சுப்ரமணியன்,
17, பூதப்பெருமாள் நாயகன் வீதி, சென்னை-2

* * * *

24—1—55

இந்தக் கண்காட்சியில் காந்திஜியினால் புகழப்பட்ட தமிழ் நாட்டில் வீரர்களையும் தமிழ் மொழியின் சிறப்பு பற்றியும் வரைந்திருப்பது தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமையாகும். இப்புகழெல்லாம் இதை தீட்டிய பாலு சகோதரர்களுக்கே. உரித்தாகுக.

ரா. வீரராகவன்,
சை. தா. கா. அங்கத்தினன், செங்குன்றம்.

* * * *

ஓவியத்திற்கு 'உயிர்' இங்குதான் இருக்கிறது. காவியம் பயின்ற பயனைப் பெற்றேன்.

பொ. க. வரதன்.
38, கொத்தங்குடித் தெரு, தில்லையம்பதி.

உண்டால் இனிக்கும் தேன். ஆனால் கண்டால் என்றென்றும் நீங்காது நின்று கண்ணிலும் கருத்திலும் இனிக்கின்றது இவ்வமர ஓவியங்கள்.

சென்னை, மகாதண்யாணி.
24—1—55. ஆசிரியன்.

* * * *

பாலு சகோதரர்கள் எழுதி இருக்கும் காந்திஜி கண்காட்சியை பார்க்க சந்தர்ப்பம் கிடைத்ததை பாக்கியம் என்று கருதுகிறேன். சித்திரக்கலையின் சிறப்பில் புகழை இன்னும் மேலே மேலே எட்டிப் பிடிக்கவேண்டியதற்கு ஆற்றலையும் தேகாரோக்கியத்தையும் பாலு சகோதரர்களுக்கு அளிக்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எஸ். கோபாலகிருஷ்ணன்.
"கல்கி" இன்ஸ்பெக்டர், 'கல்கி' ஆபீஸ்,
சென்னை, 10.

* * * *

காந்தியடிகள் இறந்து விட்டதாகக் கூறினார்கள். ஆனால் இங்கு கலையுருவில் வாழ்வதைக் கண்டேன். அவருக்கு இறவாத நிலையளித்த தமிழ்க் கலை வாழ்க. ஓவியர்களின் புகழ் ஓங்குக.

கோபாலன்.

* * * *

தமிழா! தங்களது திருக்கரங்களால் தீட்டப்பட்ட திருவாட்டி வள்ளியம்மையின் சித்திரம் எல்லோர் மனதையும் கவர்கிறது.

சென்னை தரசு,
30—1—55 ராமனாதபுரம்.

* * * *

வண்ண ஓவியத்தை வர்ணிக்க வார்த்தைகளே கிடைக்கவில்லை. பார்ப்பவர்களை கண்ணீர் சிந்த வைக்க வேண்டுமென்றே தீட்டியதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. காந்திஜியின் கடைசி இரு படங்களும். நீங்களும் உமது கலைகளும் நின் கடல்போல் வாழ்ந்து காந்திஜியைப் போல் உலகத்திற்கு தொண்டு செய்யவேண்டும்.

திருக்கோயிலூர். ச. த. வேணுகோபாலன்.

சென்னை.
28—1—55.

மாண்டுவிட்ட காந்தியை மீண்டும் இப்பாரத நாட்டுக்கு தங்கள் அமரசித்திரத்தின் மூலம் கொண்டு வந்து விட்டீர்கள். பழந்தமிழன் பெருமையை பாரினிலே பறை சாற்றவிட்டீர்கள். காந்தியின் ஆவிபிரியும் சித்திரம் உள்ளத்தைத் தொட்டுவிட்டது. தங்களுக்கு எங்கள் நன்றி.

சீ. சேஷாத்திரி, குடந்தை.

* * * *

ஓவியத்தில் மட்டும் வல்லுனராக இருந்த பாலு சகோதரர்கள் தமிழன், தமிழன் சிறப்பையும், வீரத்தையும், பெருமையும் சித்திர வாயிலாக பரப்புவதிலும் விவேகமும் விஷயமும் மிக்கவர்களாக இருப்பதைக்கண்டு பாராட்டுகிறேன்.

சென்னை வே. பராங்குசம்,
30—1—55. திருவையார், தஞ்சை.

* * * *

சென்னை
24—1—55

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நடையும் நடைப் பழக்கம் நட்புந்தயையும் கொடையும் பிறவிக்குணம்!

சீரழிந்த தமிழ் சித்திரக்கலை இன்று இரவிவர்மா மறுபிறப்பின் உயிர் பெற்றிருக்கிறதென்றால் அது பாலு சகோதரர்கள்தான். வாழ்க தமிழ் கலை.

பா. அங்கமுத்து, மதுரை.

* * * *

தங்கள் பொருட்காட்சியில் ஒவ்வொரு படத்தையும் எவ்வாறு எடை போட்டு அபிப்பிராயம் தெரிவிப்பது என்று தான் தவித்துவிட்டேன். இந்த படங்கள் தமிழரின் உயர்ந்த பண்பை பிரதிபலிக்கச் செய்கிறது. இது போன்று நேருஜீயின் வாழ்க்கையும், மற்றும் ராஜாஜி முதலிய தலைவர்களின் வாழ்க்கையும் சித்தரித்து எழுதக் கோருகிறேன்.

சென்னை, ந. சாம்ராஜ், வி. நடராஜி,
25—1—55. சென்னை டெலிபோன் ஆபீஸ்.

காந்திஜீயின் சரித்திரம் முழுதும் கிராமங்கள் தோறும் பரவ வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் பாமர மக்கள் நன்மை அடைவார்கள்.

பி. முத்தையா,
செயலாளர், முதல் காங்கிரஸ் கமிட்டி,
தல்லாகுளம், மதுரை.

* * * *

நாங்கள் படமா பார்த்தோம்! இல்லை! உயிருள்ள நிகழ்ச்சியைக் கண்டோம். ஜீவன் ததும்பியது. பழைய நாகரீகத்தை கற்றுக் கொடுத்தது. வாழ்க பாலு சகோதரர்கள். பல்லாண்டு, பல நூற்றுண்டு.

பாரதியார் ஆரம்பபாடசாலை, கே. ஏ. முத்துசாமி,
பரமக்குடி. மானேஜர்.

* * * *

பாலு சகோதரர்களுக்கு பாராட்டு வேண்டியதில்லை. அதனால் இக் காந்தியார் கலைக் காட்சி—உத்தமர் காந்தியர் கலைக்காட்சி—உத்தமர் காந்தியாரை நம் கண்முன் கொண்டுவந்து காட்டுகிறது.

முத்துகுமார்,
சென்னை, பக்ஷிராஜா ஸ்டூடியோ,
26—1—55. கோவை.

* * * *

தங்கள் வண்ண ஓவியங்களை நான் மிகவும் போற்றுகிறேன்.

ஸ்ரீமதி இ. வனசுந்தரி.

* * * *

சென்னை,
26—1—55

"உயிரோவியம்" இச்சொல் உங்கள் ஓவியம் ஒன்றுக்குத்தான் உரிமை. உங்கள் அரிய சாதனைக்கு என் நன்றி.

S. Y. ஜக்கிரியா,
கோதபுரம்.

* * * *

பண்டை தமிழகத்து சரித்திரங்களை தத்ரூபமாக சித்தரிப்பதில் நீவீர் வல்லமையுடையவர்.

பெங்களூர்-3. அ. சபரிமுத்து.

Soviet Cultural Delegation's Exclusive visit to the Balu Bros' Gandhiji Gallery At the Congress Exhibition on 14–2–55.

பாலு சகோதரர்களின் காந்திஜி கண்காட்சிக்கு, ரஷ்ய கலாசார தூது கோஷ்டியார் பிரத்யேகமாக வருகை தந்து, கண்காட்சியிலுள்ள ஒவ்வொரு ஓவியங்களையும் பார்த்து விளக்கங்கேட்டு, வியப்புடன் பார்த்துப் பாராட்டினார்கள். குறள் விளக்க ஓவியங்களைப் பார்த்து உலகிலேயே எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு, எல்லா மதத்தினரும், எக்காலத்திலும் படித்துப் பயன்பெறவேண்டிய நாலுக்கு ஓவியங்கள் தீட்டியிருப்பது ஓவியக்கலையிலேயே புரட்சி என்றும், காந்திஜி வாழ்க்கைச் சித்திரங்களைப் பார்த்து, எவ்வளவோ புத்தகங்களைப் படித்தும் தெரிந்துகொள்ள முடியாததை, அரைமணி நேரத்தில் காந்திஜியின் வாழ்க்கையைத் தெரிந்து கொண்டதாகவும், தங்களின் இந்திய விஜயத்தில் மறக்கமுடியாத ஒரு ஓவியக்கண்காட்சியைப் பார்த்ததாகவும் பாராட்டி, 'ஸோவியத் காலண்டர்' என்ற அருமையான புத்தகத்திலேயே பாராட்டுதலை ரஷ்ய மொழியிலேயே எழுதிக்கொடுத்தனர்.

எமது புதிய வெளியீடுகள்

	ரூ.	அ.
உலக இலக்கியங்கள்		
நிலவளம் (நோபல் பரிசு—நார்வே நாவல்)	6	0
அன்னை (நோபல் பரிசு—இத்தாலி நாவல்)	3	12
1001 இரவுகள்—நான்காம் பாகம் (எஸ். எஸ். மாரிசாமி)	3	0
1001 இரவுகள்—ஐந்தாம் பாகம்	3	0
டெக்காமெரான்—முதல் பாகம் (இத்தாலி)	3	8
டெக்காமெரான்—இரண்டாம் பாகம்	3	8
அ. ச. ஞானசம்பந்தம், எம். ஏ.		
கம்பன் கலை—நாடும் மன்னனும்	1	8
அரசியர் மூவர்	1	8
தம்பியர் இருவர்	2	4
கல்கி ஆசிரியர் 'சோமு'		
கேளாத கானம்	2	0
மஞ்சள் ரோஜா	2	0
உதயகுமாரி	2	0
ந. சஞ்சீவி, எம். ஏ.		
மானங்காத்த மருதுபாண்டியர்	1	8
சங்ககாலச் சான்றோர்கள்	2	0
அறிஞர் அண்ணாதுரை		
ரங்கோன் ராதா (புதிய பதிப்பு)	2	8
ஓர் இரவு	1	4

	ரூ.	அ.
டாக்டர் மு. வரதராசன்		
கொங்குதேர் வாழ்க்கை	1	0
குறுந்தொகைச் செல்வம்	2	4
கி. ஆ. பெ. விசுவநாதம்		
தமிழ்ச் செல்வம்	2	0
திருச்சி விசுவநாதம் (வரலாறு)	1	4
கு. ராஜவேலு		
காந்த முள்	3	0
இளவேனில்	2	0
வள்ளல் பாரி	2	0
கே. ஜி. இராதாமணாளன்		
நீரோ	1	0
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை		
குழந்தைச் செல்வம்	0	12
குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா		
ஈசாப் கதைப் பாடல்கள்	1	0
பி. எஸ். ராமய்யா		
மலரும் மணமும்	5	0
"ராஜம்"		
புத்தர் ஜாதகக் கதைகள்	0	12
சிற்பி மாயன்	0	12
பௌத்த சமய நூல்		
தம்மபதம்—ப. ராமஸ்வாமி	1	4
ஜைன சமய நூல்		
நீலகேசி—கா. அப்பாத்துரை	1	8

பாரி நிலையம்

59, பிராட்வே :: சென்னை-1.

SRI C. SUBRAMANIAM,
Minister for Finance & Education

FORT ST. GEORGE,
MADRAS
January 13, 1955.

I have seen some of the paintings of Balu Bros. They are of topical of interest and of great artistic value. I understand they are opening an ART GALLERY during the Congress session I am sure, it will be an attractive feature for the visitors to the exhibition. I wish their effort every success.

(Sd.) C. Subramaniam

HON'BLE SRI J. SIVASHANMUGAM PILLAI, M.A.
Speaker,
Madras Legislative Assembly.

GOVT. ESTATE, MOUNT ROAD,
MADRAS-2.
Dated, 30-12-1954.

I have visited Gandhiji Exhibition and I am very much impressed by the Exhibits. It was of educative value to all.

(Sd.) J. Sivashanmugam Pillai

இம்மாதிரியான உயிரோவிய கலைக் காட்சியை பட்டி, தொட்டிகள் தோறும் உள்ள கிராமவாசிகள் காண நடமாடும் கலைக்காட்சிக்கு நீவிர் ஏற்பாடு செய்தால் மக்கள் பெரிதும் விரும்புவரென்பது திண்ணம்.

சென்னை, ராமமூர்த்தி.
26—1—55. திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி.

* * * *

464. திருவொற்றியூர் பெரியசாலை,

கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனுமில.

இதில்,

தலைவன்—பார்வையாளன்; தலைவி...(பாலு சகோதரர்) ஓவியம். இவர்களின் ஓவியம்.

காதில்—வள்ளுவரின் வார்த்தைகளை ஒலிக்கச் செய்கின்றது.

கண்ணில்—வள்ளுவரின் உருவத்தைக் காட்டுகிறது.
உள்ளத்தில்—வள்ளுவரின் வாயுரையை பதிக்கிறது.

சென்னை-21. இரா. சுகந்தன்.

* * * *

வடநாட்டில் இதுவரையிலும் மங்கிக்கிடந்த நமது உணர்ச்சிகளை பாலு சகோதரர்கள் ஓவியங்களின் மூலம் நமக்கு விளக்கிக் காட்டி பொது ஜனங்கள் அதைப்பார்த்து களிக்கும்படி வைத்திருப்பதற்கு எங்கள் நன்றி.

கே. வி. சாரதா,
சென்னை, கே. எஸ். ஜம்புநாதன்,
30—1—55. வி. ரேவதி.

* * * *

இன்று பாலு சகோதரர்களின் கைத்திறனை விளக்கும் கலைக் காட்சியைக் காணும் பேறு பெற்றேன். ஒவ்வொரு சித்திரமும் ஒரு உயிர் ஓவியமாகத் திகழ்கின்றது. கலைச் செல்வர் தம் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இப்படங்களின் மூலம் மிளிரும்படி செய்திருப்பதுடன் இதைக் கண்ணுறும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இவ்வுணர்ச்சிகள் பற்றிக்கொள்ளும்படி செய்ததைக் கண்டு மட்டிலா ஆனந்தமடைகிறேன்.

"சுதேசமித்திரன்," சா. நடேசன்,
7—2—55. உதவி ஆசிரியர்,

* * * *

அண்ணல் காந்தியார் சொன்ன "நான் இறந்து மறுபிறவியில் பிறந்தால் தமிழனுகப் பிறக்க ஆசைப்படுகிறேன்" என்ற சித்திரம் என்னை மிகவும் கவர்ந்தது.

சென்னை, என். ஜெயகௌரி.
30—1—55.

* * * *

சந்தேகமே இல்லை! பார்த்தால் பசி தீரும் பாலு சகோதரர்கள் அவர்களது தீட்டிய வர்ண ஓவியங்கள். நினைத்தால் என்றென்றும் உங்கள் புகழ் நீடூழி வாழுமாக.

விஜயவாடா. பாலு,
30—1—55. வெங்கடராமன்,

* * * *

இச்சித்திரங்களைக் காணும்போது நான் என்னை மறந்து அவைகளை உயிருள்ளவைகளாகவேக் கருதுகிறேன். இதை தீட்டிய பாலு சகோதரர்களை என்னால் பாராட்ட முடியாமல் இருக்கமுடியவில்லை. இவ் ஓவியங்களை பெற்ற நம் தமிழ் நாடு மிகவும் பாக்யம் பெற்றது.

பச்சையப்பன், கல்லூரி, சென்னை-30. குணசிங்,

* * * *

களிப்பூட்டும் விருந்துப் படையல்-கண்களுக்கு மட்டுமல்ல; கருத்துங்கூட. கலை வளர்க்கும் கருத்துடையோர் கலையோடு வாழட்டும் வளமெல்லாம் பெற்று.

சென்னை, அமுதன்

* * * *

கலைக்கு நீங்களும், உங்களுக்காகவே கலையும் பிறந்திருக்கிறது.

பொ. அளகேசன்,

* * * *

நாளே நல்ல நாள்! தமிழ் என்றால் தன்மை மிக்க அமுதம் எனச் சொல்லுவதைவிட தமிழ் என்றால் பெருமை, தமிழன் என்றால் கலையார்வம் கொண்டவன் எனக் காட்டி வண்ணத்தில் தீட்டிய கலைஞர்களே! நீவீரும் உமது ஓவியமும் பல்லாண்டு நீடு வாழ்க.

அமிஞ்சிகரை. B. S. நாராயணன்,
(S. Railways.)

Dr. K. S. KRISHNAN, F. R. S.
Director,
NATIONAL PHYSICAL LABORATORY OF INDIA

HILLSIDE ROAD,
NEW DELHI 12.
3rd July 1954.

Balu Brothers' pictorial representations of some of the typical Kural verses have earned wide appreciation and popularity, and have been almost a regular feature in cultural exhibitions arranged in connection with Tamil Conferences. What I personally appreciate is the manner in which they are able to project on the canvas the thoughts that the classic raises in the minds of the sympathetic and competent reader.

(Sd.) K. S. Krishnan

MAJOR GENERAL J. C. KATOCH,
General Officer, Commanding
Madras Area.

MADRAS-16.
Dated, 10th March 1955.

MESSAGE

I was very impressed when I saw the Art Gallery displaying pictures of Gandhiji, in the Congress Exhibition at Teynampet, Madras. The paintings depict Gandhiji's life from his early days, right upto his last moments.

Innumerable books have been written on Mahatma Gandhi and will continue to be written, but by seeing his life through the Art Gallery, leaves an ever lasting impression in one's mind; in this respect BALU BROS, the Artists have undoubtedly achieved their object. Each painting has more to it than merely depicting the various phases of Gandhiji's life; there is that inward feeling which has inspired the artists to undertake such a noble task. I must say that they have made a magnificent job of it.

(Sd.) J. C. Katoch

மறுப் பிறப்பினும் மக்களை மறக்காமல் மக்களை வந்து காணச் செய்யும்.

மா. சி. தேவராசன்,

1/66, பவழக்காரத் தெரு, சென்னை-1.

* * * *

நான் இங்கிருந்த கலையுணர்வைக் கண்டு மகிழ்கின்றேன். சங்கத்திலே ஈட்டி மார்பினிலே குத்தினுல் அதுதான் வீர மகனுக்கு அறிகுறி. அந்த நாட்டினை அடிமைப்படுத்தின ஆங்கில ஏகாதியத்துக்கு பக்தி காந்தி என்னும் ஈட்டி அதன் மார்பிலே குத்தியது. இந்தியா விடுதலை அடைந்தது. இன்று தமிழகத்தில் தமிழர் மனதில் இந்த ஓவியக் கலையுணர்ச்சியான ஈட்டி உண்மைத் தமிழனுக்கு கட்டாயம் குத்தி இருக்க வேண்டும். பலன்......வாழ்க கலைஞர்கள்.

சு. முருகேசன்,

பல்கலைக் கழகத் தமிழ் இடைநிலை வகுப்பு.

பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30.

* * * *

அன்புள்ள கலைஞர்களுக்கு நாங்கள் இதுவரை கண்ட ஓவியக் கண்காட்சியில், தங்களுடைய கண்காட்சி சாலையே மிகச் சிறந்தது என நாங்கள் கருதுகிறோம்.

சிந்தாதிரிப்பேட்டை, வ. கஜபதி,

சென்னை-2. 127. சாமி நாய்க்கன் தெரு,

* * * *

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வண்புகழ் கொண்ட தமிழ்நாடு."

அத் தமிழ் பெருந்தகையன் கருத்துக்களை ஓவியத்திலே வடித்து தமிழகத்துக்கு அளித்த பெருமை தங்களையே சாரும்.

7—2—55. விருதை ரா, நாராயணன்.

* * * *

தமிழ் நாட்டில் சிற்பமும் சித்திரமும் சிறந்து விளங்குவதை உலகுக்கு எடுத்துக் காட்டியது போற்றத் தக்கது. அண்ணலின் ஆவி நீங்கியபோது பாரதத்தாய் கண்ணீர்விட்டு தவப்புதல்வனுக்காக கதறும் காட்சி மக்களின் உள்ளத்தை உருகவைக்கக் கூடியது. அதை என்றும் மறக்க முடியாத நிலை.

6—2—55. ரா. ராஜலக்ஷ்மி,

சென்னை-17. 25. நாதமுனி தெரு,

அன்புடையீர் தங்களின் ஓவியக்கலை பழமையை நீக்கி புதுமையைப் புகுத்துகிறது. இத்தொண்டு நீடூழிவாழ இயற்கையை வேண்டுகிறேன்.

56. வரகனேரி நடுத்தெரு, க. மா. பாலகிருஷ்ணன்,

திருச்சி.

* * * *

தங்கள் கலைக் கண்காட்சியைக் கண்டேன். மகிழ்ச்சியுற்றேன். அதில் மூவரின் உருவத்தை ஒன்றிலேயே சமைத்து இதுவரை எவருமே செய்திராத கலையை செய்து சிறப்புற்றுள்ளீர். இதுவரை வட நாட்டவரே கலையில் சிறந்தவர் என்று பட்டம் கட்டிக் கொண்டுள்ள வடவரின் கொட்டத்தை அடக்க இது போல பல ஓவியங்களைச் சமைத்து தமிழ் நாட்டிற்கே பெருமை வாங்கித் தருவீர்கள் என நம்புகிறேன்.

ஸ்ரீ லெக்ஷ்மி விலாஸ் அச்சகம், எஸ். நித்யாநந்தம்,

தாராபுரம், கோவை.

* * * *

தங்கள் உயிரோவியங்கள் இன்று பழங்கால தமிழக ஓவியத் திறமையை வெளியிடுவனவைகளாக உள்ளன. இன்று உங்கள் ஓவியங்கள் தமிழ் நாட்டாரையே வியப்பில் ஆழ்த்துகிறது. நாளை இந்திய மக்களையே பரவசத்தில் ஆழ்த்தட்டும். நாளை மறுநாள், உலகத்தாரையே உயர் வியப்பில் ஆழ்த்தட்டும். உங்கள் ஓவியத்திறமையை உலகம் அறியும் நாள் நெடுந்தூரத்தில் இல்லை.

கிண்டி, சென்னை 15. ந. வி. அருணாசலம்,

* * * *

தங்களின் ஓவியங்களை கண்டுகளிக்க என் உள்ளம் மகிழ்ந்தது. தங்களின் திறமை மென்மேலும் பெருக வேண்டுகிறேன்.

நிலகிழார்-ஆத்தூர், மு. ஆறுமுகம்,

சேலம்.

* * * *

தேசப்பற்று இன்னதென்றறியாதார் உள்ளங்களில் உருக்கமான சம்பவங்களைப் பதிய வைத்து அவர்கள் உதிரங்களில் தேசபக்தி என்னும் "இன்ஜெக்ஷன்" செலுத்தி உயிர் ஊட்டுகிறது. பாலு சகோதரர்கள் இக்காந்திஜி சித்திரக் கண்காட்சி என மனதாரக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

30—1—55 டி. எப். ஆர். மஆலி சாஹிப்,

சென்னை. ஆசிரியர்,—"பாகவி."

M. A. CHIDAMBARAM
Mayor of Madras

RIPON BUILDINGS
MADRAS : *15-4-'55*

Messrs. Balu Bros., the great painters, have done yeomen service for India by depicting in a striking manner the full life history of Mahatma Gandhi in pictures which I had the opportunity of seeing in the recent Exhibition at Teynampet Grounds organised by the All-India Congress Committee. These paintings are exquisite specimens of art and serve the great purpose of keeping alive the memory of the Father of the Nation and his epic life, for generations of Indians. I congratulate Balu Brothers on their initiative and patriotism and wish them all success.

(Sd.) M. A. Chidambaram.

The 19th World Table Tennis Championships

CONDUCTED BY
TABLE TENNIS FEDERATION OF INDIA
BRABOURNE STADIUM, BOMBAY 1, INDIA

PATRON IN CHIEF:
DR. RAJENDRA PRASAD,
PRESIDENT OF INDIA.

5th April 1952.

Messrs. BALU BROTHERS,
Artists,
2, Thayar Sahib Street, MADRAS-2.

Dear Sirs,

Please accept our immense thanks for your very kind contribution of the various art works for the 19th World Table Tennis Championships.

Your poster design, the venue sketch and particularly the cover design for the Official Souvenir have all received praise and plaudits from all T. T. lovers in this country **and abroad.**

To serve Sport is a pleasure and Indian table tennis will ever be grateful to you for your very kind patronage.

With grateful thanks,

Yours very truly,

(Sd.) T. D. Ranga Ramanujam,
SECRETARY.

(Sd.) A. S. De Mello,
PRESIDENT.

"தோள் கண்டார் தோளே கண்டார்" என்று இராமனைப் பற்றி கூறினர் கம்பர். அது பொய்த்தது. பாலு சகோதரரின் ஓவியக் கலைக் கண்காட்சியை கண்டார் அதனையே கண்டு தன்னையே மறந்து நிற்கின்றனர்.

6—2—55 K. ராமசாமி, B.A.
சென்னை-21. 17. V. P. கோயில் தெரு,

* * * *

உங்கள் கலைக் காட்சியைக் கண்டதும் "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செயல் வேண்டும்" என்ற பாரதியின் கனவை நினைவாக்குபவர்களில் தாங்களும் ஒருவர் என நினைத்து மகிழ்கின்றேன். உங்கள் முயற்சிக்கு வள்ளுவன் வாழ்த்து கூறுவன், தமிழ்த்தாய் உதவி செய்வாள்.

30—1—55 அ. சானகிராமன்.

* * * *

தில்லையாடி வள்ளியம்மையை மறக்கமுடியாத காட்சியாக எழுதிய பாலு சகோதரர்களுக்கு என்றென்றும் தில்லையாடி வாசிகள் கடமை பட்டவர்கள்.

30—1—55 ந. சன்முகம்,
தில்லையாடி.

* * * *

ஊமைத்துரையின் படங்கள் மிகவும் சிறப்பாக இருக்கிறது.

ஹபிபுல்லா ரோட், மீரா,
சென்னை-17. பாலபாரத்,

* * * *

நான் கண்காட்சியை நோக்கியதில் இதைப் போல் வேறு கண்காட்சியை கண்டதில்லை என்று கூறுவதில் சந்தேகமில்லை.

30—1—55 T. இரயபெருமாள்,

* * * *

இந் நாட்டில் சித்திரத்தில், ஏன், உலகத்திலேயே தலைசிறந்த சித்திரம் (பாலு சகோதரர்கள்தான்). காந்தி ஆவிபிரிந்த படத்தை பார்க்கும் போது என் உள்ளம் விம்மி கொதிப்படைகிறது. ஏன் என்றால், உண்மையாகவே காந்தியார் படுத்திருப்பது போலவே இருக்கிறது. அதை பார்த்து நான் சில நிமிடம் கண்ணீர் விடவும் நேர்ந்தது. மிகவும் பிரமாதமாக எழுதிய பாலு சகோதரர்களுக்கு என் நன்றி.

சிந்தாதிரிபேட்டை, ஜி. சிவராமன்,
சென்னை-2 காரியதரிசி, காந்தி சேவா சங்கம்,

இங்குள்ள ஓவியங்களை காணும்போது நமக்குள் பல நாட்களாக மங்கிக்கிடந்த உணர்ச்சிகளை தூண்டுகின்றது. இது ஒரு காணக்கிடைக்காத கலை பொக்கிஷம்.

சென்னை-4 K. S. சரோஜா,
34, அபிராமபுரம்,

* * * *

இதுகாறும் இல்லாத பெருமை இவ்வாண்டு கண்காட்சிசாலைக் குண்டென்றால் அது இவ் ஓவியக் கண்காட்சி சாலையாலே ஆகும். பல சம்பவங்களையும், தலைவர்களையும் எல்லோரும் நேரில் பார்ப்பது போல இருக்கின்றது. தமிழர்களின் பண்பாட்டையும் வீரத்தையும் வரைந்திருப்பதும், தமிழுக்கு முதலிடம் கொடுத்திருப்பதும் தாங்கள் தமிழகத்திற்கு செய்த தொண்டாகும்.

ஈரோடு. கா. கா. அஜெய்னுல்லாபிதின்.
6—1—55 பெரிய அக்கிராரம்,

* * * *

இந்த உயிரோவியங்கள் அனைத்தும் ஒப்பற்றவை. இத்தகைய முயற்சிகளை வெளி நாடுகளுக்கு எடுத்துச் சென்று தமிழின் பெருமையையும், தமிழனின் புகழையும் பரப்ப ஆவன செய்ய வேண்டும்.

சென்னை. S. வேலு;
30—1—55 சட்டக் கல்லூரி,

* * * *

அண்ணல் காந்திஜியின் உற்பத்தி முதல் அன்னார் ஆவி துறந்த வரையில் நடைமுறையில் ஓவியமாகத் தீட்டி கண்டோர் களிக்க ஏற்படுத்தியதைப் பற்றி மகிழ்ச்சியுற்றேன். பண்டைத் தமிழரின் வீரத்தைப் பற்றி வரைந்துள்ள ஓவியங்களும் போற்றத்தக்கதே.

வி. எஸ். வி. அய்யர்,

* * * *

உங்கள் கண்காட்சியில் உள்ள குறள் காட்சிகளை கண்டோம். ஆனால் ஒரே ஒரு குறையைக் கண்டோம். குறளில் முக்கியமாக உள்ள "தெய்வம் தொழா அள் கொழுநற்றொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்ற குறளுக்கு சித்திரம் வரையவில்லை. அக் குறளுக்கும் சிறந்த சித்திரம் ஒன்றை எழுதும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சைதாப்பேட்டை. எம். நரசிம்மன்,
ஆர் முனுசாமி,

30—1—48 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் தேசபிதாவை எங்களுக்கு திருப்பி அளித்த (உருவப் படத்தின் மூலம்) உங்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

த. பெ. 14. சென்னை-1. T. A. கைலாசம்,

* * * *

என்றுமே கண்டிராத சிறப்பு மிக்க வாழ்க்கையை இதுகாறும் சித்திரம் என்பதையும் மறந்து அனுபவித்தேன். சித்திரத்தின் மூலம் வெளியுலகை மறக்க வழிகாட்டியுள்ளனர்.

30—1-55. பி. சேதுராமன்,

* * * *

30—1—55 அன்று என் வாழ்க்கையிலேயே ஒரு பொன்னாள். காந்திஜி கண்காட்சிக்கு சென்றேன். அண்ணல் அமரத்வம் அடைந்த இடத்திற்கே போய் அவரிடம் ஐக்யம் ஆகிவிட்டேனே என ஐயுற்றேன்; மெய்மறந்தேன். மகான் காந்திஜி நம் கண்முன்னே தோன்றித் தோன்றி மறைவது போல இருக்கின்றன ஓவியர்களின் திறமையால். சாலையில் நுழைந்த உடனேயே அண்ணலுக்கு ஜாதி வேற்றுமை கிடையாது என்பதை ஒரு அருமையான சித்திரத்தின் மூலம் காண்கிறோம். அண்ணலின் பூத உடலை இந்தியத்தாய் தன் மடியில் வைத்து கண்ணீர் விடும் காட்சி நம்மையே ஒரு உலுக்கு உலுக்கி விம்மச் செய்கிறது. இச் சகோதரர்களின் திறமை சாதாரணமானதல்ல. சாதிக்க முடியாததை சாதித்த ஓர் அரிய ஓவிய வீரரென்முல் மிகையாகாது. இச் சீரிய சகோதரர்களின் ஓவியம் மாத்திரமே அன்றி புகழும் உயர வல்லவனை வணங்குகிறேன்.

சென்னை-5. கோ. அ. சிவராம், பி. ஏ.
7, வெங்கடேச நாய்க்கன் தெரு,

* * * *

இவ் வருடத்திய கண்காட்சியில் மிகவும் பாராட்டி குறிப்பிடத்தக்க சமூகம் தங்களுடைய ஓவிய பகுதியே. நம் நாட்டின் பல முக்ய நிகழ்ச்சிகளை சித்திர உருவத்தில் பார்க்கும்போது மெய் சிலிர்த்து விடுகிறது. தங்கள் கைவண்ணத்திற்கு இதைவிட சிறந்த அத்தாட்சி வேறு என்ன வேண்டும். கண்களுக்கு மட்டும் அல்ல, கருத்துக்கும் கொண்டாட்டம்தான். மிகமிகப் பொருத்தமான விளக்க அம்சங்கள் தங்கள் அறிவுத் திறமையை எடுத்துக் காட்டுகிறது. வாழ்க நீவிர்.

செகந்திராபாத். ஜடாதரன்,

* * * *

காட்சியைப் பார்த்து மெய் மறந்தேன். உள்ளம் உருக்கும் காட்சி பல நிறம்பியவை.

பர்மா. எஸ். லக்ஷ்மணன்.

கம்ப ராமாயணத்தின் காவிய ஏட்டைக்காணும் போதெல்லாம் களிப்பாகிய மது, மடையை உடைத்து வழிந்து ஓடிவரும் பசிமையான நீரைப் போல் வழிந்து கம்பனின் கடவுட்காட்சி என்ற காவியத்தின் ஓவியம் நம் முன்னே நிற்கின்றன. ஈராயிரம் ஆண்டின் முன்வரைந்த வள்ளுவனின் வார்த்தையை வன்மையாகிய உண்மையால் அன்பால் பாரெல்லாம் பளிங்கடைய நடைமுறையில் நாட்டம் செலுத்திய காந்தி என்ற சாந்தியின் திரு உருவம் கண்முன்னே காட்சி அளிக்குமாறு சீரிய ஊரிய கருவியால் சித்தரித்த சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணியின் காட்சிகளெல்லாம் காணப்படும் வகையில் ஓவியம் வரைந்த தங்களைத் தமிழ்த்தாய் பல்லாண்டு வாழ்த்துவாளாக.

132, பெரிய தெரு, சென்னை-5. வெ. இரா.

* * * *

பேசாத இயற்கை, வானத்திலும் வண்ண மலரிலும் அழகுரத் தெளிக்கிறது. பேசும் மனிதன், ஏடுகளில், படுதாக்களில் வண்ணங்களைக் கொட்டிகாட்டுகிறன். இந்தக் கலையில் சந்தேகம் கலக்காத திறமை பெற்ற பாலு சகோதரர்கள்.

பகலவன் ஒன்போல் பரந்த புகழொடு
மேனிலையோடு மென்மை யுற்று
பன்னாள் நீடு வாழ்க—பாலுவே நீவிர்.

சென்னை-4. "பாலு நாசன்,"

* * * *

இந்திய நாட்டின் ஒரே தலைவரின் சிறந்த ஒப்பற்ற வாழ்க்கையைத் தாங்கள் இப்படி ஓவியம் தீட்டி இருப்பது போற்றுதற்குரியது. ஆனல் இந்நாட்டில் "ஆஸ்தான புலவர்கள்" என்று அரசாங்கத்தில் ஓர் இடம் இருப்பதுபோல "மாநில ஓவிய விற்பன்னர்" என்ற ஒரு பதவியை உங்களுக்கு கொடுத்துச் சிறப்பிக்கும் நாளெனென் நாளோ!

மதுரை. 30—1—55. "ஓவிய பித்தன்"

* * * *

உங்கள் கலை கூடத்தில் பல அரசியலில் மாறுபட்டவர்களுடைய ஓவியங்களும் அவர்களுடைய பொன்மொழிகளையும் நான் ஒரே இடத்தில் இதுவரை சேர்ந்து பார்த்ததில்லை. இது ஒரு புதிய அரிய சாதனை. உங்கள் சேவைக்கு பாராட்டுகிறேன்.

2282, மனோஜப்பா தெரு, டி. வி. ராஜி,
தஞ்சை.

* * * *

கண்ணுக்கும் கருத்துக்கும்
ஒரு அரும்பெரும் விருந்து.

திருச்சி. ராஜலக்ஷிமி பாரதி.

அண்ணல் காந்தியின் பிறப்பு முதல் இறப்பு வரை ஒருங்கே வரைந்து, சென்னைமா நிலத்தில் நடந்தேறிய கலைக் கண்காட்சி பகுதியில், தென்னாட்டு மக்களுக்கு ஒரு நல்ல காட்சியையும், அக்காட்சியின் மூலம், பல நல்ல கருத்துக்களையும், அக்கருத்துக்களை தமிழரின் ஒப்பற்ற திருக்குறள் மூலம் எடுத்துக்காட்டி மகிழ்ச்சியூட்டி இருக்கிறீர்கள். கலைக்கு முதல் முதல் பெயரெடுத்த இத்தென்னாட்டின் புகழை இன்னும் மங்காத நிலையில் இருப்பதற்கு காரணம் தங்களைப் போன்ற ஓவிய நிபுணர்களால்தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணல் காந்தியாரின் பொன் மொழிகளையும், அதன் மூலம் மறைந்துள்ள கருத்துக்களையும், நினைக்கும் தோறும் உள்ளம் உவகை யெய்துகிறது, தென்னாட்டின் தனிப்பெரும் கலைவாணர்கள் என்றாலும் மிகையாகாது. அண்ணலின் படங்களுடன் தென்னாட்டின் தலைவர்களையும் படங்கள் மூலம் கலைக் கூடத்தில் அமைத்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியுற்று நன்றி செலுத்துகிறேன்.

செங்குன்றம், சி. சண்முகசுந்தரம்.

* * * *

தங்கள் ஓவியங்களைக் கண்டதிலிருந்து தங்கள் நாட்டுக்குச் செய்த பெருந்தியாகத்தை சரித்திரத்தில் முக்யத்வம் பெற இறைவனை பிரார்த்திக்கிறேன்.

44, எஸ். ஜி. ரோட், கே. எஸ். தண்டபாணி,
சென்னை-4.

* * * *

உங்கள் ஓவியங்களைக்கண்டு மெய்மறந்து விட்டேன். காந்திஜியின் வண்ண ஓவியங்களை பார்க்கும் போது என்னை இந்த நாட்களிலிருந்து பிரித்துவிட்டது. தங்களையும் தங்கள் தீட்டிய ஓவியத்தையும் எவ்வாறு பாராட்டுவது என்பது எனக்கு தெரியவில்லை.

கரூர், டி. ஜி. வெங்கடராமன்.

* * * *

ஒவ்வொரு சித்திரமும் ஒவ்வொரு காவ்யம் பேசுகிறது.

விஜயபுரம். மா. வரதராசன்,

* * * *

நான் இதுவரை பார்க்காத காட்சியை அரக்கோணத்திலிருந்து வந்து பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன்.

அரக்கோணம் ஜி. குப்புசாமி

தமிழகத்தில் தலைசிறந்து விளங்கும் சித்திரக்கலை ஒன்று உண்டென்றால் அது பாலு சகோதரர்களைத் தான் குறிக்கும். வேற்றுமையே காணாத சகோதரர்களின் வாழ்வும், கலையும் வளர இறைவன் அருள வேண்டும்.

சைதை. வி. கைலாசநாதன்,

* * * *

தமிழ் மக்களின் தனிப்பெரும் சிறப்பை உலகறியக் காட்டும் உங்களது சிற்பக் கலை என்றென்றும் கலங்கரை விளக்குபோல் திகழ பிரார்த்திக்கின்றோம்..

(முகாம்) சென்னை. பீர்முகமது, ஸ்ரீரங்கம்
2—2—55. ஜெயராம், பொன்மலை.

* * * *

உள்ளத்தை உருக்கும் உன்னத சித்திரங்கள் எங்கள் மனதில் அழியாத இடம் பெற்றுவிட்டன. உங்கள் சலியாத உழைப்புக்கும், திறமைக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

பூதலூர், P. B. வத்சலா,
தஞ்சை ஜில்லா. P. B. ஜானகி.

* * * *

நாட்டிலே நயவஞ்சகர்கள் மலிந்து நடமாடும் நேரத்திலே நல்லவர்களை நினைக்க இச்சமுதாயம் வருவதில்லை. இருப்பினும் நும் கலையின் திறமையால் அவர்களை இன்பமடையச் செய்யும் நின் பணியே பணி.

கோவை. அ. அழகிரிசாமி, பி. ஏ.

* * * *

உயிர் மாத்திரம் கொடுத்திருந்தால் பேசியும் பார்க்கலாம். வேறு குறை இல்லை.

நாமக்கல். ஆர். நாகராஜன்

* * * *

இக்கலைக் கண்காட்சியைக் கண்டேன். இந்தியாவிலேயே மிகச் சிறந்த கண்காட்சிகளுள் தலைமை இடத்தை உடையது இக்காட்சி.

5—2—55. மு. இளங்கோ,
சைதாபேட்டை. தலைவர், நெல்லையப்பா நூல்நிலையம்.

* * * *

ஓவியக்கலையே உலகப் பொதுமொழி என்பதை நிலைநாட்ட வந்துள்ளவர்களே உங்கள் கலை வாழ்க!

தமிழ்நாடு. அ. பொ. ஆடலரசு

JAFFNA

THE ART GALLERY :—No lover of art in Jaffna would have missed this rare treat. Almost the entire visitors were impressed by the miracles that one can perform with a brush on canvas. It was very generous on the part of the authorities to have invited school children at concession rates to this art gallery, the like of which has never before been seen in Jaffna. The FALLACIOUS MISCONCEPTION THAT BALU BROTHERS ARE MERE COMMERCIAL ARTISTS WAS DISPROVED. ART IS THEIR LIFE, NOT A LIVING.

—A page from my Book of pleasant Memories.
(A review of the Mahajana Carnival).
By DEVAN, JAFFNA.

கண்யமாக கலைத் தொண்டு செய்யும் நீவிர் இருவருக்கும் கலைஞனாகிய நான் நல்வாழ்த்து கூறுகிறேன்.

ஆரணி —M. குப்புசாமி

* * * *

வார்த்தைகள் வரவில்லை. உள்ளம் உருகுகின்றது. மறைந்துகிடந்த உணர்ச்சி வீரமும்—மடங்காகப் பெருகின்றன. தமிழினத்திற்கு நீங்கள் செய்யும் தொண்டிற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரியட்டும்.

பல்கலைக் கழகம் —எ. சு. காசிவிசுவநாதன்

* * * *

தங்கள் ஓவியங்களில் உயிர் துள்ளுவதைக் கண்டேன். அண்ணல் காந்தியின் பொக்கை வாய்ச் சிரிப்பும், கவிக்குயில் சரோஜினியம்மையின் நோக்கும் தொலைவிலிருந்தும் நெருங்கி நின்றும் பார்த்தால் உயிரோடு நம்முடன் நின்று உரையாடுவதைக் கண்டு கண்ணீர் மல்க மயிர்க் கூச்செறிய மெய்மறந்து நின்றோம்.

—பண்டித. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை, M. A.,
'குறள் குடில்' சென்னை—6

பழரசத்திற்கு சுவையுண்டு—ஆனால் பருகப் பருகத் தெவிட்டிவிடும். ஓவியம் அப்படிப்பட்டதல்லவே! அந்த அருங்கலை தெவிட்டா விருந்து. உங்கள் ஓவியம் பெரிதும் பாராட்டுதற்குரியது.

காளாஸ்திரி —கி. ராமகிருஷ்ணன்

* * * *

The art of painting, as exhibited in the Gandhiji's Gallery is excellent and the display of such paintings provides a most impressive and clear idea about the life of that great man, who laid foundation of a new philosophy of life and brought about a revolution in the system of society. During my recent visit to Soviet Union, I came across a Lenin Museum there in which the life of that great man was depicted completely, right from his very childhood upto the time he was snatched away by the cruel hand of the death. This Gandhiji Gallery is quite rich and the idea is praiseworthy.

GURUMUKA SINGH, M.P.,
President, Punjab Pradesh Congress
Member, Working Committee, A.P.C.C.

Superb and Excellent. Gandhiji's life sketch as depicted by you is really inspiring, emotional and worthy to be preserved for generations to come.

V. L. NARASU,
Coffee King and Prop Narasu Studios,
Madras.

மகாத்மா காந்திஜியின் வாழ்க்கையை மக்களுக்கு சித்திரத்தின் மூலம் நேரிலேயே பார்ப்பதுபோல் செய்து இருக்கிறீர்கள்.

—G. வெங்கடராமன்
சித்தரன்ஜன் ரயில்வே தொழிற்சாலை

* * * *

இச்சித்திரக் கண்காட்சியை பார்த்தவர்களுக்கு தேசபக்தியும், காந்தியமும், சாந்தமான வாழ்க்கைப் போக்கும் கட்டாயம் கிட்டுமென நம்புகிறேன்.

—ஸ. நாராயணன், தாதர்-பாம்பே.

பல நாட்களாக தங்களது ஓவியங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையை இன்று தீர்த்துக் கொண்டேன். ஆசிய ஜோதி எனப் புகழ்ப்பெற்ற பண்டித ஜவஹர்லால் நேருவின் பொன் மொழி என் மனதைக் கவர்ந்தது. உங்கள் படம் தமிழ் குலத்திற்கு ஒரு புகழைத்தரும் என்பதில் ஐயமில்லை.

நாகர்கோயில் —M. காந்தி

* * * *

The name of Balu Bros. is well known in the South. I had the privilege to see their work in the Gandhi Gallery at Congress Exhibition. I cannot express in words the beautiful art depicted in the pictures of our "FATHER." One can easily pass hours together to appreciate such beautiful work.

Officer-in-Charge,
Madhya Bharat Govt. Cottage
Industries Stall.

* * * *

My appreciation and admiration of this Art Gallery is immemorable. I can say without exaggeration that this is the most educative and patriotic section in the whole of this exhibition. I wish this be made a permanent addition to the Art Museum at Egmore.

Madras-5. S. S. RAJAGOPALAN.

* * * *

ஒப்பற்ற தங்கள் உயிரோவியங்கள் என் உயிருள்ளளவும் உள்ளத்தினின்றும் மறையா காந்தியடிகளின் புகழும், வள்ளுவன் புகழும், உலகில் உள்ளவரைத் தங்கள் புகழும் நின்று நிலவும். தமிழகத்தின் புகழ் தங்களால் இன்னும் மேன்மையுறுகிறது.

உயர்நிலைப் பள்ளி,
மேல மாம்பலம். --வே. புகழேந்தி

* * * *

பாலு சகோதரர்களின்-சித்திரக் கலைக் காட்சியைக் கண்டோம். ஒவ்வொரு சித்திரமும் ஒவ்வொரு நுண்ணியக் கலை உணர்ச்சியின் இமயம்! பேசாத அச்சித்திரங்கள் கண் வழியாகப் பதிந்து—கருத்தைக் கவர்ந்து விடுகின்றன—தமிழர் கலைச் சிறப்புக்கு இதைவிட எடுத்துக் காட்டு வேறு என்ன வேண்டும்!

—கவிஞர் கம்பதாசன்

We were really amazed at the wonderful exhibition of art in the stall allotted to it. Our country has been noted for the highest talent in this direction, and it is refreshing to note that it has been kept alive in youth of the inspiration of the Western culture for a long period.

N. SUNDARAMIER,
Principal, Vivekananda College, Madras.
A. K. RAMACHANDRA IYER,
Judge, City Civil Court, Madras.

* * * *

பண்டை காலந்தொட்டு எல்லாவகையிலும் முன்னேற்றமடைந்த நம் நாடு இன்னும் தங்கள் ஓவியக் கலையால் உலகிற்கே ஓர் எடுத்துக் காட்டாகும்.

போளூர் —தி. மு. க. தோழர்கள்

* * * *

நீங்கள் தமிழ் நாட்டுக்கு அளிக்கப்பட்ட இரத்தினங்கள். இறந்துபோன கலையை புதுப்பிக்க எழுந்துள்ள அவர்களால் நம் தமிழ் நாட்டின் புகழ் இமயம் வரை இனிமையாக வெகுவிரைவில் பரவும் என்பதில் ஐயமில்லை.

—N. B. பாபு
சென்னை. பச்சையப்பன் கல்லூரி

* * * *

It is with pleasure I have to state that I had an opportunity to visit this rare Exhibition. It will be an exaggeration if I were to say that the Exhibition was really a very grand and most attractive one. Especially the painting by M|s. Balu Bros. of the dead body in the hands of Bharata Matha was very realistic and it has moved me so much. I wish Balu Bros. all success.

R. VENKATESAN,
Regional Conciliation Officer,
Ministry of Labour, Govt. of India.

* * *

தாங்கள் அண்ணாவுக்காக இத்தனை உதவி செய்தமைக்கும், பொய்யா மொழிப் புலவரின் பொன்மொழிகளை எழுதினமைக்கும் அண்ணாவின் பொன்மொழிகளையும் இத்தகு பெரிய இடத்தில் வரைந்து காண்பித்தமைக்கும் தங்களை வாழ்த்த தமிழ் நாட்டின் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

—E. R. நெடுஞ்செழியன்

Deeply impressed by the very fine art. Complete set need be preserved.

ROHANLAL CHATURVEDI, M.P.
Utter Pradesh.

* * * *

I must congratulate the organisation for having collected the most wonderful and realistic pictures of Gandhiji's life.

T. K. SUBRAMANIA IYER,
Judge, City Civil Court, Madras.

* * * *

இன்று எம் பள்ளி மாணவர்கள் 37-ம் 10 ஆசிரியர்களுடனும் தங்களது கலைக் கண்காட்சியை பார்வையிட்டோம். நாட்டிற்கு நல்லது பயப்பதான இக் கலை மிக மிக உயர்ந்தது.

—பி. சரவணன்
தலைமை ஆசிரியன்

* * * *

இக் கண்காட்சி கண்ணிற்கு மட்டுமல்ல உள்ளத்திற்கும் ஒரு நல்விருந்து ; சுருங்கக் கூறின் பாலு சகோதரர்கள் வாழும்வரை தமிழகத்தில் ஓவியக் கலை வாழும்.

—இருதய நாதன்

* * * *

கடலின் ஆழத்தையும் அளக்கலாம். உயரமான அலையின் ஆழத்தையும் அளக்கலாம். ஆனால் உங்கள் ஓவியத்தின் சிறப்பை அளக்க சாதாரண மனிதனால் முடியாது.

College Student —S. Susila

* * * *

காந்தி சரித்திரத்தைப் புத்தக வடிவில் படிப்பதைவிட கண்களால் பார்த்து ஒவ்வொரு தமிழனும் உயர்ந்தவனாக வாழ வழி வகுத்திருக்கிறார்கள், பாலு சகோதரர்கள். அவர்களுக்கு ஒவ்வொரு இந்தியனும் கடமைப்பட்டவன்.

—N. சுப்ரமணியம்

* * * *

ஒரு மணி நேரத்தில் மறைந்த மகானின் வாழ்வோடு நானும் இருந்திருக்கின்ற மாதிரி என் உள்ளத்தில் உணர்வு இருந்தது. நீங்காத நிகழ்ச்சியாக அழியாத ஓவியமாக புதிய தோர் "எல்லோரா"வை பாலு சகோதர்கள் அளித்திருக்கிறார்கள்.

—கலைதாசன்

எக்ஸிபிஷன் உள்ளே வந்தேன் 4 அணா கொடுத்து நான் ஒன்றும் காணவில்லை. சைனாபஜார்போல்தான் காட்சி அளித்தது. ஆனால் தங்கள் ஓவிய கண்காட்சி என் உள்ளத்தைக் கவர்ந்தது. உங்கள் ஓவியக் கலை வாழ்க.

—P. V. வேங்கடேசன்

* * * *

I was very interested to visit this Gallery of various pictures of Mahatmaji at different stages of his life.

AMMU SWAMINATHAN, *M.P.*

* * * *

It is a great pleasure and treat to see the paintings. It is very good educative value.

Dr. U. L. NARAYANA RAU.

* * * *

காணமுடியாத சித்திரக்கலை இவ்வளவு ஆற்றலுடன் எல்லோரையும் மகிழ்ச்சி புரியும்படி செய்ததற்கு மன்னார்குடியின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

Mannargudi —B. R. Picha Pillai

* * * *

இம்முறை மற்றொரு அரிய சேவையை செய்துவிட்டீர்கள். நான் பொறாமை படுகிறேன். தங்களது சித்திரங்கள் தமிழனின் தன்மானத்தையும், வீரத்தையும் தேசப் பற்றையும், தமிழ்ப் பெண்ணின் கற்பு நெறியையும், கட்டபொம்மனின் வீரம் மிகுந்த செய்கைகளையும், தமிழ்க் காவிய நிகழ்ச்சிகளையும், மகாத்மா காந்தியின் சரித்திரத்தைத் தத்ரூபமாகக் காட்டும் சித்திரங்கள் மக்கள் உள்ளங்களில் ஒரு தீயை மூட்டிவிட்டன. எந்தக் குறிப்பிட்ட படமும் மற்றொன்றைவிட நன்றாக இல்லை. எல்லாம் கற்கண்டின் பல் வேறு பாகங்கள்.

—ம. ரெ. ராமச்சந்திரன்

* * * *

" கவிபாடி பெருமைச் செய்யக் கம்பனில்லை
கற்பனைக் கிங்கில்லை யந்தக் காளிதாசன் "

உள்ளத்தை உருக்கும் உன்னதச் சித்திரங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கும் உத்தமர்களை உயர்த்திப் பெருமை செய்யத் தமிழ் நாட்டில் தற்சமயம் "கல்கி"யுமில்லை. இக் கலை இன்னும் இமயத்தைவிட உயர இறைவன் அருள் புரிவாராக.

—ம. ர. கண்ணன்

The Government of India should take steps to exhibit this interesting Exhibition throughout the length and breadth of our nation. Jai Hind.

V. SANKARALINGAM, New Delhi.

*   *   *   *

கூடிய சீக்கிரத்தில் நமது தோழர்கள் ஓவியக் கலையை இந்திய சர்க்கார் உலக அரங்கில் கொண்டு போய் காட்டும்படியான நிலைமை ஏற்பட்டுவிடும் என்று எனது தாழ்மையான ஆசியை தெரிவித்துக் கொள்கிறேன்.

—இரா. க. அறிவாளன்

*   *   *   *

I was overjoyed to see this Exhibition.

KAMESWAR Pd. TINANI,
Muzaffarpur, Bihar.

*   *   *   *

If Gandhiji's name finds an honoured place in the history of Resurgent and National India, the name of "Balu Bros." will find a equally honoured place in the cultural history of India as the National Artists!

V. S. A. SWAMY.

*   *   *   *

கலையின் கரைகாண மக்களை கரையேற்றிய கலையின் உருவே! கல்வியற்ற மக்களை கலையின் மூலம் கரையேற்றுக.

அதிராம் பட்டிணம்   —D. N. Sami

*   *   *   *

பொன் மலர் மணக்கிறது!
உங்களைப் பெற்றெடுத்ததிலே
தமிழகம் பெருமை கொள்கிறது!
உங்களை ஈன்ற தமிழகத்தில்
பிறந்தமைக்கு—நான்
பெருமை யடைகிறேன்.   —ஆ. குருசுவாமி

137, மலிபான் வீதி, கொழும்பு—11

*   *   *   *

பழந்தமிழ் சரித்திரத்தை வர்ணப் படங்களாக நான் காண விழைகிறேன்.

—இரா. வெங்கடகிருஷ்ணன்

தேனும்பேட்டை பொருட் காட்சி போகவேண்டுமா? ஆமாம் கண்டிப்பாக போயே தீரவேண்டும். இல்லையெனில் கிட்டற்கரிய பெரும் வாய்ப்பாகிய பாலு சகோதரர்களின் ஓவியக் கண்காட்சியை இழந்துவிட்டவர்களாவோம்.

தினத் தந்தி, சென்னை-4.   —நா. ரா. இளமுருவல்

*   *   *   *

Balu Bros. means Art and Art means Balu Bros.

Hyderabad.   V. G. VENUGOPAL.

*   *   *

A Single Mouth is not enough to utter the beauty of your Arts.

N. DURAIRAJ.

*   *   *

Fine pieces of Art of such a divine soul. To be preserved for generations to come.

A. N. SRINIVASA RAO.

*   *   *

The paintings are good. They make us remember the ideals for which Gandhiji devoted his entire life. The painting which shows Buddha, Gandhiji and Christ requires special mention.

R. S. SUBRAHMANIAM,
Madras,   Sixth Presidency Magistrate.

*   *   *

தங்களுடை "கண்ணீரைத் துடைத்து கடமையைச் செய்வோம்" என்ற வார்த்தை நிஜமாகவே கண்ணீரைத் துடைத்துதான் இதை எழுதுகிறேன்.

திருச்சி.   —M. U. L. நரசிம்ஹம்
Prop. சூர்யா டைமண்ட்ஸ்

*   *   *

ஒருமுறை வந்தேன். சலிக்கவில்லை; இருமுறை வந்தேன். சலிக்கவில்லை; மும்முறை சுற்றிப் பார்த்தேன். இன்னும் உமது சித்திரங்களை விட்டகல மனம் ஒப்பவில்லை. கடைசி முறைவந்தேன், காந்திஜியின் ஆவி பிரிந்த உடலை பார்த்தபோது கண்களில் நீர் முட்டிற்று. துடைத்துக்கொண்டேன், இனி நாம் செய்யவேண்டிய கடமைக்காக!

—வே. ந. கோபால்,
செக்கந்திராபாத்.

I had the opportunity of visiting this Art Exhibition and I don't find adequate words to express my feelings. "More things are brought by prayer than He would dreams off." Like these my only sincere prayer is that Almighty should show His Blessings upon the Brothers. I wish them more success in the life.

W. R. RAJAGOPALAN.

* * *

I was very much impressed with the exhibits especially the arrangement of the portrait of Gandhiji with Buddha and Jesus.

V. C. NARAYANAN,
Sub-Editor, "Dinamani."

* * *

வாழ்க உங்கள் புகழ்! வற்றுத ஜீவ நதிகள்போல் வளரட்டும் உங்கள் கொள்கை!! விடிந்து வரும் கதிரவன் கதிர்கள்போல் மக்களுக்கு தெளிவுபடுத்தட்டும் உங்கள் ஓவியங்கள் !!!

மன்னார்குடி —ஜோஸப் சாமிநாதன்

* * *

I congratulate M|s. Balu Bros. on their excellent effort at popularising the art of painting choosing the medium of an Exhibition of the paintings of the life of the Father of the Nation.

P. KALYANASUNDARAM,
Auditor.

* * * *

வெஞ்சமரு மாற்றிட்டு வெள்ளையனை வெளியேற்றி
விண்ணகமே யடைந்திட்ட அண்ணல்—எம்காந்தி
மண்ணுல கிலாற்றிட்ட பெருந்தொண்டை
எண்ணிட்டே அழுவாயோ இக்காட்சி கண்டிட்டே.

லயோலா காலேஜ் —சே. நெ. அசீசு

* * *

கலைத் திறனும், கருத்தும் ஒன்றுக்கொன்று அவர்களின் புகழுக்கு மெருகு கொடுப்பதுபோல் நிகழ்கிறது, இதை இந்தியா பூராவிலும் காட்ட அரசாங்கம் வசதி ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். மேல்நாட்டுக் கலைக்கு குறைந்தவர் இந்தியர்கள் அல்ல என்று மார்தட்டி சொல்வதுபோல் இருக்கிறது. சொல்லாமலே சொல்லும் இவர்களின் ஓவியக் கலை.

—கா. தாமோதரன்

இப்பொருட் காட்சியில் காந்தியார் வாழ்க்கையின் ஒரு பகுதியை மிக அழகாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஓவியத்திலும் உயிர் ஒளி இருக்கக் கண்டேன். வ. உ. சிதம்பரனுர் செக்கிழுக்கும் காட்சியும், தமிழ்த் தலைவர்களின் படங்களையும் இச்சந்தர்ப்பத்தில் தமிழகத்திற்கு நினைவுபடுத்தும் இச் சகோதரர்களின் தொண்டிற்கு தமிழ் நாடு தன் கடமையை என்றும் செலுத்தும். திருக்குறள் விளக்கங்கள் உள்ளத்தைக் கவர்கின்றன. சீர்கெட்ட தமிழகத்தை சீர் திருத்த புறப்பட்ட இவர்கள் ஆசை நீடூழி வாழ்க.

கலைக் களஞ்சியம் —நிலுவை வேனசுந்தரம்

* * *

Really it will be appreciated by one and all if this sort of Exhibition is conducted every year, with New Exhibits.

The smiling face of Nehru, the narration of the heroic people who took part in the Freedom struggle are worth-mentioning piece of work.

HUSSAIN,
International Photographer,
C.O.P.S.'s Office, Southern Railway.

* * *

இங்கு கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள உயிரோவியங்கள், பேசுகின்றன. அதனடியில் உள்ள குறிப்புகள் (Foot notes) மயிர் கூச்சல் உண்டாகின்றன. வள்ளியம்மையை மறக்காமல் தீட்டி காண்பித்திருப்பது மிகவும் போற்றுதற்குரிய தொன்று.

தஞ்சை —உமாமகேஸ்வரன்

* * *

காந்திஜியின் சித்திரக் காட்சியைக் கண்டோம். பார்க்கும் வரையில் ஓவியம் பார்த்ததாக நினைப்பு உண்டாகவில்லை. உயிருள்ள காந்தி மகானையும் இலக்கியச் செய்திகள் எல்லாம் இன்றுதான் நம் கண்முன் நிகழ்வது போன்றுமே கண்டேன்.

— மி. பொ. ராமநாதஞ்செட்டியார்
சர். தியாகராயர் கல்லூரி, தமிழாசிரியர்.

* * *

உங்களது கண்காட்சியைக் கண்டு மகிழாதார் யாரும் இருக்கமுடியாது. அவர்களது ஓவியத்திறன் தமிழ் நாட்டிற்கு மட்டுமில்லாது உலகுக்கே மகிழ்ச்சியை அளிக்கவல்லது.

—சு. நாகராஜன்.
ஓவியன், கும்பகோணம்.

தங்களின் ஓவியக் கண்காட்சியைக் கண்டேன் களிப்புற்றேன். இதுபோல் என்று காணமுடியும் என்ற எண்ணம் என்னை அறியாமைலேயே உதித்தது. அவ்விதத் தனிச்சிறப்புடன் விளங்குகிறது. இக் காட்சியை உலகம் முழுமையும் கண்டால் உலக அதிசயங்களுள் ஒன்ருகத் திகழும் என்பதில் ஐயமில்லை. உங்களுக்கு நிகர் நீங்களே, ஈடு இணையற்ற இலக்கியக் காட்சிகள் காந்தியாரின் வரலாற்றைச் சுட்டி தியாகத் தழும்புகள் ஏறிய உங்களின் அகரவரிசை. அப்பப்பா! காணமுடியவில்லை! சொல்வதற்கும், எழுதுவதற்கும் எழுத்தில்லை என்றே கருதுகிறேன்.

இந்தூர் —வே. காந்திமதி

* * *

I have seen the past, the struggle has not been in vain.

Ceylon, M. DUDLOY DE SIBRO.

* * *

என்று கடல் நீர் தன் இயற்கை தன்மையைவிட்டு இனிக்க ஆரம்பிக்கிறதோ அன்றுதான் தங்களுடைய ஓவியத்தை மறக்கமுடியும்,

பழமானேரி —க. சொக்கலிங்கம்

* * *

The Paintings are really appreciable and let the Almighty give you up the long life and see that you are improved in the art. It is appreciable to see that the Indian art is improving like anything after seeing yours and let yours be one of the best arts like Ravi Varma.

Tondairpet, Madras-21. C. V. RAMAN.

* * *

உங்கள் காந்திஜி கலைக் காட்சியைக் காண்பதால் ஒவ்வோர் மக்களின் உள்ளத்தில் ஓர் வீர உணர்ச்சி ஏற்படுகிறது என்று நம்புகிறேன். இங்கு உள்ள பாபு காந்திஜியின் ஓவியங்களைப் பார்த்தவுடன் கண்களில் நீர் நிரம்புகிறது. அவர் செய்த தியாகத்தையும், வீர உணர்ச்சியையும் நீங்கள் சித்திரத்தில் மக்களுக்கு எடுத்துச் காட்டியது போற்ற தக்கதாகும்.

பி எஸ். உயர்தர பாடசாலை —L. C. ஆராவமுதன்
சென்னை—4 IV பாரம், E. பிரிவு

* * *

தமிழ் நாட்டில் நிலைத்து நிற்கும் நம் தமிழ்க்கலை உங்களைப் போன்ற சகோதரர்களால் நீடூழி வாழ்க,

—Miss. K. Ramamohan

It is really a great achievement to have created an art and to make it realistic to life. More so, the value to thousand fold when it is dedicated to a great cause. Balu Bros. have given expression of only of the reverence and devotion of the Millions of India and the world to our Father—Mahatma Gandhi, patriotism, and Art have flown together and may Lord bless them so that they may bring out a nice elaborate version of our revered Mahatma.

C. R. SRINIVASAN,

* * *

நாம் நம் உருவத்தை கண்ணுடியில் பார்த்த பிறகுதான் நாம் இவ்வளவு அழகானவர்களா என்று உணருகிறோம். அதுபோல் இந்த கலை காட்சியை கண்ட பிறகுதான் நம் வீரமும் தியாகமும் எவ்வளவு என்று உணருகிறோம்.

ஹிந்தி பிரசார சபை, மதருஸ் —சௌ. ராஜன்

* * *

In the footsteps of our Father, coming from France.

B. FRINKING and his wife.

Sevagram.

* * *

So pleased to know about India and see the Gandhi's Exhibition.

(From FRANCE) FR. LINCOLN.

* * *

உங்கள் படத்தைக் கண்ட நான் அத்துடனே என் மனத்தையும், பார்வையும் விட்டுவிட்டேன். நான் இவ்விடத்தை விட்டுச்செல்ல விரும்பவில்லை. என் வாழ் நாளெல்லாம் இங்கேயே கழிக்கச் சொன்னாலும் கழித்துவிடுவேன். தங்கள் காந்திஜீயின் வாழ்க்கைச் சித்திரமும், மரணச்சித்திரமும், என் மனதைமட்டும் அல்ல எல்லோர் மனதையும் கவர்ந்துவிடும். இச்சித்திரங்களை எல்லாப் பத்திரிக்கைகளிலும் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

— S. மோகனு,

திருவனந்தபுரம்.

It is highly interesting and instructive for any one to know the "Great Father" at a glance of this mighty Gallery.

M. V. VARADARAJAN,
Advocate, Salem.

*   *   *

Really a splendid way of expression of Mahatma Gandhi's full life. Credits to Balu Bros.

R. DESIKACHARI,
Office of the Chief Engineer to Electricity,
Govt. of Madras.

*   *   *

தமிழகத்துக்குப் பெருமை தரும் கலைக் கண்காட்சி.

ஆசிரியன், "செங்கோல்" —ஆ. கொ. வே. ராமாநுஜம்

*   *   *

இதைப் பார்த்ததும் மனிதராகப் பிறந்த எந்த மனிதனுக்கும் புது உணர்ச்சியும் தேச பக்தியும் நாட்டு பற்றும் உண்டாகாமல் இருக்கமுடியாது. இன்றிலிருந்தே மனிதன் புனிதமாகுவான் என்பது எனது கருத்து.

பொன்மலை திருச்சி —ஜி. ராஜகோபால் நாயுடு
தலைவர், டவுன் காங்கிரஸ் கமிட்டி.

*   *   *

தங்கள் ஓவியக் கண்காட்சியில் கண்ட கருத்துக் களை குறிப்பாக வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாறு தீரச் செயல்கள் இந்நாடு இனப்பற்றற்ற மக்களுக்கு மிக முக்கியத்தைக் காட்டுகிறது. அத்துடன் ம. பொ. சி. பொன்மொழிகள் எழுதி இருப்பதைக் கண்டு மிக்க மகிழ்ச்சி.

—V. சுமதி

*   *   *

வீரம் விளைத்த வியன் தமிழர் சரிதமெல்லாம் தீரமுடன் ஓவியத்தில் தீட்டிவிட்ட சிற்பிகளே! சீரும் சிறப்பும் திகழ்புகழும் மேன்மேலும் பாரெல்லாம் போற்றிடவே பண்புடனே வாழ்ந்திடுவீர்!

கல்விக் கழகம், சென்னை—21 —"சுழல் துப்பாக்கி"

*   *   *

தங்கள் ஓவியக் கலையைப்பற்றி விவரித்துக்கூற முடியாதது. இதனுல் பல லட்சக்கணக்கான மக்களுக்கு இன்பத்தை ஊட்டி அவர்களின் அறிவைப் பெருக்குவதற்கு என் வந்தனம்.

—H. ரூப்மாலா,
டாலிகஞ்ஜ், கல்கத்தா.

"கங்கை"க்கு சகோதரியாக "காவிரி" விளங்குவதுபோல் "ரவி வர்மா"வுக்கு பாலு சகோதரர்கள் "சகோதரர்"களாக விளங்குகிறுர்கள்.

விளாங்குடி. —இராமசாமி

*   *   *

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றேன்றுமை நன்று"

என்ற இலக்கணத்திற்கு, தங்கள் பணி இலக்கியமாக வளர்கிறது. வளர்க நும் பணி!

தரங்கம்பாடி —புலவர். மு. பசுபதி

*   *   *

No doubt every one who visit the Exhibition of paintings will be carried away by the life like portraits of our leaders. Above all the Trivision is a capital idea.

N. RAMANATHAN,
Advocate and Councillor,
Corporation of Madras.

*   *   *

Every item of this Art Gallery stole my heart and the educative and expressive pictures have no mouths to express but could be understood by sheer careful look. My heartfelt thanks.

Dr. S. JAYARAMAN, L.I.M.,
Medical Officer, L.F. Dispensary.
Vembavoor, Trichy Dt.

*   *   *

கருத்துக்கு விருந்து; கண் நிறைந்த காட்சி, இலக்கியங்களின் புதைப் பொருள், வரலாற்றின் பொன்னெழுத்து, இக்கண் காட்சி என்று கூறல் சிறிதும் மிகையாகா.

—சம்பத்

*   *   *

உங்கள் படங்களில் நாம், நம்முடைய பழைய சரிதத்தையும், அண்ணல் மகாத்மாவின் வாழ்க்கையின் குறிக்கோளையும் அறிய முடிந்தது. அதற்காக நான் என் அன்பு கலந்த நன்றி வணக்கத்தை என் சார்பிலும் தமிழர்கள் சார்பிலும், தெரிவித்துக்கொள்கிறேன்.

—Mrs. Sumathi

I visited the Art Gallery of Mahatmaji and I am so much impressed with the realistic and extraordinarily beautiful art of M|s. Balu Bros. In particular the picture of Mahatma posed as Buddha and Jesus has no equal in one artistic sphere. I wish every success to Balu Bros.

S. MUTHUKUMARASAMI,
Sri Kannabiran Rice Mill, Koradacheri, 1.

* * *

The picture Gallery is exceedingly beautiful. One cannot go out shedding tears at the portrait of Gandhiji in the arms of Bharatha Matha after he was shot down. It is really moving. Sri Balu Bros. really deserves all praise.

S. PARTHASARATHY, B.A., B.L.,
Advocate, Bellary.

* * *

The Exhibits were much more beyond praise. Every items are interesting ones. The artist has done very well to display the natural expressions.

MRS. V. GUJLAL.

* * *

The life in pictures of Mahatma Gandhi is well calculated to inspire our youths with his ideals of love and service carried to the point of self immolations. Congratulations to the organisers of this Exhibition. May they bring out the lives of other national leaders also.

FR. P. AROKIASAMI,

* * *

தங்கள் ஓவியங்களைப்பற்றி புகழ்ந்து எழுதவேண்டுமென்றால் இந்த புஸ்தகம் முழுதும் போதாது. சுருங்கக் கூறின் இந்த ஓவியங்களைக் காண 1000 கண்கள் வேண்டும். என்னுடைய வாழ்நாளிலே இதுதான் முதல் தடவை இவ்வளவு 'பிரசித்திப்பெற்ற ஓவியங்களைக் கண்டு பூரிப்பு அடைவது. ஓங்குக தங்கள் ஓவியக்கலை. வாழ்க நீடூழி.

—E. பாண்டுரங்கன்,
இந்திய சர்க்கார்
பிரஸ் இன்பர்மேஷன்.

வெறும் கலைமட்டும் பயிலாது மக்களுக்கு அறிமுகம் ஆகும் பொருட்டு அகநானூறு, திருக்குறள் முதலிய செய்யுள் அடங்கிய சித்திரத்தை தாங்கள் கொணர்ந்து தாங்கள் புதுப் பணியை செய்கிறீர். அதற்கு எதிர்கால திராவிட குடியரசியின் ஆட்சியின் சார்பில் தங்களுக்கு என் நன்றி;

பாண்டிச்சேரி. —வி. ஞானாநந்தம்

* * *

தமிழன் கலை மாண்பை இவ்வுலகிற்குக் காட்ட இக்காட்சி சாலையே போதுமானது. எல்லாவற்றிற்கும் சிகரமாக முடிவான இடத்திலுள்ள நமது பெருந்தலைவர் காந்தியடிகள் இறந்த காட்சி என் உள்ளத்தைக் கலங்கச் செய்கின்றன. டெல்லி சென்றவனல்லன் யான்—அன்றையக் காட்சியை நேரில் காட்டி—என்னை அழச் செய்தது.

திருவிடைமருதூர். —புலவர். பி. மகாலிங்க தேசிகர்

* * *

ஓவியங்களைக் கண்டு களித்தோம். தமிழன்னையின் செல்வப் புதல்வர்களாகிய கலைஞர்கள் வாழ்க.

—சாரநா

* * *

சபாஷ் பாலு-சபாஷ்-சீனு ! தமிழகத்தில் காந்தி போன்ற பெரியார்களின் சரித்திரத்தை ஒவ்வொருவருக்கும் எடுத்துச் சொல்ல ஆசைப்பட்டு ஒருவனாக ஒரு முகமாய் சொல்லிவரும் எனக்கு உங்கள் படங்களைப் பார்த்த உடன் மனம் பூரிக்கின்றது.

சித்திரமும் செந்தமிழும்
தேசத்துக் காட்டி வைத்த
உத்தமரே உங்களினால் உலகே
உயர்ந்து விடும்

ஜெமினி ஸ்டுடியோ —கொத்தமங்கலம் சுப்பு

* * *

இம்மாதிரியான கலைக் கண்காட்சிகளை ஏற்படுத்தினால் மக்கள் கடவுள் இல்லை என்றும் அன்னியர்களுக்கு அடிமையாக இருக்கவும் மாட்டார்கள்.

—S. J. நாதன்

* * *

இங்கு அமைந்திருக்கும் ஓவியம் மிக அருமையாக அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலை—கலைக்காக என்று கூறும் அறிவிலிகள் இதைப் பார்த்தாகிலும் ஓவியம் கலைக்காக அல்ல, கருத்துக்கும் உண்டு என்று நினைப்பார்கள் என்று நம்புகிறேன்.

—K. சுப்பிரமணி

AVM PRODUCTIONS

THE EMBLEM THAT DENOTES MOTION PICTURES *of* ENTERTAINMENT!

தமிழ் நாட்டிலும், ஸிலோன், சிங்கப்பூர், மலாயா, முழுதும்
தலைசிறந்து விளங்கும் சினிமா பத்திரிகை

குண்டூசி

சிறந்த சினிமா மாத இதழ்

வருட சந்தா : இந்தியா, இலங்கை ரூ. 6; வெளி நாடுகள் ரூ. 9

தனிப் பிரதி : இந்தியா 8 அணா : இலங்கை 50 சதம்; வெளி நாடு 12 அணா

குண்டூசி காரியாலயம்,
26, சிடங்குத் தெரு. சென்னை—1.

SUPPLIERS OF

BEST BRUSHES and COLOURS TO

The Leading ARTISTS and STUDIOS

G. D. SEKAR & CO.

DEALERS IN PAINTS, HARDWARE & OILS

AND MOTOR LUBRICANTS

Head Office :
134, MOUNT ROAD,
MADRAS-6.

PHONE:
86793

Branch :
85, PONDY BAZAAR,
T'NAGAR, MADRAS - 17.

UNDERTAKERS OF INTERIOR & EXTERIOR DECORATIONS

PHONE: 86793



SEKAR CONCERNS

134, MOUNT ROAD, — MADRAS - 6.

தங்களுடைய சிற்பம் போன்ற ஓவியங்களைக் கண்ணுற்றேன்! இல்லை!! தெய்வ ஒளிபெற்று, இருள் ஒளி அகன்று விளங்கும் உங்களது ஓவியங்களை பார்த்தெழுந்த தமிழருக்கும், தமிழ் நாட்டவருக்கும் செய்யும் தொண்டையே கண்ணுற்றேன். கண்டானந்தம் கொண்டேன். ஏ! தமிழ் நாட்டு மாபெரும் ஓவியத் தெய்வங்களே! நீடூழி வாழ்க! வாழ்விக்க வந்த மகான் காந்தியின் வாழ்க்கையை நேரில் பார்த்து அனுபவிக்க செய்த மாபெரும் வள்ளல்களே நீங்கள் என்றும் நீடூழி வாழ்க!

சிலுகடலி, திருச்சி. —சு. ந. ராமச்சந்திரன்

* * * *

" கலைஞனுக்கு கட்சிபேதம் இருப்பது நல்லதல்ல என்பதை உம் ஓவியக்காட்சி மெய்ப்பித்து விட்டது.

சின்னபாபு சமுத்திரம். —பாபு

* * * *

நான் காந்தியைப் பார்க்கவில்லை. உங்கள் ஓவியங்களைப் பார்த்ததில் காந்தியை நிஜமாகவே பார்த்த மாதிரி இருக்கிறது.

ஆதோனி, பெல்லாரி ஜில்லா. —S. ஹைமா

* * * *

ஓவியம் உலகத்தை தன் வசப்படுத்தும் என்னும் உண்மையைப் பாலு சகோதரர்களின் ஓவியங்கள் நிரூபிக்கின்றன.

சென்னை. —ந. சே. உமாபதி M. A. L. T.
தலைமை ஆசிரியர்
சி. எ. எஹச். இந்து முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி

* * * *

பொன்னார் கலை ஏட்டில்
பொலிவூட்டும் எழிலை
மின்னார் வண்ண தோல்
மேன்மையாய் தீட்டி
விண்ணார் புகழ் பெற்ற
எழிற் கலைஞன் பாலு
இந் நாட்டின் கலைஞருள்
எழில் வாழ்வு பெற்றிட்டான்.

L. S. Home Madras-4 —காந்தாமணி

* * * *

கண் கவரும் காட்சிகள், கலைமிகு தோற்றங்கள்; காந்தியின் வாழ்க்கை ஓவியக் கப்பலில் ஏறி இன்பக் கரை கண்டேன். வள்ளுவரின் வாய்மொழி உண்மை கலை உணர்ந்தேன். கண் படைத்த இன்பத்தை இன்றே பெற்று மகிழ்ந்தேன்.

—கா. அப்பாத்துரை

I have great pleasure in commenting that it is one of the best Art Exhibitions ever conducted in Madras. Balu Bros. should live long to write many more art pictures.

P. V. SRINIVASAN,
"The Hindu," Madras.

* * * *

I am impressed upon the skill of the twin artists—Balu Bros.—when I visited the Exhibition. At the same time, I pay my regards for having an opportunity to the public to have very beautiful sights.

P.I.B., Bangalore. R. NARAYANAN.

* * * *

Heart is touched to the bottom most point of the last scene of Mahatmaji's last sight. It is fine and rare collection.

P. R. RAMAIYA, M.L.A.
"Tainadu," Bangalore.

* * * *

All exhibits found here are extraordinarily superb and instructive good.

H. K. KUMARASAMI,
Editor, "Aruna", Daily, Mysore.

D. SURYANARAYANA,
Secretary, D.C.C., Mysore.

* * * *

It is really a difficult task to describe the life of a person like Gandhiji in writing as well as in painting. But our Tamil Nad is proud that it has given birth to "Balu Bros." who can do wonders and that if anybody wants any proof everyone has to spend about one anna so that the person can have an extensive view of their performance.

RAMAKRISHNAN.

* * * *

உலக உத்தமர் காந்தியடிகளின் வாழ்க்கையை சித்திரமாகத் தீட்டிய உழைப்பாளி பாலு சகோதரர்களின் படங்களைக் கண்டு பரவசமடைந்தேன். நன்றி.

—ரா. கோ. ராமன்
தஞ்சை மாவட்டம்

I have seen a very good and enthusiastic thing which I cannot forget in my life.

Kumbakonam. G. S. MURTHY.

* * * *

I visited Gandhiji Gallery, and I am very much impressed by the pictures I saw. I could not resist my tears when I saw last picture of Bapuji's death with Bharat Matha.

AKBAR CHANDA.
Banas Kantha.

* * * *

Every soul of this Great India, why not of this whole world, must see this Exhibition in which the spirit and the light of India clearly reveals.

M. A. NARAYANASWAMI.

* * * *

I was very much impressed with the life pictures of the Father of the Nation. A round taken of this Exhibition brings to one's mind's eye the whole picture of the Freedom Struggle with Mahatma Gandhi in the central figure. It has been a happy idea and I was much impressed by it and by the arrangement of the pictures.

(Sd.)..........,
Professor, Presidency College.

* * * *

Wish Balu Bros. long life and Prosperity, so that their art may see millions. Suggest a touring Exhibition of this Exhibition so that our rural folk may see and enjoy the points of their labour.

Villivakkam. C. V. SHARMA.

* * * *

உண்மையில் என் உள்ளத்தைக் கவர்ந்தன, இந்தச் சித்திரங்கள். மகாத்மாவின் வரலாற்றை இந்த ஓவியக் காவியம் தத்ரூபமாகக் காட்டுகிறது.

—த. நா. குமாரசாமி,
சென்னை—4

தமிழ் நாட்டு மக்கள் இதை அவசியம் பார்க்கத் தவறக்கூடாது.

Nagpur. —G. K. Mudaliar

* * * *

நாங்களிருவரும் உங்களின் ஓவியங்களைப் பார்த்ததும் குதூகலம் அடைந்தோம். எல்லா சித்திரங்களும் உயிர் பெற்றதாக இருக்கின்றன. இந்திய தேசத்தின் கலையை உலகத்தார் பார்த்து மெச்சுவதற்கு இவர்களது ஓவியம் சாலச் சிறந்தது.

சென்னை. —தி. கு. இலக்குமணசுவாமி
மாஜி உதவி மேயர்
—தி. ல. திருபுரசுந்தரி
கார்ப்பரேஷன் கவுன்சிலர்

* * * *

பல மணி நேரம் பலவற்றைப் பார்த்து மகிழாத என் உள்ளம் காந்தியின் வாழ்க்கைப் படக் காட்சியைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சியைப் பெற்றேன். உங்களின் ஓவியத்திறன் என் உள்ளத்தை உருக்கி விட்டது. பல இடங்களில் மெய்மறந்து மகிழ்ந்தேன், இவ்வோவியச் சகோதரர்கள் மேன்மேலும் பல சங்கப் பாடல்களை ஓவியத்தில் தீட்டி உலகிற்கு நலம் புரிவார்களென நம்புகின்றேன்.

—கு. மதுரை முதலியார்
தமிழ்ப் புலவர், வேப்பேரி.

* * * *

நான் தில்லையாடியில் பிறந்தும் வள்ளியம்மையாரின் உருவம் தெரியாது. தாங்கள் அதைக் காண்பித்தற்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தில்லையாடி. —சோ. பரமசிவம்

* * * *

காந்தி மகாத்மாவின் புனித நவகாளி யாத்திரையில் நேரிடையாகக் கலந்துகொண்ட பாக்கியசாலிகளில் அடியேனும் ஒருவன். இன்று மீண்டும் பாலு சகோதரர்களின் சித்திரக் காட்சிக்குள் நுழைந்ததும் சித்திரம் என்பதை மறந்தேன். சித்திரமா அவை! உயிர் ஓவியங்கள். நவகாளிக்கு நேரில் சென்று வந்ததுபோன்ற பிரமிப்பும் வியப்பும் கொண்டேன். மிக உன்னத முறையில் மிக அரிய காட்சிகளைத் தீட்டித் தந்திருக்கும் ஸ்ரீ பாலு சகோதரர்களுக்கு தமிழகம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறது. நீடூழி காலம் வைத்துக் காப்பாற்றவேண்டிய பாரதத்தின் சரித்திர இலக்கிய பொக்கிஷம் அவை. இதயம் நிறைந்த மகிழ்ச்சியுடன் அனுபவிக்கத் தக்க இனிய சித்திரங்கள்.

—ஆசிரியர் "சாவி"

தமிழ் இலக்கியத்திற்கு—ஒரு திருக்குறள்போல்—தமிழ் ஓவியத்திற்கு ஒரு பாலு பிரதர்ஸ்; திருக்குறள் உலக பொது இலக்கியமாகிவிட்டது. இவர்களும் உலகத்திற்கு சொந்தமாகி விட்டார்கள், இனி சொல்வதற்கு என்ன இருக்கிறது!

—V. ஜகந்நாதன்

* * * *

தாங்கள் ஒரு சித்திரக்கலை நிபுணரே யன்றி உன்னத உண்மைகளை உலகிற் கெடுத்துக் கூறும் ஒருபெரும் அறிஞராவீர்கள்.

—C. சீனிவாசன்

* * * *

அரசியல் தலைவர்களாலும், பிரபல பயங்கர எழுத்தாளராலும், பேனு முனையாலும், மூளை பலத்தாலும் செய்யமுடியாத உணர்ச்சிப் பெருக்கையும் நாட்டு வெறியையும் கண் காட்சி படத்தால் கிளப்பி இருக்கிறீர்கள்.

எழும்பூர், சென்னை —தி. வே. கிருஷ்ணமூர்த்தி
பார்சல் கிளார்க்

* * * *

கண்டேன் களிப்புற்றேன் என்றும் காணுததை இன்று கண்டேன். காணவேண்டுமென்று பல்லாயிரம் ஆண்டு உண்ணுவிரத நோம்பு இருப்பினும், கருத்துக்கு எளிதில் புரிவதும் காணும் உள்ளத்தை கலங்கச்செய்து கருத்தினை அள்ளி வீசுவது காண முடியா. இந்நிலையிலே தான் தங்களின் கலை ஓவியம் தற்கால அறியாமையை எளிதில் போக்க ஓர் சிறந்த கேடயம் என்று கூறினுல் மிகையாகா. தங்களின் செயற்கரிய இக்கலை ஓவியத்தை எட்டு திக்கும் எட்ட ஆவனச்செய்ய அரசாங்கம் ஆதரவளித்தால் மிக்க புகழுக்குரிய நன்றியாகும்.

ஓவியன் —கு. ரெங்கராஜன்

* * * *

தங்களின் வெள்ளித்திரை விளம்பரங்களை மட்டும் கண்ட நாங்கள் சமூக, கலாசாரங்களைக் கண்டு ஆனந்தமும் மகிழ்ச்சியும் பெற்ருேம்.

சித்தூர், மலபார். —K. அச்சுதனன்

* * * *

திருப்பூர் குமரனுடன் தில்லையாடி வள்ளியையும் தமிழ் காங்கிரஸ்காரர்களே மறந்துவிட்ட நேரத்தில் நீங்கள் மறவாத நல்லெண்ணத்திற்காக திராவிடன் என்ற அளவில் நன்றி கூறிக் கொள்கிறேன்.

—க. பொ. தங்கத்துரை,
லால்குடி.

So beautiful an art that had been displayed in the past and present. I happened to see more exactly a life of our holy father. A portrait where this national father in real exact, life like figure before his fleshy eyes certainly tears will roll. I can say only about the pathetic end of Gandhi displayed which roused the emotion from the deep of the hearts of even culprits who spoke against him. Pray long life the figures and art. Pray life in anyland will help it.

Q. THANYAMBAK.

* * * *

I am very happy to see the paintings of M|s. Balu Bros. They are wonderful and I wish that they are to be displayed all over India, and trust that all the Exhibition Committees would take the advantage of M/s. Balu Bros.

an M.L.A., Mysore.
and S. R. SRINIVASAN,
Member, Fine Arts Committee,
Dasara Exhibition, Mysore.

* * * *

No one in the world can present a beautiful portrait as that you have placed here. I am not exaggerating, for it almost touched of my heart, and it is no doubt will touch those who happen to see them.

Dalal & Co., Madras. V. SRINIVASAN.

C. ATHIKESAVAN,

Electrical & Illumination and Wiring Contractors.

25, LAL MOHAMED STREET,

CHEPAUK, MADRAS—5.

வீரப்பாண்டியன் கட்டபொம்மன் சித்திரம் பழங்கால வாழ்வை நினைவூட்டுகிறது. எதிரில் காணுங்கால் கட்ட பொம்மனே நேரில் நிற்பதுபோல் தோணுகிறது. கலைக் கண்கள் கொண்டு நோக்கின் அதன் கலை எங்கள் ஊனக் கண்ணை மறைத்து உள்ளக் கண்ணைத் திறக்கிறது.

—ரு. நாராயணன்,
ஹாஸ்பெட், பெல்லாரி ஜில்லா.

It has given me great inspiration to go round and see the Exhibits. I congratulate him on the excellent show he has put up.

K. ALAVANDAR,
Prop. Appah & Co.

* * * *

It was really a treat to go round the Gallery of Balu Bros. The paintings depicting the life of the Father of the Nation, Babuji as well as the heroes and heroines of Bharat India are very inspiring and realistic.

V. T. RENGASWAMI,
Public Prosecutor, Madras.

* * * *

The Gandhi Gallery, as well as the three dimensional picture of Gandhi, Buddha and Jesus is magnificent, and some of the paintings are beautiful and the masterpiece is the last picture of Gandhiji's funeral Pyre and our beloved Nehru looking on at it with sorrow and defection.

LALITA KEMBARAJ.

* * *

One leaves with a renewed love for his country and revives his old admiration for the Father of Nations who sacrificed his life for the Nation after seeing his life in the paintings which are on the show in this exhibition. This is another mode of service to the Nation which the painters of his life, has put on the show.

C. R. P. SARATHY,
Advocate, Salem.

* * *

We, our Indians, are very pround to have such artists. I wish your service will be a main of information about Gandhiji.

Fort, Bombay. M. S. MANOHARJI.

* * *

சித்திரம் என்னும் எவரெஸ்டைப் பிடித்த முதல் மகா நிபுணர் நீவிரே. மிகவும் நன்றி.

—எஸ். கே. கோபாலன்
—டி. பி. பெருமாள்

தாங்கள் எந்தக் காட்சியையும் ஆதரிக்காமல் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் உணர்ச்சி பயக்கும் பொன் மொழிகளாகிய நல் வார்த்தைகள் யாரால் கூறப்பட்டவாயினும், அவைகளை உங்கள் காட்சி அமைப்பில் தொங்கவிட்டதைக் கண்டு மிகவும் களிக்கிறேன்.

தேனி. —கு. பன்னீர்செல்வம்

* * *

சித்திரத்தில் உமது கை வன்மையை புகழ்வது படிக்காதவன் வேதங்களை புகழ்வதுபோல. உங்கள் சித்திரங்கள் உணர்ச்சி பெருக்கெடுத்தோடச் செய்கின்றன. நமது தேசத் தந்தையின் கோர முடிவைக் காட்டியிருக்கும் இடத்தில் கண்ணீர்விட்டே அழுது விட்டேன். இதைவிட நான் வேறு எப்படி என் உணர்ச்சியையும் எண்ணத்தையும் வெளியிட முடியும்.

—கொ. சு. நரசிம்மன்

* * *

இக்காட்சியில் ஒவ்வொரு ஓவியமும் உள்ளத்தை அள்ளுகிறது. மேலும் சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் காந்திஜியின் பிறப்பு முதல் இறப்புவரையில் சித்தரித்திருக்கும் ஓவியம் தத்ரூபமாக காட்சியளிக்கிறது. உலகத்திலுள்ள விஞ்ஞானிகளின் ஓவியமும் கண் கொள்ளாக் காட்சியாகக் களிப்பூட்டுகிறது. இம்மாதிரி ஓவியம், பாலு சகோதரர்கள் தீட்டிய சித்திரம் பாரத பூமிக்கு மிகமிக அவசியம். குறிப்பாக ஈ. வே. ராவின் தம்பதியுட்பட தீட்டியுள்ள ஓவியம் இடம் பெற்றிருப்பது மிகமிகப் போற்றத் தக்கது.

சென்னை—19 —அ. தேவகி அம்மாள்
போர்ட் மிக்ஸ்ட் ஸ்கூல்

* * *

பிரமாதம்! அற்புதம்! என்று வாயால் சொன்னால் மட்டும்போதுமா! ஓவியங்கள் ஒவ்வொன்றும் நேர் நின்று பேசுகின்றது.

"சினிமா கதிர்" —செல்வம்

* * *

என் அன்னையின் பிணத்தைக் கண்டு என் விழிகள் எத்தனை சொட்டு கண்ணீரை சிந்தியதோ அதைவிட இருமடங்கு என் விழிகள் கடலாக மாறியது. ஏன்! கண் கண்ட தெய்வம் "காந்தி"யின் வாழ்க்கை வரலாற்று ஓவியங்களை என் இருதயமும் எண்ணமும் எடை யிட்டபோது...மற்ற ஓவியங்கள் வீரம் முதலிய நவரசங்களை எடுத்துக்காட்டும் ஏடுகளாக மாறியது.
நீங்களும் உங்கள் கலையும் வாழ்க.

—ம. வில்லி ராஜாமணி
எழுத்தாளன், சென்னை.

இவர்களின் கலைத்திறன் கண்ணுக்கு மட்டும் விருந்தளிக்கவில்லை. கலையில் புதைந்திருக்கும் கருத்துக்கள், அறிவுக்கும் விருந்து படைக்கிறது. வள்ளுவர் காதல் பாதை முப்பாலில் கடைசிப் பால்கூடாது என்போருக்கு ஓர் அறைகூவல். தாகூர் மொழிப் பற்று தமிழிருக்குத்தான் கூறினரோ என்ற விதத்திலே தீட்டப்பட்டிருக்கிறது. புறநானூறு போர்க்களம் தமிழகத்தை இப்படி ஒரு புரட்சிக்குப் பின்தான் விடுவிக்க முடியும் என்ற முறையிலே தீட்டப்பட்டிருக்கிறது, அண்ணாவின் கருத்துப் படையல் மனிதன் ஒவ்வொருவரும் அப்புகழை அடையவேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குகிறது. அடிமைகளை விடுவித்த அப்பிரகாம் லிங்கனின் அருமை மொழிகள் சமத்துவத்தை நிலைநாட்டும் வகையிலே வரையப்பட்டிருக்கிறது.

கலைஞர்களுக்கும் கருத்துக்கள் உண்டு என்பதை ஓவிய இரட்டையர்கள் நல்ல முறையிலே விளக்கியுள்ளார்கள்.

திருக்கடையூர். —ஏ. என். ராமச்சந்திரன்

* * *

இந்த நாட்டின் தந்தையார் காந்திஜியின் வாழ்க்கைச் சித்திரத்தைத்தீட்டி கண்கட்கு நல்விருந்து மட்டுமல்ல கருத்துக்கும் பேருதவி புரிந்த பாலு சகோதரர்கள் வாழ்க நெடிது. நற்றமிழ் நாட்டிற்குப் பொற்றொண்டாற்றி வ. உ. சியின் தமிழனின் உணர்ச்சி யலைகளிலே மோதித் தெறிப்பது. ஈ. வே. ராநாகம்மையாரது ஓவியம் அவரும் காங்கிரஸிலே உழைத்த உத்தமர் என்பதை உணர்த்துவது நாட்டோர் அறிய வேண்டியது. முக்கியமாக அண்ணாவின் சொல்லோவியத்தைக் கலை ஓவியமாக்கிக் காட்டியிருப்பது சிந்தனைக்கு நல்விருந்து.

—R. T. காப்பியன்

* * *

எத்தனையோ பணம் செலவிட்டுக் காணவேண்டிய அரியக்காட்சிகளை ஒரே அணா செலவில் கண்டு களிக்கும்படி செய்த உங்கள் கலைத்திறன் வாழ்க என்று வாழ்த்கிறேன்.

பரலி—சு. நெல்லையப்பர்

* * *

தமிழகத்தில் ஓவியக் கலையில் ஜீவன் இன்னும் ஒளி வீசிக்கொண்டிருப்பது, உலகிற்கே பறைசாற்றுவது பாலு சகோதரர்களின் இணையற்ற ஓவியங்கள் இவர்கள் தமிழகத்திற்கு இருகண்கள். வாழ்க நீடூழி !

—"லட்சுமி"

I don't know how you have shown the Gandhiji's expressions in your art, but really it is a great skillness in the art; I really appreciate your art of love towards the nation's Father. Your art should exhibit in the International Art Galleries. I hope you will do so.

P. RAMANATHAN.

* * *

"Art is the weapon of People." When I see the art of Balu Brothers, I don't know where I am and I am thrilled with unknown joy.

P. S. R. SHARMA.

* * *

Any country can be proud of an artist of this type. Especially South India can be proud of having an artist like Balu Bros. God bless them.

Madras-27. A. VAIDYANATHAN,
Jain College.

* * *

I came here to visit for a few minutes but I saw and saw for nearly an hour.

Uttiramerur. KODI PARTHASARATHY.

* * *

சித்திரக் கலையில் எனக்கு அதிக நாட்டம் கிடையாது. அதில் நாட்டம் ஏற்பட்டது என் வாழ்க்கையில் இன்றுதான். பாலு சகோதரர்களின் உணர்ச்சி மிகுந்த பேசும் பொற்சித்திரங்கள் என்னை வேற்று மனிதனுக்கிவிட்டது, சித்திரங்களைப் பார்த்து வரும் போது என்னையும் அறியாமல் என் உடம்பு மகிழ்ச்சிப் பூரிப்பினுல் சிலிர்த்தது. என்னே இவர்களது கலையின் திறமை! தமிழில் ஆர்வம் கொண்ட நான் குறளைக் கண்டேன், கருத்தை விளக்கும் கலைச் சித்திரங்களும்தான். பாரத பிதாவின் மடியில் மகாத்மா காந்தியடிகள் மார்பில் குண்டுவீச்சுடன் இரத்தம் குபுகுபுவென்று ஓடிவர படுத்திருக்கும் படம் போற்றத் தக்கது. எல்லோரும் அவர்களது கலைக்கு ஆதரவு தந்து தமிழ் நாட்டின் பெருமையை உலகெங்கும்பரப்ப வேண்டும் என்பதே என் உள்ளார்ந்த அவா. —வாசுதேவன்,
செங்கற்பட்டு.

No activity these days is complete without giving an opportunity to people to see for themselves the past lives of our great leaders. I write this to convey my sincere appreciation of the work of paintings executed by Messrs. Balu Brothers depicting the life of our greatest leader Mahatma Gandhi recalling that truth and non-violence was an indispensable path to achieve freedom and depicting his high ideals during the period of struggle for freedom.

Madras,
10th December, 1954 } J. J. BATLIWALA

Dy. Chief Accounts Officer,
Southern Railway.

இன்பத் தமிழ் மொழியில்
எண்ணற்ற காவியங்கள்
துன்பந் தவிர்த்திடவே—குழந்தாய்
தூவும் கருத்துக்களை
கண்ணின் நிலை நிரம்பக்
காட்சியாகக் குவித்து மணப்
புண்ணையும் ஆற்றுமடி—குழந்தாய்
பூமியில் ஓவியங்கள்.

காண்போரின் கண்ணுக்கும் கருத்திற்கும் விருந்தளித்துக் களிப்பூட்டும் தங்களுக்கு யாம் செய்யும் கைம்மாறு யாதும் அறிகிலோம்.

கிண்டி. —கே. திருவேங்கடாச்சாரி
சி. எம். கே. ஹாஸ்டல்

* * *

" கண் கொள்ளாக் காட்சி தரும் கந்தர்வ ஓவியம் "

" குமுதம் " ஆபீஸ் —சு. ராமமூர்த்தி

* * *

கலை கலைக்கல்ல. வாழ்க்கைக்கே! என்று உங்கள் ஓவியம் மூலம் தெளிவுபட விளக்கி இருக்கிறீர்கள். உங்களால் தமிழ் நாட்டு ஓவியர்களுக்கும் ஓவியக்கலைக்கும் மறு மலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

—க. இராமசேஷன்,
சர்க்கார் கல்லூரி, சென்னை.

We felt as if we saw Good old Gandhiji alive.

Nellore. C. B. PILLAY.

* * *

The Exhibits of Fine Arts painting are all so fine in execution that they are the rare productions of conception of mind brought into physical state. They are only in need of the life, is one which only Brahman has power to invest. But for this I shall say that you are next to Brahma.

This will create the required desire in the minds of others to try to get some talents to practice likewise.

R. RANGA RAO,
Retd. Head Clerk, S.I.Ry.

* * *

When we come out we feel we are coming out from a different world by their art.

G. GURURAJ.

* * *

The picture " WITHOUT BAPU " is very nice. When I saw I wept for which it is written nicely.

Madras-24. R. SARASWATHY,

* * *

Especially the pictures depicting the last stages of Gandhiji's life brought tears and to tell you the fact I have really wept, and it took some time for me to recover from that grief.

Srirangam, S. VENKATANATHAN.

* * *

A show worth more than a thousand rupees.

Madras. R. SATTANATHAN.

* * *

காட்சி தந்த இக்கலை கோயில்
காந்தியின் வாழ் வொளியாம்
காணவந்த யாவருள்ளமும்
களிப்பினிலே விம்முதுவே!

—"கமலன்'

தமிழகத்தில் சிலர் உண்டு களிக்கவும், பலர் உழைக்கவுமே இருக்கின்றனர். உழைப்பால் உயர்ந்த உத்தமர் அப்ரகாம் லிங்கன் சொன்ன பொன்மொழிக்கு சித்திரம் வரைந்து தமிழகத்து மக்களுக்கு பொது உடமை உணர்வு அளிக்கும் உங்களது ஓவியத் திறமையை பாராட்டுகிறேன்.

"இமயம்" —"கௌந்தி"

*   *   *   *

பாலு சகோதரர்களின் "காந்தி கண்காட்சி" எங்களைக் கவர்ந்தன. உண்மையில் இது ஒரு கலைக் கோயிலாகக் காட்சியளித்தது. தமிழன் கலையிலும் இலக்கியத்திலும், காவியத்திலும் மாத்திரமல்ல, ஓவியத்திலும் தனக்கு நிகர் இல்லை என்று மார்தட்டிக் கூற இச்சகோதரர்களின் ஓவியங்களே போதும்.

—கே. வி. இராமசாமி M. L. A.
—எ. கே. சுப்பையா M. L. A
—எஸ். ஆர். ஆறுமுகம் M. L. A.

*   *   *   *

சகோதரர்களின் ஓவியங்கள் உயிர்பெற்று வைக்கப்பட்ட இடத்திலேயே இருக்கின்றன, அவைகள் நம்முடன் நடமாடவேண்டிய ஒன்று மட்டும் அவர்களைப் படைத்த இறைவனைப் பொறுத்தது, நமது நாட்டிற்கு காந்திஜி நேரு போன்றவர்களைப் போலவே நமது சகோதரர்கள் முக்கியம் வாய்ந்தவர்கள், அவர்களது ஓவியங்களைப் பற்றி எப்படி எழுதுவது என்பது தெரியவில்லை.

சென்னை—4 ராமச்சந்திரன்

எழில் ஓவியங்களைக் கண்டேன். பேசும் பொற் சித்திரங்கள் என்றே சொல்லவேண்டும். தேசபக்தர்களின் சீரிய கருத்துக்களைச் சித்தரிக்கும் காக்ஷிகள் குறளினைக் கண்முன்னே கொண்டு வரும், இனிய காக்ஷிகள் எல்லாம் மெய்மறக்கச் செய்கின்றன.

கலையின் சிகரத்தை அநேகமாக எட்டிப் பிடித்துவிட்டனர், பாலு சகோதரர்கள். உச்சிக்குப் போவதற்கு எனது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

—எல். எஸ். கரையாளர்
முன்னாள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

தங்களது ஜீவன் உள்ள சித்திரங்கள் என் சிந்தையைத் தொட்டுவிட்டது என்பது என் தொலைதூரத்திலுள்ள ஊரிலிருந்து வந்து பார்த்து செல்வதிலிருந்து புலப்படும்.

—ச. ஆ. சோம. அண்ணாமலை,
அரிமழம்.

We are very much enlighted at the sight of your painting picture.

U. NAGATHIGANA,
Rangoon, Burma. (*a Budhist*).

*   *   *   *

An excellent work done—in a short period—of course must be with life time's study.

—TARA CHAND—
Rajshree Pictures Ltd., Bombay.

*   *   *   *

Praised by a party of three Burmese Artists came to see here.

U. Nyiaya, U. Nyaneinda and U. Pyihniya-wuntha.

*   *   *   *

Do not take away art with you like Gandhiji who took away all our hearts and living us.

"G.M.D."

*   *   *   *

We have been really pleased to see the paintings of this Exhibition and have learnt a great from them. People will be learning more lessons of sacrifice after seeing the paintings again and again.

Md. Ramd. Zabar.
Md. Ramd. Yemor.
Md. Ramd. Ilyar.
Madanpura, Banaras (U.P.).

*   *   *   *

We a party of 50 students and 6 teachers visited the Gandhi Gallery. We were really struck with wonder on seeing the beautiful exhibits. It is really interesting and instructive.

S. PONNUSAMI, B.A., L.T.
National High School, Mannargudi.

*   *   *   *

காந்தியார் ஒரு இரண்டு மூன்று வயது நிரம்பாத குழந்தையிடம் முத்தமிடும் காக்ஷி என்னை அப்படியே லயித்துவிடச் செய்தது. நான் குழந்தை பெறாதவனய்யா. ஆனாலும் குழந்தை பற்றுள்ளவன். ஆஹா! என்ன அற்புதமான இயற்கை ஓவியம்.

—ஏ. டி. சுகுமாரன், செங்கற்பட்டு.

பாலு சகோதரர்களின் கண்காட்சியைக் கண்டேன். கண்ணுக்கினிய, கருத்து வழங்கும் நல்ல பல ஓவியங்கள், பெரியார் காந்தியாரின் வரலாற்றை, நெஞ்சையள்ளும் முறையில் இனிமையாக எடுத்தியம்புகின்றன. உண்மையில் ஓவியங்களெல்லாம் ஒரு வகையில் நம்மோடு பேசவே செய்கின்றன. வாழ்க சகோதரர்களின் உள்ளமும், ஓவியத்திறனும்,

—பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், M. A.

* * * *

தமிழ் நாடு உலகிற்கு பல பெரிய மனிதர்களை படைத்திருக்கிறது. இயல், இசை, முதலிய பகுதிகளில் , பல மன்னர்களை இந்த நூற்றுண்டிலும், தமிழ் நாடு தாராளமாக வழங்கி இருக்கிறது. கலையுலகில் தங்களை தமிழ்நாடு வழங்கி இருக்கிறது. இந்த நூற்றுண்டில் தாய்த் திருநாட்டில் பிறக்க என்ன பேறு செய்திருக்க வேண்டும், என்று நினைக்கும்போது என் மனம் மகிழ்கிறது.

—M. கல்யாணசுந்தரம்

* * * *

It is a great landmark in the history of art Exhibitions. Balu Brothers deserve our appreciation and encouragement in no small measure. I have to refer in particular to the painting which portrays three great saints in one ; namely Buddha, Gandhi, and Jesus. The Brothers have placed the public under a deep debt of gratitude to them.

V. V. RAMADURAI.
Advocate, Madras.

* * * *

This is the Best Art Show than any other show held in this world.

K. VENKATARAMAN.

* * * *

In the Congress Exhibition the best thing to be seen and to take lessons for every Indian is the life of Gandhiji, which is exhibited here by Balu Bros. It is really appreciable.

B. CHANDRAKANTHAN.

* * * *

ஓவிய மன்னர் ரவிவர்மாவின் சித்திரங்களில் ஜீவகளை இல்லை என்று பிதற்றி வரும் அறிவிலிகளுக்கு இக் கண்காட்சி புத்தி புகட்டட்டும்.

சாரங்கபாணி அய்யங்கார்,
சிந்தாத்திரிபேட்டை.

Among the great patriots Balu Brothers stand in the topmost by giving us the immortal pictures of our beloved Father Mahatma Gandhi.

T. S. KRISHNA RAU,
Christian College.

* * * *

The Excursion party consisting of 45 boys and three teachers had a very great pleasure in seeing the various pictures exhibited by Balu Bros.

V. KRISHNASWAMI,
Excursion Chief.
Board High School, Tiruvarur.

* * * *

The art is worth seeing and gives recollection of the past which one cannot forget.

G. R. BALAGURU,
University of Madras.

* * * *

Really it is one of the best art collection about the Gandhiji's life that I have ever witnessed. The whole praise and honour goes to the great artist not of S. India but of the millions of people of this Great Country. May this artists live long and serve the art and culture of India.

—P. M. CHUMBEY, M.A.
Gwalior, Madhya Bharat.

* * * *

I had the previlige of visiting the paintings of Balu Bros. I am very much impressed by the work. It gives a full picture of Gandhiji's life to enable an ordinary man to understand. I wish them full success.

P. M. ADIKESAVALU NAICKER.

* * * *

சித்திரக்கலை சரித்திரத்திலேயே யாரும் இதுவரையில் செய்தறியாத ஒரு புரட்சி, இந்தியாவிலேயே தமிழ் நாட்டு ஓவியருக்குத்தான் பெருமை.

S. G. சங்கரன்

உழைப்பால் உயர்ந்தவர் வாசன்

தஞ்சைத் தரணி, இவரை, வெறுங் கையோடு, சென்னைக்கு அனுப்பியபோதும், சிந்தைகலங்காது, தன் உழைப்பில் நம்பிக்கை பூண்டு ; பத்திரிகாலயம் புகுந்து, அங்கிருந்து ஒவ்வொரு படியாகத் தாண்டி, உயர் வாழ்வு மண்டலத்திற்கு வந்தாரிவர் என்ற பெருஞ் சிறப்புக்காக மட்டுமல்ல ;

தமிழகம் போற்றிப் பாராட்டும் வகையில், நல்லதோர், 'ஹாஸ்ய ஏட்டை', முதன் முதல், தமிழ் கற்ருர் முன்னிலையில், எளிய நடையில் வைத்துப் புகழ்பெற்ருர்—பெற்றும் வருகின்ருர்—என்பதற்காக மட்டுமல்ல ;

நாட்டுப் பற்றும், எவருக்கும் நல்வாழ்வளிக்கும் உள்ளமும், பெற்றுலவி வருகின்ருர் என்பதற்காக மாத்திரமல்ல ;

திரைப்பட வுலகம், தீயோரும், சபலபுத்தி கொண்டோருமே மிகுதியாகப் புழங்கிடும், 'வழுக்கு நிலம்' என்று எல்லோராலும் கேவலமாக விமர்ச்சிக்கப்பட்டிருந்த நேரத்திலே, அந்தத் துறையிலே, தைரியமாய் புகுந்து, அதன் போக்கிலேயே, ஒரு மறக்கமுடியாத மறுமலர்ச்சியை யுண்டாக்கினுர் என்பதற்காக மட்டுமல்ல ;

வலக்கரம் கொடுப்பதை இடக்கரம் அறியக்கூடாதென்ற உயர்ந்த ஓர் கோட்பாட்டிற்கு சிறந்ததோர் எடுத்துக் காட்டாக, இந்திய ஜனதிபதியவர்கள் இவண் விஜயம் செய்தபோது, அவரைத் தன் 'கலைக்கூடத்'திற் கழைத்துச் சென்று, அவர் வசம், காந்தியண்ணலின் நினைவுச் சின்ன நிதிக்காக, ரூபாய் ஒரு லக்ஷத்தை ஒப்படைத்து, தமிழகத்தின் கடமையையும்—பங்கையும், ஈடுபாடு செய்து பெருமைபெற்ருர் என்பதற்காக மட்டுமல்ல ;

தென்னகத்தின் கலைமதிப்பையும், ஓவியத்தின் சிறப்பையும் வடவர் உணரவேண்டுமென்பதற்காகவே, எம்மைக்கூட, வடநாட்டுக்கு—குறிப்பாக—கலாச்சார மோதுதலும், வணிகத்துறை மோதுதலும், விளம்பரத் துறையில் தம்மை ஒப்பாரும், மிக்காரும், எவருமில்லையென்ற அகம்பாவத் தற்பெருமை மோதுதலுமே—அதிகமாக அலைமோதிக்கொண்டிருக்கும் பம்பாய் நகருக்கு அழைத்துச்சென்று, அங்கே பல விளம்பர வண்ண ஓவியங்களைத் தீட்டிக் காட்டச் செய்வதன்மூலம், வடநாட்டவரை விட, தமிழகத்தார் எவற்றிலும் மேம்பாடுடையவர் என்பதை நிலைநாட்டி, அகில இந்திய புகழ்தேடித் தந்ததற்காக மட்டுமல்ல ;

தான், சங்கட நிலைகளால் பாதிக்கப்பட்டு, வாடிக்கொண்டிருந்த நேரத்தில், தன்னேடொத்துப் பழகிய பல அருமை நண்பர்களை இன்று நல்ல நிலை வந்துற்ற நேரத்திலும் மறவாது, அவர்களை அன்பாக அழைத்து ஆதரிக்கும் உயர்ந்த பண்பை, அவர் இன்னும் பெற்றிருப்பதற்காக மாத்திரமல்ல ;

ஓவியக் கலைக்கு இன்று தனி மெருகும், புதுப் பொலிவுமூட்டும், பல வேறு, **பிரபல ஓவியக்காரர்களெல்லாம்கூட**, இன்று இவர் பார்த்து, தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திவைத்து, முன்னுக்கு வந்தவர்கள் தான் என்ற மறக்கமுடியாத நிகழ்ச்சியை இதயத்திலே பதிய வைத்துக்கொண்டு, இந்த, இவரின் அன்புள்ளத்திற்காகவும், அருமைச் செயலுக்காகவும்கூடத் தான் இவரை இதய பூர்வமாக வாழ்த்துகிருேம் ! போற்றுகிருேம் !! **நன்றியறிதலான நமது வணக்கங்களையும் அவருக்கு சமர்ப்பிக்கின்ருேம்.**

★ வணக்கமும் நன்றியும் ★

கலைக்கூட மலர்—வெளிவந்து விட்டது! எமது நீண்ட நாளைய பேரவா நிறைவேறி விட்டது! தமிழகத்தில் ஓவியக் கலையின் சிறப்புரைக்க—உரைத்துக்கொண்டே யிருக்க—சில பல, நிலையான சாதனங்கள் நிச்சயம் தேவையென்று கருதப்படுகின்ற இந்த நேரத்திலே—இம்மலர் ஒரு சிறு முயற்சி!!

சிறு முயற்சியென்றாலும், அதிகமான பொருப்பையும், நிறைந்த உழைப்பையும்—சிறந்த அனுபவத்தையும், காணிக்கையாகக் கேட்கும் ஒரு முயற்சி! மலைபோன்ற ஆர்வம் எம்மிடம் குவிந்து கிடந்தாலும், இந்த ஒரு குறிப்பிட்ட துறையில் அனுபவத்தைத் தேடிப் பெறவேண்டிய நிலை. பல நூறு எண்ணங்கள், பல்வேறு யோசனைகள்—இடையிலே செய்யப்பட வேண்டிய மாறுதல்கள் எவ்வளவோ—இந்த நிலை முயற்சியை சற்று தாமதப்படுத்திற்றே தவிர, தடை செய்யவில்லை.

மலர் நல்ல அளவில், கலைமணமும், தமிழ்மணமும் வீசுவதாக இருக்கவேண்டுமென்பதே நமது குறிக்கோள்! இந்த குறிக்கோள், எம்மைச் சுற்றி வளைத்து, வெகுதூரம் அழைத்துக்கொண்டு வந்துவிட்டதென்றாலும் நல்ல அளவுக்கு வெற்றியையும், குறைவற்ற திருப்தியையும் அளித்திருக்கிறது. இந்நிலை ஏற்படுத்தித் தந்தவர்களைப் போற்றுகிறோம். வாழ்த்துகிறோம். அவர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நற்றமிழ் கட்டுரைகளை நமக்களித்திருக்கும் புலவர் பெருமக்களையும், பேராசிரியர்களையும், அறிஞர்களையும், கலைஞர்களையும் நேயர்களுக்கு நாங்கள் அறிமுகப்படுத்துவது நன்றல்ல, ஏனெனில் தமிழர்களுக்கு தமிழ்மொழியை அறிமுகப்படுத்துவதுபோலாகும்.

சொல்லின் செல்வர், பெரும் பேராசிரியர் **ரா. பி. சேதுப்பிள்ளை** யவர்கள், நமக்கு 'காவியமும் - ஓவியமும்' தந்தார்கள். டாக்டர் **மு. வரதராசனா**ரவர்கள் நமக்கு குறளோவியங்களைத் தேனிலே குழைத்துத் தந்திருக்கிறார்கள். தமிழறிஞர் **கி. ஆ. பெ. விசுவநாதம்** அவர்களும், செந்தமிழ்ச் செல்வர். **கி. வா. ஜகந்நாதன்** அவர்களும் முறையே 'குறள் நெறிகளையும்', 'ஆடும் பெருமானை'யும் நமக்கு விருந்தாக்கி யிருக்கிறார்கள். பேராசிரியர் **அ. ச. ஞானசம்பந்த**மவர்களும், பேராசிரியர் **க. அன்பழகன**வர்களும், கலைதரும் வாழ்வையும், புறநானூற்றுக் கட்டுரைகளையும், அன்புத் தமிழில் அமுதாக்கித் தந்திருக்கிறார்கள். **திருக்குறளார் முனுசாமி** அவர்களும், **புலவர் குழந்தை** அவர்களும், **பண்டித நடேசனார்** அவர்களும், மகா வித்துவான் **தண்டபாணி தேசிக**ரவர்களும், முறையே திருக்குறளில் காதலையும், குறளமைந்த கதை யொன்றையும், சீவக சிந்தாமணியையும், திருவாசகத்தையும், தீந்தமிழில் குழைத்துத் தந்திருக்கிறார்கள்.

நாவலர் நெடுஞ்செழியனவர்கள் நமக்குக் 'கண்காட்சி'யின் வரலாறு தந்திருக்கிறார்கள். ஜாதகம் **பதி**யவர்கள் காந்தி அடிகளின் வாழ்க்கைக் குறிப்புகளையும், ஆசிரியர் **பாண்டுரங்க**னவர்கள் அகநானூற்றுக் கட்டுரைகளையும், 'காதல் வாழ்வை'யும் அளித்திருக்கிறார்கள். கலைஞர் **கௌதம**னவர்கள் 'கட்டபொம்மனை'யும் எதிரே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள். தமிழைப்பற்றி சிறப்பான கட்டுரையையும் பெருமையுடனளித்திருக்கிறார்கள்.

தமிழகத்தின் நீல வானிலே, வண்ணமுகில்களெனக் காட்சிதரும் இவர்களின் 'அமுத ஓவியங்கள்' என்றென்றும் வாழ்வதாக. இவர்களுக்கு நம் இதயம் கனிந்த நன்றி.

இம்மலரை அழகாக அச்சிட்டுத் தந்த நமது **ஜூபிடர் அச்சகத்தார்** எவ்வளவோ சிரமத்துடன், தாமதமானாலும் நல்ல முறையிலிருக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் தந்ததற்கு எங்கள் நன்றி. மேலட்டைப் படத்தையும், கட்டபொம்மன் படத்தையும் அழகுடன் அச்சடித்துத் தந்ததற்கு **பாரதி அச்சகத்தை** பாராட்டாமலிருக்க முடியாது. இம்மலரை அதிக பொருட் சிலவில் கொண்டுவந்தபோது, விளம்பரம் அளித்த அன்பர்களுக்கு எங்கள் இதய பூர்வமான நன்றி.

நல்ல முறையில் பிளாக்குகள் செய்து கொடுத்த **கிளீன் அண்டு பெயரல், நியூட்டோன் கம்பெனி, ரவி ப்ராசஸ்** முதலியவர்களுக்கும் எங்கள் நன்றி.

பொதுமக்களின் விருப்பத்திற்கும், கட்டளைக்கும் இணங்கி, எங்களின் ஓயாத வேலைகளுக்கிடையே இம்மலரைத் தயாரித்து பொதுமக்களிடம் சமர்ப்பிக்கின்றோம். குறைகள் இருப்பின் மன்னித்தருள்க.

வாசகர்கள் மலரை நுகர்ந்து, தங்களின் கருத்துரைகளை அனுப்பிவைக்கும்படி மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

—*People's Artists* **பாலு சகோதரர்கள்**

THE JUPITER PRESS LTD., MADRAS-18